# நளவெண்பாச் சுருக்கம்

உ ரை யு ட ன்

சு ன் ஞ க ம் :

வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிவுரிமை] 1954 [விலை ரூ. 1-75

ஓம்

புகழேந்திப் புலவர்

இயற்றிய

# நளவெண்பா

(சுருக்கம்)

சுன்னாகம்:

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

பதிவுரிமை] 1954 [விலை ரூ. 1-75

முதலாம் பதிப்பு 1936
இரண்டாம் பதிப்பு 1939
மூன்றாம் பதிப்பு 1940
நான்காம் பதிப்பு 1946
ஐந்தாம் பதிப்பு 1947
ஆறாம் பதிப்பு 1951
ஏழாம் பதிப்பு 1954

பதிப்புரிமை பெற்றது

சென்னை :
திருமகள் அழுத்தகம்

# பொருளடக்கம்

பக்கம்

பதிப்புரை ... ... ... iv

நூலாசிரியர் வரலாறு ... v

நளன் சரிதம் ... ... vii

## நூல்

1. கடவுள் வாழ்த்து ... ... 1
2. அவையடக்கம் ... ... 2
3. ஆக்கியோன் பெயர் ... ... 2
4. நூல்வரலாறு ... ... 3
5. சுயம்வரகாண்டம் ... ... 4
6. கலிதொடர்காண்டம் ... ... 15
7. கலிநீங்குகாண்டம் ... ... 39
8. உரை ... ... ... 53

# பதிப்புரை

புகழேந்திப் புலவரால் பாடப்பட்டதாகிய நள வெண்பா நானூற்றுக்கு மேற்பட்ட இனிய வெண்பாப் பாடல்களைக் கொண்டது. நளன் சரிதத்தைக் கூறுவதாய் அதிவீரராமபாண்டியனால் பாடப்பட்டதாகிய 'நைடதம்' என்னும் நூல் நளவெண்பாவினால் புனைந்துரைக்கப் படாத சில சம்பவங்களைப் புனைந்துரைக்கிறது. இவ் விரு நூல்களும் பலராலும் விரும்பிப் படிக்கப்படுவன.

மேற் கூறிய இரு நூல்களையும் படிப்பதில் ஏற் படும் காலம், சிரமம் என்பவற்றைக் குறைப்பதற் காகவும் கலாசாலை மாணவர்களுக்குப் பெரும் பயன் தரும் நோக்கமாகவும் மேற்படி இரண்டு நூல்களினு மிருந்து, கதைத்தொடர்பு விடுபடாது இனிய செய் யுள்களுள் பலவற்றையும் உள்ளடக்கி இந் நூல் சுருக் கித் தொகுக்கப்பட்டிருக்கிறது.

இந் நூலில் உள்ள பாடல்களின் தொகை 262. இவற் றுள் பெரும்பாலன நளவெண்பாவிலிருந்து எடுக்கப் பட்டமையின் இந் நூலுக்கு நளவெண்பாச் சுருக்கம் எனப் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. இந் நூலைப் படிப்போர் நளசரிதம் முழுவதையும் அறிய முடிவ தன்றிக் கவிதைச் சுவையையும் பெற வசதி ஏற்படும்.

இத்தகைய முயற்சியில் எம்மை ஊக்குமாறு வித்தி யாபிமானிகளை வேண்டுகின்றோம்.

வ. இ. தமிழ்நூற் பதிப்பகத்தார்

# நூலாசிரியர் வரலாறு

புகழேந்திப் புலவர், தொண்டைமண்டலத்திலே செங்கற்பட்டென வழங்கும் செங்கழுநீர்ப்பட்டிக்கு அண்மைக்கணுள்ள பொன்விளைந்த களத்தூரிற் பிறந்தனர். இவர் விளங்கிய காலம் பன்னிரண்டாம் நூற்றுண்டென்பர். இவர் துளுவவேளாள மரபினர்; வைணவ மதத்தினர். இவர் இயற்றிய நூல்கள் 'நளவெண்பா'வும், 'இரத்தினச் சுருக்க'மும். இவர் பாடியதாக வழங்கப்படும் தனிப்பாடல்களும் பல.

அவற்றுள், கொழும்பு ஆரோதன் மைந்தன்மீது உரைத்ததென வழங்கும், 'கயற்காவி நாறுங் கொழும்பிற் பிரசண்டா'[1] என்னும் விருத்தத்தானும், கதிர்காமவேலர் முன் பாம்பை மயில்விடப் பாடியதென வழங்கும் 'தாயரவை முன்வருத்தும்'[2] என்னும் வெண்பாவானும் (இவை புகழேந்தியார் பாடல்களெனின்) புகழேந்திப் புலவர் ஈழமண்டலத்துக்கும் வந்துள்ளார் என்பது புலப்படுகின்றது. அன்றியும், புகழேந்திப் புலவருக்கு ஆயிரம் பொன்னும் யானையும்

---

1. கயற்காவி நாறுங் கொழும்பிற் பிரசண்டா
   காரார் கொடைச்செங்கை ஆரோதன் மைந்தா
   இயக்காநின் மார்பிற் செழும்புன்னை யந்தார்
   இப்போது நீநல்கி லென்பேதை தன்மேற்
   சயக்காம வேளம்பு தைக்காது முத்தின்
   ருமஞ் சுடாசந் தனம்பூசி னுலும்
   தியக்காது வேயுஞ் செவிக்கும் பொறுக்குந்
   தீயென்று மூளாது திங்கட் கொழுந்தே.

2. தாயரவை முன்வருத்துஞ் சந்த்ரோ தயந்தனக்குன்
   வாயரவை விட்டுவிட மாட்டாயோ—தீயரவைச்
   சீறு மயிற்பெருமாள் தென்கதிர்கா மப்பெருமாள்
   ஏறு மயிற்பெருமா னே.

பரிசிலாக அளித்த 'சிங்கையாரிய சேகரன்'[1] யாழ்ப் பாணத்திலிருந்து அரசுபுரிந்த மன்னருள் ஒருவ ராதல் கூடும். ஆரியசேகரன் இறந்ததுகேட்டு விசனமுற் றுரைத்த 'ஆகா விதியோ'[2] என்னும் வெண்பா வால், புகழேந்திப் புலவர் காலத்திலேயே ஆரியசேக ரன் விண்ணுலகெய்தினன் என்று அறியக்கிடக்கின் றது. இவை இன்னும் ஆராய்ந்து துணிதற்குரியன.

'அல்லியரசாணி மாலை', 'புலந்திரன் களவு மாலை' முதலிய நூல்களையும் இவரே இயற்றினர் என்றும் ஒரு சிலர் கூறுவர். இக் கூற்றுக்கும், 'ஒட் டக்கூத்தர் இவரைச் சிறைப்படுத்துவித்தார்; சோழ ராசன் மனைவியார் (பாண்டியன் மகள்) இவரைச் சிறை நீக்குவித்தார்' என்னும் இன்னோரன்ன நிகழ்ச்சிகளுக் கும் கன்னபரம்பரைக் கதைகளேயன்றி வேறுதா ரங்கள் இல்லை. கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தியார், ஔவையார் என்னும் நால்வரும் ஒரே காலத்தவர் என்னும் கொள்கையும் ஆராய்ச்சிக்குரியதே.

பாவிற் சிறந்த வெண்பாவால் யாக்கப்பெற்ற நூல்களிற் தலைசிறந்து விளங்கும் நள வெண்பாவினை இயற்றிய பெருமையொன்றே, இவர் புலவர் திலகர் என்பதற்குச் சான்றாகும். தமிழ்ப் புலவர்களின் உண்மை வரலாறுகளை ஆராய்ந்து வெளியிடல் தமிழ் மக்களைப் பொறுத்த பெருங் கடனாகும்.

---

1. பாவலன் வாசலில் வந்திபம் வாங்கப் படிபுரக்கும்
காவல னிற்கும் படிவைத்த வன்கண்டி யொன்பதினும்
மேவலர் மார்பினுந் திண்டோ ளினுஞ்செம்பொன் மேருவி
சேவகங் கோட்டிய மால்சிங்கை யாரிய சேகரனே. [னும்

2. ஆகா விதியோ வடலா ரியர்கோமான்
ஏகா வலனற் றழிந்தநாள்—ஓகோ
தருக்கண்ணி லுங்குளிர்ந்த தண்ணளிதந் தாண்ட
திருக்கண்ணி லுஞ்சுடுமே தீ.

# நளன் சரிதம்

பல்வளங்களும் செறிந்த நிடதநாட் டரசனுகிய நளன் விதர்ப்பநாட் டரசனுகிய வீமன் புதல்வி 'கன்னலஞ்சுவை கனிந்த சொற் றமயந்தி என்னும் பொன்னனங் கொம்பனு'ளுடைய கற்பு பொற்பு முதலியவற்றைப் பலபடி பலர் புகழக்கேட்டு அவள்பாற் காதல் கொண்டிருந்தான். அவளும் 'செம்மனத்தான் தண்ணளியான் செங்கோலான்; அருளின துறையுள்; நல்லறத்தின் வேலி; சொற்றெருளுறு கல்வியந் தெய்வமாக்கடல்; குரைகடற் புவிபுகழ் குணக்குன்றம்' எனப் புகழ்ந் தேத்தப்படும் நளன்பாற் காதல் கொண்டிருந்தாள்.

'மங்கை சுயம்வரநாள் ஏழென்று வார்முரசம் எங்கும் அறைக' என்று விதர்ப்பர்கோன் தூதரைப் பல தேசங்களுக்கும் அனுப்பினுன். நளமகாராசனும், மற்றும் வேந்தரும், இந்திரன் வருணன் முதலியோரும் சுயம்வரத்திற்கு வந்திருந்தனர். 'அழகு சுமந்திளைத்த ஆகத்தா' ளாகிய தமயந்தி 'பொறையெனும் புவிக்குத் தாஞேர் பொறையனு யுயிர்க ளோம்பும்' நளனுக்கே மாலை சூட்டினுள்.

திருமணம் நிறைவெய்திய பின்னர், நளனும் தமயந்தியும் நிடதநாடேகி மாவிந்த நகரத்திலிருந்து செங்கோலோச்சி வருநாளில், நளன் புட்கரனுடன் சூதாடி நாடு முதலிய எல்லாவற்றையும் பணயமாக வைத்துத் தோற்றனன்; தோற்ற பின்னர் நளன் மக்கள் இருவரையும் வீமன்பால் விடுத்துத் தமயந்தியோடு நாடகன்று காடு புக்கனன்.

காட்டகத்துள்ள பாழ் மண்டபம் ஒன்றில் உறங்குகையில், நளன் தமயந்தியை நீத்தகன்ருன்; உறக்கம் நீங்கிய தமயந்தி நளனைக் காணுது வருந்திப் புலம்பிச் சேதிநாடடைந்து, அங்கு நின்றும் விதர்ப்ப நாடு போந்து தந்தைபாலிருந்தாள்.

தமயந்தியை விட்டு நீங்கிய நளன், தீவாய்ப்பட்ட கார்க்கோடகனை, அவன் வேண்டியவாறு எடுத்துப் புறத்தே விட்டு அவனுல் தீண்டப்பட்டு வேற்றுருவடைந்து சென்று அயோத்தி மன்னன்பால் மடைத்தொழிலும் தேர்த்தொழிலுஞ் செய்ய அமர்ந்திருந்தான்.

தமயந்தியின் விருப்பின்படி நளனை நாடிச்சென்று திரும்பிவந்த அந்தணன் ஒருவன், நளன் அயோத்தியிலிருப்பதை உய்த்துணர்ந்து தமயந்திக் கறிவித்தலும் அவள், 'தமயந்திக்கு இரண்டாஞ் சுயம்வரம்' என்று அயோத்தி மன்னற்கு ஓலை போக்குவித்தாள்; அம் மன்னன் தன் தேர்ப்பாகனுகிய நளனுடன் வருதலும் தமயந்தி வேற்றுரு வடைந்தவன் நளனெனவுணர்ந்து தந்தைக் கறிவித்தனள்; வீமன் விரும்பியவாறு நளனும் கார்க்கோடகனளித்த ஆடையைத் தரித்துச் சுயரூபம் பெற்ருன்.

நளன் சின்ருட் குண்டினபுரத்திருந்து பின் தமயந்தியுடனும் மக்களுடனும் நிடதநாடு சென்று புட்கரனுடன் மறு சூதாடி வெற்றியடைந்து மாவிந்த நகரத்திருந்து செங்கோலோச்சி வருவானுயினுன்.

ஓம்

# நளவெண்பாச் சுருக்கம்

## பாயிரம்

### கடவுள் வாழ்த்து

விநாயகர்

[நேரிசை வெண்பா]

நேசரிதங் கூர நிலவலயந் தாங்குநளன்
மாசரிதங் கூற வருந்துணையா—ஈசன்
கரியா னனத்தான் கருதுபுகழ் பூண்ட
கரியா னனத்தான் கழல்.

திருமால்

ஆதித் தனிக்கோல மானா னடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான்—வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
என்னென்றான் எங்கட் கிறை.

சிவபெருமான்

கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
உலாவு சடைமே லுறையு—நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகங்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

முருகன்

நீல நெடுங்கொண்மூ நெற்றி நிழனுழைக்
காலை யிருள்சீக்குங் காய்கதிர்போற்—சோலை
மணித்தோகை மேற்றோன்றி மாக்கடற்சூர் வென்றோ
னணிச்சே வடியெம் மரண்.

## அவையடக்கம்

வெந்தறுகண் வேழத்தை வேரிக் கமலத்தின்
தந்துவினாற் கட்டச் சமைவதொக்கும்—பைந்தொடையிற்
றேன்பாடுந் தார்நளன்றன் தெய்வத் திருக்கதையை
யான்பாட லுற்ற விது.

## ஆக்கியோன் பெயர்

பாரார் நிடத பதிநளன்சீர் வெண்பாவாற்
பேரார் புகழேந்தி பேசினான்—றூரார்
செழியனையுஞ் சென்னியையுஞ் சேரத் திறைகொண்
மொழியின் சுவையே முதிர்ந்து.

# நூல்வரலாறு

பாண்டவரின் முன்தோன்றல் பார்முழுதுந் தோற்றொருநாள்
ஆண்டகையே தூதுவனாய்ச் சென்றவனி—வேண்ட
மறுத்தான் இருந்தானை மண்ணொடும்போய் மாளப்
பொறுத்தான் இருந்தான் புலர்ந்து. க

கொற்றவேற் றானைக் குருநாடன் பாலணைந்தா
னெற்றநீர் ஞாலத் திருணீங்க—முற்றும்
வழிமுறையே வந்த மறையெல்லாந் தந்தான்
மொழிமுறையே கோத்த முனி. உ

பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக்—காரணந்தான்
யாதோவப் பாவென்றான் என்றந்தன் வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய். ௩

கண்ணிழந்து மாயக் கவறாடிக் காவலர்தாம்
மண்ணிழந்து போந்து வனநண்ணி—விண்ணிழந்த
மின்போலு நான்மார்ப மேதினியில் வேறுண்டோ
என்போ லுழந்தா ரிடர். ௪

சேமவேன் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோல்
காமவேற் காளை நளனென்பான்—யாமத்
தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியான் விளைந்த கதை. ௫

# சுயம்வர காண்டம்

### நிடத நாட்டுச் சிறப்பு

காமர் கயல்புரளக் காவி முகைநெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப்—பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

### மாவிந்த நகர்ச் சிறப்பு

கோதை மடவார்தம் கோதின் மொபீற்றிமிர்ந்த
சீத களபச் செழுஞ்சேற்றால்—வீதிவாய்
மானக் கரிவழுக்கும் மாவிந்தம் என்றுளதோர்
ஞானக் கலைவாழ் நகர். 2

நின்று புயல்வானம் பொழிந்த நெடுந்தாரை
என்றும் அகில்கமழும் என்பரால்—தென்றல்
அலர்த்துங் கொடிமாடத் தாயிழையார் ஐம்பால்
புலர்த்தும் புகைவான் புகுந்து. 3

வெஞ்சிலையே கோடுவன; மென்குழலே சோருவன;
அஞ்சிலம்பே வாய்விட் டரற்றுவன; — கஞ்சங்
கலங்குவன; மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு. 4

தெரிவனநூல் என்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே—ஒருபொழுதும்
இல்லா தனவும் இரவே யிகழ்ந்தெவரும்
கல்லா தனவுங் கரவு. 5

மாமனுநூல் வாழ வருசந் திரன்சுவர்க்கி
தாமரையாள் வைகுந் தடந்தோளான்—காமருபூந்
தாரான் முரணை நகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி. 6

சீத மதிக்குடைக்கீழ்ச் செம்மை யறங்கிடப்பத்
தாதவிழ்பூந் தாரான் தனிக்காத்தான்—மாதர்
அருகூட்டும் பைங்கிளியும் ஆடற் பருந்தும்
ஒருகூட்டில் வாழ வுலகு. 7

புரவலன் பூம்பொழில் புகுதல்

வாங்குவளைக் கையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினான்—தேங்குவளைத்
தேனுடி வண்டு சிறகுலர்த்து நீர்நாடன்
பூநாடிச் சோலை புக. 8

நேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனலனைப்ப வேயடைந்தான்—கார்வண்டு
தொக்கிருந்தாலித்துழலுந் தூங்கிருள்வெய்யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில். 9

அன்னம் வெளிப்படல்

நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
தாணிறத்தாற் பொய்கைத் தலஞ்சிவப்ப—மாணிறத்தான்
முன்னப்புட் டோன்று முளரித் தலைவைகும்
அன்னப்புட் டோன்றிற்றே யாங்கு. 10

பேதை மடவன்னந் தன்னைப் பிழையாமன்
மேதிக் குலமேறி மென்கரும்பைக்—கோதிக்
கடித்துத்தான் முத்துமிழுங் கங்கைநீர் நாடன்
பிடித்துத்தா வென்றான் பெயர்ந்து. 11

நாடிமட வன்னத்தை நல்ல மயிற்குழாம்
ஓடி வளைக்கின்ற தொப்பவே—நீடியநற்
பைங்கூந்தல் வல்லியர்கள் பற்றிக் கொடுபோந்து
தங்கோவின் முன்வைத்தார் தாழ்ந்து. 12

அன்னந் தனைப்பிடித்தங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே—அன்ன
மலங்கிற்றே தன்னுடைய வான்கிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு. 13

அஞ்சன் மடவனமே உன்றன் அணிநடையும்
வஞ்சி யனையார் மணிநடையும்—விஞ்சியது
காணப் பிடித்ததுகாண் என்றான் களிவண்டு
மாணப் பிடித்ததார் மன். 14

செய்ய கமலத் திருவை நிகரான
தையல் பிடிக்க தனியன்னம்—வெய்ய
அடுமாற்ற மில்லா வரசன்சொற் கேட்டுத்
தடுமாற்றந் தீர்ந்ததே தான். 15

தமயந்தி

திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே! உன்றன்
இசைமுகந்த தோளுக் கிசைவாள்—வசையில்
தமையந்தி என்றோதுந் தையலாண் மென்றோள்
அமையந்தி யென்றோர் அணங்கு. 16

எழுவடுதோண் மன்ன விலங்கிழையோர் தூண்டக்
கொழுநதியிற் சாய்ந்த குவளை—உழுநர்
மடைமிதிப்பத் தேன்பாயு மாடொலிநீர் நாடன்
கொடைவிதர்ப்பன் பெற்றதோர் கொம்பு. 17

நாற்குணமு நாற்படையா வைம்புலனு நல்லமைச்சா
ஆர்க்குஞ் சிலம்பே யணிமுரசா—வேற்படையும்
வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்
ஆளுமே பெண்மை யரசு. 18

என்று நடந்து மிடையென்ப வேழுலகு
நின்ற கவிகை நிழல்வேந்தே—ஒன்றி
அறுகாற் சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றா தேய்ந்து. 19

அன்னம் தமயந்திபாற் செல்லல்

வீமன் றிருமடந்தை மெல்லியலை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன்—சேம
நெடுங்குடையாய் என்றுரைத்து நீங்கியதே அன்னம்
ஒடுங்கிடையாள் தன்பால் உயர்ந்து. 20

மன்னன் விடுத்த வடிவிற் றிகழ்கின்ற
அன்னம்போய்க் கன்னி யருகணைய—நன்னுதலுந்
தன்னுடல் விட்டுத் தனியிடஞ்சேர்ந் தாங்கதனை
என்னுடல் சொல்லென்றா ளீங்கு. 21

செம்மனத்தான் றண்ணளியான் செங்கோலான் மங்கையர்கண்
தம்மனத்தை வாங்குந் தடந்தோளான்—மெய்ம்மை
நளனென்பான் மேனிலத்து நானிலத்து மிக்கான்
உளனென்பான் வேந்த னுனக்கு. 22

அறங்கிடந்த நெஞ்சும் அருளொழுகு கண்ணும்
மறங்கிடந்த திண்டோள் வலியுந்—திறங்கிடந்த
செங்கண்மால் அல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
அங்கண்மா ஞாலத் தவற்கு. 23

மலர் வேய்ந்துகொள்ளும் மணம்

பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதன்மேல்
நீரரும்பத் தன்பேதை நின்றாளைப்—பாராக்
குலவேந்தன் சிந்தித்தான் கோவேந்தர் தம்மை
மலர்வேய்ந்து கொள்ளு மணம். 24

வேந்தர்மேற் றூதோட விடல்

மங்கை சுயம்வரநா ளேழென்று வார்முரசம்
எங்கு மறைகென் றியம்பினான்—பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக் கொழுந்தோடு நன்னாடன்
வேந்தர்மேற் றூதோட விட்டு. 25

மாமுத்த வெண்குடையான் மால்களிற்றான் வண்டிரைக்குந்
தாமத் தரிச்சந் திரன்சுவர்க்கி—நாமத்தார்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம். 26

செந்தடையும்வண்டுறைதார்ச் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய்—வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி லீண்டிற்றே
கோவேந்தன் மாதைக் குறித்து. 27

புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளும்
உள்ளும் புறமு மினிதுறைந்தார்—தெள்ளரிக்கட்
பூமகளைப் பொன்னைப் பொருவேல் விதர்ப்பன்றன்
கோமகளைத் தன்மனத்தே கொண்டு. 28

அன்னம் நளன்பால் வருதல்

கொற்றவன்றன் னேவலினாற் போயக்குலக்கொடிபால்
உற்றதுவு மாங்கவடா னுற்றதுவும்—முற்றும்

மொழிந்ததே யன்ன மொழிகேட் டரசற்
கழிந்ததே யுள்ள வறிவு. 29

### கோதை சுயம்வரம் கொற்றவற் குரைத்தல்

கோதை சுயம்வரநாள் கொற்றவனுக் குற்றுரைப்ப
ஏதமிலாக் காட்சியர்வந் தெய்தினார்—போதிற்
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாட
னடையாத வாயி லகம். 30

### நளன் சுயம்வரத்திற்கு ஏகுதல்

காவலன்றன் றூதர் கடைகா வலர்க்கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புதலும்—மாவிற்
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்ததோள் வேந்தன் விரைந்து. 31

கெட்ட சிறுமருங்குற் கேழ்மகளிர் நீள்வரம்பி
விட்ட பசுங்குவளை யேரடித்த—கட்டி
கரையத்தே னாறுங் கடனாட னார்க்கு
விரையத்தே ரூரென்றான் வேந்து. 32

சடைச்செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்கமைந்த
வில்லியரும் பொற்றும வீமன் றிருமகளாம்.
நல்லுயிரும் வாழு நகர். 33

### நாரதர் தேவருலகு செல்லுதல்

நெற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழ்க் குலமுனிவ—னுற்றடைந்தான்
தேனாடுந் தெய்வ தருவுந் திருமணியும்
வானாடுங் காத்தான் மருங்கு. 34

வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்றார்
ஆரு மிலராலென் றையுற்று — நாரதனார்
நன்முகமே நோக்கினா னாகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான் விரைந்து. 35

வீமன் மடந்தை மணத்தின் விரைதொடுத்த
தாமம் புனைவான் சுயம்வரத்து—மாமன்னர்
போயினா ரென்றான் புரந்தரற்குப் பொய்யாத
வாயினான் மாதவத்தோர் மன். 36

வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம்

அழகு சுமந்திளைத்த ஆகத்தாள் வண்டு
பழகு கருங்கூந்தற் பாவை—மழகளிற்று
வீமன் குலத்துக்கோர் மெய்த்தீபம் மற்றவளே
காமன் றிருவுக்கோர் காப்பு. 37

இந்திராதியர் சுயம்வரத்திற்கு வருதல்

மால்வரையை வச்சிரத்தால் ஈர்த்தானும் வானவருங்
கோல்வளைதன் மாலை குறித்தெழுந்தார்—சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் றிருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து. 38

புன்மாலை அந்திப்பொழுது

மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கிற்
பாயிருளென் னும் படாம்வாங்கிச்—சேயின்
றறைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை. 39

மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லி கணைதெரிந்து மெய்காப்ப—முல்லையெனு
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது. 40

புற்கென்று ரந்தி புனைமலர்க்க ணீரரும்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காப்பான்—முற்கொண்
டடைகின்ற வேந்தர்க்கு மாண்டஞ்சி னோர்க்கும்
இடைநின்ற காலம்போ லின்று. 41

காவலர் வரவு

ஊக்கிய சொல்ல ரொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
விடையாமங் காவலர்கள் போந்தார் இருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று. 42

புலர்ந்ததே அற்றைப் பொழுது

பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுத மும்முகிழ்ப்பக்
ஆசினியுந் தாமரையுங் கண்விழிப்ப—வாச
மலர்ந்ததேங் கோதையாள் ஆழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது. 43

மன்னர் வரவு

முரைசெறிந்த நாளேழு முற்றியபின் கொற்ற
வரைசெறிந்த தோண்மன்னர் வந்தார்—விரைசெறிந்த
மாலை துவள முடிதயங்க வால்வளையுங்
காலை முரசங் கலந்து. 44

மன்றலந்தார் மன்னர் நடுவணைய வந்திருந்தான்
கன்று குதட்டிய கார்நீல—முன்றிற்

குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோற்றிருந்த சேய். 45

### தமயந்தி மண்டபம் வருதல்

நித்திலத்திற் பொற்றோடு நீலமணித் தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேந்தர்—சித்தம்
மருங்கே வரவண்டின் பந்தர்க்கீழ் வந்தாள்
அருங்கேழ் மணிப்பூ ணணங்கு. 46

பேதை மடமயிலைச் சூழும் பிணைமான்போற்
கோதை மடமானைக் கொண்டணைந்த—மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மே னிறைந்து. 47

மன்னர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொன்னின் மடப்பாவை போய்ப்புக்காள்—மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செங்கமலப்
பொய்கைவாய்ப் போவதே போன்று. 48

மன்னர் குலமும் பெயரும் வளநாடு
மின்ன பரிசென் றியலணங்கு—முன்னின்று
தார்வேந்தன் பெற்ற தனிக்கொடிக்குக் காட்டினாள்
தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து. 49

### தேவர்கள் நளனுருவமைந்ததைக் கண்டு தமயந்தி ஐயுறல்

காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாச் சென்றிருந்தார்—பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் காணாநின்
றாசலா டுற்றா ளனம். 50

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கால்
காணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றெவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து. 51

தமயந்தி தெய்வத்தை வேண்டல்

மின்னுந்தார் வீமன் றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளாகிற் கடிமாலை—அன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட அருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 52

தமயந்தி நளனை அறிதல்

கண்ணிமைத்த லாலடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ண மலர்மாலை வாடுதலால்—எண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்னாள்
அறிந்தாள் நளன்றன்னை யாங்கு. 53

தமயந்தி நளனுக்கு மாலைசூட்டல்

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகல் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினாள் பொன். 54

இன்னரிச் சிலம்பு செம்பொற்
கிண்கிணி யார்ப்ப வேகி
மன்னவர் மனமுங் கண்ணும்
வண்டெனத் தொடர்ந்து வீழக்
கொன்னுனை வயிர வொள்வாள்
நிடதர்கோன் குவவுத் தோள்மேற்
பொன்னரி மாலை சூட்டிப்
பூங்கழல் வணங்கி நின்றாள். 54a

—நைடதம், சுயம்வரப்படலம்,

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—ஒண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணாள்
பூமாலை பெற்றிருந்த போது. 55

மல்லன் மதுகின் மடநா குடனாகச்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லியலாள்
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டான்
நன்மாலை வேலா னளன். 56

கணிமொழிந்த நாளிற் கடிமணஞ் செய்தல்

சாந்த மூழ்கு தடம்புயன் ஆரழற்
கேய்ந்த யாவும் இனிது முடித்தபின்
ஆய்ந்த நான்மறை யின்வழி ஆயிழை
காந்தள் மென்விரல் கைபிடித் தானரோ. 56a

—நைடதம், மணம்புரிபடலம்.

சுயம்வர காண்டம் முற்றிற்று.

# உ. கலிதொடர் காண்டம்

## காப்பு

முந்தை மறைநான் முடியெனலாம் தண்குருகூர்ச்
செந்தமிழ் வேத சிரமெனலா—நந்தும்
புழைக்கைக்கு நேயப் பொதுவர் மகளிர்க்கு
மழைக்கைக்கு முன்செல் லடி. க

செக்கர் நெடுவானிற் றிங்க ணிலாத்துளும்பி
உக்க தெனச்சடைமே லும்பர்நீர்—மிக்கொழுகும்
வெள்ளத்தான் வெள்ளி நெடுங்கிரியான் மெய்யன்பர்
உள்ளத்தா னெங்கட் குளன். உ

---

### நளன் மனைவியுடன் தன்னகர்க் கேகுதல்

துவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருநிழலுங் கொள்ளப்—பவளக்
கொழுந்தேறிச் செந்நெற் குலைசாய்க்கு நாடன்
செழுந்தேரி லேறினான் சென்று. 57

### பெண்கள் பூக்கொய்தலையும் நீர்விளையாடலையும் நளன் தமயந்திக்குக் காட்டல்

பாவையர்கை தீண்டப் பணியாதார் யாவரே
பூவையர்கை தீண்டலுமப் பூங்கொம்பு—மேவியவர்
பொன்னடியிற்றாழ்ந்தனவேபூங்குழலாய்!காணென்றான்
மின்னெடுவேற் கையான் விரைந்து. 58

மங்கை யொருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண்டைச்—செங்கையாற்
காத்தாளக் கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து. 59

புல்லும் வரிவண்டைக் கண்டு புனமயில்போற்
செல்லு மடந்தை சிலம்பவித்து—மெல்லப்போய்
அம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரிற் றேனே தெளி. 60

கொய்த மலரைக் கொடுங்கையி னாலணைத்து
மொய்குழலிற் சூட்டுவான் முன்வந்து—தையலாள்
பாதார விந்தத்தே சூட்டினான் பாவையிடைக்
காதார மில்லா தறிந்து. 61

கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மேல்
எய்தத் தனிவைத்த ஏந்திழையாள்—வையத்தார்
உண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணானைப் போன்றனளே காண். 62

கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத்தாமரைக்கேசேர்த்தாள்—கெழுமியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவான் போல். 63

பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டிற்
பெய்து முகமூன்று பெற்றாள்போ—லெய்த
வருவாளைப் பாரொன்றான் மாற்றாளை வென்று
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய. 64

சோர்புனலின் மூழ்கி யெழுவாள் சுடர்நுதன்மேல்
வார்குழலை நீக்கி வருந்தோற்றம்—பாராய்!
விரைகொண் டெழுந்தபிறை மேகத் திடையே
புரைகின்ற தென்னலாம் பொற்பு. 65

செழுநீல நோக்கெறிப்பச் செங்குவளை கொய்வாள்
முழுநீல மென்றயிர்த்து முன்னர்—கழுநீரைக்

கொய்யாது போவானைக் கோல்வளைக்குக் காட்டினன்
வையாரும் வேற்றடக்கை மன். 66

### தமயந்தியும் நளனும் கங்கைநதியாடல்

காவி பொருநெடுங்கட் காதலியுங் காதலனும்
வாவியு மாறுங் குடைந்தாடித்—தேவின்
கழியாத சிந்தையுடன் கங்கைநதி யாடி
யொழியா துறைந்தா ருவந்து. 67

### கங்கைக் கரையேறி அகல்பொழில் அடைதல்

வேரி மழைதுளிக்கு மேகக் கருங்கூந்தற்
காரிகையுந் தானும்போய்க் கண்ணுற்றான்—மூரித்
திரையேற மென்கிடங்கிற் சேலேற வாளை
கரையேறுங் கங்கைக் கரை. 68

சூதக் கனியூற லேற்ற சுருள்வாழை
கோதி னறவேற்குங் குப்பியென—மாதரார்
ஐயுற்று நோக்கு மகன்பொழில்சென் றெய்தினன்
வையுற்ற வேற்றானை மன். 69

### நளன் தமயந்தியுடன் தன்னகர் சேர்தல்

வான்றோய நீண்டுயர்ந்த மாடக் கொடிநுடங்கத்
தான்றோன்று மற்றித் தடம்பதிதான்—வான்றோன்றி
வில்விளக்கே பூக்கும் விதர்ப்பனு டாளுடையான்
நல்விளக்கே யெங்க ணகர். 70

பொருவருங் கங்கைநீர் நிறைத்துப் பூசுரர்
எரிமணிப் பொற்றசும் பேந்தி முன்வர
விரைகமழ் செழுங்கொடை வீமன் மாதொடும்
திருவளர் கோயிலிற் செல்வ னெய்தினன். 70a

— நைடதம், மீட்சிப்படலம்.

### நளமகாராசன் அரசாட்சி

விழலுமிழ்ந் துதிரங் காலும்
வயிரவா ணிடதர் கோமான்
எழுபுவி வேந்தர் யாரும்
இடுதிறை கொணர்ந்தெஞ் ஞான்றும்
தொழுதனர் ஏத்தி நிற்பத்
தொடுகடல் உடுத்த ஞாலம்
முழுவதும் ஒருகோ லோச்சி
முறைவழா தளித்தா னன்றே. 70b

—நைடதம், சூதாடுபடலம்.

### புட்கரன் நளனுடன் கவறாடப் போதல்

புன்னை நறுமலரின் பூந்தா திடையோதுங்
கன்னி யிளமேதிக் காற்குளம்பு—பொன்னுரைத்த
கல்லேய்க்கு நாடன் கவறாடப் போயினான்
கொல்லேற்றின் மேலேறிக் கொண்டு. 71

வெங்கட் சினவிடையின் மேலேறிக் காலேறிக்
கங்கைத் திரைநீர் கரையேறிச்—செங்கதிர்ப்பைம்
பொன்னொழியப் போதும் புறம்பணைசூழ் நன்னாடு
பின்னொழியப் போந்தான் பெயர்ந்து. 72

அடற்கதிர்வேல் மன்ன னவனேற்றின் முன்போய்
எடுத்தகொடி யென்னகொடி யென்ன—மிடற்கூது
வெல்லுங் கொடியென்றான் வெங்கலியா லங்கவன்மேற்
செல்லுங் கொடியோன் றெரிந்து. 73

### நளன் சூதாடச் சம்மதித்தல்

ஏன்றோ மிதுவாயின் மெய்ம்மையே யெம்மோடு
வான்றோய் மடற்றெங்கின் வான்றேறல்—தான்றேக்கி
மீதாடி வாளைவயல் வீழ்ந்துழக்கு நன்னாடன்
சூதாட வென்றான் துணிந்து. 74

மந்திரி முதலானோர் நளனுக்குப் புத்தி கூறல்

காதல் கவறாடல் கள்ளுண்டல் பொய்ம்மொழிதல்
ஈதல் மறுத்த லிவைகண்டாய்—போதிற்
சினையாமை வைகுந் திருநாடா செம்மை
நினையாமை பூண்டார் நெறி. 75

அறத்தைவேர் கல்லும் அருநரகிற் சேர்க்கும்
திறத்தையே கொண்டருளைத் தேய்க்கும்—மறத்தையே
பூண்டுவிரோ தஞ்செய்யும் பொய்ச்சூதை மிக்கோர்கள்
தீண்டுவரோ வென்றார் தெரிந்து. 76

உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவும்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றல்லச் சூது
பொருவரோ தக்கோர் புரிந்து. 77

ஆயம் பிடித்தாரும் அல்லற் பொதுமகளிர்
நேயம் பிடித்தாரு நெஞ்சிடையே—மாயம்
பிடித்தாரின் வேறல்லர் என்றுரைப்ப தன்றோ
வடித்தாரின் னூலோர் வழக்கு. 78

மந்திரியை நளன் கோபித்தல்

"தீது வருக நலம்வருக சிந்தையாற்
சூது பொரவிசைந்து சொல்லினோம்—யாதும்
விலக்கலிர்நீர்" என்றான் வராலேற மேதி
கலக்கனைநீர் நாடன் கனன்று. 79

புட்கரன் நளனைப் பந்தயம் யாதெனல்

நிறையில் கவறாடல் நீயினைந்தா யாகிற்
றிறையிற் கதிர்முத்தஞ் சிந்துந்—துறையிற்
கரும்பொடியா மள்ளர் கடாவடிக்கு நாடா
பொரும்படியா தென்றானப் போது. 80

### பந்தயம் வைத்தல்

விட்டொளிர்வில் வீசி விளங்குமணிப் பூணாரம்
ஒட்டினே னுன்பணயம் ஓதென்ன—மட்டவிழ்தார்
மல்லேற்ற தோளானும் வான்பணய மாகத்தன்
கொல்லேற்றை வைத்தான் குறித்து. 81

### நளன் தோற்றல்

வைத்த மணியாரம் வென்றேன் மறுபலகைக்
கொத்த பணய முரையென்ன—வைத்தநிதி
நூறா யிரத்திரட்டி நூறுநூ றாயிரமும்
வேறாகத் தோற்றானவ் வேந்து. 82

பல்லா யிரம்பரியும் பத்துநூ றாயிரத்துச்
சொல்லார் மணித்தேருந் தோற்றதற்பின்—வில்லாட்கண்
முன்றோற்று வானின் முகிறோற்கு மால்யானை
பின்றோற்றுத் தோற்றான் பிடி. 83

சாதுரங்கம் வென்றேன் தரும்பணய மேதென்ன
மாதுரங்கம் பூணு மணித்தேரான்—சூதரங்கிற்
பாவையரைச் செவ்வழியாழ்ப் பண்ணின்மொழிப் பின்னுகுழல்
பூவையரைத் தோற்றான் பொருது. 84

கற்பின் மகளிர்பா னின்றுந் தமைக்கவட்டின்
விற்கு மகளிர்பான் மீண்டாற்போல்—நிற்கு
நெறியானை மெய்ம்மைவாய் நின்றானை நீங்கிச்
சிறியானைச் சேர்ந்தாள் திரு. 85

### "இவளைப் பணயந்தா வின்று"

மனைக்குரியா ரன்றே வருந்துயரந் தீர்ப்பார்
சினைச்சங்கின் வெண்டலையைத் தேற—னனைக்குங்
குவளைப் பணைப்பந்தாட் குண்டுநீர் நாடா
இவளைப் பணயந்தா வின்று. 86

நளன் தமயந்தியைக் கானகஞ் செல்ல அழைத்தல்

இனிச்சூ தொழிந்தோ மினவண்டு விண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனலுடன் பொன்மகளே
நாம்போது மென்றான் நளன். 87

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகம் கொள்ளத்தான் போனாற்போற்—றன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினா னன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. 88

கூடப்பா ரெவரே கடுவினையை வீமன்
மடப்பாவை தன்னுடனே மன்னன்—நடப்பான்
வனத்தே செலப்பணித்து மாயத்தாற் சூழ்ந்த
தனத்தே விதியின் வலி. 89

நகரத்தார் துயருறல்

ஆருயிரின் றாயே யறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே—பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்றார் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று. 90

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞான முழுது நடுவிழந்தாற்—சீலம்
ஒழிவரோ செம்மை யுரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். 91

வடியேறு கூரிலைவேன் மன்னாவோ வுன்றன்
அடியேங்கட் காதரவு தீரக்—கொடிநகரில்
இன்றிருந்து நாளை யெழுந்தருள்க வென்றுரைத்தார்
வென்றிருந்த தோளான்றாள் வீழ்ந்து. 92

மன்றலிளங் கோதை முகநோக்கி மாநகர்வாய்
நின்றுருகு வார்கண்ணி னீர்நோக்கி—யின்றிங்
கிருத்துமோ வென்றான் இளங்குதலை வாயாள்
வருத்தமோ தன்மனதில் வைத்து. 93

நளனைப் புகழ்வாரைக் கொல்லப் புட்கரன் கட்டளையிடல்

வண்டாடுந் தார்நளனை மாநகரில் யாரேனும்
கொண்டாடி னார்தம்மைக் கொல்லென்று—தண்டா
முரசறைவா யாங்கென்றான் முன்னே முனிந்தாங்
கரசறியா வேந்தன் அழன்று. 94

அறையும் பறையரவங் கேட்டழிந்து நைந்து
பிறைநுதலாள் பேதைமையை நோக்கி—முறுவலியா
விந்நகர்க்கி தென்பொருட்டா வந்த தெனவுரைத்தான்
மன்னகற்றுங் கூரிலைவேன் மன். 95

நளன் மனைவி மக்களுடன் நகர் நீங்கல்

தன்வாயின் மென்மொழியே தாங்கினா னெங்குநகர்ப்
பொன்வாயில் பின்னாகப் போயினான்—முன்னாளிற்
பூமகளைப் பாரினொடும் புல்லினான் றன்மகளைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. 96

கொற்றவன்பாற் செல்வாரைக் கொல்வான் முரசறைந்து
வெற்றியொடு புட்கரனும் வீற்றிருப்ப—முற்றுயர்
இழவு படுமாபோ லில்லங்க டோறும்
குழவிபா லுண்டிலவே கொண்டு. 97

மக்கள் பெற்றாரை நோக்கிக் கூறுவது

சந்தக் கழற்று மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரு கோவைப் பதைத்துருகி—எந்தாய்

வடந்தோய் களிற்றாய் வழியான தெல்லாங்
கடந்தோமோ வென்றார் கலுழ்ந்து. 98

நளன் வருந்தல்

தூயதன் மக்கள் துயர்நோக்கிச் சூழ்கின்ற
மாய விதியின் வலிநோக்கி—யாதுந்
தெரியாது சித்திரம்போல் நின்றிட்டான் செம்மை
புரிவான் துயராற் புலர்ந்து. 99

நளன் கூறல்

காத லிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் திருநகர்க்கே மீளென்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். 100

தமயந்தி கூறல்

சூற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கான் மழைபொழியா நொந்து. 101

நளன் கூறுவது

கைதவந்தா னீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தா னெத்தனையுஞ் செய்தாலு—மைதீர்
மகப்பெறா மானிடர்கள் வானவர்த மூர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து. 102

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனு முடையரோ—இன்னடிசிற்
புக்களையுந் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர். 103

சொன்ன கலையின் றுறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. 104

தமயந்தி கூறுவது

போற்றரிய செல்வம் புனனாட் டொடும்போகத்
தோற்றமையும் யாவர்க்கும் தோற்றாதே—யாற்றலாய்
எம்பதிக்கே போந்தருளு கென்றாள் எழிற்கமலச்
செம்பதிக்கே வீற்றிருந்த தேன். 105

நளன் உரைப்பது

சினக்கதிர்வேற் கண்மடவாய் செல்வர்பாற் சென்றீ
எனக்கென்னும் இம்மாற்றங் கண்டாய்—தனக்குரிய
தானந் துடைத்துத் தருமத்தை வேர்பறித்து
மானந் துடைப்பதோர் வாள். 106

மன்னராய் மன்னர் தமையடைந்து வாழ்வெய்தி
இன்னமுதந் தேக்கி யிருப்பாரேற்—சொன்ன
பெரும்பே டிகளலரேற் பித்தரே யன்றே
வரும்பேடை மானே யவர். 107

தமயந்தி உரைப்பது

செங்கோலா யுன்றன் திருவுள்ள மீதாயின்
எங்கோன் விதர்ப்ப னெழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்றாள் காதலருக்
கேதிலரைப் போல வெடுத்து. 108

நளன் ஒரு பார்ப்பானை நோக்கிச் சொல்லுதல்

பேதை பிரியப் பிரியாத பேரன்பின்
காதலரைக் கொண்டுபோய்க் காதலிதன்—றாதைக்குக்

காட்டுநீ யென்றான் கலங்காத வுள்ளத்தை
வாட்டுநீர் கண்ணிலே வைத்து. 109

மக்கள் பெற்றோர் முகத்தை நோக்கிக் கூறல்

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை யெதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ என்றார் விழிவழியே
யாறாகக் கண்ணீ ரழுது. 110

தமயந்தி மக்களை மார்போடு அணைத்தல்

அஞ்சனந்தோய் கண்ணில் அருவிநீ ராங்கவர்க்கு
மஞ்சனநீ ராக வழிந்தோட—நெஞ்சுருகி
வல்லிவிடாமெல்லிடையாண் மக்களைத்தன்மார்போடும்
புல்லிவிடா நின்றாள் புலர்ந்து. 111

மக்கள் குண்டினபுரஞ் சேர்தல்

இருவ ருயிரு மிருகையான் வாங்கி
ஒருவன்கொண் டேகுவா னொத்து—வருமறையோன்
கோமைந்தனோடிளைய கோதையைக்கொண் டேகினான்
வீம னகர்க்கே விரைந்து. 112

காத லவர்மேலே கண்ணோடை விண்ணோடு
மூதை யெனநின் றுயிர்ப்போட—யாது
முரையாடா துள்ள மொடுங்கினான் வண்டு
விரையாடுந் தாரான் மெலிந்து. 113

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக்
காவிற்போய்த் தேவியொடுங் கண்ணுற்றான்—ஞாலஞ்சேர்
கள்ளிவே கத்தரவின் கண்மணிக டாம்பொடியாய்த்
துள்ளிவே கின்ற சுரம். 114

### கலி புள்வடிவாய்த் தோன்றல்

கன்னிறத்த சிந்தைக் கலியுமவன் முன்பாகப்
பொன்னிறத்த புள்வடிவாய்ப் போந்திருந்தான்—நன்னெறிக்கே
அஞ்சிப்பார் ஈந்த அரசனையுந் தேவியையும்
வஞ்சிப்பான் வேண்டி வனத்து. 115

### தமயந்தி பறவையைப் பிடித்துத்தாவெனல்

தேன்பிடிக்குந் தண்டுழாய்ச் செங்கட் கருமுகிலை
மான்பிடிக்கச் சொன்ன மயிலேபோற்—றான்பிடிக்கப்
பொற்புள்ளைப் பற்றித்தா வென்றாள் புதுமழலைச்
சொற்கிள்ளை வாயாள் தொழுது. 116

### நளன் அப் பொற்பறவையைப் பிடித்தல்

எற்றித் திரைபொரமொங் கேறி யிளமணலிற்
பற்றிப் பவளம் படர்நிழற்கீழ்—முத்தீன்று
வெள்வளைத்தா யோடுநீர் வேலைத் திருநாடன்
புள்வளைத்தா னுடையாற் போந்து. 117

### பறவை சொல்லுதல்

கூந்த விளங்குயிலுங் கோமானுங் கொண்டணைத்த
பூந்துகில்கொண் டந்தரத்தே போயின்று—வேந்தனே
நன்னாடு தோற்பித்தோ னானைகா னென்றதே
பொன்னாடு மாணிறத்த புள். 118

### சூரியன் மறைதல்

அந்த நெடுஞ்சுரத்தின் மீதேக வாங்கழலும்
வெந்தழலை யாற்றுவான் மேற்கடற்கே—எந்தை
குளிப்பான்போற் சென்றடைந்தான் கூரிருளாற் பாலை
ஒளிப்பான்போற் பொற்றே ருடன். 119

பானு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்ததற்பின்
கான மடம்பின் கவட்டிலைகள்—மானின்
குளம்பேய்க்கு நன்னுடன் கோதையொடுஞ் சென்றான்
இளம்பேய்க்குந் தோன்றா விருள். 120

பாழ் மண்டபங் காணல்

எங்காம் புகலிடமென் றெண்ணி யிருள்வழிபோய்
வெங்கா னகந்திரியும் வேலைதனில்—அங்கேயோர்
பாழ்மண் டபங்கண்டான் பால்வெண் குடைநிழற்கீழ்
வாழ்மண் டபங்கண்டான் வந்து. 121

அம் மண்டபத்தில் இருவரும் உறங்குதல்

சூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதாற்
சாரு மிடமற்றுத் தானில்லை—சோர்கூந்தன்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதரா யென்றான் புலர்ந்து. 122

தமயந்தி வருந்தல்

வைய முடையான் மகரயாழ் கேட்டருளுந்
தெய்வச் செவிகொளுகின் சில்பாடல்—இவ்விரவிற்
கேட்டவா றென்றழுதாள் கெண்டையங்க ணீர்சோரத்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. 123

அரசன் அவளைத் தேற்றல்

பண்டை வினைப்பயனைப் பாரிடத்தி லார்கடப்பார்
கொண்ட னிழலிற் குழைதடவுங்—கெண்டை
வழியனீ ரென்றான் மனநடுங்கி வெய்துற்
றழியனீ யென்றா னரசு. 124

தீய வனமுந் துயின்று திசைதுயின்று
பேயுந் துயின்றதாற் பேர்யாமம்—நீயுமினிக்

கண்மேற் றுயில்கை கடனென்றான் கைகொடுத்து
மண்மேற் றிருமேனி வைத்து. 125

### நளன் வருந்தல்

புன்கண்கூர் யாமத்துப் பூமிமேற் றான்படுத்துத்
தன்கண் டுயில்வானைத் தான்கண்டு—மென்கண்
பொடியாதா னுள்ளாவி போகாதால் நெஞ்சம்
வெடியாதா லென்றான் விழுந்து. 126

### தமயந்தி வருந்தல்

முன்றிறனின் மேற்படுக்க முன்றானை யுமின்றி
யின்று துயில விறைவனுக்கே—யென்றனது
கைபுகுந்த தென்னுடைய கால்புகுந்த தென்றழுதாள்
மைபுகுந்த கண்ணீர் வர. 127

### நளன் கூறல்

வீமன் திருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்களித்த தையலாள்—யாமத்துப்
பாரே யணையாப் படைக்கண் டுயின்றாள்மற்
றாரே துயரடையா ராங்கு. 128

### கலி வலியால் தமயந்தியைப் பிரிய நினைத்தல்

வஞ்சக் கலிவலியான் மாகத் தராவணைக்குஞ்
செஞ்சுடரின் வந்த கருஞ்சுடர்போல்—விஞ்ச
மதித்ததேர்த் தானை வயவேந்தன் நெஞ்சத்
துதித்ததே வேறோ ருணர்வு. 129

காரிகைதன் வெந்துயரங் காணாமை நீத்தகலக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து—நேரே
இருவர்க்கு மோருயிர்போ லெய்தியதோ ராடை
அரிதற் கவனினைந்தா னங்கு. 130

எண்ணிய வெண்ண முடிப்ப விகல்வேந்தன்
கண்ணி யதையறிந்து காய்கலியும்—பண்ணினுக்குக்
கேளான தேமொழியை நீக்கக் கிளரொளிசேர்
வாளாய் மருங்கிருந்தான் வந்து. 131

ஒற்றைத் துகிலு முயிரு மிரண்டாக
முற்றுந்த னன்பை முதலோடும்—பற்றி
யரிந்தா னரிந்திட் டவணிலைமை நெஞ்சிற்
றெரிந்தா னிருந்தான் றிகைத்து. 132

போயொருகான் மீளும் புகுந்தொருகான் மீண்டேகும்
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—றோயல்
கடைவார்தங் கைபோலு மாயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். 133

நளன் வனதேவதைகளைப் பிரார்த்தித்தல்

நீக்கா னகத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான். 134

பிரிதல்

தாருவெனப் பார்மேற் றருசங் கிரன்சுவர்க்கி
மேருவரைத் தோளான் விரைவார்போற்—கூரிருளிற்
செங்கா னகஞ்சிதையத் தேவியைவிட் டேகினன்
வெங்கா னகந்தனிலே வேந்து. 135

தமயந்தி விழித்துக்கொண்டு அரசனைத் தேடித் துயருறல்

நீல மளவே நெகிழ நிரைமுத்தின்
கோல மலரின் கொடியிடையாள்—வேல்வேந்தே

எங்குற்ரு யென்று வினவிளக்கை நீட்டினுள்
அங்குத்தான் காணு தயர்ந்து. 136

உடுத்த துகிலரிந்த தொண்டொடியாள் கண்டு
மடுத்த முயிலான் மறுகி—யடுத்தடுத்து
மன்னே யெனவழைப்பாண் மற்றுமவ னைக்காணு
தென்னேயிஃ தென்னென் றெழுந்து. 137

வெய்ய தரையென்னு மெல்லமளி யைத்தடவிக்
கையரிக்கொண் டெவ்விடத்துங் காணும—லையகோ
வென்னப்போய் வீழ்ந்தா ளினமேதி மென்கரும்பைத்
தின்னப்போ நாடன் திரு. 138

அழல்வெஞ் சிலைவேட னம்புருவ வாற்ரு
தழலுங் களிமயில்போ லோடிக்—குழல்வண்
டெழுந்தோட வீழ்ந்தா ளிருகுழைமேற் கண்ணீர்க்
கொழுந்தோட வீமன் கொடி. 139

வான்முகிலு மின்னும் வறுநிலத்து வீழ்ந்ததுபோற்
ருனுங் குழலுந் தனிவீழ்ந்தா—ளேனங்
குளம்பான் மணிகிளைக்குங் குண்டுநீர் நாட
னிளம்பாவை கைதலைமே லிட்டு. 140

சூரியன் உதித்தல்

தைய துயர்க்குத் தரியாது தஞ்சிறகாங்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை
வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோற்
கூவினவே கோழிக் குலம். 141

வான நெடுவீதி செல்லு மணித்தேரோன்
ருனம் மடந்தைக்குத் தார்வேந்தன்—போனநெறி

காட்டுவான் போலிருள்போய்க் கைவாங்கக் கானூடே
நீட்டுவான் செங்கரத்தை நின்று. 142

செய்தபிழையேதென் னுந்தேர்வேந்தேயென் றழைக்கு
மெய்துதுய ரக்கரைகா ணேனென் னும்—பையவே
யென்னென்னு தென்னென்னு மிக்கானின் விட்டேகு
மன்னென்னு வாடு மயர்ந்து. 143

அல்லியந்தார் மார்ப னடித்தா மரையவட
னல்லுயிரு மாசையும்போ னுறுதலு—மல்லுறுதோள்
வேந்தனே யென்னு விழுந்தாள் விழிவேலை
சாய்ந்தநீர் வெள்ளத்தே தான். 144

வெறித்த விளமான்காண் மென்மயில்கா ளிந்த
நெறிக்க ணெடிதூழி வாழ்வீர்—பிறித்தெம்மைப்
போனுரைக் காட்டுதிரோ வென்னுப் புலம்பினுள்
வானுடர் பெற்றிலா மான். 145

வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியா
மோட்டு வயிற்றரவு முன்றோன் ற—மீட்டதனை
யோரா தருகணைந்தா ளுண்டே னறற்கூந்தற்
போரார் விழியாள் புலர்ந்து. 146

கோச்சகக் கலிப்பா

இவ்வாறு துன்பக் கடலி னிடைமூழ்கும்
மைவார் தடங்கண் மடமாதின் செவ்விமுகஞ்
செவ்வான் மதியமெனச் செங்கட் டுளையெயிற்று
வெவ்வா யரவ முருத்து விழுங்கியதே. 146a

— நைடதம், பிரிவுறுபடலம்

தமயந்தியைப் பாம்பு சுற்றல்

வாளரவின் வாய்ப்பட்டு மாயாமுன் மன்னவநின்
ருளடைந்து வாழுந் தமியேனைத்—தோளான்

விலக்காயோ வென்றழுதாள் வெவ்வரவின் வாய்க்கிங்
கிலக்காகி நின்றா ளெடுத்து. 147

வென்றிச் சினவரவின் வெவ்வா யிடைப்பட்டு
வன்றுயராற் போயாவி யாள்கின்றேன்—இன்றுன்
திருமுகநான் காண்கிலேன் றேர்வேந்தே யென்றாள்
பொருமுகவேற் கண்ணாள் புலர்ந்து. 148

மற்றொடுத்த தோள்பிரிந்து மாயாத வல்வினையேன்
பெற்றெடுத்த மக்காள் பிரிந்தேகுங்—கொற்றவனை
நீரேனுங் காண்குதிரோ வென்றழுதா ணீள்குழற்குக்
காரேனு மொவ்வாள் கலுழ்ந்து. 149

அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே யோகோ—விடையெனக்குத்
தந்தருள்வா யென்னாத்தன் றாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியாள் சோர்ந்து. 150

### வேடன் வருதல்

உண்டோ ரழுகுரலென் றொற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயின்
முழுகுவா டெய்வ முகம். 151

வெய்ய வரவின் விடவாயி னுட்பட்டே
னையன்மீ ருங்கட் கபயம்யா—னுய்ய
வருளீரோ வென்னா வரற்றினா ளஞ்சி
யிருளீரும் பூணா ளெடுத்து. 152

### வேடன் தமயந்தியை மீட்டல்

சங்க நிதிபோற் றருசங் கிரான்சுவர்க்கி
வெங்கலிவாய் நின்றுலக மீட்டாற்போன்—மங்கையைவெம்

பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. 153

ஆருயிரு நானு மழியாம லையாவிப்
போரவின் வாயிற் பிழைப்பித்தாய்—தேரி
னிதற்குண்டோ கைம்மா றெனவுரைத்தாள் வென்றி
விதர்ப்பன்றன் பெற்ற விளக்கு. 154

வேடன் தமயந்தியை அழைத்தல்

இந்து நுதலி யெழிலேனுக்கி யேதோ தன்
சிந்தை கருதிச் சிலைவேடன்—பைந்தொடிநீ
போதுவா யென்னுடனே யென்றான் புலைநாருக்
கேதுவாய் நின்றா னெடுத்து. 155

வேட னழைப்ப விழிபதைத்து வெய்துயிரா
வாடன் மயில்போ லலமரா—வோடினள்
ஆறெலா மாகச் சுரிகுழல்வேற் கண்ணினீர்
ஆறெலா மாக வழுது. 156

வேடன் நீறுதல்

தீக்கட் புலிதொடரச் செல்லுஞ் சிறுமான்போ
லாக்கை தளர வலமந்து—போக்கற்றுச்
சீறா விழித்தாள் சிலைவேட னவ்வளவி
னீறாய் விழுந்தா னிலத்து. 157

வண்டமிழ்வா ணர்ப்பிழைத்த வான்குடிபோ றீத்தழன்மீ
மண்டு கொடுஞ்சுரத்தோர் மாடிருந்து—பண்டையுள
வாழ்வெல்லாந் தானிழந்து மற்றழுதாண் மன்னிழைத்த
தாழ்வெல்லாந் தன்தலைமேற் றந்து. 158

கற்பி னழலாற் கொடுஞ்சிலைக்கை
வேட னுடலங் கரியாக்கிப்
பொற்பின் துறைபோய் நலங்கனிந்த
பொன்னம் பாவை புலம்பெய்தி
வெற்பி னுயர்தோள் வேந்துசெலும்
வெங்கான் றுருவி யேகுதலும்
அற்பின் முனிவர் தவமியற்றுஞ்
சாலை நோக்கி யருகணைந்தாள். 158a

அடைந்த மாதின் முகநோக்கி
யாரை நீவெவ் வழற்கானில்
நடந்து தனியே யித்தலையிற்
போந்த தென்னை நளினமலர்த்
தடங்கண் கலுழ்ந்து புலம்பெய்துந்
தன்மை யெவன்கொல் சாற்றுகென
மடந்தை புகுந்த வாறனைத்தும்
முனிவர் கேட்ப வகுத்துரைத்தாள். 158b

கேட்ட வளவில் உளமுருகிக்
கிள்ளை மருட்டும் பனிமொழியாய்
வாட்டம் ஒழிதி நிற்பிரிந்த
வடிவேல் நளனைச் சின்னாளில்
நாட்டங் களிப்பக் கண்டுமுன்போல்
நலம்பெற் றிருத்தி எலநவிலா
வீட்டுந் தவத்தோர் மறைக்கிழவர்
இருக்கை நோக்கி ஏகினராம். 158c

— நைடதம், பிரிவுறுபடலம்

வணிகன் தமயந்தியைக் காணுதல்

அவ்வளவி லாதிப் பெருவழியி லாய்வணிக
னிவ்வளவு தீவினையே னென்பாடன்—மெய்வடிவைக்
கண்டானை யுற்றான் கமலமயி லேயென்று
ணுண்டாய வெல்லா முணர்ந்து. 159

### தமயந்தியை வணிகன் யாரென வினவல்

எக்குலத்தா யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்பேர்
நெக்குருகி நீயழுதற் கென்னிமித்த—மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து. 160

### தமயந்தியின் விடை

முன்னை வினையின் வலியான் முடிமன்ன
னென்னைப் பிரிய விருங்கானி—லன்னவனைக்
காணா தழுகின்றே னென்றாள் கதிரிமைக்கும்
பூணாரம் பூண்டாள் புலர்ந்து. 161

### சேதிநகர்க்கேக வழிகாட்டல்

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினா—னீதி
கிடத்துவான் மன்னவர்தங் கீர்த்தியினைப் பார்மே
னடத்துவான் வட்டை நடந்து. 162

### தமயந்தியைக் கண்ட பணிப்பெண்கள் சேதியரசிக்குச் சொல்லல்

அற்ற துகிலு மறுதொழுகு கண்ணீரு
முற்ற துயரு முடையவளாய்—மற்றொருத்தி
நின்றாளைக் கண்டேம் நிலவேந்தன் பொற்றேவி
யென்றார் மடவா ரெடுத்து. 163

### சேதியரசி பணிப்பெண்ணுக்குக் கூறல்

போயகலா முன்னம் புனையிழையாய் பூங்குயிலை
யாய மயிலை யறியவே—நீயேகிக்
கொண்டுவா வென்றாடன் கொவ்வைக் கனிதிறந்து
வண்டுவாழ் கூந்தன் மயில். 164

தமயந்தி சேதியரசியின் பாதங்களில் வீழல்

ஆங்கவளு மேகி யரசன் பெருந்தேவி
பூங்கழலின் மீதே புரண்டழுதா—டாங்கு
மினவளையா யுற்றதுய ரெல்லா மெனது
வினைவழிகா ணென்றாண் மெலிந்து. 165

சேதியரசி தமயந்தியை வினவல்

அந்தா மரையி லவளேயென் றையுற்றுச்
சிந்தா குலமெனக்குத் தீராதாற்—பைந்தொடியே
யுள்ளவா றெல்லா முரையென்று ளொண்மலரின்
கள்ளவார் கூந்தலாள் கண்டு. 166

தமயந்தி கூறல்

என்னைத் தனிவனத்திட் டெங்கோன் பிரிந்தேக
வன்னவனைக் காணா தலமருவே—னிங்கர்க்கே
வந்தே னிதுவென் வரவென்றாள் வாய்புலராச்
செந்தேன் மொழிபதறச் சேர்ந்து. 167

சேதியரசி சொல்லல்

உன்றலைவன் றன்னை யொருவகையா னாடியே
தந்து விடுமளவுந் தாழ்குழலா—யென்றனுட
னிங்கே யிருக்க வினிதென்று ளேந்திழையைக்
கொங்கேயுந் தாராள் குறித்து. 168

ஈங்கிவளிவ் வாறிருப்ப வின்னனுழந் தேயேகிப்
பூங்குயிலும் போர்வேற் புரவலனும்—யாங்குற்றார்
சென்றுணர்தி யென்று செலவிட்டான் வேதியனைக்
குன்றுறள்தோள் வீமன் குறித்து. 169

வீமன் விட்ட பார்ப்பான் தமயந்தியைக் காணல்

ஓடும் புரவித்தேர் வெய்யோ னொளிசென்று
நாடு மிடமெல்லா நாடிப்போய்க்—கூடினன்

போதிற் றிருநாடும் பொய்கைத் திருநாடாஞ்
சேதித் திருநாடு சென்று. 170

தாமஞ்சே ரோதித் தமயந்தி நின்றளை
யாமென் றறியா வருமறையோன்—வீமன்
கொடிமேல் விழுந்தழுதான் கொம்புமவன் செம்பொன்
அடிமேல் விழுந்தா ளழுது. 171

மங்கை விழிநீர் மறையோன் கழல்கழுவ
வங்கவன்றன் கண்ணீ ரவளுடன்மேற்—பொங்கக்
கடல்போலுங் காதலார் கையற்றார் தங்க
ளுடல்போலு மொத்தா ருயிர். 172

பார்ப்பான் சேதியரசிக்குக் கூறல்

மாரி பொருகூந்தன் மாதராய் நீபயந்த
காரிகைதான் பட்டதுயர் கண்டாயோ—சோர்குழலும்
வேணியாய் வெண்டுகிலும் பாதியாய் வெந்துயருக்
காணியாய் நின்றா ளயர்ந்து. 173

சேதியரசி புத்திரியென் றறிந்து வருந்துதல்

தன்மக ளாவ தறியாத் தடுமாறாப்
பொன்வடிவின்மேலழுது போய்வீழ்ந்தாள்—மென்மலரைக்
கோதிப்போய் மேதி குருகெழுப்புந் தண்பணைசூழ்
சேதிக்கோன் றேவி திகைத்து. 174

தமயந்தியைக் குண்டினபுரஞ் செல விடுதல்

கந்தனையுங் கன்னியையும் கண்டா யினுஞ்சிறிது
தன்றுயரந் தீர்ந்து தனியாறத்—தந்தை
பதியிலே போக்கினன் சேதியர்கோன் பண்டை
விதியிலே போந்தாளை மீண்டு. 175

கோயிலு மந்தப் புரமுங் கொடிநுடங்கும்
வாயிலு நின்று மயங்கியவே—தீயகொடுங்
கானுள மக்களையுங் கைவிட்டுக் காதலன்பின்
போனாள் புகுந்த பொழுது. 176

அழுவார் விழுவா ரயிர்ப்பா ருயிர்ப்பார்
தொழுவார் தமரெங்குஞ் சூழ்வார்—வழுவாத
காமநீ ரோதக் கடல்கிளர்ந்தா லொத்ததே
நாமவேல் வீம னகர். 177

## தமயந்தி பிதாவைக் காணல்

தந்தையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீர்சொரியச்
சிந்தை கலங்கித் திகைத்தலமந்—தெந்தாயான்
பட்டதே யென்னப்போய் வீழ்ந்தாள் படைநெடுங்கண்
விட்டநீர் மேலே விழ. 178

## பெற்றோர் வருந்தல்

செவ்வண்ண வாயாளுந் தேர்வேந் தனுமகளை
யவ்வண்ணங் கண்டக்கா லாற்றுவரோ—மெய்வண்ண
மோய்ந்தநா ணீர்போ யுலர்கின்ற தொத்ததமர்
நீந்தினார் கண்ணீரி னின்று. 179

பனியிருளிற் பாழ்மண் டபத்திலே யுன்னை
நினையாது நீத்தகன்ற போது—தனியேநின்
றென்னினைந்தா யென்செய்தா யென்னாப் புலம்பினாள்
பொன்னினைத்தாய் நோக்கிப் புலர்ந்து. 180

கலிதொடர் காண்டம் முற்றிற்று

---

# ௩. கலிநீங்கு காண்டம்

## காப்பு

மூலப் பழமறைக்கு முன்னையுங் காணலாங்
காலிக்குப் பின்னையுங் காணலா—மால்யானை
முந்தருளும் வேத முதலை யெனவழைப்ப
வந்தருளுஞ் செந்தா மரை. க

போதுவார் நீறணிந்து பொய்யாத வைந்தெழுத்தை
யோதுவா ருள்ள மெனவுரைப்பார்—நீதியார்
பெம்மா னமரர் பெருமா னொருமான்கை
யம்மானின் றாடு மரங்கு. உ

### நளன் செய்தி

மன்னா வுனக்கபய மென்னா வனத்தீயிற்
பன்னாக வேந்தன் பதைத்துருகிச்—சொன்ன
மொழிவழியே சென்றான் முரட்கலியின் வஞ்சப்
பழிவழியே செல்கின்றான் பார்த்து. 181

### நளன் தீவாய்ப்பட்ட பாம்பைக் காத்தல்

ஆருந் திரியா வரையிருளி னங்ஙனே
சோர்குழலை நீத்த துயரோடும்—வீரன்
றிரிவானத் தீக்கானிற் செந்தீயின் வாய்ப்பட்
டெரிவானைக் கண்டா னெதிர் 182

வேத முனியொருவன் சாபத்தால் வெங்கானி
னாதபத்தின் வாய்ப்பட் டழிகின்றேன்—காதலால்
வந்தெடுத்துக் காவென்றான் மாலை மணிவண்டு
சந்தெடுத்த தோளானைத் தான் 183

சீரியாய் நீயெடுப்பத் தீமை கெடுகின்றேன்
கூருந் தழலவித்துக் கொண்டுபோய்—பாரில்
விடுகென்றான் மற்றந்த வெந்தழலான் வெம்மைப்
படுகின்றான் வேல்வேந்தைப் பார்த்து. 184

என்றுரைத்த வவ்வளவி னேழுலகுஞ் சூழ்கடலுங்
குன்றுஞ் சுமந்த குலப்புயத்தான்—வென்றி
யரவரசைக் கொண்டகன்றா னாரணியந் தன்னில்
இரவரசை வென்றா னெடுத்து. 185

மண்ணின்மீ தென்றனைநின் வன்றாளா லொன்றுமுதல்
எண்ணித் 'தச'வென் றிடுகென்றா—னெண்ணிப்போர்
மாவலான் செய்த வுதவிக்கு மாறாக
வேவலாற் றீங்கிழைப்பே னென்று. 186

அப் பாம்பு நளனைக் கடித்தல்

ஆங்கவன்றா னவ்வா றுரைப்ப வதுகேட்டுத்
தீங்கலியாற் செற்ற திருமனத்தான்—பூங்கழலை
மண்ணின்மேல் வைத்துத் 'தச'வென்று வாய்மையால்
எண்ணினான் வைத்தா னெயிறு 187

நளன் வடிவம் மாறுதல்

வீமன் மடந்தை விழிமுடியக் கண்டறியா
வாம நெடுந்தோள் வறியோருக்—கேமங்
கொடாதா ரகம்போற் குறுகிற்றே மெய்ம்மை
விடாதான் றிருமேனி வேந்து. 188

ஆற்ற லரவரசே யாங்கென் னுருவத்தைச்
சீற்றமொன் றின்றிச் சினவெயிற்றான்—மாற்றுதற்கின்
றென்கா ரணமென்றா னேற்றமரிற் கூற்றனைக்கு
மின்கா லயின்முகவேல் வேந்து. 189

காயுங் கடகளிற்றாய் கார்க்கோ டகனென்பேர்
நீயிந்த வந்ததி யானினைந்து—காயத்தை
மாறாக்கிக் கொண்டு மறைந்துறைதல் காரணமா
வேறாக்கிற் றென்றான் விரைந்து. 190

கூனிறால் பாயக் குவளை தவளைவாய்த்
தேனிறால் பாயுந் திருநாடா—கானிற்
றணியாத வெங்கனலைத் தாங்கினா யிந்த
வணியாடை கொள்கென்றா னாங்கு. 191

சாதி பணித்துகிலீ சாத்தினாற் றண்கழுநீர்ப்
போதின்கீழ் மேயும் புதுவரா—றாதின்
றுளிக்குநா நீட்டுந் துறைநாடர் கோவே
யொளிக்குநா ளீங்கு முரு. 192

வாகு குறைந்தமையான் வாகுகனென் றன்னாம
மாக வயோத்தி நகரடைந்து—மாகனகத்
தேர்த்தொழிற்கு மிக்கானீ யாகென்றான் செம்மனத்தாற்
பார்த்தொழிற்கு மிக்கானைப் பார்த்து. 193

இணையாரு மில்லா னிழைத்த வுதவி
புணையாகச் சூழ்கானிற் போனான்—பணையாகத்
திண்ணாகை மோரெட்டுந் தாங்குந் திசையனைத்து
மெண்ணாக வேந்த னெழுந்து. 194

நளன் துயருறல்

நினைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளுங்
கனற்புகைய வேகின்றான் கண்டான்—பனிக்குருகு
தண்படா நீழற் றனிப்பேட்டைப் பார்த்திரவு
கண்படா வேலைக் கரை. 195

கொம்ப ரிளங்குருகே கூறு திருத்தியால்
அம்புயத்தின் போதை யறுகாலாற்—றும்பி
திறக்கத்தே னூறுந் திருநாடன் பொன்னை
யுறக்கத்தே நீத்தேனுக் கொன்று. 196

புன்னை நறுந்தாது கோதிப் பொறிவண்டு
கன்னிப் பெடையுண்ணக் காத்திருக்கு—மின்னருள்கண்
டஞ்சினு னவி யழிந்தா னறவுயிர்த்து
நெஞ்சினு னெல்லா நினைந்து. 197

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ—நாத
மளிக்கின்ற வாழிவா யங்கலவ வோடி
யொளிக்கின்ற தென்னோ வுரை. 198

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவுங்
கானலே வேலைக் கழிக்குருகே—யானுடைய
மின்னிமைக்கும் பூணுளவ் வீங்கிருள்வா யாங்குணர்ந்தால்
என்னினைக்குஞ் சொல்வீ ரெனக்கு. 199

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய்—தீவா
யரவகற்று மென்போல வார்கலியே மாதை
யிரவகற்றி வந்தாய்கொ லின்று. 200

நளன் அயோத்திநகர் அடைதல்

முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீ ரயோத்தி நகரடைந்தான்—பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்ம்மலரைத் தும்பி
யருகுடைக்கு நன்னாட் டரசு. 201

மான்றேர்த் தொழிற்கு மடைத்தொழிற்கு மிக்கோனென்
றான்றேய்க்கும் வேலா னுயர்நறவத்—தேன்றேய்க்குந்
தார்வேந்தற் கென்வரவு தானுரைமி ரென்றுரைத்தான்
தேர்வேந்தன் வாகுகனுய்ச் சென்று. 202

அம்மொழியைத் தூத ரரசற் கறிவிக்கச்
செம்மொழியாத் தேர்ந்ததனைச் சிந்தித்தே—யிம்மொழிக்குத்
தக்கானை யிங்கே தருமி னெனவுரைக்க
மிக்கானுஞ் சென்றான் விரைந்து. 203

பொய்யடையாச் சிந்தைப் புரவலனை நோக்கித்தன்
செய்ய முகமலர்ந்து தேர்வேந்தன்—ஐயாநீ
எத்தொழிற்கு மிக்கா னியாது பெயரென்றான்
கைத்தொழிற்கு மிக்கானைக் கண்டு. 204

அன்ன மிதிப்ப வலர்வழியுந் தேறல்போய்ச்
செந்நெல் விளைக்குந் திருநாடர்—மன்ன
மடைத்தொழிலுந் தேர்த்தொழிலும் வல்லன்யா னென்றான்
கொடைத்தொழிலின் மிக்கான் குறித்து. 205

நளனைத் தேடப் புரோகிதனை விடல்

என்னை யிருங்கானி னீத்த விகல்வேந்தன்
றன்னைநீ நாடுகெனத் தண்கோதை—மின்னுப்
புரைகதிர்வேல் வேந்தன் புரோகிதனுக் கிந்த
வுரைபகர்வ தானு ளுணர்ந்து. 206

காரிருளிற் பாழ்மண் டபத்தேதன் காதலியைச்
சோர்துயிலி னீத்த றுணிவன்றே—தேர்வேந்தற்
கென்றறைந்தா னேர்கின் றெதிர்மாற்றந் தந்தாரைச்
சென்றறிந்து வாவென்றா டேர்ந்து. 207

### புரோகிதன் நளனைத் தேடல்

மின்னாடு மால்வரையும் வேலையும் வேலைசூழ்
நன்னாடுங் கானகமு நாடினான்—மன்னு
கடந்தாழ் களியானைக் காவலனைத் தேடி
யடைந்தா னயோத்தி நகர். 208

கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப்
போனதூஉம் வேந்தற்குப் போதுமோ—தானென்று
சாற்றினா னந்தவுரை தார்வேந்தன் றன்செவியி
லேற்றினான் வந்தா னெதிர். 209

### நளன் விடை

ஒண்டொடி தன்னை யுறக்கத்தே நீத்ததுவும்
பண்டை விதியின் பயனேகாண்—தண்டரளப்
பூத்தாம வெண்குடையான் பொன்மகளை வெவ்வனத்தே
நீத்தானென் றையுறேல் நீ. 210

### தமயந்தியின் வினாவுக்குப் புரோகிதன் விடை

வாக்கினான் மன்னவனை யொப்பான் மறித்தொருகா
லாக்கையே நோக்கி னவனல்லன்—பூக்கமழுங்
கூந்தலாய் மற்றக் குலப்பாக னென்றுரைத்தான்
ஏந்துநூன் மார்ப னெடுத்து. 211

### அயோத்தி அரசனுக்குத் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரம் தெரிவித்தல்

மீண்டோர் சுயம்வரத்தை வீமன் றிருமடந்தை
பூண்டாளென் றந்தணநீ போயுரைத்தா—னீண்ட
கொடைவேந்தற் கித்தூரந் தேர்க்கோலங் கொள்வான்
படைவேந்தன் என்றாள் பரிந்து. 212

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்—செங்கோலா
யந்நளனு காளை யளவென்று னந்தணன்போய்த்
தென்னனுந் தாரானைச் சேர்ந்து. 213

வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென்—றோதின
னென்செய்கோ மற்றிதனுக் கென்று னிகல்சீற
மின்செய்த வேலான் விரைந்து 214

அதற்கு நளன் சொல்வது

குறையாத கற்பினாள் கொண்டானுக் கல்லா
லிறவாத வேந்திழையா ளின்று—பறிபிறி
கெல்லிற் பருவரா லோடு நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல். 215

அயோத்தி யரசன் சிந்தித்தல்

என்மே லெறிகின்ற மாலை யெழில்நளன்றன்
முன்னே விழுந்ததுகாண் முன்னாளில்—அன்னதற்குக்
காரணந்தா னீதன்றோ வென்றான் கடாஞ்சொரியும்
வாரணந்தா னன்னான் மதித்து. 216

நளன் சிந்தித்தல்

மூன்னை வினையான் முடிந்ததோ மொய்குழலா
ளென்னைத்தான் காண விசைந்ததோ—தன்மரபுக்
கொவ்வாத வார்த்தை யுலகத் துரைப்பட்ட
தெவ்வாறு கொல்லோ விது. 217

நளன் இருதுபர்ணனுக்குச் சாரத்தியஞ் செய்தல்

ஒற்றைத் தனியாழித் தேரொன்ன வோடுவதோர்
கொற்ற நெடுந்தேர் கொடுவந்தேன்—மற்றிதற்கே

போந்தேறு கென்றுரைத்தான் பொம்மென் றளிமுரலத்
தீந்தேறல் வார்க்குந்தார்ச் சேய். 218

முந்தை வினைகுறுக மூவா மயல்கொண்டான்
சிந்தை யினுங்கடுகச் சென்றதே—சந்தவிரைத்
தார்குன்றா மெல்லோதி தன்செயலைத் தன்மனத்தே
தேர்கின்றா னூர்கின்ற தேர். 219

மேலாடை வீழ்ந்த தெடுவென்றா னவ்வளவில்
நாலாறு காதம் நடந்ததே—தோலாமை
மேல்கொண்டா னேறிவர வெம்மைக் கலிச்சூதின்
மால்கொண்டான் கோல்கொண்ட மா. 220

### இருதுபர்ணன், வீமராசனது குண்டினபுரஞ் சேர்தல்

ஆமை முதுகி லலவன் றுயில்கொள்ளுங்
காமர் நெடுநாடு கைவிட்டு—வீமன்றன்
பொன்னகரி சென்றடைந்தான் போர்வேட் டெழுங்கூற்ற
மன்னகரி யொன்றுடையா னங்கு. 221

வெற்றித் தனித்தேரை வீமன் பெருங்கோயின்
முற்றத் திருத்தி முறைசெய்யுங்—கொற்றவற்குத்
தன்வரவு கூறப் பணித்துத் தனிப்புக்கான்
மன்னிரவு தாரான் மகிழ்ந்து. 222

### இருதுபர்ணனை வீமன் வினாவியது

கன்னி நறுந்தேறன் மாந்திக் கமலத்தின்
மன்னித் துயின்ற வரிவண்டு—பின்னையும்போய்
நெய்தற் கவாவு நெடுநாட நீயென்பா
லெய்தற் கவாவியவா றென். 223

### இருதுபர்ணன் சொல்லல்

இன்றுன்னைக் காண்பதோ ராதரவால் யானிங்ஙன்
மன்றல் மலர்த்தாராய் வந்தடைந்தே—னென்று
னொளியார்வேற் கண்ணாண்மே லுள்ளந் துரப்பத்
தெளியாது முன்போந்த சேய். 224

ஆதி நெடுந்தேர்ப் பரிவிட் டவையாற்றிக்
கோதி லடிசிற் குறைமுடிப்பான்—மேதிக்
கடைவாயிற் கார்நீலங் கண்விழிக்கு நாடன்
மடைவாயிற் புக்கான் மதித்து. 225

ஆதி மறைநூ லனைத்துந் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல்—யாதும்
கிரப்பாம லெல்லா நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை. 236

### தமயந்தி தன் மக்களைத் தேர்ப்பாகனாகிய நளனிடத்தில் விட்டது

இடைச்சுரத்திற் றன்னை யிடையிருளி னீத்த
கொடைத்தொழிலா னென்றயிர்த்த கோமான்—மடைத்தொழில்கள்
செய்கின்ற வெல்லாந் தெரிந்துணர்ந்து வாவென்றான்
நைகின்ற நெஞ்சா னயந்து. 227

கோதை நெடுவேற் குமரனையுந் தங்கையையு
மாதி யரச னருகாகப்—போத
விளையாட விட்டவன்றன் மேற்செயனா டென்றாள்
வளையாடுங் கையாண் மதித்து. 228

### அரசன் மக்களைத் தழுவி வினாவல்

மக்களைமுன் காணா மனநடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப் புயத்தணையா—மக்காணீர்

என்மக்கள் போல்கின் றீர்யார்மக்க ளென்றுரைத்தான்
வன்மக் களியானை மன். 229

பிள்ளைகள் சொல்லல்

மன்ன னிடதத்தார் வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட் டவனேக—விந்நகர்க்கே
வாழ்கின்றோ மெங்கள் வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றா னென்றா ரழுது. 230

ஆங்கவர் சொன்ன வுரைகேட் டழிவெய்தி
நீங்கா வுயிரோடு நின்றிட்டான்—பூங்காவின்
வள்ளம்போற் கோங்கு மலருந் திருநாட
னுள்ளம்போற் கண்ணீ ருகுத்து. 231

அரசன் வினா

உங்க ளரசொருவ னுளனீ ரோடிப்போந்
திங்க ணுறைத விழுக்கன்றோ—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற் பெற்ற
விளவரசை நோக்கி யெடுத்து. 232

மக்கள் விடையளித்தல்

நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—வெஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 233

எந்தை கழலிணையி னெம்மருங்குங் காணலாங்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கண்
மணிமுடியிற் றேய்ந்த வடு. 234

அரசன் சொல்லல்

மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—வென்னை
முனிந்தருளல் என்று முடிசாய்ந்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 235

தமயந்தி துயரமுறல்

கொற்றக் குமரனையுங் கோதையையுந் தான்கண்டு
மற்றவன்றா னுங்குரைத்த வாசகத்தை—முற்றும்
மொழிந்தாரம் மாற்ற மொழியாத முன்னே
அழிந்தாள் விழுந்தா ளழுது. 236

மற்றித் திருநகர்க்கே வந்தடைந்த மன்னவற்குக்
கொற்றத் தனித்தேருங் கொண்டணைந்து—மற்றும்
மடைத்தொழிலே செய்கின்ற மன்னவன்கா ணெங்கள்
கொடைத்தொழிலா னென்றாள் குறித்து. 237

வீமன் நளனிடம் செல்லல்

போதலருங் கண்ணியான் போர்வேந்தர் சூழப்போய்க்
காதலிதன் காதலனைக் கண்ணுற்றா—னோதம்
வரிவளைகொண் டேறும் வளநாடன் றன்னைத்
தெரிவரிதா நின்றான் றிகைத்து. 238

செவ்வாய் மொழிக்குஞ் செயலுக்குஞ் சிந்தைக்கு
மொவ்வாது கொண்ட வுருவென்னா—வெவ்வாயு
நோக்கினா னோக்கித் தெளிந்தா னுணங்கியதோர்
வாக்கினான் றன்னை மதித்து. 239

வீமன் நளனைநோக்கிச் சொல்லியது

பைந்தலைய நாக பணமென்னும் பூகத்தி
னைந்தலையின் பாலை தனை யையுற்று—மந்தி

தெளியா திருக்குந் திருநாடா வுன்னை
யொளியாது காட்டுன் னுரு. 240

அரவரசன் றன்கொடுத்த வம்பூந் துகிலி
னொருதுகிலை வாங்கி யுடுத்தான்—ஒருதுகிலைப்
போர்த்தான் பொருகலியின் வஞ்சனையாற் பூண்டளிக்குங்
கோத்தாய முன்னிழந்த கோ. 241

நளன் மாறுவேடம் நீங்கல்

மிக்கோ னுலகளந்த மெய்யடியே சார்வாகப்
புக்கோ ரருவினைபோற் போயிற்றே—யக்காலங்
கானகத்தே காதலியை நீத்துக் கரந்துறையு
மானகத்தேர்ப் பாகன் வடிவு. 242

தாதையைமுன் காண்டலுமே தாமரைக்க ணீரரும்பப்
போதலருங் குஞ்சியான் புக்கணைந்து—கோதிலாப்
பொன்னடியைக் கண்ணிற் புனலாற் கழுவினான்
மின்னிடையா ளோடும் விழுந்து. 243

தேவர்கள் நளன்மேற் பூமாரி சொரிதல்

உத்தமரின் மற்றிவனை யொப்பா ரொருவரில்லை
யித்தலத்தி னென்றிமையோ ரெம்மருங்கும்—கைத்தலத்திற்
றேமாரி பெய்யுந் திருமலர்த்தார் வேந்தன்மேற்
பூமாரி பெய்தார் புகழ்ந்து. 244

வீமன் விருந்து

வேத நெறிவழுவா வேந்தனையும் பூந்தடங்கட்
கோதையையு மக்களையுங் கொண்டுபோய்த்—தாது
புதையத்தேன் பாய்ந்தொழுகும் பூஞ்சோலை வேலி
விதையக்கோன் செய்தான் விருந்து. 245

### இருதுபர்ணன் தன்னகர் சேர்தல்

உன்னையா ளென்று முணரா துரைத்தவெல்லாம்
பொன்னமருந் தாராய் பொறுவென்ற—பின்னைத்தன்
மேனீர்மை குன்றா வெறுந்தேர் மிசைக்கொண்டான்
மானீ ரயோத்தியார் மன். 246

### நளன் மனைவி மக்களுடன் நிடததேசஞ் செல்லல்

விற்றானை முன்செல்ல வேல்வேந்தர் பின்செல்லப்
பொற்றேர்மேற் றேவியொடும் போயினான்—முற்றும்ப
றேனீ ரளித்தருகு செங்கெற் கதிர்விளைக்கு
மாநீர் நிடதத்தார் மன். 247

மன்றலிளங் கோதையொடு மக்களுந் தானுமொரு
வென்றி மணிநெடுந்தேர் மேலேறிச்—சென்றடைந்தான்
மாவிந்த மென்னும் வள நகரஞ் சூழ்ந்தொரு
பூவிந்தை வாழும் பொழில். 248

### நளன் புட்கரனுக்குத் தூதுவிட்டு மறுபடியுஞ் சூதாடல்

மற்றவனுக் கென்வரவு சொல்லி மறுசூதுக்
குற்ற பணய முளதென்று—கொற்றவனைக்
கொண்டணைவீ ரென்று குலத்தூ தனைவிடுத்தான்
தண்டெரியற் றேர்வேந்தன் றான். 249

### பந்தயம் வைத்தல்

தீது தருகலிமுன் செய்ததனை யோராதே
யாது பணைய மெனவியம்பச்—சூதாட
மையாழி யிற்றுயிலு மாலனையான் வண்மைபுனை
கையாழி வைத்தான் கழித்து. 250

### நளன் வெற்றியடைந்து தன்னகரைக் கைப்பற்றல்

அப்பலகை யொன்றி னருகிருந்தார் தாமதிக்கச்
செப்பரிய செல்வத் திருநகரு—மொப்பரிய

வன்றானை யோடு வளநாடும் வஞ்சனையான்
வென்றானை வென்றானவ் வேந்து. 251

அந்த வளநாடு மவ்வரசு மாங்கொழிய
வந்த படியே வழிக்கொண்டான்—செந்தமிழோர்
நாவேய்ந்த சொல்லால் நளனென்று போற்றிசைக்குங்
கோவேந்தற் கெல்லாங் கொடுத்து. 252

ஏனை முடிவேந்த ரெத்திசையும் போற்றிசைப்பச்
சேனை புடைசூழத் தேரேறி—யானபுகழ்ப்
பொன்னகர மெய்தும் புரந்தரனைப் போற்பொலிந்து
நன்னகரம் புக்கான் நளன். 253

கார்பெற்ற தோகையோ கண்பெற்ற வாண்முகமோ
நீர்பெற் றுயர்ந்த நிறைபுலமோ—பார்பெற்று
மாதோடு மன்னன் வரக்கண்ட மாநகருக்
கேதோ வுரைப்ப னெதிர். 254

கலிநீங்கு காண்டம் முற்றிற்று

நளவெண்பாச் சுருக்கம் முற்றிற்று

# நளவெண்பாச் சுருக்க உரை

## விநாயகர்

நேசரிதங்கூர.........

இதன் பொருள்: நேசர் — (தன்னிடத்து) நட்புக் கொண்டவர்கள், இதம்கூர—நன்மைமிகும்படி, நிலமலையம்-பூமண்டலத்தை, தாங்கும் நளன் — (தோள்வலியால்) தாங்கிக் காக்கின்ற நளமகாராசனது, மாசரிதம் - பெருமைபொருந்திய சரித்திரத்தை, கூற — (செய்யுள் ரூபமாகச்) சொல்லுதற்கு, ஈசன் — சிவபெருமானும், கரியான் - விஷ்ணுவும், அ(ன்)னத்தான் — பிரமதேவனும், கருது - சிந்திக்கின்ற, புகழ்பூண்ட — கீர்த்தியணிந்துள்ள, கரி ஆனனத்தான் — யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளது, கழல் — பாதம், துணை ஆ(க)வரும் — உதவிபுரிவனவாகவரும்; எ — று.

சரிதம் கூறக் கழல் துணையா வரும் என்க. துணையா — எச்சவீறு, தொகுத்தல் விகாரம். அனத்தான் — தொகுத்தல் விகாரம். கழல் — வீரகண்டாமணி என்னும் ஓர் ஆபரணம்; அதனை யணிந்துள்ள பாதத்திற்கு ஆகுபெயராயிற்று.

## திருமால்

ஆதித்தனிக்கோல மானன்.........

இ — ள்: ஆதி — முதன்மையான, தனிக்கோலம் ஆனன் — ஒப்பற்ற வராக அவதாரமெடுத்தவனும், அடியவற்கு ஆ(க) — (தன்) அடியானான பிரகலாதாழ்வானுக்காக, சோதி — ஒளிபொருந்திய, திருத்தூணில் தோன்றினன் — அழகிய தூணிடத்தில் அவதரித்தவனும், வேதத்தின் முன் — வேதங்களுக்கு முதலாகிய பிரணவத்தில், நின்றன் — (பொருளாக) நின்றவனும், வேழம் — கஜேந்திரன் என்னும் யானை, முதலே என அழைப்ப — ஆதிமூலமே என்று ஓலமிட்டு அழைக்க, என் என்றான் — என்ன என்று வந்து துயர்தீர்த்தவனுமாகிய திருமால், எங்கட்கு இறை — எங்களுக்குத் தெய்வமாகும்; எ — று.

ஆனால், தோன்றினன், நின்றான், என்றான் என்பன வினையாலணையும் பெயர்கள். முதல், இறை - ஆகுபெயர்கள், அடியவற்கா - தொகுத்தல் விகாரம்.

சிவபெருமான்

கலாபமயில்..........

இ - ள்: கலாபம் மயில் இருந்த - தோகையையுடைய மயில்போலும் சாயலுடைய உமாதேவியார் தங்கி இருக்கப்பெற்ற, பாகத்தார் - இடப்பாகத்தை யுடையவரும், கங்கை உலாவு - கங்காநதி அசைகின்ற, சடைமேல் உறையும் - (தமது) சடைமுடியில் இருக்கின்ற, நிலாவை - சந்திரனது ஒளியை, வழீய - (தமது திருமேனியில்) வழியும்படி, வார்த்தால் அன்ன - சொரிந்தாற் போன்ற, மா நீற்றார் - பெருமை பொருந்திய விபூதியைத் தரித்தவரும், நாகம் - பாம்புகளை, கழிய - மிகுதியாக, ஆர்த்தார் - (ஆபரணமாக) கட்டினவருமாகிய சிவபெருமான், நமக்கு ஓர் காப்பு-நமக்குச் சிறந்த ஓர் காவல் ஆவார்; எ-று.

பாகத்தார் - அர்த்தநாரீச்சுரர். காப்பு - காக்கின்ற கடவுளுக்குத் தொழிலாகுபெயர்.

முருகன்

நீலநெடுங்கொண்மூ.........

இ - ள்: நீலநெடுங்கொண்மூ நெற்றி நிழல் நாறி - நீல நிறம் பொருந்திய நெடிய மேகத்தின் மேலிடத்தே ஒளிதோன்றி, காலை இருள் சீக்கும் காய் கதிர்போல் - காலையிலே இருளை நீக்குகிற வெப்பத்தைச் செய்கின்ற சூரியனைப்போல, சோலை மணித் தோகைமேல் தோன்றி - சோலைபோலும் நீலமணித் தோகையையுடைய மயிலின் மேலே தோன்றி, மாக்கடல்சூர் வென்றோன் - கரிய கடலிலே மாமரமாய் நின்ற சூரனை வென்றவராகிய முருகக் கடவுளுடைய, அணி சேவடி எம் அரண் - அழகிய சிவந்த திருவடிகள் எமக்கு அரணாகும்; எ - று.

மயிலுக்கு மேகமும், முருகனுக்குச் சூரியனும், சூரனாகிய அவுணனுக்கு இருளும் உவமை யென்க.

சோலைமணித்தோகை — உவமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. சோலை — தோகையின் விரிவுக் குவமை. நாறிச் சிக்கும் கதிரெனவும் தோன்றி வென்றேன் எனவும் இயைக்க. காய்கதிர் — வினைத் தொகை.

### அவையடக்கம்

வெந்தறுகண்........

இ — ள்: பைந்தொடையில் — பசுமையாகிய மலர்களில், தேன் பாடும் — வண்டுகள் இசைபாடுகின்ற, தார் நளன் தன் - மாலையை யணிந்த நளமகாராசனது, தெய்வத் திரு கதையை — தெய்வத்தன்மை பொருந்திய அழகிய சரித்திரத்தை, யான் பாடல் உற்ற இது — (அறியாதவனாகிய) நான் பாடத் தொடங்கியதாகிய இச் செய்கை, வெம் தறுகண் — கொடிய அஞ்சாமைத் தன்மையுடைய, வேழத்தை — யானையை, வேரி கமலத்தின் தந்துவினால் — வாசனைபொருந்திய தாமரைத் தண்டினது நூலினால், கட்ட — பிணிப்பதற்கு, சமைவது ஒக்கும் - முயல்வதை ஒத்திருக்கும்; எ — று.

எனவே இக் கதையைச் செய்ததற்கு அருமை கூறியவாறும். பசுமை + தொடை = பைந்தொடை. நளன் கதைக்குத் தெய்வத்தன்மையாவது கேட்போர்களைப் பரிசுத்தராக்குதலும் கலிபுருடன் சேராமலிருத்தலுமாம்.

பாரார்.........

இ — ள்: பேர் ஆர் — கீர்த்தி வாய்ந்த, புகழேந்தி — புகழேந்திப் புலவர், தார் ஆர் — மாலையையணிந்த, செழியனையும் - பாண்டியனையும், சென்னியையும் - சோழனையும், சேர — ஒருங்குசேர, திறைகொள் — கப்பம் வாங்குகின்ற, மொழியின் சுவையே — (தமது) சொல்லின் இனிமையே, முதிர்ந்து — முதிர்ச்சிபெற, பார் ஆர் — பூமியிற் சிறந்த, நிடதபதி — நிடததேசத்து அரசனான, நளன் — நளமகாராசனது, சீர் — சிறப்புப்பொருந்திய சரித்திரத்தை, வெண்பாவால் — வெண்பாவினால், பேசினான் — பாடினார்; எ — று.

புகழேந்தி சுவைமுதிர நளன் சீர் வெண்பாவாற் பேசினன் என்க. புகழேந்திப் புலவர் தம் இனிய சொற் சாதுரியத்தாற் பாண்டியனையும் சோழனையும் தம் வசப் படுத்தி அவர்களிடத்துப் பல வரிசைகளையும் பெற்று வாழ்ந்தாராதலின், "செழியனையும் சென்னியையும் சேரத் திறைகொள் மொழியின் சுவையே" என்றார். ஆர் - வினைத்தொகை. சீர் கதைக்குப் பண்பாகுபெயர்.

1. பாண்டவரின் ..........

இ - ள் : பார்முழுதும் - தன்னுடைய நாடு முழுவதை யும், தோற்று - (சூதாட்டத்தால்) தோற்றுவிட்டு, ஆண்தகையே - ஆண்மைக் குணமுடைய கண்ணபிரானே, தூதுவனாய்ச் சென்று - தூதனாகப் போய், அவனி வேண்ட - (குருநாடு) பூமியை வேண்டிக் கேட்க, மறுத் தான் - மறுத்தவனான துரியோதனன், இரும் தானை - பெரிய சேனை, மண்ணொடும் போய் மாள - பூமியோடும் ஒருசேர அழியும்படி, பொறுத்தான் - பொறுத்தவனாகிய, பாண்டவரில் - பாண்டு புத்திரர்களில், முன்தோன்றல் - முதற் புத்திரனாகிய தருமன், ஒரு நாள் - ஒரு தினத்தில், புலர்ந்து - முகம்வாடி, இருந்தான் - வனத்திலிருந்தான் ; எ - று.

ஆண்தகை - பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன் மொழித்தொகை.

2. கொற்றவேற்றானை ..........

இ - ள் : எற்றும் - மோதுகின்ற, நீர் - கடலாற் சூழப்பட்ட, ஞாலத்து - பூமியிலுள்ளாரது, இருள் நீங்க - அஞ்ஞான இருள் நீங்கும்படி, முற்றும் - முழுமையும், வழி - குரு பரம்பரையில், முறையே வந்த - முறை யாகவே உபதேசிக்கப்பட்டு வந்த, மறை எல்லாம் - வேதங் களை எல்லாம், தந்தான் - சீடர்களுக்கு உபதேசித்த, மொழி - வேதப்பொருள்களை, முறையே கோத்த - முறையாகவே திருத்திக் கோவைப்படுத்திய, முனி - வியாசமுனிவன், கொற்றம் வேல் - வெற்றி பொருந்

திய வேலாயுதத்தை ஏந்திய, தானை - சேனைகளையுடைய, குருநாடன்பால் - குருநாட்டுக் கதிபதியான தருமபுத்திர னிடத்து, அணைந்தான் - வந்து சேர்ந்தான்; எ - று.

எற்றுநீர் - வினைத்தொகை; அன்மொழித் தொகை யாய்க் கடலை யுணர்த்திற்று. ஞாலம் - இடவாகுபெயர். குரு என்பவன் சந்திரவம்சத்துச் சிறந்த ஓர் அரசன். இவனால் அக் குலம் குருகுலம் என்றும், அந் நாடு குரு நாடென்றும் அழைக்கப்படும். இவன் குலத்துதித்த தருமன் குருநாடன் எனப்பட்டான்.

3. பேரரசும்.........

இ - ள் என்றும் - எக்காலத்தும், தன் வெண் குடைக்கீழ் - தனது வெண் கொற்றக்குடை நிழற்கீழ், தீது ஓவ - தீமையான காரியங்கள் ஒழியும்படியாக, பார் காத்த சேய் - பூமியிலுள்ளவரைப் பாதுகாத்த முருகக் கடவுளை யொத்த தருமபுத்திரன், அப்பா - அப்பனே, எங்கள் - எங்களுடைய, பேர் அரசும் - பெருமைதங்கிய ஆளுந் தன்மையையும், பெருந் திருவும் - பெரிய செல் வத்தையும், கைவிட்டு - இழந்துவிட்டு, சேர்வு அரிய - (எவரும்) சொல்லுதற்கு அருமையான, வெம் கானம் - கொடிய காட்டை, சேர்தற்கு - (யாங்கள்) வந்து அடை தற்கு, காரணம் யாதோ என்றான் - காரணம் எதுவோ என்று வினவினான்; எ - று.

தீது - ஆகுபெயர். அரசு - ஆகுபெயர். சேர்வு - தொழிற்பெயர். யாதோ - ஓகாரம் வினவொடு இரக்கப் பொருளது.

4. கண்ணிழந்து.........

இ - ள்: விண் இழந்த - ஆகாயத்தினின்றும் நீங்கி வந்த, மின்போலும் - மின்னலைப்போற் பிரகாசிக்கின்ற, நூல்மார்ப - பூணூலைத் தரித்துள்ள மார்பை யுடையவனே, கண் இழந்து - அறிவுகெட்டு, மாயக் கவறு ஆடி - வஞ்சகம் பொருந்திய சூதாட்டம் ஆடி, மண் இழந்து - நாட்டை இழந்து, வனம்போந்து நண்ணி - காட்டிற் போய் வசித்து, என்போல் - என்னைப்போல, இடர் உழந்தார் - துன்பத்

தினால் வருத்தமுற்றவரான, காவலர் – அரசர்கள், வேறு உண்டோ – வேறு இருக்கிறார்களோ; எ – று.

விண் ஆகுபெயராய் மேகத்தை யுணர்த்திற்று. மேதினி திருமாலாற் கொல்லப்பட்ட மதுகைடவர் என்னும் அசுரர்களுடைய மேதஸ் (நிணம்) படிந்தது; பூமிக்குக் காரணப்பெயர்.

5. சேமவேல்.........

இ – ள்: தனி செம் கோல் – ஒப்பற்ற செங்கோலையும், நாமம் – அச்சந்தரத்தக்க, வேல் காளை – வேலாயுதத்தையும் உடைய காளை போன்றவனான, நளன் என்பான் – நளன் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் அரசன், பண்டு – முற்காலத்தில், யாமத்து – நடு இரவில், ஒலி ஆழி வையம் – ஒலிக்கின்ற கடலாற் சூழப்பட்ட பூமியை, ஒருங்கு இழப்ப – ஒருமிக்க இழக்கும்படி, கலியால் – கலிபுருஷனால், விளைந்த கதை – உண்டாக்கிய கதையை, சேமம் – (உலகத்துயிர்களுக்கு) காவலாகவுள்ள, வேல் மன்னனுக்கு – வேலாயுதத்தையுடைய தருமபுத்திரனுக்கு, செப்புவான் – (வியாசமுனி) சொல்லுவான்; எ – று.

நாமம் என்பதில் அம் சாரியை. நாம் – அச்சம். காளை உவமவாகுபெயர். ஒலி – வினைத்தொகை.

# சுயம்வர காண்டம் — உரை

தமயந்தியின் சுயம்வர மணத்தைக் கூறும் காண்டம் என்பது பொருள். சுயம்வரமாவது பல அரசர்கள் கூடிய சபையின்கண் ஓர் அரசகன்னிகை தான் விரும்பிய அரசனொரு வனை நாயகனாக வரித்தல்.

1. காமர் கயல்..........

இதன் பொருள்: சாகரம்சூழ்-சமுத்திரம் சூழ்ந்த, நல்நாட்டில்-நன்மையாகிய பூமியில், முன்னாட்டு-முதன்மை யாக எடுத்துக் கூறத்தக்க, நாடு - நிடதநாடானது, காமர் - அழகிய, கயல்புரள - சேல்மீன்கள் புரளுதலாலும், காவி முகை நெகிழ - நீலோற்பல மொட்டுகள் மலர்தலாலும், தாமரையின் - தாமரைப்பூவினது, செம்தேன் தளை - நல்ல தேனோடு கூடிய கட்டானது, அவிழ - விரிதலினாலும், பூ மடந்தை தன் - பூமி தேவியினது, நாட்டம்போலும் - கண் ணென்று சொல்லத்தக்க, தகைமைத்து - தன்மை பொருந்தி யது; எ – று.

காமர் - உரிச்சொல், புரள, நெகிழ, அவிழ காரணப் பொருளில் வந்த செயவெனெச்சங்கள். காவி – குணவாகு பெயர். போலும் – உவமவுருபிடைச்சொல். சூழ் – வினைத் தொகை. சாகரம் – சகரபுத்திரர்களால் தோண்டப்பெற்றது.

2. கோதை மடவார்.........

இ – ள்: (அத்தன்மைத்தாய நாட்டின்கண்)கோதை மடவார் தம் - மலர்மாலை யணிந்த பெண்களுடைய, கோது இல் – குற்றமில்லாத, மெய்யில் – உடம்பில், திமிர்ந்த - பூசியிருக்கப்பெற்ற, சீதம் செழும் களபம் சேற்றால் – குளிர்ச்சி பொருந்திய செழுமையான கலவைச் சந்தனச் சேற்றால், வீதிவாய் - வீதிகளிடத்து, மானம் கரி வழுக்கும் – பெருமை பொருந்திய யானைகள் கால் வழுக்கி விழும், மாவிந்தம் என்பது – மாவிந்தம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய, ஞானம் கலை வாழ் –

ஞானத்தைத் தருகின்ற கல்வி நூல்கள் பயில்கின்ற, ஓர் நகர் - ஒரு நகரம் (உண்டு); எ - று.

சீத களபச் செழுஞ் சேற்றால் வீதிவாய் மானக் கரி வழுக்கும் என அந் நகரத்துச் செல்வமிகுதி கூறியபடியால் இது வீறுகோளணி. வாழ்நகர் - வினைத்தொகை.

3. நின்றுபுயல்.........

இ - ள்: தென்றல் - தென்றற் காற்று, அலர்த்தும் - அசையச் செய்கின்ற, கொடி - கொடிச் சீலைகள் கட்டப் பட்டுள்ள, மாடத்து - உப்பரிகைகளில், ஆய் இழையார் - ஆராய்ந் தெடுத்த ஆபரணங்களை அணிந்த பெண்கள், ஐம்பால் - (தங்கள்) கூந்தல்களை, புலர்த்தும் - உலர்த்துவ தற்கு ஊட்டுகின்ற, புகை - அகிற்புகை, வான் புகுந்து - ஆகாயத்தில் புகுவதினால், புயல் - மேகம், வான் நின்று - ஆகாயத்திலிருந்து, பொழிந்த - (காலந்தவறாது) பெய்த, நெடுந்தாரை - பெரிய மழைத்தாரைகள், என்றும் - பெய்யும்போதெல்லாம், அகில் கமழும் - அகிலின் மணம் மணக்கும், என்பர் - என்று சொல்வர்; எ - று.

அகில் - முதலாகுபெயர். ஆயிழை - வினைத்தொகை. ஐம்பால் - பெண்கள் கூந்தல்: முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என ஐந்து பகுப்பாய் முடியப்படுதலின் ஐம்பால் எனப்பட்டது.

4. வெஞ்சிலையே.........

இ - ள்: கோடுவன - (அந் நகரத்தில்) வளைவன, வெஞ்சிலையே - கொடிய விற்களே, சோருவன - தளர்ச்சி யடைவன, மெல்குழலே - மென்மையான கூந்தல்களே, வாய்விட்டு அரற்றுவன - வாய்விட்டு அலறுவன, அம் சிலம்பே - (பாதத்திலணியும்) அழகிய சிலம்பென்னும் ஆபரணங்களே, கலங்குவன - கலக்கத்தை யடைவன, கஞ்சமே - தண்ணீரே, மெய் நெறியை விட்டு - சரியான நேர்வழி விட்டு, விலங்குவன - விலகிப் போவன, மாளிகை மேல் - உப்பரிகை மேலுள்ள, காரிகையார் - பெண்க ளுடைய, கண்ணே - கண்களே வேறில்லை; எ - று.

கோடுவன முதலியவற்றை மனிதர்களிடத்து ஒழித்துச் சிலை முதலானவற்றிற் காட்டலால் ஒழித்துக் காட்டணி. ஏகாரங்கள் பிரிநிலை. மென்குழல் - பண்புத்தொகை. காரிகையார் கண்கள் மெய்ந்நெறியைவிட்டு விலகுதலாவது, தத்தம் நாயகரைக் காணும்தோறும் உண்டாகும் நாணத்தாலும், மகிழ்ச்சியாலும் நேரே பாராது கண்களை வளைத்துக் கீழ்நோக்கிச் செல்லுதல்.

5. தெரிவன நூல்............

இ - ள்: என்றும் - எக்காலத்தும், தெரிவன - (யாவராலும்) அறியப்படுவன, நூல் - சாஸ்திரங்களே, தெரியாதனவும் - தெரியப்படாதவைகளும், வரிவளையார் தங்கள் - இரேகைகளையுடைய வளையல்களையணிந்த பெண்களுடைய, மருங்கே - இடைகளே, ஒருபொழுதும் - எப்பொழுதும், இல்லாதனவும் - இல்லாதவைகளும், இரவே - யாசகமே, எவரும் - எப்படிப்பட்டவரும், இகழ்ந்து - ஏளனஞ் செய்து, கல்லாதனவும் - கற்காதவைகளும், கரவு - வஞ்சக ஒழுக்கங்களேயாகும்; எ - று.

அந் நகரத்திலுள்ளவர்களின் சிறப்புக் கூறியவாறு. வரி - சித்திரவேலை. தெரிவன, தெரியாதன, இல்லாதன, கல்லாதன என்னும் செயப்பாட்டுவினைகளிற் படு விகுதி தொக்கது. இரவு, கரவு தொழிற்பெயர்கள்.

6. மாமனு நூல்............

இ - ள்: பார் ஆளும் - பூமியை ஆளுகின்ற, வேந்தன் - நளமகாராசனது, பதி - மாவிந்த நகரத்தை; தாமரையாள் - செந்தாமரை மலரிலுள்ள வீரலட்சுமி, வைகும் - தங்குகின்ற, தடம் தோளான் - பெருமை பொருந்திய தோளையுடையவனும், காமர் - அழகிய, பூ தாரான் - மலர்களாலாகிய மாலை யணிந்தவனுமாகிய, மா மனு நூல் - பெருமை தங்கிய மனுதர்ம சாஸ்திரம், வாழ - வளரும்படி, வரு - பிறந்த, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனால் செங்கோலோச்சிவரப்பட்ட, முரணை நகர்தான் என்று - முரணை நகரமே என்று, சாற்றலாம் - சொல்லலாம்; எ - று.

மனு நூல் - சூரியகுலத்தரசனாகிய மனு என்பவனாற் செய்யப்பட்ட தர்மசாஸ்திரம். காமரு - காமர், உ - சாரியை. காமர் - கண்டாரால் விரும்பப்படும் தன்மை; உரிச்சொல்.

7. சீதமதிக்குடைக்கீழ் ........

இ - ள்: தாது - மகரந்தப்பொடி, அவிழ் - சிந்துகின்ற, பூ தாரான் - பூமாலையணிந்த நளமகாராசன், சீதம் மதி குடை கீழ் - குளிர்ச்சி பொருந்திய சந்திரன் போன்ற தனது குடை நிழலின் கீழ், செம்மை அறம் - குற்றமில்லாத தருமங்கள், கிடப்ப - நிலைசிற்கவும், மாதர் - பெண்கள், அருகு ஊட்டும் - பக்கத்தில் வைத்து உணவுகளை ஊட்டி வளர்க்கின்ற, பைங்கிளியும் - பசுமையாகிய கிளிகளும், ஆடல் பருந்தும் - வலிமையையுடைய பருந்தும், ஒரே கூட்டில் - ஒரே கூண்டில், வாழ - சேர்ந்து வசிக்கவும், உலகு - உலகத்தை, தனிக்காத்தான் - பிறருக்குப் பொதுவில்லாமல் ஆண்டான்; எ - று.

தாரான் கிடப்ப வாழ உலகு காத்தான் என்க. பைங்கிளி - பசுமை கிளி. அவிழ் - வினைத்தொகை. தனிக்காத்தலாவது பல நாடுகளையும் வென்று பிறருக்குச் சிறிதும் உரிமையின்றி ஆளுதல். இதனால் இவன் சக்கரவர்த்தி என்பது விளங்கும்.

8. வாங்குவளைக்கையார் ..........

இ - ள்: தேம் குவளை - வாசனை மிகுந்த குவளை மலர்களிலுள்ள, தேன் - தேன்களில், வண்டு - வண்டுகள், ஆடி - முழுகி, சிறகு உலர்த்தும் - இறகுகளை உலரச் செய்கின்ற, நீர் நாடன் - நீர்வளமிக்க நிடதநாட்டரசனாகிய நளன், பூ நாடி - மலர்களை விரும்பி, சோலை புக - சோலையிற் போகிறதற்கு, வாங்கு - வளைந்த, வளைக்கையார் - வளையல்களையணிந்த கைகளையுடைய பெண்களின், வதன மதி - முகமாகிய சந்திரனிடத்து, பூத்த - மலர்ந்த, பூ குவளை காட்டிடையே - (கண்களாகிய) அழகிய நீலோற்பலக் காட்டின் நடுவில், போயினன் - சென்றான்; எ - று.

நாடன் நாடி புகழப்போயினன் என்க. வதனமதி பூத்த பூங்குவளை யென்றது முகத்தின்கண்ணுள்ள கண்களை; உருவகம். குவளை - முதலாகுபெயர். காடு - தொகுதி. தேன்+குவளை = தேங்குவளை.

9. தேரிற்றுகளை.........

இ - ள்: கார்வண்டு - கருமையாகிய வண்டுகள், தொக்குஇருந்து - கூடியிருந்து, ஆலித்து - சந்தோஷித்து, உழலும் - உலாவித்திரிகின்ற, தூங்கு இருள் - மிகுந்த இருளானது, வெய்யோற்கு ஒதுங்கி - சூரியனொளிக்கு (ப்பயந்து) மறைந்து, புக்கு இருந்தால் அன்ன - புகுந்திருப்பதையொத்த, பொழில் - சோலையை, தேரின் துகளை - தேர் செல்லுதலாலுண்டாகும் தூசிகளை, திருந்து இழையார் - திருத்தமான ஆபரணங்களையணிந்த பெண்களது, பூ குழலின் - பூவைபணிந்த கூந்தலினது, வேரிபுனல் - தேனாகிய நீர், நனைப்ப - நனைக்கும்படி, அடைந்தான் - (நளமகாராசன்) சேர்ந்தான்; எ - று.

பெண்களினது குழலின் வேரிப்புனல், தேர் செல்லுதலாலெழுந்த துகளை நனைப்பப் பொழில் அடைந்தான் நளன் என்க. கார்வண்டு - பண்புத்தொகை. வெய்யோன் - வெம்மையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர்.

10. நீணிறத்தாற் சோலை.........

இ - ள்: அப்பு உள் - நீரில், தோன்றும் - உண்டாகின்ற, முளரித்தலை - தாமரை மலரிடத்து, வைகும் - வசிக்கும், அன்னம் புள் - அன்னப் பறவையானது, நீள் நிறத்தால் - நெடுந்தூரம் விளங்குகின்ற தனது இறகின் வெண்ணிறத்தால், சோலை - இருண்ட அந்தச் சோலையானது நிறம்பெயர - நிறம் வேறுபடவும், நீடிய தன் தாள் நிறத்தால் - நீண்ட தன்னுடைய கால்களின் சிவந்த நிறத்தால், பொய்கை தலம் - தடாகம், சிவப்ப - சிவக்கவும், ஆங்கு - அச்சோலையில், மாண் நிறத்தான் முன் - மாட்சிமைவாய்ந்த மார்பையுடைய நளராசனுக்கு முன்னே, தோன்றிற்று - காணப்பட்டது; எ - று.

அன்னப்புள் பெயர, சிவப்ப ஆங்கு முன் தோன்றிற்று என்க. உடல் முழுவதும் வெண்மையாயும் காலும்

மூக்கும் செம்மையாயும் விளங்கும் உத்தம இலக்கணம் அரச அன்னத்திற்குண்டு. முளரி - முதலாகுபெயர். முன்னப்புள், அன்னப்புள் என்ற அடிகள் திரிபு நயம்.

**11. பேதைமடவன்னம்..........**

இ - ள் : மேதிகுலம் - எருமைக் கூட்டம், ஏறி - வயல்களிற் சென்று, மென் கரும்பை - மென்மையான கருப்பங்கழிகளை, கடித்து கோதி - கடித்துத் தின்று, முத்து உமிழும் - முத்துக்களைக் (கடைவாயினின்றும்) கக்குகின்ற, கங்கைநீர் நாடன் - கங்கைநதி பாய்கின்ற நிடதநாட்டரசன், பெயர்ந்து - அங்கேபோய், பேதை - பெண்ணே !, மடம் அன்னந் தன்னை - இளமையான அன்னப் பறவையை, பிழையாமல் - தப்பாமல், பிடித்துத் தா என்றான் - பற்றிக் கொடு என்று கேட்டான் ; எ - று.

நீர்நாடன் பெயர்த்து சென்று பேதை என்னும் பெண்ணே !, அன்னந்தன்னைப் பிடித்துத் தா என்றான் என்க. பிழையாமை - தப்பி ஓடாமை.

**12. நாடிமடவன்னத்தை.........**

இ - ள் : நல்ல மயில்குழாம் - சிறந்த மயிற்கூட்டம், மடம் அன்னத்தை நாடி - இளமையுடைய அன்னப் பறவையைப் பிடிக்க விரும்பி, ஓடி - சுற்றி, வளைக்கின்றது ஒப்ப - வளைத்துக்கொள்வதைப்போல, நீடிய - நீண்ட, நல் பைங்கூந்தல் வல்லியர் - நல்ல பசிய கூந்தலையுடைய பூங்கொடிபோன்ற பெண்கள், பற்றி கொடுபோந்து - அன்னத்தை (வளைத்துப்) பிடித்துக்கொண்டு வந்து, தம் கோவின் முன் - தங்கள் அரசனாகிய நளனுக்கு எதிரில், தாழ்ந்து வைத்தார் - வணங்கி வைத்தார்கள் ; எ - று.

வல்லி - உவமஆகுபெயர். முன் - இடமுன். இச் செய்யுள் உவமையணி. ஏ - அசை.

**13. அன்னந் தனைப்பிடித்து.........**

இ - ள் : அங்கு - அச் சோலையில், ஆய் இழையார் - ஆராய்ந்தெடுத்த ஆபரணங்களையணிந்த பெண்கள், அன்னம் தனைப் பிடித்து - அன்னப் பறவையைப் பிடித்துக்

கொண்டுபோய், மன்னன் திரு முன்னர் – நளமகாராசனது அழகிய சமுகத்தில், வைத்தலுமே – வைத்தவுடனே, அன்னம் – அந்த அன்னமானது, தன்னுடைய – தனது, வான்கிளையைத் தேடி – பெரிய சுற்றத்தைத் தேடி, மலங்கிற்று – வருந்தியது, மன்னவனைக் கண்டு – அரசனைப் பார்த்து, கலங்கிற்று – கலக்கமடைந்தது; எ – று.

ஆயிழையார் அன்னந்தனைப் பிடித்துவைத்தலும், தேடி மலங்கிற்று; கண்டு கலங்கிற்று என்க. திரு – கண்டாரால் விரும்பப்படுந் தன்மை; பண்புப்பெயர். பிடிபட்டபோது கலங்குதலாதியாகிய அதன் சாதித்தன்மைகளைச் சொல்லுதலால் இச் செய்யுள் தன்மை நவிற்சியணி.

**14.** அஞ்சன்மடவனமே.........

இ – ள்: களி வண்டு – (தேனுண்டு) களித்தலையுடைய வண்டுகள், மாண – பெரிதும், பிடித்த – பற்றியுள்ள, தார் மன் – மலர்மாலை யணிந்த நளமகாராசன், மடம் அனமே – இளமையான அன்னமே!, அஞ்சல் – பயப்படாதே, பிடித்தது – உன்னைப் பிடித்தது ஏனென்றால், உன்தன் அணி நடையும் – உன்னுடைய அழகிய நடையும், வஞ்சி அனையார் மணிநடையும்–வஞ்சிக்கொடிபோன்ற மெல்லிய பெண்களது அழகியநடையும்(ஆகிய இவ்விரண்டினுள்), விஞ்சியது காண – மேலானது இன்னதென்று பார்க்கும் பொருட்டே, என்றான் – என்று சொன்னான்; எ – று.

'அன்னமே உன்னை யான் பிடித்தது கொல்வதற்காவது கூட்டி லடைத்து வருத்துவதற்காவது அல்ல; உன் நடையின் அழகையும், உன் நடைக்கு ஒப்பாகக் கூறப்படும் பெண்களது நடையினையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கே. ஆதலால் நீ அஞ்சற்க' எனக் கலங்கிய அன்னத்திற்குத் தேறுதல் கூறினான் என்க. களிவண்டு – வினைத்தொகை. அனம் – அன்னம் என்பதின் விகாரம். அஞ்சல் – எதிர்மறை ஏவல் வினைமுற்று. பிடித்தது – காலம் காட்டிய தொழிற்பெயர்.

**15.** செய்யகமலத்திருவை.........

இ – ள்: செய்ய கமலம் – செந்தாமரை மலரில் வாசஞ்செய்கின்ற, திருவை நிகரான – இலக்குமியை ஒத்த,

தையல் – பெண்ணால், பிடித்த – பிடித்துக் கொண்டுவரப் பட்ட, தனி அன்னம் – ஒப்பற்ற அந்த அன்னப்பறவை யானது, வெய்ய – கொடிய, அடுமாற்றம் இல்லா – கொல் லும் பகைமைக் குணமில்லாத, அரசன் சொல் கேட்டு – நளனது பேச்சைக் கேட்டு, தடுமாற்றம் – மனக்கலக்கம், தீர்ந்தது – நீங்கப்பெற்றது; எ – று.

அரசன்முன் வைக்கப்பட்ட அன்னமானது அவனது இனிய ஆறுதல் மொழியால் கொலைப் பயம் நீங்கித் தெளிந்தது என்பதாம். கமலம்=கம் – சலத்தில், அலம் – பிரகாசிப்பது; வடசொல்; ஆகுபெயர். அடுமாற்றம் – வினைத்தொகை. தடுமாற்றம் – தொழிற்பெயர். இல்லா(த)– ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

16. திசைமுகந்த...........

இ - ள்: திசைமுகந்த – எட்டுத்திக்கி லுள்ளாரை யும் தன்னுளடக்கிய, வெண் கவிகை – வெண் கொற்றக் குடையையும், தேர் – தேர்ச் சேனையையுமுடைய, வேந்தே – அரசனே!, இசை முகந்த – கீர்த்தி நிரம்பப்பெற்ற, உன் தன் – உன்னுடைய, தோளுக்கு – தோள்களுக்கு, மென் தோள் – மென்மையான தோள், அமையந்தி – மூங்கில் போலும் அழகுடையாள், என்று – என்று சொல்லப்பட்ட, ஓர் அணங்கு–ஒருதெய்வப்பெண்போன்ற, வசைஇல்–(அழகு, குணம், செயல் இவற்றால்) குற்றமில்லாத தமையந்தி என்று—, ஓதும் - சொல்லப்பட்ட, தையலாள் - பெண் ணானவள், இசைவாள் – தகுதியாவாள்; எ – று.

வேந்தே! உன் தோளுக்குத் தமயந்தியென்றோ ரணங்கு இசைவாள் என்க. திசை – ஆகுபெயராய்த் திசையிலுள் ளாரை யுணர்த்திற்று. தமையந்தி – அகரத்திற்கு ஐகாரம் போலியாயிற்று. அந்தத்தையுடையவள் அந்தி (அந்தம் – அழகு). இ – பெண்பால் விகுதி.

17. எழுவடுதோள்..........

இ – ள்: எழு அடுதோள் – தூணைவென்ற தோள்களை யுடைய, மன்னா – அரசனே! இலங்கு இழை – விளங்கு கின்ற ஆபரணங்களை யணிந்த தமயந்தியாகிய அப்பெண்

ஞனவள், உழுநர் - உழவர், ஏர்தூண்ட - ஏரைச் செலுத்துகையில், கொழு நுதியின் - கொழு என்னுங் கருவியின் நுனியால், சாய்ந்த - சாய்த்து விழுத்தப்பட்ட, குவளை - குவளை மலர்கள், மிதிப்ப - மிதிக்கப்பட (அதனால்), தேன் பாயும் மடை - தேன் பாயப்பெறும் பக்கங்களை யுடைய, ஒலி நீர்நாடன் - ஒலிக்கின்ற நீர்வளப்பமிக்க விதர்ப்பநாட் டரசனாகிய, கொடை விதர்ப்பன் - கொடுக்கும் குணமுடைய வீமராசனால், பெற்றது ஓர் கொம்பு - பெறப் பட்டவளாகிய ஒப்பற்ற பூங்கொம்பு போல்வாள் ; எ - று.

மன்னா ! இலங்கிழை நாடன் பெற்ற கொம்பு என்க. அடுதோள் - வினைத்தொகை. இலங்கிழை - வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. ஒலிநீர் - வினைத்தொகை. கொம்பு என்றதற்கேற்ப, பெற்றது என்றார்.

**18.** நாற்குணமும்.........

**இ - ள் :** (தமயந்தி) நால் குணமும் - நான்கு குணங் களும், நால்படை ஆ(க) - நான்குவகைச் சேனைகளாகவும், ஐம்புலனும் - ஐந்து பொறிகளும், நல் அமைச்சு ஆ - அறி வுடைய மந்திரியாகவும், ஆர்க்கும் சிலம்பே - (பாதத்தில் அணியப்பெற்று) ஒலிக்கின்ற சிலம்பு என்னும் ஆபரணங் களே, அணிமுரசு ஆ - அழகிய முரசு வாத்தியங்களாக வும், கண் (ஏ) - கண்களே, வேல்படையும் வாளும் ஆ - வேலாயுதமும் வாளாயுதமுமாகவும், வதனம் மதிகுடைக் கீழ் - முக சந்திரனாகிய குடையின் கீழே, பெண்மை அரசு - பெண்தன்மையாகிய இராச்சியத்தை, ஆளும் - ஆளுவாள் ; எ - று.

நான்கு குணங்களே (தன்னைக் காக்கின்ற) சதுரங்க சேனைகளாகவும், பஞ்சேந்திரியங்களே நன்னிலையில் நிறுத் தும் அறிவிற் சிறந்த மந்திரிகளாகவும், காலிலணிந்திருக் கும் நூபுரங்களே பெருமை முதலியவற்றை வெளிப்படுத் தும் முரசு வாத்தியங்களாகவும், தன்னுடைய கண்களே எதிர்த்தவரை வருத்தும் வேலாயுதமும் வாளாயுதமுமாக வும் ஓர் அரசனைப்போற்கொண்டு, முகமாகிய சந்திர வட்டக் குடையின்கீழ் பெண்தன்மையாகிய அரசை ஆளுகை

யைச் செய்யும் என்பதாம். நாற்குணம் – நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு. நாற்படை – தேர், யானை, குதிரை, காலாள். ஐம்புலன் – சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம். வாளுமே என்ற இடத்துள்ள ஏகாரத்தைக் கண் என்பதனோடும், கண்ணு என்பதிலுள்ள ஆகாரத்தை வேற்படையும் வாளும் என்பவற்றோடும் கூட்டிப் பொருள் கொள்க. ஆக என்னும் செயவெனெச்சங்கள் ஈறு குறைந்தன. இச் செய்யுள் உருவகவணி.

**19.** என்று நுடங்கும்…… …

இ – ள் : ஏழ் உலகும் – ஏழு தீவுகளினும், நின்ற – நிலைபெற்ற, கவிகை நிழல் வேந்தே – குடையின் நிழலையுடைய அரசனே ! இடை – தமயந்தியின் இடையானது, அறுகால் சிறுபறவை – ஆறு கால்களையுடைய வண்டுகள், ஒன்றி – பொருந்தி, அம் சிறகால் – (தமது) அழகிய சிறகுகளால், வீசும் – வீசுகின்ற, சிறு காற்றுக்கு – மெல்லிய காற்றுக்கு, ஆற்றாது – பொறுக்காது, தேய்ந்து – சுருங்கி, என்றும்—, நுடங்கும் – அசைந்துகொண்டிருக்கும், என்ப –; எ – று.

வேந்தே இடை காற்றுக்கு ஆற்றாது தேய்ந்து நுடங்கும் என்க. ஏழு தீவுகள் – நாவல், இரலி, குசை, கிரௌஞ்சம், கமுகு, தெங்கு, புட்கரம். ஏழுலகு – பண்புத்தொகை. என்ப – பலர்பாற் படர்க்கை வினைமுற்று.

**20.** வீமன் திருமடந்தை…… …

இ – ள் : சேமம் – (உயிர்களுக்கு நிழலாய்) காவலான, நெடும் குடையாய் – பெரிய குடையையுடைய அரசனே !, வீமன் திருமடந்தை – வீமராசன் புத்திரியாகிய இலக்குமியை ஒத்த தமயந்தியான, மெல்லியலை – மெல்லிய மேனியாளை, உன்னுடைய—, வாமம் நெடும்புயத்து – அழகிய பெரிய தோள்களிடத்து, வைகுவிப்பேன் – தங்கும்படி செய்வேன், என்று உரைத்து – என்றிவ்வாறு சொல்லி, அன்னம் – அன்னமானது, ஒடுங்கு இடையாள் தன்பால் – சிறுத்த இடையை யுடையவளான தமயந்தியிடத்து, உயர்ந்து–உயரப் பறந்து, நீங்கியது – போயிற்று ; எ – று.

பல அரசர்களும் விரும்புதற்கேதுவாகிய அழகு நலம் வாய்ந்த தமயந்திக்கு, உனது அழகு முதலிய பெருமைகளை யெடுத்துக்கூறி உன்னை மணக்கும்படி செய்வேன் என்றவாறும். ஒடுங்கு இடை - வினைத்தொகை.

21. மன்னன் விடுத்த.........

இ - ள்: மன்னன் விடுத்த - நள மகாராசன் அனுப்பிய, வடிவில் - அழகினால், திகழ்கின்ற - விளங்குகின்ற, அன்னம்போய் - அன்னப்பறவை சென்று, கன்னி அருகு அணைய - தமயந்தியின் பக்கத்திற் சேர, நல் நுதலும் - நல்ல நெற்றியையுடைய தமயந்தியும், தன் ஆடல் விட்டு - தன் விளையாட்டை விட்டு, தனி இடம் சேர்ந்து - ஒருவருமில்லாத தனித்த இடத்தையடைந்து, ஆங்கு - அவ்விடத்தில், அதனை - அவ்வன்னப்பறவையை (நோக்கி), ஈங்கு நாடல் - இவ்விடத்தே நீ விரும்பிவந்த பொருள், என்சொல் என்றாள் - என்னவென்று கேட்டாள்; எ - று.

தோழியருடன் விளையாடிக்கொண்டிருந்த தமயந்தி தன்னிடத்து வந்த அன்னத்தின் எண்ணத்தைப் பலருமிருக்குமிடத்து வினவியறிதல் தகாதென்று தனித்த இடஞ் சென்று வினவினள் என்பதாம். நன்னுதல் - அன்மொழித்தொகை. ஆடல் - தொழிற்பெயர். அங்கு, இங்கு - ஆங்கு, ஈங்கு என முதல் நீண்டன. என் - வினாவினைக் குறிப்புமுற்று. நாடல் - தொழிலாகுபெயர்.

22. செம்மனத்தான்.........

இ - ள்; செம்மனத்தான் - செம்மையான மனமுடையவனும், தண் அளியான் - குளிர்ந்த கிருபை யுடையவனும், செங்கோலான் - செங்கோலுடையவனும், மங்கையர்கள் தம்மனத்தை - இளம் பெண்களுடைய மனத்தை, வாங்கும் - தன்வசப்படுத்தும், தடம் தோளான் - விசாலமான தோள்களை யுடையவனும், மேல் நிலத்தும் - மேலுலகத்திலுள்ளவர்களிலும், நால் நிலத்தும் - பூமியிலுள்ளவர்களிலும், மிக்கான் - சிறந்தவனுமாகிய, மெய்ம்மை நளன் என்பான் - சத்தியத்தையுடைய நளமகாராசன் என்று சொல்லப்படுபவன், உனக்கு—, வேந்தன் - தலைவனாய், உளன் - இருக்கிறான்; எ - று.

தடந்தோள் – உரிச்சொற்றொடர், நிலம் – இடவாகு பெயர், நானிலம் – பூமி, அன்மொழித்தொகை; குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்னும் ஐந்தனுள் பாலை தனக்கோரிடமின்றி ஏனைய நான்கு நிலங்களினிடையே தோன்றுதலினாற் பாலையை யொழித்து, நான்கு நில மெனப்பட்டது.

**23.** அறங்கிடந்த நெஞ்சும்........

இ - ள் : அறம் கிடந்த நெஞ்சும் – தருமம் நிறைந்த மனத்தினாலும், அருள் ஒழுகு கண்ணும் – கருணை பெருகி வடிகின்ற கண்ணினாலும், மறம்கிடந்த – வீரம்பொருந்திய, திண் தோள் வலியும்-உறுதியான புயவலியினாலும், திறம் கிடந்த- எல்லா வல்லபமும் மிக்க, செம்கண் மால் அல்லனேல் – சிவந்த கண்களையுடைய விஷ்ணுவையேயல்லாமல், அங்கண் மா ஞாலத்து – அழகிய இடமகன்ற பெரிய பூமியில், தேர் வேந்தர் - தேரையுடைய அரசர்கள், அவற்கு - அந்த நள மகாராசனுக்கு ஒப்பரோ – ஒப்பாவார்களோ? எ – று.

தருமகுணம், தண்ணளி, புயவலி முதலிய சிறந்த குணங் களிற் காத்தற் கடவுளான திருமாலை அந்த நளனுக்கு ஒப்பாகக் கூறலாமேயன்றி உலகத்துள்ள எவ்வரசரையும் ஒப்புமை கூறவியலாதென்பதாம். மால் - பெருமைக்குண முடையவன். ஓகாரம் – எதிர்மறை.

**24.** பேரழகு.........

இ - ள் : பேர் அழகு – மிகுந்த அழகு, சோர்கின்றது என்ன – வழிகின்றது என்று உவமை சொல்லும்படி, பிறை நுதல்மேல் – பிறைச் சந்திரன்போன்ற தனது நெற்றியில், நீர் அரும்ப - வேட்கைமிகுதியாலாகிய வேர்வைநீர் துளிக்க, நின்றாள் – நின்றவளான, தன் பேதையை – தனது குமாரத்தியின் நிலைமையினை, பாரா – பார்த்து, குலம் வேந்தன் – உயர்ந்த குலத்திற் பிறந்த வீமராசன், கோவேந்தர் தம்மை மலர்வேய்ந்து கொள்ளும் மணம் – மேன்மை பொருந்திய அரசர்களில் ஒருவனை மலர்மாலை அணிந்து மணஞ்செய்து கொள்ளத்தக்க சுயம்வரத்தை, சிந்தித்தான் - தன் மகளுக்கு நாட்டவேண்டுமென்று நினைத்தான்; எ – று.

வேட்கை மிகுதியால் நெற்றியிலிருந்து ஒழுகும் வேர்வையை அழகு ஒழுகுவதாகக் குறித்தார். பிறை நுதல் - உவமத்தொகை. பேதை நின்றுளை என்றவிடத்து ஐ உருபு பிரித்துக் கூட்டப்பட்டது. நின்றுள் - வினையாலணையும் பெயர். மலர் - ஆகுபெயர். குலம் - வடசொல்.

25. மங்கை சுயம்வரம்.........

இ - ள் : பைங்கமுகின் கூந்தல்மேல் - பசுமையான கமுகுகளின் மடல்களின்மேல், கங்கைக் கொழுந்து ஓடும் - ஆகாச கங்கைநதியின் நீர்த்திவலைகள் வீசப்பெற்ற, நல் நாடன் - நல்ல விதர்ப்பநாட்டை யுடையவனுன வீமன், வேந்தர்மேல் தூது ஓட விட்டு - (அயல்நாட்டு) அரசர்களிடத்துத் தூதர்களை விரைவாகச் செலுத்தி, மங்கை சுயம் வரநாள் ஏழு என்று - தமயந்தியின் சுயம்வரத்திற்குக் குறிப்பிட்ட தினம் (இன்றைக்கு) ஏழாவது நாளென்று, வார் முரசம் - வாரணிந்த முரச வாத்தியத்தை, எங்கும் அறை - எவ்விடத்தும் அடித்துத் தெரிவிப்பீர்களாக, என்று இயம்பினான் - என்று (வள்ளுவர்களுக்கு) சொன்னான் : எ - று.

அயல்நாட்டரசர்களுக்குத் தூதுவர்கள்வாயிலாகத் தெரிவித்துத் தன்னாட்டுச் சனங்களுக்கு முரசுமூலமாகத் தெரிவித்தனன் என்க. மங்கை - 12 முதல் 13 வயது வரையுள்ள பருவம். அறைக + என்று = அறைகென்று, அகரந் தொகுத்தல் விகாரம்.

26. மாமுத்த வெண்குடையான்.........

இ - ள் : மாமுத்த வெண்குடையான் - பெரிய முத்துக்களால் ஆக்கப்பட்ட வெண்கொற்றக்குடையை யுடையவனும், மால் களிற்றான் - பெரிய யானைப்படைகளை யுடையவனுமாகிய, வண்டு இரைக்கும் தாமத்து - வண்டுகள் ஒலிக்கும் மாலையையுடைய, அரி - விஷ்ணுவையொத்த, சந்திரன் சுவர்க்கி - சந்திரன் சுவர்க்கியினுடைய, நாமத்து ஆர் - பெயரைப் பொருந்திய, செந்தமிழ் ஏய்ந்த பா ஆம் என்ன - செந்தமிழாற் செய்யப்பட்ட பாடல்களைப்போல, கோவேந்தர் - சிறந்த அரசர்களது, செல்வக் குழாம் - செல்வத்தையுடைய கூட்டம், பரந்தது - பரவிற்று ; எ - று.

தமயந்தியின் சுயம்வரத்திற்கு வருகின்ற அரசர்களது கூட்டம் சந்திரன் சுவர்க்கி விஷயமாகப் புலவர்கள் செய்த செந்தமிழ் மொழி பெருகிவரும் பாக்கள்போலப் பரந்தன வெனக் கூறினர்; இதனால் ஆசிரியரது நன்றியறிதற் குணமும் பாஷாபிமானமும் சிறந்து விளங்கும். இச் செய்யுள் உவமையணி.

**27.** செந்தடையும்.........

இ - ள்: செந்து - மகரந்தப் பொடிகளில், அடையும் - பொருந்துகின்ற, வண்டு உறை தார் - வண்டுகள் மொய்க்கின்ற மாலையையணிந்த, செய்யாள் - இலக்குமிதேவி, வளர் மார்பன் - தங்குகின்ற மார்பையுடைய வீமராசனது, கந்து அடையும் வேழம் - கட்டுத்தறியிற் பொருந்தியுள்ள யானைகளையுடைய, கடைத்தலைவாய் - தலைவாயலில், கோ வேந்தன் மாதைக் குறித்து - இராச இராசனுகிய வீமராசனது புத்திரியாகிய தமயந்தியைக் கருதி, பூவேந்தர் தங்கள் கிளை - மண்ணரசர்களது கூட்டம், பொன் நகரில் - அழகிய குண்டினபுரத்தில், ஈண்டிற்று - எங்கும் விரவி நெருங்கிற்று; எ - று.

தமயந்தியின் சுயம்வரத்தைக் குறித்து வந்த அரசர்களுக்கு வீமராசனது அரண்மனை இடம்போதாமையால் அவர்கள் நகரம் முழுவதும் நெருங்கி இருந்தார்கள் என்பதாம். உறை, வளர் - வினைத்தொகை. கந்து - யானை கட்டுந் தூண். தலைக்கடை என்பது கடைத்தலை என நின்றது; இலக்கணப்போலி.

**28.** புள்ளுறையும் சோலைகளும்.........

இ - ள்: தெள் - தெளிவாய் விளங்குகின்ற, அரி - சிவந்த ரேகைகள் பொருந்திய, கண் - கண்களையுடைய பூமகளை - இலக்குமிக்குச் சமானமானவளும், பொன்னை - பொன்போல் அருமையானவளும், பொருவேல் - போர்க்குரிய வேலாயுதத்தையுடைய, விதர்ப்பன் தன் கோமகளை - விதர்ப்பதேசத் தரசனுகிய வீமனது சிறந்த மகளுமாகிய தமயந்தியை, தம் மனத்தே கொண்டு - தங்கள்தங்கள்மனத்திலே விரும்பி, புள் உறையும் சோலைகளும் - பறவைகள், வசிக்கின்ற சோலைகளிலும்; பூங்கமல வாவிகளும் - அழகிய

தாமரைத் தடாகங்களிலும், உள்ளும் புறமும் - முறையே உட்புறத்திலும் வெளிப்பாகத்திலும், இனிது உறைந்தார் - சுகமாக வசித்தார்கள்; எ - று. (சோலைகளினுள்ளும் வாவிகளின் புறமும் உறைந்தார்; எ - று).

சுயம்வரத்தின் பொருட்டு வந்த அரசர்கள் மிகப் பலராதலால் நகர மிடம்போதாமல், சோலைகளிலும் தடாகக் கரைகளிலும் வசித்தார்களென்க. பூமகளை, பொன்னை, கோமகளை இவை ஒரு பொருண்மேற் பலபெயரடுக்குகள்.

**29.** கொற்றவன்றன் னேவலினாற்.........

இ - ள்: கொற்றவன்தன் ஏவலினால் - வெற்றியையுடைய நளமகாராசனது கட்டளையினால், அக் குலக் கொடிபால் - உயர்ந்த குலத்திற் பிறந்த பூங்கொடிபோன்ற அந்தத் தமயந்தியினிடத்து, போய் உற்றதுவும் - தான்போய்ச் சேர்ந்ததையும், ஆங்கு - அவ்விடத்தில், அவள் உற்றதுவும் - தமயந்திகொண்ட ஆசை மிகுதியையும், முற்றும் - எல்லாவற்றையும், அன்னம் மொழிந்தது - அன்னம் சொல்லிற்று, மொழிகேட்டு - அவ் வார்த்தையைக் கேட்டதனால், அரசற்கு - நளனுக்கு, உள்ள அறிவு அழிந்தது - இன்ப உணர்ச்சியில் மனஅறிவு மயங்கிற்று; எ - று.

அன்னம் தமயந்தியின் காதல் வார்த்தையைக் கூறியவுடன் நளன் ஆசைமிகுதியால் மனமழிந்தனன் என்பதாம். கொடி - உவமவாகுபெயர். தன், தான் - சாரியைகள். ஏ - அசை.

**30.** கோதை சுயம்வரநாள்..........

இ - ள்: கோதை - தமயந்தியினது, சுயம்வரநாள் - சுயம்வரத்துக்குக் குறித்த நாளை, கொற்றவனுக்கு - நளமகாராசனுக்கு, உற்று உரைப்ப - போய்ச் சொல்லுவதற்கு, ஏதம் இலா காட்சியர் - குற்றமில்லாத அறிவுடையவர்களான தூதர்கள், போதில் - மலர்களில், பெடையொடு - பெண்வண்டுகளுடனே, வண்டு - ஆண்வண்டுகள் உறங்கும் - தூங்கிக்கொண்டிருக்கின்ற, பேர் ஒலி நீர்நாடன் - மிக்க ஓசையையுடைய நீர்வளப்பமுள்ள நிடதநாட்டையுடையவனான நளனுடைய, அடையாத - எப்பொழுதும் மூடப்

படாத; வாயில் அகம் - அரண்மனை வாசலிடத்து, வந்து எய்தினர் - வந்து சேர்ந்தார்கள்; எ - று.

நளனது வாயிலை அடையாத வாயிலென விசேடித்தமை யால் அவன் பகைவரச்சம் சிறிது மில்லாதவனென்பதும், யாசகர் வரவை எதிர்பார்த்திருப்பவ னென்பதும், குறை யிரந்து வருங் குடிகளுக்குக் காணுதற் கெளியனு மென்பதும் அறியப்படும். காட்சி - தொழிற்பெயர். இல்வாய் என்பது வாயில் என முன்பின்னாக மாறியது, இலக்கணப்போலி. ஒலிநீர் - வினைத்தொகை.

**31.** காவலன்றன்.........

இ - ள்: காவலன் தன் தூதர் - விதர்ப்பராசனது தூதர்கள், கடை காவலர்க்கு - வாயில் காப்போர்க்கு, அறி வித்து - தெரிவித்து, ஏவலின் - நளமகாராசனது கட்டளை யின்படி, போய் - உள்ளே சென்று, இயம்புதலும் - தமயந் தியின் சுயம்வரநாள் இதுவாம் என்று சொல்லுதலும், பூவாளி - (மன்மதனது) மலரம்புகள், பாய - பாய்தலினால், மெலிந்த தோள் வேந்தன் - இளைத்த தோளையுடைய நள மகாராசன், விரைந்து - வேகமாக, மாவின் பொலிந்த தேர் - குதிரைகளினால் விளங்குகின்ற தேரை, பூட்டு என்றான் - பூட்டுவாயாக என்று சாரதிக்குக் கட்டளையிட் டான்; எ - று.

வீமராசனது தூதுவர்கள் போய்ச் சுயம்வர விஷ யத்தை நளனிடம் தெரிவித்தவுடனே நளன் குண்டினபுரிக் குச் செல்வதற்குத் தேரை விரைந்து சித்தம்பண்ணச் சாரதிக்குக் கட்டளையிட்டான் என்பதாம். இது - ஈது என முதல் நீண்டது.

**32.** கெட்ட சிறுமருங்குல்..........

இ - ள்: வேந்து - அரசனாகிய நளன், கெட்ட சிறு மருங்குல் கிழ்மகளிர் - இளைத்த நுட்பமாகிய இடையை யுடைய கடைசியரால், நீள்வரம்பில் இட்ட பசுங் குவளை - நீண்ட வயல்களின் வரம்பின்மேல் பிடுங்கிப்போடப்பட்ட (களைகளாகிய) பசுமையான குவளைப் பூக்கள், ஏர் அடித்த கட்டி - ஏர்களால் உழுது உண்டாக்கப்பட்ட மண்

கட்டிகள், கரைய - கரைந்து போகும் வண்ணம், தேன் ஊறும் - தேனை ஊறச்செய்கின்ற, கடல் நாடன் ஊர்க்கு - கடற்கரையை யடுத்துள்ள (விதர்ப்ப) நாட்டையுடைய வீமனது நகரத்துக்கு, தேர் - தேரை, விரைய - அதி விரைவாக, ஊர்தி என்ருன் - செலுத்துதி என்று (சாரதிக்குச்) சொன்ருன்; எ - று.

வயல்களிற் களைகளாக முளைத்த குவளைப் பூக்களைப் பிடுங்கிக் கரையிலிட, அப்பூக்களினின்றும் வழிந்தோடிய தேன் வயல்களிற் பாய்ந்து உழுததிஞலுண்டாகிய மண் கட்டிகளைக் கரைத்துச் சமப்படுத்துமென அந்நாட்டின் நிலவள நீர்வளத்தை வெளிப்படுத்திஞர். கட்டியையும் மென்மை செய்யும் பொருள்கள் அந்நாட்டி லிருப்பதுபோல அந் நாட்டு மக்களும் கல்மனமுடையாரையும் இன்புறுத்தும் இனிமைபடைத்தவர் என்பதையும் ஒருவாற்ருற் கூறிய வாறு. பசுமை + குவளை = பைங்குவளை. குவளை - முதலாகு பெயர். கடைசியர் - மருதநிலத்துப் பெண்கள்.

**33.** சடைச் செந்நெல்.........

இ - ள்: சடை செம் நெல் - சடைபோல் நெருங்கிய செந்நெற் பயிர்கள், பொன் விளைக்கும் - பொன்போன்ற நெற் கதிர்களை ஈனுகின்ற, தன் நாடு - தனது நாடாகிய நிடததேசம், பின் ஆ - (தனக்குப்) பின்புறத்ததாகக் கழியவும், கடல் தானை - கடல்போற் பரந்த தனது சேனை, முன் ஆக - தனக்கு முன்னே செல்லவும், அடற்கு - விரத்திற்கு, அமைந்த - பொருந்திய, வில்லியரும் - வில்லையுடைய பல அரசர்களும் பொன் தாமம் - பொன்னுலாகிய மாலையை (அணிந்த) வீமன் திருமகள் ஆம் நல் உயிரும் - வீமராசனது அழகிய மகளாகிய இனிய தனது உயிர்போன்ற தமயந்தியும், வாழும் நகர் - வாழ்கின்ற குண்டினபுரியை, கண்டான் - (நளன்) பார்த்தான்; எ - று.

நளன் தனது நால்வகைச் சேனையுடனே தன் நாட்டை விட்டுப் புறப்பட்டு, சுயம்வரத்திற்காகப் பல தேசத்து அரசர்களும் வந்து தங்கியிருக்கின்ற குண்டினபுரி சேர்ந்தனன் என்பதாம். பொன் - உவமஆகுபெயர். பின்ஞ - ஆக என்ற எச்சத்தின் ஈறு தொக்கது. வில்லியர் பலர்பாற் படர்க்கைப்பெயர்.

34. நெற்றித் தனிக்கண்..........

இ – ள் : நெற்றித் தனிக்கண் நெருப்பை – சிவபெருமானது நெற்றியிலுள்ள ஒப்பற்ற கண்ணினது நெருப்பை, குளிர்விக்கும் – தனது இசையாற் குளிரச்செய்யும், கொற்றம் – மேன்மை பொருந்திய, தனி யாழ் – ஒப்பில்லாத வீணையையுடைய, குலமுனிவன் – மேன்மையுள்ள நாரத முனிவன், தேன் நாடும் – வண்டுகள் விரும்பிச் செல்கின்ற, தெய்வத் தருவும் – தெய்வத்தன்மை பொருந்திய கற்பக விருட்சங்களையும், திருமணியும் – அழகிய சிந்தாமணி என்னும் இரத்தினத்தையும், வான்நாடும் – சுவர்க்க லோகத்தையும், காத்தான் மருங்கு – பாதுகாப்பவனாகிய இந்திரனிடம், உற்று அடைந்தான் – போய்ச் சேர்ந்தான் ; எ – று.

தாம்பாடும் சங்கீத இனிமையால் சிவபிரானது நெற்றிக் கண்ணின் உக்கிரத்தையும் சாந்தப்படுத்தும் நாரத முனிவர், இந்திரன்சபை போய்ச் சேர்ந்தார் என்பதாம். நாரதரது யாழுக்கு 'மகதி' என்று பெயர்.

35. வீரர் விறல்வேந்தர்.........

இ – ள் : நாகம் – மலைகளின், சிறகு அரிந்த – சிறகுகளை வெட்டின, மின்முகவேல் – மின்னல்போல் விளங்குகின்ற முனையையுடைய வச்சிராயுதத்தையேந்திய, கையான் – கையையுடையவனான இந்திரன், வீரர் – வீரர்களான, விறல்வேந்தர் – பெருமையையுடைய அரசர், ஆரும் – எவரும், விண்நாடு சேர்கின்றார் இலர் – (இப்பொழுது) சுவர்க்க லோகத்திற்கு வருகின்றார்களில்லை, (இதற்குக் காரணம் யாதோ ?) என்றுஐயுற்று – என்று சந்தேகப்பட்டு, (அதனை நீக்கிக்கொள்ள) விரைந்து – விரைவாய், நாரதனார் நல் முகமே நோக்கினான் - நாரதமுனிவருடைய தெளிவான முகத்தையே பார்த்தான் ; எ – று.

பூலோகத்து அரசர்கள் போர்செய்து மனிதவுடம்பை விட்டுத் திவ்ய தேகம் பெற்று விருந்தாய் வராமல் தன்னுடைய சுவர்க்கபோகத்தைத் தானே அனுபவித்துக் கழிக்கும்படி இருத்தலால் வீரர்கள் தன் நாட்டிற்கு விருந்தாக வாராதது என்ன காரணமென்று சந்தேகங்கொண்டு பூலோகத்தினின்று வருகின்ற நாரதமுனிவரை வாயினாற்

கேளாது அதனை அறியக் குறிப்பாக அவர்முகத்தை நோக்கி ணன் என்பதாம். ஆர் – யார் என்பதன் மரூஉ. ஆல் – அசை.

**36.** வீமன் மடந்தை.........

இ – ள்: பொய்யாத வாயினன்–பொய்க்காத சொல்லை யுடையவரும், மாதவத்தோர் மன் - பெரிய தவமுடைய வர்களுக்குத் தலைவருமான நாரதர், புரந்தரற்கு – இந்திர னுக்கு, வீமன்மடந்தை–வீமராசன் புத்திரியாகிய தமயந்தியி னது, மணத்தின் – கலியாணத்துக்குரிய, விரை தொடுத்த தாமம் - வாசனைமிகுந்த மாலையை, சுயம்வரத்துப் புனை வான் – (அவளுடைய) சுயம்வரத்தில் தாங்கள் தாங்கள் பெறுதற்காக, மாமன்னர் – பெருமைபொருந்திய அரசர்க ளெல்லாரும், போயினர் என்றான் – அங்குச் சென்று அவ் வைபவத்தை எதிர்பார்த்துஇருக்கிறார்கள் என்றுசொன்னார்; எ – று.

மேற்கூறியவாறு சந்தேகித்துக் குறிப்பாக வினவின இந்திரனுக்குத் தமயந்தியின் சுயம்வரச் செய்தியைத் தெரி விக்கச் சென்ற நாரதர் அவன் குறிப்பையுணர்ந்து அதற்கு விடையாகவே தாம் குறித்துவந்த செய்தியைப் பொருந்தக் கூறினார் என்பதாம். புனைவான் – வினையெச்சம்.

**37.** அழகு சுமந்திளைத்த.........

இ - ள்: (அத் தமயந்தி) அழகு சுமந்து இளைத்த – தனது பேரழகைச் சுமப்பதினாலே மெலிந்துபோன, ஆகத்தாள் – தேகத்தையுடையவள், வண்டுபமுகு – (தேனை விரும்பி) வண்டுகள் நெருங்கிப் பயில்கின்ற, கரும் கூந்தல் பாவை – கரிய கூந்தலையுடைய பாவைபோன்றவள், மழ களிறு – இளமையான யானைப் படையையுடைய, வீமன் குலத்துக்கு – வீமராசனுடைய வம்சத்திற்கு, ஓர் மெய்த் தீபம் – ஒப்பற்ற மெய்ம்மையான தீபம் போன்றவள், அவளே - அத் தமயந்தியே, காமன் திருவுக்கு – மன்மதனது செல்வத்திற்கு, ஓர் காப்பு – சிறந்த காவலாவாள் (என்று நாரதர் கூறினார்); எ – று.

பாவை – உவம ஆகுபெயர். மழகளிறு – உரிச்சொற் றொடர். கருங்கூந்தல் - பண்புத்தொகை. இவளது அழகு,

குணம், செயல் முதலியவற்றால் வீமராசன் குலத்தை யாவரும் அறிதலால் தமயந்தியை வீமன் குலத்துத் தீப மென்றும், இவளைப் பெறுதலால் ஆடவர் காம இன்பம் பெறுவாராதலின் காமன் திருவுக்கோர் காப்பு என்றுங் கூறினர். காப்பு – காவல்; தொழிற்பெயர்.

**38.** மால்வரையை..........

இ – ள்: (நாரதர் சொல்லியதைக் கேட்டு) மால் வரையை – பெரிய மலைகளை, வச்சிரத்தால் – வச்சிராயுதத் தினால், ஈர்த்தானும் – சிறகரிந்த இந்திரனும், வானவரும் – அக்கினி யமன் வருணன் ஆகிய தேவர்களும், கோல் வளைதன் – அழகிய வளையலை யணிந்த தமயந்தியினது, மாலை குறித்து – சுயம்வர மாலையைக் கருதி, சால்பு உடைய - (எல்லாச் செல்வமும்) நிறைதலையுடைய, விண் நாடு நீங்கி – சுவர்க்கத்தினின்று நீங்கி, விதர்ப்பன் திரு நகர்க்கு – வீமராசனது அழகிய குண்டினபுரத்திற்குச் செல்லும்பொருட்டு, மண்நாடு நோக்கி – மண்ணுலகத்தை நோக்கி, மகிழ்ந்து எழுந்தார் – விருப்பத்தோடு புறப்பட் டார்கள்; எ – று.

தமயந்தியின் சுயம்வரத்தை நாரதர்வாயிலாகக் கேட்ட இந்திரன் முதலிய தேவர்கள் தமயந்தியை விரும்பிச் சுயம்வரத்திற்காகப் பூவுலகம் நோக்கிப் புறப்பட்டார்கள் என்பதாம். கோல்வளை – அன்மொழித்தொகை. மாலை – சுயம்வர மாலை. சால்பு – உரிச்சொல்லடியாகப் பிறந்த பண்புப்பெயர்.

**39.** மாயிரு ஞாலத்து..........

இ – ள்: மாயிரு - மிகவும் பெரிய, ஞாலத்து – பூமியிலுள்ள, உயிர் – உயிர்கள், காண – பார்க்கும்படி, வான் – ஆகாயமாகிய, அரங்கில் – நடனசாலையில், பாய் – பரவிய, இருள் என்னும் - இருள் என்கின்ற, படாம் வாங்கி – திரைச் சீலையை இழுத்து, சேய் நின்று – தூரத் தில் நின்று, (பிராமணர் முதலியோர்) ஆரணம் அறைந்து – வேதங்களை உரக்கச் சொல்லி, பாட – பாடுதலைச் செய்ய, வெய்யோன் – சூரியன், ஆடிப்போய் – (ஒரு நாடகக்காரன்

போல நின்று) நாட்டியஞ் செய்துகொண்டே சென்று, குடபால் - மேற்குத் திக்கில் உள்ள, வரை - அஸ்தமனகிரியில், மறைந்தான் - ஒளித்தான் ; எ - று.

சூரியன், இருள் சேரவும் வேதம் முழங்கவும் அஸ்தமனகிரியிற் போய் மறைந்ததை, ஒரு நாடகக்காரன் நாடக மேடையில் நின்று ஆடிப் போவதுபோல உருவகப்படுத்தினார். இது சிறப்புருவகவணி. மா, இரு - ஒருபொருட் பன்மொழி. மா - உரிச்சொல்.

40. மல்லிகையே... ... ...

இ - ள் : மல்லிகையே - மல்லிகை அரும்பினையே, வெண்சங்கா - வெண்மையான சங்காக, (வாயில் வைத்து) வண்டு ஊத - வண்டுகள் ஊதி முழக்கவும், வான் - சிறந்த, கரும்பு வில்லி - கரும்பு வில்லையுடைய மன்மதன், கணை தெரிந்து - மலர்ப் பாணங்களை ஆராய்ந்து பார்த்தெடுத்து, (வில்லிற் றொடுத்து வைத்துக்கொண்டு) மெய்காப்ப - தேகத்தைக் காத்துவரவும், முல்லை எனும் - முல்லைமலர்என்கின்ற, மென் மாலை - மெல்லிய மாலையானது, தோள் அசைய - தோளில் அணியப்பட்டு அசையவும், புன் மாலை - அற்பமான இருளையுடைய, அந்திப்பொழுது - மாலைக் காலமானது, (ஓர் அரசன் பவனி வருதல்போல்) மெல்ல நடந்தது - மிருதுவாக நடந்துவந்தது ; எ - று.

அந்திப்பொழுது வருவதை, சங்கமுழக்கம் முதலிய சிறப்புகளுடன் பவனிவரும் அரசன் வருவதுபோல உருவகப்படுத்திக் கூறினார். ஊத, காப்ப, அசைய என்பன வினையெச்சங்கள். கரும்பு + வில்லி = கருப்புவில்லி. வில்லி - வினை முதற்பெயர். அந்திப் பொழுது - எழுவாய், நடந்தது - பயனிலை.

41. புற்கென்றாந்தி... ... ...

இ - ள் : அந்தி - (மேற்கூறியபடி தோன்றிய) அந்திப் பொழுதானது, நிலம் காப்பான் - ஓர் அரசனிடத்துள்ள பூமியைக் கைப்பற்றிக் காக்கும்பொருட்டு, முற்கொண்டு - முன்னேறி, ஆண்டு - அவ்விடத்தில், அடை

கின்ற - போருக்குச் செல்கின்ற, வேந்தர்க்கும் - அரசர்க்கும், ஆண்டு அஞ்சினோர்க்கும் – அவ்விடத்துப் பயந்து நின்ற அரசர்க்கும், இடைநின்ற காலம்போல் – நடுவில் நின்ற வெல்வி தோல்வி யற்ற காலம் அவர்களுக்குக் கலக்கத்தைச் செய்வதுபோல, புற்கு என்றார் – விரகதாபத்தினால் பசலை நிறமடைந்தார்களது, புனைமலர்க்கண் – அழகிய நீலோற்பல மலர்போன்ற கண்களில், நீர் அரும்ப – நீர் சுரக்கும் படி, நிற்கின்றது – அவ் விரகதாபத்தை யுடையார்க்குக் கலக்கத்தைத் தருவதாய் நின்றது, அந்தோ— ; எ - று.

புற்கு – கபிலநிறம்; அதாவது கருமை கலந்த பொன்னிறம். அந்தோ இரக்கக் குறிப்பிடைச் சொல். ஓர் இராச்சியத்தைக் கைப்பற்றத் துணிந்து முன்னேறிச் சென்றவர்க்கும், அஞ்சி நின்றவர்க்கும், அவர்களின் காரியத் தொடக்கத்துக்கும் முடிவிற்கும் இடையிலுள்ள காலம், 'நமக்கு வெற்றி யுண்டாகுமோ தோல்வி யுண்டாகுமோ' என்னும் கலக்கத்தை யுண்டாக்கும்; அதுபோல் அந்திப் பொழுதும் விரகமுடையார்க்கு 'நம் காதலர் நம்மைச் சேர்வாரோ, சேரமாட்டாரோ' என்னும் கலக்கத்தை யுண்டாக்கக் கூடியதாதலின் அதற்கு நிகராகக் கூறப் பட்டது.

**42.** ஊக்கிய சொல்லர்.........

இ - ள் : ஊக்கிய சொல்லர் – உற்சாகம் பொருந்திய வார்த்தையை உடையவர்களும், ஒலிக்கும் – சத்திக்கின்ற, துடி - துடியென்னும் பறை முழக்கத்தைப்போன்ற, குரலர் - கண்டத் தொனியை யுடையவர்களும், வேல் வாளர் – வேலும் வாளுமாகிய ஆயுதங்களை யுடையவர்களுமான, காவலர்கள் – காவற்காரர்கள், இருளின் புடைவாய் - இருட்டின் பக்கத்திலே, இருள் – மற்றொரு இருளானது, புடைத்தால்போன்று - அதனை அடித்துத் தள்ளினதைப்போல, இடையாமம் – நடுச் சாமத்தில், காக்க – நகர் காவல்புரிவதற்கு, போந்தார் – வந்தார்கள் ; எ – று.

நடுச் சாமத்தில் நகர் காப்போர், தங்கள் காவற்றொழிலைப் புரிதற்கு வந்தனர் என்பது கருத்து.

**43.** பூசுரர்தம்.........

இ - ள் : பூசுரர்தம் - பிராமணர்களுடைய, கைம் மலரும் - கரங்களாகிய மலர்களும், பூங்குமுதமும் - அழகிய ஆம்பல் மலர்களும், முகிழ்ப்ப - குவியவும், காசினியும் - பூமியிலுள்ளவர்களும், தாமரையும் - தாமரை மலர்களும், கண்விழிப்ப - கண்திறக்கவும் (அதாவது மலரவும்), வாசம் - வாசனை, அலர்ந்த - பரவிய, தேம் - தேன் நிறைந்த, கோதையாள் - மாலையை யணிந்த தமயந்தியின், ஆழ் துயரத்தோடு - ஆழ்ந்த துன்பத்துடனே, அற்றைப் பொழுது - அன்றைய இராக்காலம், புலர்ந்தது - நீங்கிற்று ; எ - று.

பூசுரர் - பூ+சுரர் ; பூ=பூமி, சுரர்=தேவர் ; பிராமணர்கள், உலகினுக்குத் தேவர்போல் விளங்குபவராதலின் இப்பெயர் பெற்றார். விடியற்காலத்தில், பிராமணர்கள் கை குவித்துச் சூரியனை வணங்கி அநுட்டானம் செய்தலும், அல்லிமலர்கள் குவிதலும், உலகத்தவர்கள் நித்திரைவிட்டெழுதலும், தாமரை மலர்கள் மலர்தலும், விரகவேதனை நீங்கலும் இயல்பு. 'தம்' - சாரியை.

**44.** முரைசெறிந்த.........

இ - ள் : முரைசு எறிந்த - பேரிகையை அடித்துத் தெரிவித்த, நாள் ஏழும் - ஏழுநாளும், முற்றியபின் - முடிந்தபின்பு, கொற்றம் - வெற்றியையுடைய, வரை செறிந்த - மலையோ டுவமையாகப் பொருந்திய, தோள் - புயங்களையுடைய, மன்னர் - அரசர்கள், விரை செறிந்த - வாசனை சேர்ந்திருக்கின்ற, மாலை - பூமாலைகள், துவள - மார்பில் அசையவும், முடி - கிரீடங்கள், தயங்க - பிரகாசிக்கவும், வால்வளையும் - வெண்மையாகிய சங்குகளும், காலை முரசும் - காலை நேரத்தி லடிக்கப்படும் பேரிகைகளும், கலந்து (தயங்க) - கலந்து ஒலிப்பவும், வந்தார் - (குண்டினபுரத்தில்) வந்து சேர்ந்தார்கள் ; எ - று.

முரசு - முரைசு எனப் போலியாயிற்று. வரை செறிந்த - உவமைத்தொகை ; அரசர்கள் சுயம்வரத்திற்கு வந்தமை இதனாற் கூறப்பட்டது. 'தயங்க' எனப் பின்னும் கூட்டப்பட்டது.

**45.** *மன்றலந்தார்........*

இ—ள்: முன்றில் - வீட்டின் வாயிலிலே, கன்று - எருமைக் கன்றுகள், குதட்டிய - சிறுக மென்று உதப்பித் தள்ளிய, கார் - கருமையாகிய, நீலம் - குவளை மலர்கள், குறு விழிக்கு - அங்குள்ள மாதரின் சிறு விழிகளாகிய கரு விழிக்கு, நேர் - நிகராய்க் கிடக்கின்ற, நாடன் - விதர்ப்ப நாட்டுக் கதிபனாகிய வீமனுடைய, கோதை - மகளாகிய தமயந்தியின், பெருங் கண்ணின் - பெரிய கண்களின், சிறு விழிக்கு - கடைநோக்காகிய சிறு பார்வைக்கு, நோற்று இருந்த - தவஞ்செய்திருந்த, சேய் - செவ்வேளை ஒத்த நளன், மன்றல் - வாசனை பொருந்திய, அம் - அழகிய, தார் - மாலையையணிந்த, மன்னர் நடு அணைய - அவ்வரசர்களுக்கு நடுவாக, வந்திருந்தான்—; எ - று.

இதனால் நளன் வந்து அவ் வரசர்களுக்கு நடுவில் இருந்தமை கூறப்பட்டது. நீலம் - குணவாகுபெயர், முன்றில் - இல்முன்; இலக்கணப்போலி.

**46.** *நித்திலத்தின்..........*

இ—ள்: அரும் - அருமையான, கேழ் - நிறத்தினையுடைய, மணி - இரத்தினங்களால் ஆகிய, பூண் - ஆபரணங்களை யணிந்த, அணங்கு - தெய்வப்பெண் போன்ற தமயந்தி, மை - அஞ்சனம் எழுதப்பெற்ற, தடம் - விசாலமாகிய, கண் - கண்கள், செல்ல - காதுகளுக்கு நேராகப் பாய்தலால், நித்திலத்தின் - முத்துக்களையுடைய, பொற்றோடு - பொன்னாலாகிய காதணிகள், நீலமணி - நீலரத்தினம் பதித்த, தோடாக - தோடுபோல் விளங்க, வயம் - வெற்றி பொருந்திய, வேந்தர் - அரசர்களுடைய, சித்தம் - மனமானது, மருங்கேவர - ஆசையால் அவளைத் தொடர்ந்து வர, வண்டின் பந்தர்க்கீழ் - வண்டுகளாலாகிய பந்தலின் கீழ், வந்தாள் - வந்து சேர்ந்தாள்; எ — று.

கண்ணின் நீலநிறம் பரவியமையால் நித்திலத்தோடு நீலமணித்தோடாயிற்று. 'காதளவோடியகண்' பெண்களுக்கு அழகு தருவது. அரசர்கள் அவளை ஆசையோடு பார்த்தமையின் 'சித்தம் மருங்கேவர' என்றார். தமயந்தி சூடியிருந்த மலரின் வாசனையால் வண்டுகள் அவள் கூந்தலை

மொய்த்துப் பந்தல்போல் மேல்வருதலின் 'வண்டின் பந்தர்' எனப்பட்டது. தடங்கண் - பண்புத்தொகை. பந்தர் - மொழியிற்றுப்போலி; கிழ் - ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு.

**47.** பேதை மடமயிலை.........

இ - ள்: பேதை - அறியாமைக் குணத்தையுடைய, மடம் - இளமை பொருந்திய, மயிலை - மயிலினை, சூழும் - சூழ்கின்ற, பிணை மான்போல் - பெண் மான்களைப்போல, கோதை - மாலையையணிந்த, மடம் - இளமை பொருந்திய, மானை - மானை நிகர்த்த தமயந்தியை, கொண்டு அணைந்த - அழைத்துக்கொண்டு வந்து அங்கே சேர்ந்த, மாதர் - தோழிப் பெண்களுடைய, மருங்கின் - இடைகளுக்கிடையில் தோன்றும், வெளிவழியே - வெளியின் வழியாக, மன்னர் - அரசர்களுடைய, கண் - கண்கள், புக்கு - புகுந்து, மேல் மேல் - மேலும் மேலும், நிறைந்து - தமயந்தியின் மேனியழகிற் கூடி, நெருங்கின - செறிந்தன; (அரசர்கள் தமயந்தியின் அழகை நோக்கினார்கள் என்றபடி) எ - று.

இதனால் தமயந்தியை அரசர்கள் நோக்கினமை கூறப்பட்டது. மான் - உவமையாகுபெயர். பெண்களின் இடை சிறிதாகலின் மாதர் நடுவில் ஒவ்வொரு வெளி தோன்றிற்று என்றவாறு.

**48.** மன்னர்.........

இ - ள்: மின் நிறத்து - மின்னல்போன்ற நிறத்தினையும், செய்யதாள் - சிவந்த கால்களையும், வெள்ளை - வெண்மையாகிய, சிறை - சிறகுகளையுமுடைய, அன்னம் - ஓர் அன்னமானது, செம் கமலம் - சிவந்த தாமரை மலர்களுடைய, பொய்கை வாய் - தடாகத்தில், போவதே போன்று - செல்வதையே நிகர்த்து, பொன்னின் - பொன்னாலாகிய, மடம் - இளமை பொருந்திய, பாவை - பதுமைபோன்ற தமயந்தி, மன்னவர் - அரசர்களுடைய, விழி - கண்களாகிய, தாமரை - செந்தாமரை மலர்கள், பூத்த - மலர்ந்திருக்கிற, மண்டபத்தே - சுயம்வர மண்டபத்திலே, போய்ப் புக்காள் - சென்று சேர்ந்தாள்; எ - று.

பொய்கை மண்டபத்துக்கும், தாமரை மன்னர் விழிக ளுக்கும், அன்னம் தமயந்திக்கும் உவமை.

**49. மன்னர் குலமும்.........**

இ - ள்: இயல் அணங்கு - நற்குணம் பொருந்திய தெய்வப்பெண்போன்ற பெண்ணாகிய ஒரு தோழி, தேர் - தேர்களையுடைய, வேந்தர்தம்மை-அவ்வரசர்களை, தெரிந்து- (இன்னவர் இன்னவர் எனத் தான்) தெரிந்துகொண்டு, தார் - வெற்றிமாலையையணிந்த, வேந்தன் - வீமராசன், பெற்ற - குமாரத்தியாகப் பெற்ற, தனி - ஒப்பற்ற, கொடிக்கு - பூங்கொடிபோன்ற தமயந்திக்கு, முன்னின்று - எதிரில் நின்று, மன்னர் - அந்த அந்த அரசர்களுடைய, குலமும் - வம்சத்தையும், பெயரும் - பெயரையும், வளம் - வளம்பொருந்திய, நாடும் - அவர்களது நாட்டையும், இன்ன - இப்படிப்பட்ட, பரிசு என்று - தன்மையுடையான் என்று சொல்லி, காட்டினாள் - அறியச்செய்தாள்; எ - று.

தோழி அரசர்களின் குலம் பெயர் நாடு முதலியவை களையெல்லாந் தெரிந்து தமயந்திக்குக் கூறிக் காட்டினா ளென்க. அணங்கு, கொடி - உவமஆகுபெயர்கள். பரிசு - தன்மை.

**50. காவலரைத் தன்சேடி.........**

இ - ள்: காவலரை - (சுயம்வரத்திற்கு வந்திருந்த) அரசர்களை எல்லாம், தன்சேடி - தன்னுடைய தோழி, காட்ட - காட்டிக்கொண்டுவர, பூவரைந்த - மலர் சூட்டப் பெற்ற, மாசு இல்லா - குற்றமில்லாத, பூங்குழலாள் - அழகிய கூந்தலையுடைய தமயந்தி, கண்டு - பார்த்துக் கொண்டே வந்து, நளன் உருவாச் சென்று இருந்தார் - நளன் வடிவமாகி ஆங்குச் சென்றிருந்தவர்களாகிய, ஈர் இருவர் தேவர் அவரை - நான்கு தேவர்களாகிய அவர்களை, காணா நின்று - பார்த்து, உளம் - மனமானது, ஊசலாடு உற்றாள் - ஊசலாடுதலைப் பொருந்தினாள்; எ - று.

தேவர்கள் நால்வர் - இந்திரன், அக்கினி, இயமன், வருணன் ஆகியவர்கள். இவர்கள் நால்வரும் நளன் வடிவந்

தாங்கிச் சுயம்வர மண்டபத்தே இருந்தார்கள். நளனும் இவர்களும் ஒரே வடிவந் தாங்கியிருப்பதைக்கண்டு உண்மை நளன் யாவனோ என்றெண்ணி மனம் கலங்கினாள் என்க. மற்று – இடைச்சொல்.

**51.** பூணுக் கழகளிக்கும்.........

இ - ள்: வானவரும் - இந்திரன் முதலிய தேவர்களும், பொன் தேர் – அழகிய தேரையுடைய, நளன் உருவாய் - நளன் வடிவாகி, போந்து – (தாங்களிருக்குமிடத்தைவிட்டுச்) சென்று, வந்து இருந்தார் - (சுயம்வர மண்டபத்தில்) சேர்ந்திருந்தார்கள், (இவர்களே தமயந்தியை விரும்பி வந்தார்களென்றால்) பூணுக்கு – ஆபரணங்களுக்கு, அழகு அளிக்கும் – அழகைக் கொடுக்கின்ற, பொன் தொடியை – பொன்னாலாகிய வளையலையணிந்த தமயந்தியை, கண்டக்கால் - மனத்தினால் நோக்குவார்களாயின், நீள் நிலத்து - நீண்ட இப் பூமியிலுள்ள, நல் வேந்தர் – நல்ல அரசர்களில், எவர் – எவர்தாம், நாண் உக்கு – நாணத்தை விட்டு, நெஞ்சு உடைய - மனக்கலக்கமுற்று, வாராதார் – வாராதிருப்பவர்; (எல்லாரும் வந்தனர் என்றபடி) எ – று.

இந்திரன் முதலிய தேவர்களும் தமயந்தியின் மணமாலையைப் பெற விரும்பி வந்தார்களென்றால் பூலோகத்திலுள்ள அரசர்களில் எவர்தாம் வாராதிருப்பர்? எல்லோரும் வந்திருந்தார்கள் என்பது கருத்து. பொற்றொடி – அன்மொழித்தொகை. மற்று – அசை. வானவரும் என்பதில் உம் உயர்வு சிறப்பு.

**52.** மின்னுக்தார் வீமன்.........

இ - ள்: சூழ் – உயிர்களை விடாது வந்தடைகின்ற, விதியின் மன்னவனை - விதிக்குத் தலைவனை கடவுளை, தன்மனத்தே – தன்னுடைய மனதிலே, வைத்து - கொண்டு (தியானித்து), யான்—, மின்னும் – பிரகாசிக்கின்ற, தார் – மாலையையணிந்த, வீமன் தன் – வீமராசனுடைய, மெய் மரபில் – சத்தியமுள்ள குலத்தில், செம்மை சேர் – நற்குணம் பொருந்திய, கன்னி ஆகில் – கன்னியாயிருப்பே

ளுகில், அன்னம் - அன்னமானது, சொன்னவனை - முன்னே எனக்குக் கூறிய அந்நளனுக்கே, கடிமாலை - மணமாலையை, சூட்ட - சூட்டுதற்கு, அருள் என்ருள் -எனக்குக் கிருபை செய்வாயாக என்று வேண்டினுள்; எ - று.

தமயந்தி நளனை அறிதற்பொருட்டுக் கடவுளை வேண்டுதல் செய்தாள் என்பதாம். விதி - தெய்வ கட்டளை. கடி - உரிச்சொல்: இங்கே கலியாணம் என்னும் பொருளில் வந்தது.

## 53. கண்ணிமைத்தலால்.........

இ - ள்: நறு - நல்ல, தாமரை - செந்தாமரை மலரை, விரும்பும் - விரும்பி அதில் வீற்றிருக்கின்ற, நல் நுதலே - அழகிய நெற்றியையுடைய இலக்குமியையே, அன்னுள் - ஒப்பவளாகிய தமயந்தி, ஆங்கு - அவ்விடத்தில், கண் இமைத்தலால் - கண்கள் இமை கொட்டுதலாலும், அடிகள் - பாதங்கள், காசினியில் - பூமியில், தோய்தலால் - படிதலாலும், வண்ணம் - அழகு பொருந்திய, மலர்மாலை - பூமாலையானது, வாடுதலால் - வாட்டமடைதலாலும், எண்ணி - ஆலோசித்து, நளன் தன்னை - தான் விரும்பியிருந்த நளமகாராசனை, அறிந்தாள் - தெரிந்து கொண்டாள்; எ - று.

தேவர்க்குக் கண்ணிமைத்தலும், கால் நிலந் தோய்தலும், மாலை வாடுதலும் இல்லை; மனிதர்க்கிவையுண்டு. அதனுல் அவள் நளனை இன்னுன் என்று தெரிந்துகொண்டாள். நன்னுதல் - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

## 54. விண்ணரச ரெல்லாரும்..........

இ - ள்: பொன் - இலக்குமியையொத்த தமயந்தி, விண் அரசர் எல்லாரும் - தேவலோகத்து மன்னர்களான இந்திரன் முதலிய தேவர்கள் எல்லாரும், வெள்கி - வெட்கி, மனம் சுளிக்க - மனம் வருந்தவும், கண் அகல் - இடமகன்ற, ஞாலம் - பூமியிலுள்ளவர்கள், களிகூர - சந்தோஷம் மிகவும் மண் அரசர் - பூவுலகத்தரசர்கள், தம் மனத்தே - தங்கள்

மனத்திலே, வன் மாலை - வலிய மயக்கத்தை, சூட - கொள்ளவும், வயம் - வெற்றி பொருந்திய, வேந்தை - நளமகாராசனுக்கு, பொன் மாலை - அழகிய மலர்மாலையை, சூட்டினாள் - தோளில் இட்டாள்; எ - று.

தமயந்தி நளனுக்கு மாலை சூட்டினாள்; அதனைக் கண்டு தேவர்கள் வெள்கி மனம் வருந்தினார்கள்; உலகத்தார் யாவரும் சந்தோஷமடைந்தார்கள்; பூவுலக அரசர்கள் மனமயக்கங்கொண்டார்கள் என்பது இதன் கருத்து. மால் - மயக்கம்; ஐ - சாரியை; ஞாலம் - இடவாகு பெயர். கூர - கூர் என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினைஎச்சம். பொன் - உவமஆகுபெயர். பொன் மாலை - பொன்னரிமாலையுமாம். நளனுக்கு மாலைசூட்டிய தமயந்தி மற்றைய அரசர்களுக்கும் ஒவ்வோர் (மால்+ஐ)=மாலை சூட்டினாள் என்பதில் உள்ள நயம் மகிழ்தற்குரியது.

**54a. இன்னரிச் சிலம்பு..........**

இ - ள்: இன் - இனிய ஓசையைத் தருகின்ற, அரி - பருக்கையையுடைய சிலம்பு - சிலம்புகளும், செம்பொன் - சிவந்த பொன்னாற் செய்த, கிண்கிணி - சதங்கைகளும், ஆர்ப்ப - ஒலிக்கும்படி, ஏகி - போய், மன்னவர் - அரசர்களுடைய, மனமும் - நெஞ்சமும், கண்ணும் - கண்களும், வண்டு என - வண்டுகள்போல, தொடர்ந்து வீழ - தொடர்ந்து செல்ல, கொல் - கொல்லுகின்ற. நுனை - நுனியையுடைய, வயிரம் ஒள் வாள் - கூர்மை பொருந்திய ஒளி வீசுகின்ற வாட்படையை யேந்திய, நிடதர்கோன் - நளமகாராசனுடைய, குவவு - திரட்சி பொருந்திய, தோள் மேல் - புயங்களின்மேல், பொன்னரிமாலைசூட்டி - பொன்னரி மாலையைச் சூட்டி, பூங் கழல் - அழகு பொருந்திய அவன் பாதங்களை, வணங்கி நின்றாள் - பணிந்து நின்றனள்; எ - று.

மாதர்க்கு. கணவரைத் தொழுதலின் மிக்கதின்மையின் 'பூங்கழல் வணங்கி நின்றாள்' என்றார். பொன்னரிமாலை - பொன்னை யரிந்து செய்யும் ஒருவகை மாலை.

**55. திண்டோள் வயவேந்தர்........**

இ - ள்: ஒன் - பிரகாசம் பொருந்திய, தாரை - ஒழுங்கு அமைந்த, கோ - மேன்மைபெற்ற, மாலை -

மாலையை யணிந்த, வேலான் - வேலாயுதத்தைத் தரித்த நளன், குலம் மாலையாள் - (தான் பிறந்த) குலத்திற்கும் (புகுந்த) குலத்திற்கும் மாலைபோல அலங்காரஞ் செய்ப வளும், வேல் - வேல்போன்ற, கண்ணுள் - கண்களை யுடையவளுமாகிய தமயந்தி, [சூட்டிய] பூமாலை - (மணத் திற்குரிய) மலர்மாலையை, பெற்று இருந்தபோது - அடைந் திருந்த சமயத்தில், திண்தோள் - வலிமையான தோள் களையுடைய, வயம் - வெற்றிபொருந்திய, வேந்தர் - அர சர்களுடைய, செந்தாமரை முகம் - செந்தாமரை மலர் போல விளங்கிய முகங்கள், போய் - (அவ்வியல்பு) நீங்கி, வெள் தாமரையாய் - வெண்டாமரை மலர்போலாகி, வெளுத்த - வெண்மை நிறத்தை அடைந்தன; எ - று.

நளன் மாலை பெற்றவுடன் மற்றைய அரசர் முகங் கள் வாட்டமுற்றன வென்பதாம். போது - பொழுது என்பதன் மரூஉ. குலமாலையாள் என இயைக்க.

56. மல்லன் மறுகின்..........

இ - ள்: நல் மாலை - நல்ல மாலையை அணிந்த, வேலான் - வேலையுடையவனுகிய, நளன் - நளமகாராசன், மல்லல் - வளப்பம் பொருந்திய, மறுகில் - வீதியில், மடம் - இளமை பொருந்திய, நாகு - பசுவானது, உடன் ஆக - கூட வர, செல்லும் - நடக்கின்ற, மழவிடைபோல் - இளமை யான இடபம்போல, செம்மாந்து - களிப்படைந்து, மெல் இயலாள் - மெல்லியதன்மையுள்ள தமயந்தியினது, பொன் மாலை - அழகிய மாலையை, பெற்ற - சூடிய, தோளோடும் - புயங்களுடனே, புறப்பட்டான் - அவ்விடத்தை விட்டுச் செல்வானுயினுன்; எ - று.

இளங் காளையானது கன்னிப் பசுவுடனே வீதியில் இறுமாந்து செல்வதுபோல, நளன் தமயந்தியுடன் வீதி வந்தான் என்பது கருத்து. மழ - உரிச்சொல்.

56a. சாந்த மூழ்கு..........

இ - ள்: சாந்தம் மூழ்கு - சந்தனக் குழம்பால் மூழ்கப் பெற்ற, தடபுயன் - பருத்த புயங்களையுடைய

நளனனவன், ஆர் - நிறைந்த, அழற்கு ஏய்ந்த யாவும் - அக்கினி காரியத்துக்குப் பொருந்திய அனைத்தையும், இனிது முடித்தபின் - இனிமையோடு செய்து முடித்த பின்பு, ஆய்ந்த - ஆராய்ந்தறிந்த, நான்மறையின்வழி - வேதமார்க்கப்படி, ஆயிழை - தமயந்தியினது, காந்தள் மெல் விரல் - காந்தள் அரும்புபோன்ற மெல்லிய விரல் களை, கை - தன் கையால், பற்றினன் - பிடித்தான்; எ - று.

நளன் அக்கினி காரியங்கள் முடித்தபின்பு தமயந்தி யைக் கைப்பிடித்தான் என்பதாம். அரோ - அசை. ஆயிழை - அன்மொழித்தொகை. அரசர்க்கும் பாணிக் கிரகணமே சிறப்பென்பது தோன்ற "ஆயிழை காந்தள் மெல்விரல் கைப்பிடித்தான்" என்றார்.

சுயம்வரகாண்டம் — உரை முற்றிற்று.

# கலிதொடர் காண்டம் — உரை

கலிபுருடன் நளமகாராசனைத் தொடர்ந்த
செய்தியைக் கூறும் பாகம்

## காப்பு

க. முந்தை மறைநூன்..........

இதன் பொருள்: நந்தும் - துன்பத்தை யடைந்து கொண்டிருந்த, புழைக்கைக்கும் - துவாரம் பொருந்திய கையையுடைய யானையாகிய கஜேந்திரனுக்கும், நேயம் - அன்புள்ள, பொதுவர் மகளிர்க்கும் - இடையருடைய பெண்களுக்கும், அழைக்கைக்கு முன் - கூப்பிடுவதற்கு முன்னுகவே, செல் அடி - சென்ற (விஷ்ணுவின்) பாதத்தை, முந்தை - முதன்மையான, மறைநூல் - வேதமாகிய நூலின், முடி எனலாம் - கிரீடமென்று சொல்லலாம், தண் - குளிர்ச்சி பொருந்திய, குருகூர் - திருக்குருகூரில் உண்டாகிய, செந்தமிழ் - செவ்விய தமிழ் வடிவமாகிய, வேதம் - வேதத்தினது, சிரம் - சிரசு, எனலாம் - என்றும் சொல்லலாம் (அப்படிப்பட்ட திருவடி எமக்குக் காவலாகும்); எ - று.

இக்காண்டம் இனிது நிறைவேறுதற்பொருட்டு ஆசிரியர் காத்தற்கடவுளாகிய விஷ்ணுமூர்த்திக்கு முதற்கண் வணக்கங் கூறினர். புழைக்கை - கஜேந்திரன் என்னும் யானை. இது முதலையினிடம் அகப்பட்டு வருந்தி 'ஆதிமூலமே' என்றழைத்தபோது விஷ்ணு வந்து அதனைக் காப்பாற்றினர். கிருஷ்ணவதாரத்தில் ஆயமாதர்களோடு திருவிளையாடல் செய்தமை தோன்ற, ' நேயப் பொதுவர்......முன் செல்லடி '' என்றார். பொதுவர் - இடையர். அழைக்கை - தொழிற்பெயர்.

உ. செக்கர் நெடுவானிற்..........

இ - ள்: செக்கர் - சிவப்பான, நெடுவானில் - நீண்ட ஆகாயத்தில், திங்கள் - சந்திரனுடைய, நிலா - சந்திரிகையானது, துளும்பி - ததும்பி, உக்கது என - உதிர்ந்து வழிந்தோடியது போல, சடைமேல் - (சிவந்த) சடையின் மேலே, உம்பர் நீர் - உயர்ந்த நீரானது, மிக்கு

ஒழுகும் - மிக்குப் பாய்ந்துகொண்டிருக்கிற, வெள்ளத்தான் கங்காவெள்ளத்தை யுடையவனும், வெள்ளி நெடும் கிரியான் - நீண்ட வெள்ளிமலையை யுடையவனும், மெய் அன்பர் - உண்மையான அன்பர்களுடைய, உள்ளத்தான் - மனத்தின்கண் எழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபிரான், எங்கட்கு - எங்களுக்கு, உளன் - (துணையாக) இருக்கின்றான்; எ - று.

இதனாற் சிவ வணக்கம் கூறப்பட்டது. உம்பர்நீர் - உயர்ந்த நீர்; ஆகாய கங்கை என்க. செக்கர்வான் சிவபிரானின் சடாமுடிக்கும் சந்திரிகை கங்காஜலத்துக்கும் உவமையாயின.

**57.** தவளத் தனிக்குடையின்.........

இ - ள்: பவளம் கொழுந்து - பவளக்கொடியின் கொழுந்துகள், ஏறி - மேலேறி, செந்நெற்குலை - செம்மையான நெற்கதிர்களின் குலையை, சாய்க்கும் - சாயச் செய்கிற, நாடன் - நிடதநாட்டையுடையவனான நளன், தவளம் - வெண்ணிறமான, தனி - ஒப்பற்ற, குடையின் - தன்னுடைய குடையினது, வெள் நிழலும் - வெண்மையான நிழலும், தையல் - தமயந்தி என்னும் பெண்ணினது, குவளை - நீலோற்பல மலர்போன்ற கண்களின், கருநிழலும் - கருமையான ஒளியும், கொள்ள - தன்னை உள்ளாக்கிக் கொண்டிருக்க, செழும் தேரில் - வேலைப்பாட்டின் வளமுள்ள இரதத்தின்மீது, ஏறினான் - ஏறித் தன் நாட்டுக்குப் புறப்பட்டுப் போனான்; எ - று.

நளன் தமயந்தியினுடனே தனது நாட்டிற்குத் தேரிலேறிப் புறப்பட்டுப் போனான் என்பது இதன் கருத்து. குவளை - கண்ணுக்கு உவமையாகுபெயர். தவளம் - வடசொல். தமயந்தி நளனைப் பலமுறையும் நோக்கினளாதலின் 'தையல் குவளைக் கருநிழலுங் கொள்ள' எனப்பட்டது. கொள்ள - செயவெனெச்சம்.

**58.** பாவையர் கைதீண்ட.........

இ - ள்: பூவையர் - நாகணவாய்ப் பறவைகளை ஒத்த பெண்கள், கைதீண்டலும் - தமது கரங்களால் தொட்ட

வுடனே, அப் பூங்கொம்பு - அந்த மரத்திலுள்ள மலர்கள் நிறைந்த கிளைகள், அவர் பொன்னடியில் - அந்தப் பெண்களுடைய அழகிய பாதங்களில், மேவி தாழ்ந்தன - பொருந்திப் பணிந்தன, பூங்குழலாய் - மலர் சேர்ந்த கூந்தலையுடைய தமயந்தியே, விரைந்து - சீக்கிரமாக, காண் - இதனைப் பார்க்கக் கடவாய், பாவையர் - பெண்களினுடைய, கை தீண்ட - கரம்பட்ட மாத்திரத்தில் பணியாதார் - பணியாதவர்கள், யாவரே - எவர்கள்?, என்முன் - என்று கூறினான், மின் - ஒளி பொருந்திய, நெடு வேல் - நீண்ட வேலாயுதத்தைத் தாங்கிய, கையான் - கையையுடைய நளமகாராசன் : எ - று.

சில மரங்கள் உத்தம ஸ்திரீகளுக்குத் தாழ்ந்து மலர் கொடுத்தல் இயற்கை. அங்ஙனமே அங்குள்ள மரத்திலுள்ள கொம்பும் பெண்களுக்கு வணங்கி மலர் கொடுத்தது. இது மிகவும் அருமையான செய்கையாதலின் நளன் இதனைத் தமயந்திக்குக் காட்டினான் என்பதாம். யாவரே என்பதிலுள்ள ஏகாரம் எதிர்மறைப் பொருளது. தாழ்ந்தனவே என்பதிலுள்ள ஏகாரம் இசைநிறை.

59. மங்கை யொருத்தி........

இ - ள் : மலர் கொய்வாள் - பூப் பறிப்பவளாகிய, மங்கை ஒருத்தி - ஒரு பெண்ணினது, வாள் முகத்தை - ஒளி பொருந்திய முகத்தை, பங்கயம் என்று எண்ணி - தாமரை மலரென்று நினைத்து, படி - மொய்க்கின்ற, வண்டை - வண்டினை, செங்கையால் - சிவந்த கையினால், காத்தாள் - படியவொட்டாமல் அவள் துரத்திக் காவல் செய்தாள், அக் கைமலரை - அவ்வாறு காத்த அந்த மலரை ஒத்த கரத்தை, காந்தள் என - காந்தள் மலரென்று நினைத்து, பாய்தலுமே - அவ் வண்டு கைமீது பாய்ந்தவுடனே, வேர்த்தாளை - (அச் செயலினால்) வியர்த்த பெண்ணை, காண் என்றான் - பார்ப்பாயாக என்று கூறினான், வேந்து - நளமகாராசன் ; எ - று.

ஒரு பெண் மலர் கொய்யும்போது வண்டானது அவளுடைய முகத்தைத் தாமரை மலரென்று நினைத்து அதிற் பாய்ந்தது ; அவள் உடனே சங்கடப்பட்டுத் தன் கையால் அதைத் துரத்தினாள் ; அப்போது அவ் வண்டு அக் கரத்

தைக் காந்தள் மலரென்று நினைந்து அதில் மொய்த்தது. அவ்வாறாகவே அவள் ஒன்றும் செய்ய வியலாமல் மயங்கி முகம் வியர்த்தாள். இவ் விநோதத்தை நளன் தமயந்திக்குக் காட்டினான் என்க. வேர்த்தாள், கொய்வாள் – வினையாலணையும் பெயர்கள். படிவண்டு – வினைத்தொகை. வேந்து – உயர்திணைப் பொருளில் வந்த அஃறிணைச்சொல்.

60. புல்லும் வரிவண்டை.........

இ – ள் : செம்மலரின் தேனே – சிவந்த மலரிலுள்ள தேன்போன்ற இனிமை பொருந்திய தமயந்தியே, புல்லும்– தன் துணையோடு சேர்ந்திருக்கிற, வரி - இரேகைகளையுடைய, வண்டை – வண்டினை, கண்டு—, புனம் - புனங்களிலுள்ள, மயில்போல் – மயிலைப்போல, செல்லும் - ஆடி அசைந்து சென்ற, மடந்தை – பெண்ணொருத்தி, சிலம்பு அவித்து – தன்னுடைய பாதச் சிலம்பின் ஒலியை அடக்கிக்கொண்டு, மெல்லப்போய் – மிருதுவாகச் சென்று, அம் மலரைக் கொய்யாது – அவ் வண்டுகள் சேர்ந்திருத்தற்கிடமான அம் மலரைப் பறிக்காமல், அரும் தளிரை – மற்றொரு பக்கத்திலிருந்த அருமையான தளிர்களை, கொய்வாளை - கொய்பவளை, தெளி – நீ பார்த்துத் தெரிந்துகொள்வாயாக : எ – று.

மலர் கொய்யச் சென்ற ஒருத்தி, தான் விரும்பிய மலரில் வண்டு துணையுடன் கூடியிருக்கக் கண்டு, அக் கூட்டத்தைக் கலைத்தல் தோஷமென்றுகருதிச் சந்தடிசெய்யாமற் போய் அம் மலரைப் பறிக்காமல் பக்கத்திலிருந்த தளிரைப் பறித்தாள். அதனை நளன் தமயந்திக்குக் காட்டினனென்க. புனமயில்போல் சென்றவள் சிலம்பவித்துச் சென்றாள், வண்டின் சேர்க்கையைப் பிரிக்க மனமின்றி. 'கொய்யாது' எதிர்மறை வினையெச்சம். 'கொய்வாள்' – வினையாலணையும் பெயர்.

61. கொய்த மலரை.........

இ – ள் : கொய்த மலரை – ஆடவனொருவன் தான் பறித்த பூவை, கொடுங் கையினால் – உட்புறம் வளைந்த கையினாலே, அணைத்து – சேர்த்துக்கொண்டு வந்து, மொய் குழல் – (தன் தலைவியது) நெருங்கிய கூந்தல்முடியில், சூட்டுவான் – சூட்டும்பொருட்டு, முன் வந்து – அவளுக் கெதிரில்

வந்து, பாவை இடைக்கு – அப்பெண்ணினுடைய இடைக்கு, ஆதாரம் இல்லாது – ஆதரவு ஒன்றுமில்லாதிருப்பதை, அறிந்து – உணர்ந்து, தையலாள் – அப் பெண்ணினுடைய, பாத அரவிந்தத்தே – தாமரை மலரையொத்த பாதங்களிடையே, சூட்டினன் – சேர்த்தான்; எ – று.

ஒருவன் மலர் கொய்து தன் நாயகியின் கூந்தலிற் சூட்ட முன்னுற் சென்றான். அப்போது அவளுடைய தனங்களின் பாரமும் கூந்தலின் சுமையும் இத்தன்மைய என்பது அவன் புத்தியிற்பட்டது. படவே, அவன் இவைகளின் பாரத்தைத் தாங்கமாட்டாமற் சோர்வடையும் இடை இன்னும் இம் மலர்களைச் சூட்டினால் பாரம் தாங்கமாட்டாது என் றிரக்கங்கொண்டு, அம் மலர்களைக் கூந்தலிற் சூட்டாது, அவளது பாதங்களிற் சூட்டினனென்க. கொய்த – பெயரெச்சம். கொடுங்கை – வளைந்த கை. சூட்டுவான் – வினையெச்சம். பாவை – உவமஆகுபெயர்.

**62.** கொய்த குவளை .........

இ – ள்: (குவளை மலரைக் கிழித்து நெற்றியிற் சேர்த்த ஒரு பெண்ணை நளன் தமயந்திக்குக் காட்டி) கொய்த – தன்னாற் பறிக்கப்பட்ட, குவளை – நீலோற்பல மலரை, கிழித்து – சிறியதாகக் கிழித்தெடுத்து, குறு நுதல் மேல் – சிறிய நெற்றியின் மேல், எய்த – சேர்ந்திருக்கும்படி, தனி – ஒப்பற்ற விதமாக, வைத்த —, ஏந்திழையாள் – ஆபரணங்களை யுடையவளான அப் பெண், வையத்தார் – உலகத்திலுள்ளவர்கள், உண்ணு – உட்கொள்ளமுடியாத, கடு விடத்தை – கடுமையான விஷத்தை, உண்ட – முற்காலத்திலுண்ட, ஒரு – ஒப்பற்ற, மூன்று கண்ணனை – மூன்று கண்ணையுடைய சிவபெருமானை, போன்றனள் – நிகர்த்தனள், காண் – நீ பார்ப்பாயாக (என்றான்); எ – று.

நீரில் விளையாடிய ஒரு பெண் கருங்குவளை மலரைக் கிழித்து நெற்றியில் ஒட்டிவைத்தாள். அஃதொரு கண்ணைப் போன்றிருந்தது. ஆகவே அவள் நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமானைப்போன்று விளங்கினளென்க. ஏந்திழை – அன்மொழித்தொகை. உண்ணு – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். போன்றனள் – 'போல்' என்னும் இடைச் சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலமுற்று.

63. கொழுநன் கொழுந்தாரை.........

இ – ள் : கொழுநன் – தன் நாயகன், கொழும் – கொழுமையான, தாரை நீர் – ஒழுங்காகப் பாய்கின்ற துருத்தி நீரை, வீச – (தன்மேலே) சிதற, கூசி – அதனாலே கூச்சமுற்று, கெழுமிய – தன்னோடுகூடிய, அக் கோமகற்கு – அந்த மேன்மையான புருஷனிடத்தில், தான் நினைத்த – தான் எண்ணிய, குற்றங்கள் அத்தனையும் – குற்றங்கள் எல்லாவற்றையும், பூ மகட்கு – தாமரை மலரில் வாசஞ் செய்பவளாகிய இலக்குமிக்கு, சொல்லுவாள்போல் – கூறுகின்றவளைப்போல, செழு முகத்தை – தன்னுடைய செழித்த முகத்தை, தாமரைக்கே – அந்த இலக்குமி குடியிருக்குந் தாமரை மலரிடத்தே, சேர்த்தாள் – பொருந்தச் செய்தாள் ; எ – று.

நீர் விளையாடுங் காலத்தில் ஸ்திரீகளும் புருஷர்களும் துருத்தியில் வாசனை நீரை நிரப்பி ஒருவர்மீ தொருவர் வீசி விளையாடுவது வழக்கம். அப்படி விளையாடும் காலத்தில் தன் புருஷன் முகத்தில் வீசிய நீரைத் தாங்கமாட்டாது ஒரு பெண் ஒதுங்கித் தாமரை மலரின் ஓரத்தில் தன் முகத்தைச் சாய்த்தாள். அது, தன் புருஷனிடத்தில் தான் கண்ட குறைகளைத் தாமரை மலரிலுள்ள இலக்குமிதேவிக்குக் கூறுவது போன்றிருந்த தென்பதாம். தாரை - நீரொழுக்கு. தாமரைக்கு, கோமகற்கு என்பன உருபுமயக்கங்கள்.

64. பொய்தற் கமலத்தின்.........

இ – ள் : (இரண்டு தாமரை மலர்களைக் காதுகளிற் சூடிய ஒருத்தியைக் காட்டி) பொய்தல் - விளையாட்டிலே, கமலத்தின் போது இரண்டை - இரண்டு தாமரைப் பூக்களை, காது இரண்டில் – இரண்டு செவிகளில், பெய்து – அணிந்து கொண்டு, முகம் மூன்று – மூன்று முகங்களை, பெற்றாள் போல் – அடைந்தவளைப்போல, எய்த – நம்மை அண்மி, வருவாளை – வருகின்ற இந்தப் பெண்ணை, பார் – பார்க்கக் கடவாய், என்றான் – என்று சொன்னான். (யாரெனின்) மாற்றாரை – பகைவர்களை, வென்று – (வாள் வல்லமையினாலே) வெற்றிகொண்டு, செருவாளை – (அங்ஙனம் வென்ற) போருக்குரிய வாளாயுதத்தை, பார்த்து —, உவக்கும் – சந்தோஷிக்கின்ற, சேய் – இராசகுமாரனாகிய அந் நளன் ; எ - று.

ஒரு பெண் விளையாட்டாக இரண்டு தாமரை மலர்களைப் பறித்து இரண்டு செவிகளிலுந் தரித்துக்கொள்ள, அவை அவளுடைய முகத்தின் இரு மருங்கும் வேறு இரண்டு முகங்கள்போன்று விளங்கின. அதனால் அவள் மூன்று முகங்களைப் பெற்றாள்போன்று விளங்கினாளென்க.

65. சோர்புனலின் மூழ்கி.........

இ - ள்: (புனலில் மூழ்கி எழுந்து, நெற்றியை மறைத்த கூந்தலைக் கையாலொதுக்கிக்கொண்டு வந்த பெண்ணொருத்தியை நளன் தமயந்திக்குக் காட்டி) சோர் புனலில் - ஓடுகின்ற தண்ணீரில், மூழ்கி - குளித்து, எழுவாள் - எழுந்த இப் பெண், சுடர் - பிரகாசம் பொருந்திய, நுதல் மேல் - நெற்றியின் மேல் (படிந்திருந்த), வார் - நீண்ட, குழலை - கூந்தலை, நீக்கி - கையால் ஒதுக்கிக்கொண்டு, வரும் தோற்றம் - வருகின்ற தோற்றமானது, விரை கொண்டு - விரும்புதலுற்று, எழுந்த - உதித்த, பிறை - இளஞ் சந்திரனானது, மேகத்திடை - மேகத்தின் நடுவில், புரைகின்றது - பொருந்துகின்றதாகிய, பொற்பு எனலாம்-அழகு என்று சொல்லலாம், பாராய் - இதனை நீ பார்ப்பாயாக ; எ - று.

ஒரு பெண் நீரில் மூழ்கி எழுந்தபோது கூந்தல் நீரொழுக்கால் முன்பக்கமாகப் படிந்து முகத்தை மறைத்தது. அதனால் அவள் நெற்றி தெரியும்படி சிறிது கூந்தலை ஒதுக்கினாள். அப்போது அக் கூந்தலுக்கு நடுவில் நெற்றியின் சிறிது பாகந் தெரிந்தது. அத் தோற்றம் பிறைச்சந்திரன் மேகத்திலிருந்து வெளிப்படுவது போன்றிருந்த தென்பதாம். சோர்தல் - பாய்தல்; எழுவாள் - வினையாலணையும் பெயர்; விரைதல் - வேண்டுதல்; இங்கே விரும்புதற் பொருளில் வந்தது. புரைதல் - ஒத்தல்.

66. செழுநீல நோக்கெறிப்ப.........

இ - ள்: செங்குவளை - செங்கழுநீர் மலரை, கொய்வாள் - பறிக்கச் சென்றவள், (தனக்கெதிரேயுள்ள அப்பூவின் மேல்) நோக்கு - தன்னுடைய கண்கள், செழுநீலம் -

செழித்த நீலநிறத்தை, எறிப்ப – வீச, (அவ்வொளிபட்டு அம்மலரும் நீல மலராகத் தோன்றியபடியால் அதனை) முழுநீலம் என்று – நிறைந்த நீலோற்பல மலரே என்று, அயிர்த்து – சந்தேகித்து, முன்னர் – தனக்கெதிரில் இருந்த, கழுநீரை – அந்தச் செங்குவளை மலரை, கொய்யாது – (இது கண்ணோடொக்கும் கருங்குவளை என்று கருதி அதனை) கொய்யாமல், போவாளை – போகின்ற அப்பெண்ணை, கோல் வளைக்கு – புள்ளி பொருந்திய வளையலை யணிந்த தமயந்திக்கு, வை ஆரும் – கூர்மை பொருந்திய, வேல் – வேலாயுதத்தைத் தரித்த, தடக்கை – விசாலமான கைகளை யுடைய, மன் – நளமகாராசன், காட்டினான்—; எ – று.

ஒரு பெண் செங்கழுநீர் மலரைப் பறிக்க நினைத்து அதனிடத்தே சென்றாள். அப்போது அவளுடைய கரு விழிகளின் ஒளி அம்மலரின்மீது பாய அம்மலர் கருங் குவளைபோல விளங்கிற்று. அதனால் அவள் அது கருங் குவளையென்று பறியாது சென்றாள் என்பதாம். நீலம் – குணவாகுபெயர்.

67. காவி பொருநெடுங்கட் காதலியுங்.........

இ – ள்: காவி பொரு – நீலோற்பலத்தை ஒத்த, நெடும் கண் – நீண்ட கண்களையுடைய, காதலியும் – நாயகி யாகிய தமயந்தியும், காதலனும் – நாயகனாகிய நளனும், (மேற் கூறியபடி விநோதங்களைப் பார்த்துக்கொண்டே போய்ப் பூக் கொய்து) வாவியும் – குளங்களிலும், ஆறும் – நதிகளிலும், குடைந்து – நீரை அசைத்து, ஆடி – மூழ்கி விளையாடி, (பின்பு) கழியாத – நீங்காத, தேவின் சிந்தை யுடன் – கடவுள் தியானத்தோடு, கங்கை நதி ஆடி – கங்கா வெள்ளத்தில் மூழ்கி, (அதனருகி லிருந்த வொரு சோலை யில்) உவந்து – மகிழ்ந்து, ஒழியாது – நீங்காமல், உறைந் தார் – தங்கினார்கள். எ – று.

தமயந்தியும் நளனும் மேற்கூறியபடி பல விநோதங் களையும் பார்த்துக்கொண்டே போய்ப் பூக்கொய்தல், நீர் விளையாடல் முதலியவற்றை யெல்லாம் செய்து இறுதியாகக் கங்கையை அடைந்து அதில் ஸ்நானம் செய்து அதனருகி

லுள்ள வொரு சோலையில் தங்கினார்களென்க. பொரு - உவமவுருபு. தே - தெய்வம், 'உ' சாரியை.

68. வேரி மழைதுளிக்கும்.........

இ - ள்: மூரி - வலிய, திரை - அலைகள், ஏற - உயர்ந்து செல்தலினால், மெல் கிடங்கில் - (அருகிலுள்ள) சிறிய அகழியில், சேல் ஏற - சேல் மீன்கள் செல்ல, (அதனைக் கண்டு அகழிகளிலுள்ள) வாளை - வாளைமீன்கள், கரை ஏறும் - கரையில் பாய்கின்ற, கங்கைக்கரை - கங்கை ஆற்றின் அக்கரையை, (நளன்) வேரி மழை - தேன் மாரியை, துளிக்கும் - சொரிகின்ற, மேகம் - மேகத்தைப் போன்ற, கருங்கூந்தல் - கரியகூந்தலையுடைய, காரிகையும் - அழகுள்ள தமயந்தியும், தானும் - தானுமாக, போய் - (அக் கங்கையைக் கடந்து) போய், கண் உற்றான் - கண்டான்; எ - று.

நளன் தமயந்தியுடனே கங்கையைத் தாண்டி அக்கரை போய், மாவிந்த நகரத்தின் அருகிற் சேர்ந்தா னென்க. "காரிகையுந் தானும் போய்க் கண்ணுற்றான்" என்பதில் ஆண்பாலும் பெண்பாலும் சேர்ந்துவந்து ஆணுக்குரிய சிறப்பினால் ஆண்பால் முடிபைக்கொண்டது; பால் வழுவமைதி. "தானும் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்" என்பதுபோல.

69. சூதக் கனியூறல்.........

இ - ள்: வை உற்ற - கூர்மை பொருந்திய, வேல் - வேலாயுதத்தைத் தாங்கிய, தானை - சேனையையுடைய, மன் - நளமகாராசன், சூதக்கனி - மாம்பழங்களின், ஊறல் - இரசத்தினை, ஏற்ற - ஏந்திய, சுருள் வாழை - சுருண்ட வாழையின் குருத்திலைகளை, கோது இல் - குற்றமில்லாத, நறவு ஏற்கும் - மதுவை ஏந்திக்கொண்டிருக்கிற, குப்பி என - குப்பிகளென்று, மாதரார் - பெண்கள், ஐயுற்று - சந்தேகங்கொண்டு, நோக்கும் - பார்க்கின்ற, அகன் பொழில் - விசாலமான சோலையில், சென்று எய்தினான் - (தமயந்தியுடனே) போய்ச் சேர்ந்தான்; எ - று.

நளன் மாவிந்த நகரத்திலுள்ள ஒரு விசாலமான சோலையிற் போய்ச் சேர்ந்தானென்க. ஊறல் - ஊறுவது (பழரசம்). ஏற்ற - பெயரெச்சம். கனியூறல் ஏற்றவாழை நறவேற்கும் குப்பியெனத் தோன்றுதலால் மாதரார் ஐயுற்று நோக்கினரென்க.

70. வான்றோய நீண்டுயர்ந்த..........

இ-ள் (சோலையில் தங்கிய நளன் தன் நகரத்தைத் தமயந்திக்குச் சுட்டிக் காட்டி) வான் - சிறந்த, தோன்றி - செங்காந்தள் மலர்கள், வில் - ஒளி பொருந்திய, விளக்கே பூக்கும் - விளக்கைப்போலப் பூத்திருக்கும், விதர்ப்ப நாடு - விதர்ப்ப தேசத்தை, ஆள் உடையான் - ஆளுகின்ற விமராசனது, நல் விளக்கே - குலத்தை விளக்க வந்த நல்ல விளக்கை ஒத்த பெண்ணே, வான்தோய - ஆகாயத்தை அளாவும்படி, நீண்டுயர்ந்த - நீட்சியாகி உயர்ந்திருக்கின்ற, மாடம் கொடி - மாளிகைகளிற் கட்டப்பட்டிருக்கும் கொடிச் சீலைகள், நுடங்க - தாழ்ந்து அசைந்தாட, தோன்றும் - காணப்படுகின்ற, இத் தடம்பதி - இந்த விசாலமான பதி, எங்கள் நகர் - எங்களுடைய மாவிந்த மென்னும் நகரம் (என்று கூறினான்); எ - று.

நளன் தமயந்தியுடன் சென்று மேற்கூறியபடி சோலையில் தங்கியவுடனே, பக்கத்திற் காணப்பட்ட மாவிந்த நகரத்தைத் தன் பதியென்று தமயந்திக்குக் காட்டினான் என்க. தான் - அசைகள், மற்று - அசை, தோன்றி - முதலாகுபெயர். விளக்கு - தமயந்திக்குவமையாகுபெயர். மாடங்களின் உயர்ச்சி மிகுதியால் கொடிகள் மேற்செல்ல வியலாது தாழ்ந்தன.

70a. பொருவரும் கங்கைநீர்.........

இ-ள் : பூசுரர் - பிராமணர்கள், பொரு அரு - ஒப்பில்லாத, கங்கை நீர் - கங்காசலத்தை, நிறைத்து - நிறைத்துக் கொண்டு, எரிமணி - பிரகாசம் பொருந்திய இரத்தினம் அழுத்திய, பொன் தசும்பு - பொன்னாற் செய்த பூரண கும்பத்தை, ஏந்தி - தாங்கி, முன்வர - எதிர்வர, விரை - வாசனை, கமழ் - வீசுகின்ற, செழு - செழுமையாகிய, தொடை - மாலையையணிந்த, விமன் மாதொடும் - தமயந்தியினுடனே, திருவளர் - இலக்குமி வாசஞ் செய்கின்ற,

கோயிலில் - அரண்மனையில், செல்வன் - நளமகாராசன், எய்தினன் - புக்கான்; எ - று.

நளமகாராசன் தமயந்தியினேடும் தன் அரண்மனையை அடைந்தான் என்க. பிராமணர் பூரண கும்பத்துடன் அவர்களை வரவேற்றனர்.

70b. நிழலுமிழ்க் துதிரங்காலும்.........

இ - ள்: நிழல் - பிரகாசத்தை, உமிழ்ந்து - சொரிந்து, உதிரம்காலும் - இரத்தத்தைக் கக்கும், வயிரம் வாள் - கூரிய வாளையுடைய, நிடதர்கோமான் - நளமகாராசன், எழு புவி - சப்த தீவுகளிலுமுள்ள, வேந்தர் யாரும் - அரசர் எல்லோரும், இறு திறை - இடுகின்ற கப்பங்களை, கொணர்ந்து - கொண்டுவந்து, எஞ்ஞான்றும் - எந்தநாளும், தொழுதனர் - வணங்கினவர்களாய், ஏத்தி - புகழ்ந்து, நிற்ப - நிற்க, தொடு - தோண்டிய, கடல் உடுத்த - சமுத்திரத்தால் சூழப்பட்ட, ஞாலம் முழுவதும் - உலகம் முழுவதிலும், ஒருகோல் ஓச்சி - ஒப்பற்ற செங்கோலைச் செலுத்தி, முறை வழாது - நீதி தப்பாது, அளித்தான் - காத்து வந்தான்; எ - று

நளமகாராசன் இனிதாகச் செங்கோல் செலுத்தினனென்க. தொழுதனர் - முற்றெச்சம்: அன்று, ஏ - அசைகள். உமிழ்ந்து. காலும் வாள் என்ப. காலும் - செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சம்.

71. புன்னை நறுமலரின்.........

இ - ள்: புன்னை நறு மலரின் - புன்னையினது வாசனை மிகுந்த பூக்களினுடைய, பூந்தாது இடை - அழகிய மகரந்தங்களின் நடுவில், ஒதுங்கும் - தங்குகின்ற, கன்னி - கன்றையீனாத கன்னியான, இளமேதி - இளமையான எருமைகளின், கால் குளம்பு - பாதங்களின் குளம்புகள், (அம் மகரந்தங்கள் படிவதினாலே) பொன் உரைத்த - பொன் உரைக்கப்பட்ட, கல் - உரைகல்லை, ஏய்க்கும் - நிகர்த்திருக்கின்ற, நாடன் - நாட்டை யுடையவனாகிய புட்கரன், கொல் - (எதிர்த்தாரைக்) கொல்லுகின்ற, ஏற்றின்மேல் - எருதின்மேல், ஏறிக்கொண்டு - ஆரோகணித்துக்கொண்டு, கவறு ஆட - (நளனோடு) சொக்கட்டான் ஆடுதற்கு, போயினன் - புறப்பட்டான்; எ - று.

புன்னை மரக்கா நிறைந்த நாட்டையுடைய புட்கரன், நளனோடு சூதாடுவதற்கு, எருதின்மே லேறிக்கொண்டு புறப்பட்டான் என்க. கன்னி - ஈனாத எருமை.

**72.** வெங்கட் சினவிடையின்.........

இ - ள்: (புட்கரன்) வெம் கண் - வெவ்விய கண்களை யும், சினம் - கோபத்தையுமுடைய, விடையின்மேலேறி - அந்த இடபத்தின் மேலே ஏறிக்கொண்டு, கங்கை - கங்கா நதியின், திரை நீர் - அலைகளோடு கூடிய நீர், கால் ஏறி - காற்றினால் எற்றுண்டு பாய்ந்து, கரை ஏறி - இரு கரை யிலும் ஏறி, செம் கதிர் - சிவந்த ஒளி வீசுகின்ற, பைம் பொன் - பசும் பொன், ஒழிய - கரையிலே தங்கிவிட, போதும் - நீரானது திரும்பிச் செல்கின்ற, புறம் - பக்கங் களில், பணை சூழ் - மருத நிலம் சூழ்ந்த, நல் நாடு - நல்ல தேசமானது, பின் ஒழிய - தனக்குப் பின்னே தங்கியிருக் கும்படி, (அதாவது நகரம் பின்புறமாகத் தான் முன்னே) பெயர்ந்து - அதைவிட்டுத் தாண்டி, போந்தான் - சென் ருன்; எ - று.

புட்கரன் அந்த எருதின்மேலேறித் தன் நாடு பின் னாக, அதைவிட்டு நீங்கிச் சென்ருன் என்க. மேலேறிப் போந்தான் என்க. கங்கைத் திரைநீர் காலேறிக் கரை யேறிப் போதும் நாடு என இயைக்க.

**73.** அடற்கதிர்வேன் மன்னன்.........

இ - ள்: அடல் - பகைவரைக் கொல்லுகின்ற, கதிர் - பிரகாசம் பொருந்திய, வேல் - வேலாயுதத்தைத் தாங்கிய, மன்னன் - அரசனாகிய நளன், அவன் - அந்தப் புட்கர னுடைய, ஏற்றின் முன் போய் - எருதின் எதிரிற் சென்று, (அவனை நோக்கி) எடுத்த கொடி - நீ உயர்த்திப் பிடித்த கொடியானது, என்ன கொடி - எக்காரணத்தால் ஏற் பட்ட கொடி, என்ன - என்று வினவ, வெம் கலியால் - கொடிய கலியின் தூண்டுதலால், அங்கு - அவ்விடத்தில், அவன் மேல் செல்லும் - அந்த நளனிடம் சூதாடச் செல் கின்ற, கொடியோன் - தீயோனாகிய புட்கரன், தெரிந்து - (நளன் கருத்தை) உணர்ந்து, மிடல் - வலிய, சூது -

சூதாட்டத்தில், வெல்லும் – பிறரை வெல்லுகின்ற, கொடி என்றான் – கொடி இதுவாகும் என்று கூறினான்; எ – று.

நளன் புட்கரன் எதிரே சென்று நீ உயர்த்திய கொடி என்ன கொடி என்று வினவ, அவன் சூதாட்டத்திற் பிறரை வெல்லுங் கொடி யிது என்றான் என்க. அடல் – தொழிற்பெயர். அவன் ஏறு – 6-ம் வேற்றுமைத்தொகை.

**74.** என்றேம் இதுவாயின்..........

இ – ள்: (புட்கரன் அவ்வாறு சொன்னவுடனே) வான் தோய் – ஆகாயத்தைத் தொடுமாறுயர்ந்த, மடல் – மடல்களையுடைய, தெங்கின் – தென்னைகளினின்று வடியும், வான் – சிறந்த, தேறல் – மதுவை, வாளை – வாளைமீன், தேக்கி – குடித்து வயிற்றில் நிரப்பி, மீது ஆடி – வெறி மிகுதியால் மேலே குதித்து ஆடி, வயல் வீழ்ந்து – மீண்டும் வயலிலே வீழ்ந்து, உழக்கும் – சேற்றைக் கலக்குகின்ற, நல் நாடன் – நல்ல நாட்டையுடையவனாகிய நளன், துணிந்து – தானும் சூதாடுதற்கு உறுதிகொண்டு, இது மெய்ம்மையே ஆயின் – இஃதுண்மையா யிருக்குமானால், என்றேம் – (நாம் இச் சூது விளையாட்டைச் செய்வதற்கு) இசைந்தோம், (ஆதலின்) எம்மோடு – எம்முடனே, சூதாட – நீ கவருடுவாயாக, என்றான் – என்று கூறினான்; எ – று.

நளன் புட்கரனைச் சூதாடவரும்படி அழைத்தானென்க. சூதாட – அகரவீற்று வியங்கோள்முற்று.

"வான்தோய்...... நன் நாடன்" என நிடதநாட்டின் வளப்பத்தை விளக்கினார். மடல்+தெங்கு=மடற்றெங்கு. 2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை.

**75.** காதல் கவருடல்.........

இ – ள்: (மந்திரிமார் நளனை நோக்கி) போதில் – தாமரை மலரில், சினை ஆமை – கருக்கொண்ட ஆமைகள், வைகும் – தங்கியிருக்கின்ற, திரு நாடா – அழகிய நிடத நாட்டை யுடையவனே, காதல் – பெண்ணாசை, கவறு ஆடுதல் – சூதாடுதல், கள் உண்டல் – மதுவைப் பருகுதல், பொய்மொழிதல் – பொய்கூறுதல், ஈதல் மறுத்தல் – (பிறர்) கொடுத்தலைத் தடுத்தல், (ஆகிய) இவை – இக் காரியங்கள்,

செம்மை – நீதியை, நினையாமை - கருதாமையை, பூண்டார் - தமக்குரிய குணமாகக் கொண்டவர்களுடைய, நெறி - ஒழுக்கமாம்; எ - று.

காதல் கவருடல் முதலியன, நீதியைக் கைவிட்டவர்களுடைய ஒழுக்கமாம் என்று மந்திரிமார் கூறினரென்க. பூண்டார் - வினையாலணையும் பெயர். வைகும் - செய்யுமென் எச்சம். காதல், கவருடல் முதலியன தொழிற்பெயர்கள். நினையாமை - எதிர்மறைத் தொழிற்பெயர்.

76. *அறத்தைவேர் கல்லும்........*

இ - ள்: (சூதானது) அறத்தை – தருமத்தை, வேர் கல்லும் – வேரோடு பெயர்க்கும், அரு நரகில் – சேர்தற்கருமையான நரகத்தில், சேர்க்கும் – சேர்த்துவிடும், திறத்தையே கொண்டு – வலிமையையே கொண்டு, அருளை – கிருபையை, தேய்க்கும் - நாசப்படுத்திவிடும், மறத்தை – கோபத்தை, பூண்டு - பொருந்தி, விரோதம் - பகைமையை, செய்யும் – உண்டாக்கிவிடும், (இத்தகைய) பொய்ச்சூதை – பொய் நிறைந்த சூதாட்டத்தை, மிக்கோர்கள் – பெரியோர்கள், தெரிந்து – அறிந்திருந்தும், தீண்டுவரோ – தொடுவார்களோ? (தொடமாட்டார்கள்), என்றார் – என்று சொன்னார்கள்; எ – று.

சூதானது பல தீமைகளைச் செய்யுமாதலின் பெரியோர்கள் அதனைத் தீண்டாரென்க. கல்லும், சேர்க்கும் முதலியன செய்யுமென் முற்றுக்கள்.

77. *உருவழிக்கும்......*

இ - ள்: சூது – சூதாட்டமானது, உரு அழிக்கும் – மனிதரின் அழகைக் கெடுக்கும், உண்மை – சத்தியத்தின், உயர்வு - மேம்பாட்டை, அழிக்கும் – போக்கிவிடும், வண்மை – ஈகையாகிய, திரு – செல்வத்தை, அழிக்கும் – கெடுக்கும், மானம் - கௌரவத்தை, சிதைக்கும் - அழிக்கும், மருவும் – கூடுகின்ற, ஒருவரோடு – ஒருவரிடத்தே, (ஏற்படும்) அன்பு – அன்பை, அழிக்கும் – கெடுத்துவிடும், (இதனால் வருங் கேடு) ஒன்று அல்ல – ஒன்று மாத்திரமன்று, (இவ்வாறு பல உண்டாகும்; ஆதலின்) தக்கோர் – மேலோர்கள், புரிந்து – விரும்பி, பொருவரோ – (இத்தகைய

சூதாட்டத்தை) மேற்கொள்வார்களோ? (மேற்கொள்ளார்); எ – று. பொருவரோ – 'ஓ' எதிர்மறை.

இதுவும் சூதாட்டத்தினது தீமையையே கூறிற்று.

**78.** ஆயம் பிடித்தாரும்.........

இ – ள்: ஆயம் – (சூதாடுகருவியாகிய) பாய்ச்சிகையை, பிடித்தாரும் – (சூது விளையாடும் பொருட்டுக் கையில்) பிடித்தவர்களும், அல்லல் – துன்பத்தையுடைய, பொது மகளிர் – தாசிகளுடைய, நேசம் – உறவை, பிடித்தாரும் – பற்றினவர்களும், நெஞ்சிடை – மனதில், மாயம் – மயக்கத்தை, பிடித்தாரின் – கொண்டவர்களினின்றும், வேறு அல்லர் – வேருகமாட்டார்கள், என்று —, வடித்தார் – (நன்மை தீமைகளை ஆராய்ந்து தீமையை விலக்கி நன்மையைத்) தேர்ந்தெடுத்த மேலோர்களுடைய, இன் - இனிய, நூலோர் – சாஸ்திரங்களைக் கற்றவர்களின், வழக்கு – முடிபு, உரைப்பதன்றே - சொல்லுகிறதல்லவா? (ஆதலின் சூது கூடாது); எ – று.

இதுவும் சூதாட்டத்தினது தீமையையே கூறிற்று. ஆயம் – சூதாடு கருவி. அன்றே – வினுப்பொருளைத் தரும் ஒருவகை இடைச்சொல். பிடித்தாரின் என்ற இடத்து 'இன்' 5–ம் வேற்றுமை நீக்கப்பொருள்.

**79.** தீது வருக.........

இ - ள்: (மந்திரி முதலியோர் சொல்லக் கேட்டு) வரால் – வரால் மீன்கள், ஏற – தம்மீது பாய்வதினுலே, மேதி – எருமைகள், (பயந்தெழுந்து) கலக்கு - கலக்குகின்ற, அலை – அலைகளையுடைய, நீர் – நீர்வளம் மிகுந்த, நாடன் – நிடதநாட்டை யுடையவனுகிய நளமகாராசன், கனன்று – (அவர்களைக்) கோபித்து, தீது வருக - (சூதினுல்) தீமையே வரினும் வருக, (அல்லது) நலம் வருக – நன்மையே வரினும் வருக, (என்ன வந்தாலுஞ் சம்மதமே) சிந்தையால் – மனதினுல், சூது – சூதில், பொர – (அவனுடன்) எதிர்ப்பதற்கு, இசைந்து – (நாம்) சம்மதித்து, சொல்லினேம் – (சூதாட வருவதாக) உரைத்தோம், (ஆதலின் நாம் அந்த வார்த்தையினின்றும் பிசகமாட்டோம்; இனி) நீர் –

நீங்கள், யாதும் – சிறிதும், விலக்கலிர் – என்னைத் தடுக்காதிர்கள், என்றான் – என்று கூறினான்; எ – று.

நளன் மந்திரிமாரை நோக்கித் தீமை வந்தாலும் சரி, நன்மை வந்தாலும் சரி சூதாடுவதே எனது விருப்பம்; நீங்கள் தடுக்க வேண்டாம் என்றானென்க. சொல்லினேம் – தன்மைப் பன்மை வினைமுற்று. விலக்கலிர் – எதிர்மறை ஏவற் பன்மை வினைமுற்று.

80. நிறையில் கவறாடல்.........

இ – ள்: (புட்கரன் நளனை நோக்கி) திறையில் – விலைமதிக்க முடியாத, கதிர் – பிரகாசம் பொருந்திய, முத்தம் – முத்துக்களை, சிந்தும் – சிதறுகின்ற, துறையில் – நீர்த் துறையிலே, மள்ளர் – உழவர்கள், கரும்பு - கரும்பை, ஒடியா – ஒடித்து, கடா – எருமைக் கடாக்களை, அடிக்கும் – அடித்து ஓட்டுகின்ற, நாடா – நாட்டையுடைய நளமகாராசனே!, நிறை இல் – ஒப்புயர்வு இல்லாத, கவறு ஆடல் – சூதாடுதலை, நீ நினைந்தாயாகில் - நீ எண்ணினையாகின், இப்போது – இத்தருணத்தில், பொரும்படி – சூதாட்டத்தில் எதிர்க்கும்படியான பணயம், யாது என்றான் – எது என்று வினவினான்; எ – று.

புட்கரன் நளனைப் பார்த்துச் சூதாட்டத்திற்குப் பந்தயம் யாது என்று கேட்டானென்க. ஒடியா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். படி என்பது விதத்திற்குரிய பொருளின்மேல் நின்றது; ஆகுபெயர். படி – விதம்.

81. விட்டொளிர்வில் வீசி.........

இ – ள்: (அவ்வாறு கேட்டவுடனே நளன் புட்கரனை நோக்கி) விட்டு - விட்டுவிட்டு, ஒளிர் – பிரகாசிக்கின்ற, வில் – ஒளியை, வீசி – பரப்பி, விளங்கும் - விளங்குகின்ற, மணி – இரத்தினங்களாலாகிய, பூண் ஆரம் - ஆபரணமாகிய மாலையை, ஒட்டினேன் – பந்தயமாகச் சேர்த்தேன், உன் பணயம் - உன்னுடைய பந்தயத்தை, ஓது – நீ சொல்வாயாக, என்ன – என்று கேட்க, மட்டு அவிழ் – தேன் சொரிகின்ற, தார் - மாலையையும், மல் ஏற்ற - மல்யுத்த வன்மையையும்

பொருந்திய, தோளானும் – தோள்களையுடைய புட்கரனும், தன் – தன்னுடைய, கொல் ஏற்றை - பகைவரைக் கொல்லுந் திறமுள்ள எருதை, வான் – சிறந்த, பணயம் ஆக-பந்தயப் பொருளாக, குறித்து – குறிப்பிட்டு, வைத்தான் – முன்னே சேர்த்தான்; எ – று.

நளன் இரத்தினமாலையைப் பந்தயமாக வைக்க, புட்கரன் தன்னுடைய எருதைப் பந்தயமாக வைத்தானென்க. விட்டு – வினையெச்சம். ஒளிர் – காலங்கரந்த பெயரெச்சம். வீசி – வினையெச்சம். விளங்கும் – பெயரெச்சம். அவிழ்தார் – வினைத்தொகை. குறித்தல் – சுட்டிக் காட்டுதல்.

82. வைத்த மணியாரம்.........

இ – ள்: (புட்கரன் நளனைப் பார்த்து) வைத்த – நீ பந்தயமாக வைத்த, மணி ஆரம் – இரத்தின மாலையை, வென்றேன் – இதோ நான் வெற்றிகொண்டேன், (ஆதலின், இனி) மறு பலகைக்கு – பலகையிலாடப்படும் அடுத்த ஆட்டத்திற்கு, ஒத்த – பொருத்தமான, பணயம் - பந்தயப் பொருளை, உரை - சொல்வாயாக, என்ன - என்று கூற, அவ் வேந்து - அந் நளமகாராசன், வைத்த நிதி – பின் பந்தயமாக வைத்த பொருள், நூறாயிரத்து இரட்டி - இரண்டு நூறாயிரத்தையும், நூறு நூறாயிரமும் - கோடியையும், வேறாக - தன்னை விட்டுப் பிரிந்து வேறாகும்படி, தோற்றான் – தோற்றுவிட்டான்; எ – று.

நளன் இரத்தின மாலையைத் தோற்றபின் மேலும் இரண்டு விதமான தொகைப் பொருளைப் பந்தயம் வைத்துத் தோற்றானென்க. நூறாயிரம் – இலட்சம். பலகை – சொக்கட்டானுடும் கோடுகள் எழுதப்பட்ட பலகை. (பலகை இடவாகுபெயர்.)

83. பல்லாயிரம் பரியும்.........

இ – ள்: (பின்னும் நளன்) பல் ஆயிரம் – பல ஆயிரமாகிய, பரியும் - குதிரைகளையும், பத்து நூறாயிரம் - பத்து இலட்சம், சொல் ஆர் - புகழ் பொருந்திய; மணித்தேரும், அழகிய இரதங்களையும், தோற்றதன்பின் - தோற்றபிறகு, வில் - வில்லைக் கரத்திற் பிடித்தவர்களாகிய, ஆட்கள் - காலாட்களையும், முன் தோற்று – முன்னே தோற்று, வானில் – ஆகாயத்திற் சஞ்சரிக்கின்ற, முகில் - மேகங்கள்,

தோற்கும் – (நிறத்தால்) தோல்வியடையும்படியான, (கரிய நிறத்தையுடைய) மால் – பெரிய, யானை – ஆண் யானைகளை, பின்தோற்று – அதற்குப்பின் தோற்றுவிட்டு, (அதன் மேல்) பிடி – பெண் யானைகளை, தோற்ருன் – பந்தயமாக வைத்துத் தோற்ருன் ; எ – று.

நளன் பல்லாயிரக்கணக்கான குதிரைகளையும், பத்து இலட்சம் இரதங்களையும், காலாட்களையும், ஆண் யானை பெண் யானைகளையும் தோற்ருனென்க. இதனால் நால் வகைச் சேனைகளையும் தோற்ருன் என்பது பெறப்படும். சொல் – வார்த்தை ; அஃதிங்குப் புகழ்மேல் நின்றது.

84. சாதுரங்கம் வென்றேன்.........

இ - ள் : (நளன் நால்வகைச் சேனைகளையும் தோற்ற பின் புட்கரன் அவனை நோக்கி) சாதுரங்கம் – நான்கு பகுப்புகளாகிய சேனைகளையும், வென்றேன் – நான் வெற்றி கொண்டேன், (இனி அடுத்த ஆட்டத்திற்கு) தரும் – கொடுக்கத்தக்க, பணயம் – பந்தயப்பொருள், ஏது என்ன – யாதென்று வினவ, மா – சிறந்த, துரங்கம் – குதிரைகளை, பூணும் – பூட்டிச் செலுத்தத்தக்க, மணி – இரத்தினங்கள் பதித்த, தேரான் – தேரையுடைய நளன், சூது அரங்கில் – சூதாடுகின்ற அரங்கில், பொருது – (மேலும் புட்கரனோடு சூதாட்டத்தில்) எதிர்த்து, (பந்தயமாக வைத்து) பாவையரை – பாவைபோன்ற பெண்களை, செவ்வழி – நெய்தல் நிலத்து இராகத்தையுடைய, யாழ் – வீணையிலுண்டாகின்ற, பண்ணின் – பாட்டை நிகர்த்த, மொழி – வார்த்தைகளையும், பின்னு குழல் – பின்னிவிடப்பட்டிருக்கும் கூந்தலையும் (உடைய), பூவையரை – நாகணவாய்ப் புள்போன்ற பெண்களை, தோற்ருன் – தோற்றுவிட்டான் ; எ - று.

நளன் இனிமையான குரலையுடைய அடிமைப் பெண்களைப் பந்தயமாக வைத்தாடித் தோற்ருனென்க. சதுரங்கம் – சாதுரங்கம் என முதல் நீண்டது. செவ்வழி – நெய்தனிலத்தினிராகம். பின்னுகுழல் – வினைத்தொகை. பண்ணின் - இன் உவமவுருபு.

**85.** *கற்பின் மகளிர்பால் நின்றும்.........*

இ - ள் : (நளன் எல்லாவற்றையும் தோற்றபின்பு) கற்பின் - பதிவிரதா தருமத்தையுடைய, மகளிர்பால் நின்றும் - தம் மனைவியரிடத்தினின்று நீங்கி, தமை - தங்களை, கவட்டின் - வஞ்சனையினுலே, விற்கும் - (பணங் கொடுப்பார்க்குப் பொய்யாக) விற்கின்ற, மகளிர்பால் - விலைமாதர்களிடத்தில், மீண்டாற்போல் - (அப் பதிவிரதைகளின் நாயகர்கள்) போய்ச் சேர்ந்தாற்போல, நிற்கும் - நிலைபெற்ற, நெறியானை - நல்லொழுக்க முடையவனை, மெய்ம்மைவாய் - சத்தியத்தினிடத்தே, நின்றானை - நிலைபெற்றிருந்தவனுகிய நளனை, நீங்கி - விட்டுப் பிரிந்து, திரு - இலக்குமியானவள்; சிறியானை - அற்பனுகிய புட்கரனை, சேர்ந்தாள் - அடைந்தாள்; எ - று.

நளன் தன்னிடமிருந்த பொருள்களையெல்லாம் தோற்றமையால், அவனிடமிருந்த செல்வமானது புட்கரனை அடைந்தது. அது, பதிவிரதையுடனே சேர்ந்திருந்த நாயகன் அவளை விட்டுப் பரத்தையிடம் சேர்ந்ததுபோல இருந்தது என்க. கவடு - கவர் - அதாவது இருபிரிவானது; அஃதிங்கே [அதைப்போல] ஒரு நிலையின்றிப் பல விகற்பமாம் செயலுக்கு வந்தது.

**86.** *மனைக்குரியா ரன்றே..........*

இ - ள் : (நளனுடைய செல்வம் முழுவதும் புட்கரனிடஞ் சேர்ந்தபின் அவன் நளனை அவமானப்படுத்தக் கருதி அவனை நோக்கி) சினைச் சங்கின் - கருக்கொண்ட சங்குகளின், வெண் தலையை - வெண்மையாகிய தலையை, தேறல் - (தன்னிடத்திலிருந்து வடியும்) தேனினுலே, நனைக்கும் - நனைக்கின்ற, பைந்தாள் குவளை - பசிய தாள்களையுடைய நீலோற்பல மலர்கள் பொருந்திய, பணை - வயல்களையுடைய, குண்டு - ஆழ்ந்த, நீர் - நீரையுடைய, நாடா - நிடத நாட்டுக் கதிபதியாகிய நளனே! மனைக்கு - வீட்டிற்கு, உரியர் அன்றே - உரியவராகிய மனைவியரல்லவா, வரும் துயரம் - அக் கணவனுக்கு வரக்கூடிய துன்பத்தை, தீர்ப்பார் - தீர்க்கத்தக்கவர், (ஆதலின்) இன்று - இப்பொழுது,

இவளை — இத் தமயந்தியை, பணயம் தா — பந்தயமாக வைத்து ஆடு ( என்று கூறினன் ); எ — று.

புட்கரன் நளனைப் பார்த்துத் தமயந்தியைப் பந்தயமாக வைக்கும்படி கேட்டானென்க. பணை — பண்ணை. தொகுத்தல் விகாரம். பைந்தாள் — பண்புத்தொகை. பசுமை + தாள் = பைந்தாள். இன்று — காலப்பெயர். கணவனுக்கு வருந் துன்பத்தை நீக்குபவர் மனைவியராதலின் உனது இப்பொழுதைய துயரையும் தமயந்தி நீக்கக்கூடும். ஆதலின் அவளைப் பணயம் வை என்று புட்கரன் கூறினன்.

87. இனிச்சூ தொழிந்தோம்.........

இ — ள் : (புட்கரன் இவ்வாறு கூறியவுடனே) நளன் — நளமகாராசன், கனி — பழங்களையுடைய, சூதம் — மாமரங்கள் நிறைந்த, வார் — நீண்ட, பொழிலின் கண்ணே — சோலையினிடத்தே, இனம் — கூட்டமாகிய, வண்டு — வண்டுகள், கிண்டி — குடைந்து கிளறி, பனிச்சு — அசைந்து, ஊத — ஊதுவதனல், பூ — புஷ்பங்களின், போது — (மலரும் பருவத்தையுடைய) அரும்புகளை; அவிழ்க்கும் — கட்டுவிட்டு மலரச் செய்கின்ற, புனல் — நீர்வளம்பொருந்திய, நாடன் — விதர்ப்ப நாட்டிற் கதிபனுகிய வீமராசனது, பொன் — பொன்னையொத்த, மகளே — குமாரத்தியே !, சூது — சூதாட்டத்தை, ஒழிந்தோம் — விட்டு நீங்கினேம், (ஆதலின்) இனி— இனிமேல், (நகரத்திலிருப்பது தகாது ஆதலின் வேறு எங்கேனும் சேர்வதற்கு) நாம் போதும் — நாம் செல்லுவோம், என்ருன் — என்று கூறினன் ; எ — று.

நளன் சூதாட்டொழிந்து நகரத்தை விட்டு வெளியேறத் துணிந்து தமயந்தியை அழைத்தானென்க. ஒழிந்தோம் — தன்மைப் பன்மை வினைமுற்று. பனித்து என்பது பனிச்சு எனப் போலியாய் வந்தது. போதும் — உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று.

88. மென்காற் சிறையன்னம்.........

இ — ள் : மெல் - மெல்லிய, கால் — பாதங்களையும், சிறை — சிறகுகளையும்(உடைய), அன்னம் —அன்னப் பறவையானது, வீற்றிருந்த-தான் தங்கியிருந்த, மென் மலரை—

மிருதுவாகிய தாமரைப்பூவை, புன் – அற்பமாகிய, காகம் – காகமானது கொள்ள – பற்றிக்கொள்ள, தான் – அவ் வன்னம்தான், போனல் போல் – (அதைவிட்டுச்) சென்றாற் போல, கொடியானுக்கு – தீயவனாகிய புட்கரனுக்கு, அப் பார் – (தன்னுடைய) அந்தப் பூமியாளுகையை, கொடுத்து – அளித்துவிட்டு, தன்கால் – தன்னுடைய பாதங்களிலே, பொடி ஆட – புழுதி படியும்படி, (நிலத்தில் நடந்து) தேவியொடும் – மனைவியாகிய தமயந்தியுடனே, போயினான் – நகரை விட்டு நீங்கி (புறப்பட்டு)ச் சென்றான்; எ – று.

ஒரு அன்னமானது தானிருந்த தாமரை மலரை, அற்பமாகிய ஒரு காகம் கைக்கொள்ள அதனைவிட்டுச் சென்றாற்போல, நளன் தன்னுடைய ஆளுகையைத் தாழ்ந்தவனாகிய புட்கரன் கொள்ளும்படி விட்டு மனைவியுடனே நகரத்தை விட்டு வெளியேறிப் புறப்பட்டானென்க. அன்னம் நளனுக்கும் காகம் புட்கரனுக்கும் தாமரை மலர் இராச்சியத்துக்கும் உவமை.

89. கடப்பா ரெவரே.........

இ – ள்: விதியின் வலி – நளமகாராசனுடைய தலைவிதியின் வலிமையானது, மன்னன் – அந் நளமகாராசன், வீமன் – வீமராசனது, மடம் - இளமை பொருந்திய, பாவை தன்னுடனே – பாவைபோன்ற தமயந்தியுடனே, வனத்தே – காட்டில், நடப்பான் செல – காலாலே தரையில் நடந்து செல்லுமாறு, பணித்து – அவனை ஏவி, மாயத்தால் – வஞ்சனையினால், சூழ்ந்தது அனைத்து – அவனைச் சுற்றிக்கொண்டதைப் போன்றிருந்தது, கடுவினையை – கடுமையான பழவினையாகிய (விதியை), கடப்பார் – தாண்டிச் செல்பவர், எவர் – யாவர்? (ஒருவருமில்லை); எ – று.

விதியைக் கடப்பவ ரெவருமில்லை யாதலின், நளன் அவ் விதிப்படியே இவ்வித நிலைமையை அடைந்தான்; அவன் இப்படி நடக்கும்படி விதிவஞ்சனையால் அவனைச் சுற்றிக்கொண்டது போன்றிருந்த தென்க. கடுவினை – முற்பிறப்பிற் செய்த தீவினை. நடப்பான் வினையெச்சம். பாவை – உவமையாகுபெயர். சூழ்ந்தது – தொழிற்பெயர், (காலங்காட்டியது). கடப்பார் எவரே கடுவினையை எனக் கூறப்பட்டது "வேற்றுப்பொருள் வைப்பணி"யாம்.

90. ஆருயிரின் தாயே.........

இ - ள் : (நகர மக்கள் அவனை நோக்கி) தம் கண்ணின் - தங்களுடைய கண்களின், நீர் வார்த்து - நீரைச், சொரிந்து, கால் - நளமகாராசனுடைய பாதங்களை, கழுவாநின்று - அலம்பிக்கொண்டு (கண்ணீர் பாதங்களில் வடிய) நின்று, ஆர் உயிரின் - (எங்களுடைய) அரிய உயிர்களின், தாயே - தாயாயிருப்பவனே !, அறத்தின் - தருமத்தின் து, பெருந்தவமே - பெரிய தவத்தினு லுதித்தவனே, பேர் அருளின் - பெரிய இரக்கத்திற்கு, கண்ணே - இருப்பிடமானவனே !, பெருமானே - (எங்கள்) தலைவனே !, பார் இடத்தை - இந்தப் பூமியை, யார் காக்க - எவர் காக்கும்படி (விட்டு), நீ யாங்கு போவது - நீர் எங்கே செல்வது, என்றார் - என்று சொல்லி வருந்தினார்கள் ; எ - று.

நளன் நகரைவிட்டு வெளியேறிப் போவதைக் கண்ட நகரமக்கள் இவ்வாறு கூறி இரங்கினாரென்க. போவது - எதிர்காலம் காட்டிய தொழிற்பெயர். கழுவாநின்று நிகழ்கால வினையெச்சம்; கழுவு - பகுதி, ஆநின்று - இடைநிலை.

91. வேலை கரையிழந்தால்.........

இ - ள் : வேலை - சமுத்திரமானது, கரையிழந்தால் - எல்லையைத் தாண்டினாலும், வேதம் - வேதமானது, நெறி - சத்தியமார்க்கத்தினின்று, பிறழ்ந்தால் - பிசகினாலும், ஞாலம் முழுதும் - பூமி முழுவதும், நடு இழந்தால் - நடுவுநிலைமையைக் கைவிட்டாலும், செங்கோலவர் - செங்கோலாட்சி பூண்ட மன்னர்கள், சீலம் - நல்லொழுக்கத்தினின்றும், ஒழிவரோ - தவறுவார்களோ, செம்மை உரை - உண்மை வார்த்தைகளினின்றும், திறம்பா - வேறுபடாத, செய்கை - செய்கைகள், அழிவரோ - கெடப் பெறுவார்களோ, (ஒரு போதும் இவற்றைக் கைவிடமாட்டார்கள்) ; எ - று.

சமுத்திரம் கரைபுரண்டாலும், வேதம் சன்மார்க்கத்தை விட்டு நீங்கினாலும், உலகத்தவரெல்லோரும் நடுவுநிலைமையை இழந்துவிட்டாலும் செங்கோல் மன்னர் ஒழுக்கத்தையும் சத்தியத்தையும் கைவிடமாட்டார்கள் என்க.

92. வடியேறு கூரிலைவேல்.........

இ - ள்: வடி ஏறு - கூர்மை பொருந்திய, கூர் - நுனியையுடைய, இலை - வெற்றிலை வடிவமான, வேல் - வேலாயுதத்தையுடைய, மன்னு - அரசனே !, ஓ - ஐயோ !, உன் தன் - உன்னுடைய, அடியேங்கட்கு - அடியார்களாகிய எங்கட்கு, ஆதரவுதீர - (நின்மீதுள்ள) ஆசை பூர்த்தியடையும்படி, கொடி - கொடியதாகிய இந்த, நகரில் - பட்டணத்தில், இன்று இருந்து - இன்றைக்குத் தங்கி, நாளை - நாளைக்கு, எழுந்தருள்க - புறப்பட்டுச் செல்வாயாக, என்று —, வென்று - பகைவர்களை வென்று, இருந்த - இப்போது சும்மாவிருந்த, தோளான் - புயங்களையுடைய நளனது, தாள் வீழ்ந்து - பாதங்களில் வீழ்ந்து வணங்கி, உரைத்தார் - கூறினார்கள்; எ - று.

நகரமக்கள் நளனை நோக்கி, " மன்னு ! இன்றிருந்து நாளைக்குச் செல்வாயாக " என்று அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கிக் கூறினார்கள் என்க. ஓ - இரங்கற் பொருளில் வந்தது. அடியார் - பாதத்தைச் சார்ந்தவர்கள். அருள்க - வியங்கோள். நளன் தோள், முன்னே பகைவரை வென்று அரசாட்சியைப் பெற்று விளங்கிற்று; இப் பொழுது சூதாட்டத்தில் அரசிழந்து போனபடியால் அத் தோள் யுத்தஞ்செய்தற் கியலாமைபற்றி, " வென்றிருந்த தோளான் " என்றூ ராசிரியர்.

93. மன்றலிளங் கோதை.........

இ - ள்: மாநகர் வாய் - பெரிய நகரத்தினிடமாக, நின்று உருகுவார் - நின்று மனங் கலங்குகின்ற நகர மாந்தர்களுடைய, கண்ணின் நீர் நோக்கி - கண்களிலிருந்து வடியும் நீரைப் பார்த்தும், இளம் குதலை - இளமையான மழலைச் சொற்களையுடைய, வாயாள் - வாயையுடையவளாகிய தமயந்தியினது, வருத்தம் - வருத்தத்தை, தன் மனதில் வைத்து - தன்னுடைய மனதிலிருத்திச் சிந்தித்தும், மன்றல் - வாசனை பொருந்திய, இளங்கோதை - இளமையான கூந்தலையுடைய தமயந்தியினது, முகம் நோக்கி - முகத்தைப் பார்த்து, இன்று - இன்றைக்கு, இங்கு - இவ்விடத்திலே, இருத்துமோ - இருப்போமோ, என்றான் - என்று தமயந்தியை வினவினான்; எ - று.

நளன் நகரமாந்தரது வேண்டுகோளின்படி இன்றிங் கிருத்துமோ என்று, தமயந்தியை வினவினளென்க. இளங்கோதை – பண்புத்தொகை. உருகுவார் – வினையாலணையும் பெயர். இருத்தும் – உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று. வருத்தமோ என்பதிலுள்ள ஓகாரம் – அசை.

94. வண்டாடுக் தார்நளனை.........

இ – ள்: அரசு அறியா – அரசாட்சி முறையைத் தெரிந்துகொள்ளாத, வேந்தன் – மன்னனாகிய புட்கரன், முன்னே – முன்பு சூதாடுங் காலத்தில், முனிந்தாங்கு – நளனைக் கோபித்ததுபோல, அழன்று – இப்பொழுதும் கோபித்து, மாநகரில் – இந்தச் சிறந்த நகரில், வண்டு ஆடும் – வண்டுகள் தேனை உண்ணும் பொருட்டு ஆடுகின்ற, தார் – பூமாலையை யணிந்த, நளனை – நளமகாராசனை, கொண்டாடினார் தம்மை – உபசரித்தவர்களை, யாரேனும் – அவர்கள் எத்தகையராயிருந்தாலும், கொல் என்று – கொல்லக் கடவாயென்று, (ஒரு கொலையாளிக்குக் கட்டளையிட்டு அதனை எல்லோரும் தெரியும்படி) (முரசறைவோனை விளித்து) தண்டா – தடைப்படாத, முரசு – பேரிகையை, அறைவாய் – முழக்கக்கடவாய், என்றான் – என்று சொன்னான்; எ – று.

புட்கரன், நளனைக் கொண்டாடுபவர்கள் எவராயிருந் தாலுஞ்சரி அவர்களைக் கொல் என்று, கொலையாளிக்குத் தெரிவித்து, அதனை நகரமாந்தர் உணருமாறு பறையறை வித்தானென்க. ஆங்கு – அசை. தண்டா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

95. அறையும் பறையரவம்.........

இ – ள்: அறையும் – அடிக்கப்படுகின்ற, பறை அரவம் கேட்டு – முரசினது சத்தத்தைக் கேட்டு, அழிந்து நையும் – மனமழிந்து வருந்துகின்ற, பிறைநுதலாள் – பிறை போன்ற நெற்றியை யுடையவளாகிய தமயந்தியது, பேதமையை – அறியாமையை, நோக்கி – உணர்ந்து, முறுவலியா – புன்னகை செய்து, இந்நகர்க்கு – இந்த நகரத்திற்கு, (ஏற்பட்ட) ஈது – இத்துன்பமானது, என்பொருட்டா –

என் நிமித்தமாக, வந்தது - வந்து சேர்ந்தது, என உரைத்தான் - என்று சொன்னான்; எ - று.

நளன் பறையோசையைக் கேட்டு வருந்துந் தமயந்தியை நோக்கி, இஃது என்பொருட்டாக உண்டானது என்று கூறினனென்க. முறுவலியா - செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். நையும் என வரவேண்டியது நைந்து என நின்றது. நகர மாந்தரைக் கொல்ல எண்ணி அறையப்பட்டதன்று அம்முரசு. நளமகாராசனை விரைவில் அப்புறப்படுத்தவே அது அறையப்பட்டதாம் என்றவாறு.

96. தன்வாயின் மென்மொழியே.........

இ - ள்: முன் நாளில் - சூதாடுதற்கு முந்திய நாட்களில், பூமகளை - தாமரைப் பூவிலிருக்கின்ற இலக்குமியை, பாரினொடும் - பூமிதேவியுடனே, புல்லினான் - சேர்ந்திருந்தவனாகிய நளன், தன்மகனை - தன்னுடைய புத்திரனையும், கோமகளை - இராசகுமாரத்தியாகிய தன் புத்திரியையும், தேவியொடு - தன் மனைவியான தமயந்தியுடனே, கொண்டு - அழைத்துக்கொண்டு, தன் வாயில் - தன்னுடைய வாயிலே, மென்மொழியே - மிருதுவான வார்த்தைகளையே, தாங்கினான் - பொருந்தியவனாய், ஓங்கும் நகர் - உயர்ந்த அந்நகரத்தின், பொன் வாயில் - பொன்னாலியற்றப்பட்ட கோட்டை வாயிலானது, பின் ஆக - தனக்குப் பின்னே இருக்கும்படி, (வாயிலைக் கடந்து) போயினான் - அந் நகரத்தை விட்டு நீங்கிப் போயினான்; எ - று.

நளன் மனைவி மக்களுடன் நகரை விட்டு வெளியேறிப் போனானென்க. தாங்கினான் - முற்றெச்சம். பூமகளுக்கும் பார்மகளுக்கும் நாயகன் விஷ்ணு; அரசர்களை விஷ்ணுவாகக் கூறுவதும் ஒரு மரபு; அதுபற்றி நளனை, "பூமகளைப் பாரினொடும் புல்லினான்" என்றாராசிரியர். ஓங்கு நகர் - வினைத்தொகை. செல்வமும் அரசும் நளன்வசமிருந்தனவாதலின் 'பூமகளை.........புல்லினான்' என்றார் எனினுமாம். புல்லினான் - வினையாலணையும் பெயர்.

97. கொற்றவன்பாற் செல்வாரை.........

இ - ள்: புட்கரன் - புட்கரராசன், கொற்றவன் பால் - வெற்றி பொருந்தியவனாகிய நளமகாராசனிடத்தில்,

செல்வாரை – உபசாரம் புரியப் போகின்றவர்களை, கொல்வான் – கொலை செய்யுமாறு, முரசு அறைந்து – பேரிகையை நகரத்தில் முழக்குவித்து, வெற்றியொடு – சூதாட்டத்தில் அடைந்த வெற்றியுடனே, வீற்றிருப்ப – சிம்மாசனத்திற் பெருமையுடன் இறுமாந்திருக்க, (அச்சமயத்து அப்பட்டணம்) முற்றும் – முழுவதிலும், இழவுபடும் ஆபோல் – இழவுண்டானமை போல, இல்லங்கள் தோறும் – வீடுகள் ஒவ்வொன்றினும், குழவி - குழந்தைகளும், பால் – பாலை, கொண்டு – வாயிற் கொண்டு, உண்டில - உட்கொண்டில; எ – று.

நளன்பால் செல்பவர்களைக் கொல்லுமாறு முரசறைவித்துப் புட்கரன் வெற்றியுடன் சிம்மாசனத்தில் ஏறியிருக்க, நளன் சென்றபின்பு, அவன் பிரிந்த வருத்தத்தால் அந்நகரத்தில் குழந்தைகளும் பாலுண்ணுமலிருந்தனவென்க. கொல்வான் – வினையெச்சம்; வீறு – பெருமை; இழவு – தொழிற்பெயர்; சாக்காடு. குழவியும் எனற்பாலது செய்யுள் விகாரத்தால் குழவி என நின்றது. குழவியும் என்பதிலுள்ள 'உம்' உயர்வு சிறப்பு.

**98.** சந்தக்கழற் றாமரையும்.........

இ – ள்: சந்தம் – அழகு பொருந்திய, கழல் – வீரகன்னடையையணிந்த, தாமரையும் – (நளனது புத்திரனாகிய இந்திரசேனனது) தாமரை மலர்போன்ற பாதங்களும், சதங்கை – பாத கிண்கிணியை, அணி – அணிந்த, பைந்தளிரும் – பசுமையான தளிர்போன்ற நளனது மகளாகிய இந்திரசேனையின் பாதங்களும், நோவ – வருந்தியதினால், பதைத்து – அவர்கள் உடல் துடித்து, உருகி - நெஞ்சங்கலங்கி, கலுழ்ந்து – அழுது, எந்தாய் – எமது தந்தையே!, வடந்தோய் – வடக்கயிறு கழுத்திற் பொருந்திய, களிற்றாய் – யானையையுடையவரே!, வழியானதெல்லாம் – நாம் கடக்கவேண்டுவதாய வழி முழுவதையும், கடந்தோமோ – தாண்டி வந்து விட்டோமோ?, என்றார் – என்று வருத்தம் பொறுக்கமுடியாமல் வினவினார்கள்; எ – று.

நளன் செல்லும்போது வழியில் குழந்தைகள் அவனைப் பார்த்து, எந்தாய்! வழியானதெல்லாம் கடந்துவிட்டோமோ? என்று கேட்டனரென்க. கழல், ஆண்

குழந்தை பாதத்திற்கும், சதங்கை பெண் குழந்தை பாதத்திற்கும் வந்தன. தாமரை, தளிர் என்பன உவமஆகுபெயர்கள். பசுமை + தளிர் = பைந்தளிர் : களிறு – ஆண்யானை. இனி அவர்களால் நடக்கமுடியாமையால் இன்னும் நடக்க வேண்டுமோ என்னும் அச்சத்தால் 'கடந்தோமோ?' என்று வினவினர் என்க. கழல் + தாமரை = கழற்றாமரை.

99. தூயதன் மக்கள்.........

இ – ள் : (அங்ஙனம் அவர்கள் கூறியவுடனே) செம்மை – நன்மையையே, புரிவான் – செய்பவனாகிய நளமகாராசன், தூய - பரிசுத்தமுள்ள, தன் - தன்னுடைய, மக்கள் – அந்தப் பிள்ளைகளின், துயர் – துன்பத்தை, நோக்கி – பார்த்தும், சூழ்கின்ற – தன்னை வளைகின்ற, மாயவிதியின் - வஞ்சனையாகிய விதியினது, வலிநோக்கி – வல்லமையை எண்ணியும், (அவற்றாலேற்பட்ட) துயரால் – மன வியாகுலத்தினாலே, புலர்ந்து – நெஞ்சுலர்ந்து, யாதும் - (அச்சமயத்தில் செய்வது) எதுவும், தெரியாது - தோன்றாமல், சித்திரம்போல் - (எழுதப்பட்ட) சித்திரம் போல, நின்றிட்டான் – அசைவற்று நின்றான் ; எ – று.

மக்கள் கஷ்டத்தையும், அக்கஷ்டத்தை உண்டாக்கிய விதி வலியையும் நோக்கி நளன் துயரமுற்று ஒன்றுந் தோன்றாமல், சித்திரம்போல் அசைவற்று நின்றானென்க. நின்றிட்டான் என்பதில் இடு பகுதிப்பொருள் விகுதி. புரிவான் – வினையாலணையும் பெயர். யாதும் என்பதில் உம் முற்றும்மை.

100. காத லிருவரையுங் கொண்டு.........

இ – ள் : விண்ணவர்முன் – தேவர்களுக்கெதிரில், தாமம் – மணமாலையை, புனைவாளை – (தனக்கு) சூட்டியவளாகிய தமயந்தியை, (நோக்கி) மாதராய் – பெண்ணே!, காதல் - அன்புள்ள, இருவரையும் – நம்முடைய இரண்டு பிள்ளைகளையும், கொண்டு – நாம் அழைத்துக்கொண்டு, கடும் சுரம் – கடுமையாகிய பாலை நிலத்தில், போக்கு – போதல், ஏதம் உடைத்து – குற்றமுடையதாகும், (ஆதலின்) இவரைக்கொண்டு – இப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு, வீமன் – (உன் தந்தையாகிய) வீமராசனது, திரு – அழகிய, நகர்க்கே – நகரத்துக்கே, நீ மீள் என்றான் – நீ திரும்பிச் செல்வாயாக என்று கூறினான் ; எ – று.

நளன் தமயந்தியை நோக்கி, பிள்ளைகளை அழைத்துக்கொண்டு உனது தந்தையாகிய வீமராசனது நகரத்

திற்குச் செல்வாயாக என்றனென்க. போக்கு – தொழிற் பெயர். நகர்க்கே – ஏ பிரிநிலை. தான் – அசை. புனைந் தாள் என இறந்தகாலமாய் வரவேண்டுவது புனைவாள் என எதிர்காலமாகிக் கால வழுவமைதியாயிற்று. வினையாலணையும் பெயர்.

101. குற்றமில் காட்சி.........

இ - ள்: (தமயந்தி) நோக்கால் – கண்களால், மழை - மாரியைப் போன்ற கண்ணீரை, பொழியா – சொரிந்து, நொந்து – வருந்தி, (நளனை நோக்கி) கொற்றவனே – அரசனே!, குலமகளுக்கு – நல்ல வமிசத்திற் பிறந்த பெண்ணுக்கு, குற்றம் இல் – குறைவில்லாத, காட்சி – தோற்றத்தையும், குதலை – மழலைச் சொற்கள் பொருந்திய, வாய் – வாயையுமுடைய, மைந்தரையும் – புத்திரர்களையும், பெற்றுக்கொள்ளலாம் - பெற்றுக்கொள்ளுதல் ஆகும், கோ – சிறந்த, காதலனை – ஆசைக்குரியவனாகிய கணவனை, பெறலாமோ – (இறந்துவிட்டால் பின்பு) அடையலாகுமோ (முடியாது), என்று உரைத்தாள் – என்று சொன்னாள்; எ – று.

தமயந்தி நளனை நோக்கி மன்னவனே! பிள்ளைகள் தவறிப்போய்விட்டாலும் அவர்களை மீண்டும் பெறமுடியும்; கணவனை இழந்தாற் பெறமுடியாது. ஆதலின் யான் உன்னைவிட்டு நீங்கமாட்டேன் என்றனளென்க. பெறலாமோ 'ஓ' எதிர்மறை. காதலன் – காதலுக்குரியவன். மழை – நீருக்கு வந்தமையால் ஆகுபெயர். மைந்தரையும் – உம் உயர்வு சிறப்பு. நோக்கு – பார்வை; கண்ணுக்காயிற்று. தொழிலாகுபெயர்.

102. கைதவந்தா னீக்கி.........

இ – ள்: (தமயந்தி அவ்வாறு சொல்லக் கேட்ட நளன் அவளை நோக்கி) மாதராய் – அழகுள்ளவளாகிய தமயந்தியே!, கைதவம் – வஞ்சனையை, நீக்கி - அகற்றி, கருத்தில் – மனத்தில், கறை – குற்றத்தை, அகற்றி – (சேராமல்) விலக்கி, செய் – (மனிதர் நற்கதியடைதற்குச்) செய்யக்கூடிய, தவம் – தவத்தினை, எத்தனை – எவ்வளவு, செய்தாலும் – இயற்றினாலும், மைதீர் – குற்றம் நீங்குவதற் கேதுவாகிய, மக – மக்களை, பெறு – பெறுத, மானிடர்கள் –

மனிதர்கள், வானவர்தம் – தேவர்களுடைய, ஊர்க்கு – ஊராகிய சுவர்க்கப் பதவியில், போந்து – சென்று, புக – புகுதலை, பெறுர் – அடையமாட்டார்கள்; எ – று.

மக்களைப் பெருதவர்கள் எத்தகைய தவத்தைச் செய்தாலும் தெய்வலோக பதவியை அடையமாட்டார்களென்க. கைதவந்தான், செய்தவந்தான் – தான் இரண்டும் அசைகள். செய்தவம் – வினைத்தொகை. மக – ஆண், பெண் ஆகிய இருபாற்கும் பொதுவாய் வரும் பெயர். வானவர்தம் – 'தம்' அசை. புத்திரர்களின் சிறப்பை விளக்கிஞன்.

**103.** பொன்னுடைய ரேனும்...........

இ – ள்: இன் அடிசில் – (தாய் தந்தையர் உண்ணும்) இனிய சோற்றில், புக்கு – போய், அளையும் – அளைகின்ற, தாமரைக் கை – தாமரை மலர்போன்ற கரங்களையும், பூ நாறும் – மலர்மணம் பரிமளிக்கின்ற, செய்ய வாய் – சிவந்த வாயையும் (உடைய), மக்களை – பிள்ளைகளை, இங்கு – இவ்வுலகத்தில், இல்லாதவர் – அடையப்பெருதவர், பொன் உடையரேனும் – பொன்னை யுடையவர்களாயிருந்தாலும். புகழ் உடையரேனும் – கீர்த்தியை உடையவர்களா யிருந்தாலும், மற்று – பின்னும், என் உடையரேனும் – எதை யுடையவர்களா யிருந்தாலும், உடையரோ – (அவற்றை) உடையவர்களாவாரோ (ஆகமாட்டார்கள்); எ – று.

பிள்ளைகள் இல்லாதவர்கள் பொருளுள்ளவர்களா யிருந்தாலும், கீர்த்தியுள்ளவர்களா யிருந்தாலும் வேறு எவ்வகைச் சிறப்புடையவர்களா யிருந்தாலும் அவற்றை யுடையவர்களாகமாட்டார்க ளென்க. உம்மைகள் மூன்றும் உயர்வு சிறப்பு. மற்று – பிறிது பொருளில் வந்தது. உடையரோ – ஓ எதிர்மறை. தாமரை – முதலாகுபெயர். பூ நாறும் – உவமத்தொகை.

**104.** சொன்ன கலையின்...........

இ – ள்: முன்னம் – முன்பக்கத்திலே, குறுகுதலை – குறுகிய தலையாகிய உறுப்பையுடைய, கிண்கிணி – சதங்கையணிந்த, கால் – பாதங்களை யுடைய, கோ – சிறந்த, மக்கள் – பிள்ளைகளின், இன்முகத்து – இனிமையான முகத்தினிடமாகவுள்ள,

பால் வாய் – பாலருந்தும் வாயின்கணுண்டாகிய, சிறு – மெல்லிய, குதலை - மழலைச் சொற்களை, கேளா – கேளாத, செவி – காதுகள், சொன்ன – (உயர்ந்தனவாகக்) கூறப்பட்ட, கலையின் – சாத்திரங்களின், துறை அனைத்தும் – அங்கங்கள் எல்லாவற்றையும், தோய்ந்தாலும் – கற்றுணர்ந்தாலும், என்ன பயன் – அதனால் என்ன பிரயோசனத்தை, உடைத்து ஆம் – உடையது ஆகும் (ஒரு பயனுமில்லை); எ – று.

மக்களுடைய மழலைச் சொற்களைக் கேளாத செவிகள், பல உயர்ந்த சாத்திரக் கேள்விகளைக் கேட்டாலும் அதனால் ஒருபயனுமில்லை என்பதாம். சதங்கையின் முற்பக்கத்தே நுனியிற் சிறிய கடுகுபோன்ற உருவம் செய்யப்பட்டிருக்கும்; அதுவே இங்கு, 'குறுகிய தலை' என்று கூறப்பட்டது. கேளா – ஈறு குறைந்த எதிர்மறைப் பெயரெச்சம்.

105. போற்றரிய செல்வம்.........

இ – ள்: எழில் – அழகு பொருந்திய, கமலம் - தாமரை மலராகிய, செம்பதிக்கு – செம்மையான இடத்தில், வீற்றிருந்த - பெருமையோடு தங்கியிருந்த, தேன் – தேன் போலும் இனிமைவாய்ந்த இலக்குமியை ஒத்த தமயந்தி, (நளனை நோக்கி) ஆற்றலாய் – (பகைவரை வெற்றிகொள்ளும்) வல்லமை யுடையவனே!, எம் பதிக்கே – எங்களுடைய நகரத்திற்கே, (எங்களுடன்) போந்தருளுக – வரக்கடவாயாக, போற்ற அரிய – காப்பாற்றமுடியாத, செல்வம் - நம் செல்வமானது; புனல் – நீர்வளம் மிகுந்த, நாட்டொடு – தேசத்துடனே, போக – நம்மை விட்டு நீங்கும்படி, தோற்றமையும் – (சூதாடித்) தோற்றுவிட்டதும், யாவர்க்கும் – எவர்க்கும், தோற்றாது - தெரியமாட்டாது, என்றாள் - என்றுரைத்தாள்; எ – று.

தமயந்தி நளனை நோக்கி, புத்திரரைக் காப்பாற்றுவது எனக்கு முக்கியமானதாயிருந்தாலும் நான் உம்மை விட்டுப் பிரியமாட்டேன். ஆதலின் நீரும் எங்களுடன் எம்மூர்க்கு வரவேண்டும்; அப்படி வந்தால் நமக்குண்டான எண்ணங்கள் நிறைவேறும்; அதுவுமன்றி நீர் சூதாட்டத்தால் நாடிழந்த இழிவும் எவர்க்குந் தோற்றாதென்றாளென்க. தோற்றாதே – ஏ அசை. எம் பதிக்கே – ஏ பிரிநிலை. செம்பதிக்கு – உருபுமயக்கம்; செம்பதிக் கண் என 7-ம் உருபுபெற்றுவரும்.

106. சினக்கதிர்.........

இ - ள்: (நளன் தமயந்தியை நோக்கி) சினம் கதிர் - கோபத்தையும் பிரகாசத்தையுமுடைய, வேல் - வேலாயுதம் போன்ற, கண் - கண்களையுடைய, மடவாய் - இளம் பெண்ணே!. (ஒருவன்) செல்வர்பால் - செல்வர்களிடத்து, சென்று—, எனக்கு ஈ என்னும் - எனக்கு ஏதாவது பொருள் கொடு என்றுரைக்கின்ற, இம்மாற்றம்-இந்தச் சொல்லானது, தனக்கு உரிய - தனக்குரிமையாயிருந்த, தானம் துடைத்து - கொடைச் சிறப்பைக் கெடுத்து, தருமத்தை - அறத்தை, வேர்பறித்து - வேரோடு பிடுங்கி, மானம் - கௌரவத்தை, துடைப்பது - அழிப்பதாகிய, ஓர் வாள் - ஒரு வாளாயுதமாகும், கண்டாய் - இதனை நீ அறிவாய்; எ - று.

ஒருவன் செல்வரிடத்தே சென்று, எனக்கு ஈ என்று கூறுஞ் சொல் அவனுடைய தானம் தருமம் மானம் என்பவைகளைக் கெடுத்துவிடுமென்க. தானம் - கொடை. அதனால் தான் வீமன்பதிக்குச் செல்வதை மறுத்தமை காண்க.

107. மன்னராய் மன்னர்.........

இ - ள்: அரும் - அருமையாகிய, பெடை மானே - பெண்மான் போன்றவளே!, (மனிதர்) மன்னராய் - அரசராயிருந்தும், (செல்வம் குன்றிய காலத்தில்) மன்னர் தமை அடைந்து - வேறு அரசர்களிடத்தே சென்று, வாழ்வு எய்தி - இன்ப வாழ்வைப் பெற்று, இன் அமுதம் - இனிய உணவை, தேக்கி - உண்டு ஏப்பம் விட்டுக்கொண்டு, இருப்பாரேல் - இருப்பார்களேயானால், அவர் - அப்படி இருப்பவர், சொன்ன - (அறிவுடையவர்களால்) கூறப்பட்ட, பெரும் பேடிகள் - பெரிய பேடிகளாவார்கள், அலரேல் - அப்படிப்பட்டவர்க ளல்லாதவரானால், பித்தரே - பைத்தியம் பிடித்தவரே, (ஆதலின் 'யான் உன்னுடைய தந்தையூர்க்கு வரமாட்டேன்' என்று கூறினான்); எ - று.

"மனிதர் அரசராயிருந்து பின் வறுமையுற்ற காலத்தில் தம்மைப் போன்ற வேறு அரசர்களிடத்தே சென்று சேவிப்பார்களேயானால் அவர்கள் பேடிகளாக வேண்டும்; அல்லது பித்தராகவேண்டும்; ஆதலின் நின் தந்தையிடம் வரமாட்டேன்" என்று நளன் தமயந்திக்குக் கூறினானென்க. அன்றே - அசை. மான், உவமையாகுபெயர்.

108. செங்கோலாய்............

இ – ள்: (நளன் அவ்வாறு கூறக் கேட்ட தமயந்தி) காதலருக்கு – அன்புள்ள தன் பிள்ளைகளுக்கு, ஏதிலரைப் போல – பகைவரைப்போல, எடுத்து – சத்தத்தை உயர்த்தி, செங்கோலாய் – செம்மையாகிய கோலையுடைய அரசனே!, உன்தன் – உன்னுடைய, திரு உள்ளம் – அழகிய கருத்து, ஈது ஆயின் – இதுவானால், நம் – நம்முடைய, கோலம் – அழகு பொருந்திய, காதலரை – அன்புடைய மக்களை, எம் – எங்களுடைய, கோன் – மன்னனாகிய, விதர்ப்பன் – விதர்ப்ப அரசனது, எழில் – அழகுபொருந்திய, நகர்க்கே – பட்டணத்துக்கே, போக்கி அருள் – அனுப்பியருள்வாயாக, என்றாள் – என்று கூறினாள்; எ – று.

நளன் விதர்ப்பன் நகர்க்கேக இசையாதது கண்ட தமயந்தி அவனை நோக்கி, "பிள்ளைகளை மாத்திரம் அங்கே அனுப்புவீராக" என்றுளென்க. நகர்க்கே - ஏ பிரிநிலை. உள்ளம் - இடவாகுபெயராய் எண்ணத்தை யுணர்த்திற்று. நகர்க்கண் என உருபுமயக்கமாய்ப் பொருள் கொள்ளல் சிறப்பு.

109. பேதை பிரியப் பிரியாத.........

இ - ள்: (நளன்) கலங்காத - கலக்கத்தை யடையாத, உள்ளத்தை – மனத்தை, வாட்டும் – வாடச்செய்கின்ற, நீர் – கண்ணீரை, கண்ணிலே—, வைத்து – தங்கச் செய்து, பேதை – பேதைமையை யுடையவளாகிய தமயந்தி, பிரிய – நீங்கும்படி, பிரியாத – எப்பொழுதும் அவளை நீங்காத, பேர் அன்பின் – பெரிய அன்பினையுடைய, காதலரை – ஆசைபொருந்திய மக்களை, கொண்டுபோய் – அழைத்துக்கொண்டு சென்று, காதலி தன் – என் விருப்பத்திற்குரியவளாகிய தமயந்தியின், தந்தைக்கு – தந்தையாகிய வீமராசனுக்கு, நீ காட்டு – நீ காண்பிப்பாய், என்றான் – என்று (ஒரு பார்ப்பானை நோக்கிக்) கூறினான்; எ – று.

தமயந்தி சொல்லியதைக் கேட்டவுடன் நளன் ஒரு பிராமணனை அழைத்து அவனிடத்தே தன் பிள்ளைகளை ஒப்பித்து, "நீ இவர்களை அழைத்துக்கொண்டு போய் வீமராசனுக்குக் காட்டு" என்றானென்க. தன் கண்ணீரைக் கண்டால் தமயந்தி மிகக் கலுழ்வாளாதலின் நளன் 'நீரைக் கண்ணிலே வைத்து' கூறினான்.

**110.** *தந்தை திருமுகத்தை.........*

இ - ள். (பிள்ளைகள் தாய் தந்தையரைப் பிரிவதற்கு வருந்தி) தந்தை - தகப்பனாகிய நளனுடைய, திருமுகத்தை - அழகிய முகத்தை, நோக்கி - பார்த்துப், தமை - தங்களை, பயந்தாள் - பெற்றவளாகிய தமயந்தியினுடைய, இந்து - சந்திரன் போன்ற, முகத்தை - முகத்தினை, எதிர் நோக்கி - நேரில் பார்த்தும், விழிவழியே - கண்களினிடத்தில், கண்ணீர் ஆறாக - கண்ணீரானது ஆற்றைப்போல ஒழுக, அழுது - அழுதுகொண்டு, எம் தம்மை - எங்களை, வேறாக - உங்களினின்றும் வேறாகும்படி, போக்குதிரோ - அனுப்புகிறீர்களோ, என்றார் - என்று கேட்டார்கள்; எ - று.

நளன் அவ்வாறு கூறியவுடனே பிள்ளைகள், அவனையும் தமயந்தியையும் பிரிவதற்கு வருந்தி யழுது அவர்களை நோக்கி "எங்களை வேறாக அனுப்பிவிடப் போகிறீர்களோ?" என்று வினவினார்களென்க. போக்குதிரோ - ஓ வினா. போக்குதிர் - பிறவினை; எந்தம்மை என்பதில் 'தம்' சாரியை. இந்துமுகம்- உவமத்தொகை.

**111.** *அஞ்சனந்தோய் கண்ணில்.........*

இ - ள்: (பிள்ளைகள் அவ்வாறு கேட்டபோது) வல்லி - கொடியினது தன்மையை, விடா - கைவிடாத, மெல் - மெல்லிய, இடையாள் - இடையினையுடைய தமயந்தி, அஞ்சனம் தோய் - மை படிந்திருக்கின்ற, கண்ணில் - கண்களில் நின்றும், அருவி நீர் - மலையாறுபோல வடிகின்ற கண்ணீரானது, ஆங்கு - அவ்விடத்தில், அவர்க்கு - அந்தப் பிள்ளைகளுக்கு, மஞ்சன நீராக - குளிப்பாட்டும் நீராய், வழிந்து ஓட - ஒழுகிப் பாயும்படி, நெஞ்சு உருகி - மனங் கலங்கி, புலர்ந்து - மேனி வாடி, மக்களை - தன் பிள்ளைகளாகிய அவர்களை, தன் மார்போடு - தனது நெஞ்சுடனே (சேர்த்து), புல்லி - அணைத்து, விடா - விட்டு, நின்றாள் - பிரிந்து நின்றாள் (வழிக்கூட்டி அனுப்பி நின்றாள்); எ - று.

பிள்ளைகள் அவ்வாறு கூறி வருந்தியபோது தமயந்தி அவர்களுக்குத் தேறுதல் கூறி வருத்தத்தோடு அவர்களைத்

தழுவிக்கொண்டு அனுப்பினனென்க. அவளது கண்ணீர் பிள்ளைகளைக் குளிப்பாட்டும் அளவுக்கு அதிகமாகப் பெருகிற்று என்றவாறு. தமயந்தி 'வல்லி'க்கொடிபோன்றவளாதலின் "வல்லிவிடா...இடையாள்" எனப்பட்டாள். வல்லிவிடா என்பதில் 'விடா' ஈறுகுறைந்த எதிர்மறைப் பெயரெச்சம்.

112. இருவருயிரும்.........

இ — ள்: வரும் — (பரம்பரையாக ஓதப்பட்டு) வருகின்ற, மறையோன் — வேதத்தையுடையவனாகிய பிராமணன், இருவர் உயிரும் — (நளன் தமயந்தி ஆகிய) இரண்டு பேர்களினது உயிரையும், இரு கையால் — இரண்டு கைகளினாலும், வாங்கி — பற்றி, கொண்டு ஏகுவான் — கொண்டு செல்பவனாகிய, ஒருவன் ஒத்து — ஒருவனை நிகர்த்து, கோ மைந்தனை — இராசகுமாரனையும், இளைய கோதையை — இளமையாகிய இராசகுமாரத்தியையும், வீமன் நகர்க்கே — வீமராசன் நகரமாகிய குண்டினபுரத்திற்கே, விரைந்து கொண்டு ஏகினான் — விரைவாக அழைத்துக்கொண்டு சென்றான்; எ — று.

வேதியன், நளன் தமயந்தி ஆகிய இருவருடைய உயிர்களையும் ஒருவன் பிரித்துக்கொண்டு போவதுபோல், அவர்களின் குழந்தைகள் இருவரையும் குண்டினபுரத்திற்கு அழைத்துக்கொண்டு போனான் என்க. வரு மறையோன் என்பதற்கு அங்கே வந்த வேதியன் எனினும் பொருந்தும்.

113. காதலவர் மேலே.........

இ — ள்: வண்டு — வண்டுகள், விரை — தேனில், ஆடும் — (நெருங்கி உண்பதற்கு) ஆடுகின்ற, தாரான் — மாலையையணிந்தவனாகிய நளன், காதலவர்மேலே — பிரியத்தையுடையவர்களான பிள்ளைகளின்மீது, கண் ஓட — பார்வையானது சென்றுகொண்டிருக்கவும், விண் ஓடும் — ஆகாயத்தில் ஓடுகின்ற, ஊதை என — காற்றைப்போல, நின்று — நிலைபெற்று, உயிர்ப்பு — பெருமூச்சானது, ஓட — நாசியில் ஓடிக்கொண்டிருக்கவும், மெலிந்து — தேகம் இளைத்து, யாதும் உரை ஆடாது — வார்த்தையொன்றும் பேசாதவனாகி, உள்ளம் ஒடுங்கினான் — மனம் அடங்கினான்; எ — று.

வேதியன், அந்தப் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போன பிறகு நளன் அவர்களைப் பிரிந்த வருத்தத்தால் பெருமூச்சுவிட்டு மேனியிளைத்து மனமொடுங்கி வருந்தினான் என்க.

**114.** *சேலுற்ற வாவி...........*

இ – ள்: சேல் – கெண்டை மீன்கள், உற்ற – பொருந்தியிருக்கின்ற, வாவி – தடாகங்களையுடைய, திரு – அழகிய, நாடு – நிடத தேசமானது, பின் ஒழிய – தனக்குப் பின்புறத்தே தங்கும்படி, தேவியொடும் – மனையாளுடனே, காலின் – பாதங்களாலே, போய் – நடந்து சென்று, ஞாலம் சேர் – பூமியில் சேர்ந்திருக்கின்ற, கள்ளி வேகத்து – கள்ளி மரங்களின் வெப்பக் கொடுமையினாலே, அரவின் கண் – (அம்மரங்களினடியில் வசிக்கின்ற) சர்ப்பங்களினிடத்துள்ள, மணிகள் – சிரோரத்தினங்கள், துள்ளி – குதித்து நிலத்தில் வீழ்ந்து, பொடியாய் – சாம்பலாய், வேகின்ற – எரிகின்ற, சுரம் – பாலைநிலத்தை, கண் உற்றான் – பார்த்தான்; எ–று.

நளன் தமயந்தியுடனே அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு நிடதநாட்டைக் கடந்து ஒரு பாலைவனத்தைப் பார்த்தானென்க. சுரம் – வெம்மை; அஃதாகுபெயராய் அதனையுடைய நிலத்துக்காயிற்று. 'தேவியொடும் போய்' எனச் சேர்க்க.

**115.** *கன்னிறத்த...........*

இ – ள்: நல்நெறிக்கு – நன்மை பொருந்திய நீதி மார்க்கமாகிய சத்தியத்துக்கு, அஞ்சி – பயந்து, பார் – பூமியை, ஈந்த – (பகைவனாகிய புட்கரனுக்குக்) கொடுத்துவிட்ட, அரசனையும்–மன்னனாகிய நளனையும், தேவியையும் – அவனுடைய தேவியாகிய தமயந்தியையும், வஞ்சிப்பான் – ஏமாற்ற, வேண்டி – விரும்பி, வனத்து – அப் பாலை வனத்தில், கல்நிறத்த – கல்லின் குணமுடைய, சிந்தை – கடின மனம் கொண்ட, கலியும் – கலிபுருடனும், அவன் முன்பாக – அந்நளனுக்கெதிரில், பொன் நிறத்த – பொன்னின் நிறத்தையுடைய, புள் வடிவு ஆய் – பறவையின் வடிவமாகி, போந்து இருந்தான் – போய்த் தங்கியிருந்தான்; எ – று.

கலிபுருடன் அவர்களை வஞ்சித்து நளனுடைய வஸ்திரத்தையும் பறித்துச் செல்லக் கருதி ஓர் அரிய பறவை

வடிவமாய் அங் நளனுக்கு முன்னே போயிருந்தானென்க. சூதாட்டத்தில் தோற்றபடியால் தான் பந்தயம் கூறியபடி சத்தியத்தையே பிரதானமாகக் கொண்டு அதற்குப் பயந்து ஆட்சியைப் புட்கரனுக்கீந்தான் என்றவாறு. 'வாய்மையே கண்டாய் வலி' என மேலும் வருதல் காண்க.

116. தேன் பிடிக்கும்.........

இ – ள்: புது – புதுமையான, மழலைச்சொல் – மழலை வார்த்தைகளைப் பேசுகின்ற, கிள்ளை - கிளியின் மொழி போன்ற, வாயாள் - மொழியினை யுடையவளாகிய தமயந்தி, தொழுது - (நளனை) வணங்கி, (முற்காலத்திலே) தேன் – வண்டுகள், பிடிக்கும் - (தேனுண்ணும் பொருட்டுப்) பற்றி யிருக்கின்ற, தண் - குளிர்ச்சிபொருந்தியுள்ள, துளாய் - துளப மாலையை அணிந்த, செங்கண் – சிவந்த கண்களையுடைய, கருமுகிலை – கரிய மேகம் போன்ற நிறமுடைய இராம பிரானை, மான்பிடிக்கச் சொன்ன - மாயமானைப் பிடித்துத் தரச் சொல்லிய, மயிலேபோல் – மயிற் சாயலுள்ள பெண் ணாகிய சீதாபிராட்டியைப் போல; தான்பிடிக்க – தான் கையிற் பற்றி அழகு பார்க்கும்படி, பொன் புள்ளை – பொன் னிறம் பொருந்திய அப் பறவையை, பற்றித்தா – பிடித்துத் தருவாயாக, என்றாள் – என்று கூறினாள்; எ – று.

கலிபுருடன் பொன்னிறப் பறவையாகப் போயிருந்த போது தமயந்தி அதனைப் பார்த்துக் கையிற் பற்றி அதன் அழகை நோக்க விரும்பி நளனிடம் அதனைப் பிடித்துத் தருமாறு கூறினாளென்க. முகில் மயில் என்பன உவமையாகுபெயர்கள். முகிலை, மயில் மான்பிடிக்குமாறு கூறிற்று என்பதில் ஓரழகு காண்க. முகிலைக் கண்டால் மயில் களிப்புறும். வாய் – ஆகுபெயர்; மொழிக்காயிற்று.

117. எற்றித் திரைபொர.........

இ – ள்: திரை – அலைகள், எற்றி – வீசி, பொர – தங்கள் மேல் மோத, நொந்து – அதனால் வருந்தி, வெள் வளை – வெண்மை நிறம் பொருந்திய சங்குகளாகிய, தாய் – தாய்கள், இளமணலில் – மென்மையான குறுமணலிலே, ஏறி – ஊர்ந்து சென்று, பற்றி – பூமியைச் சார்ந்து, பவ ளம் – பவளக் கொடிகள், படர் – படர்ந்ததினாலேற்பட்ட, நிழல் கீழ் – நிழலினிடத்தே, முத்து ஈன்று – முத்துக்களைப்

பெற்றுவிட்டு, ஓடும் - மீண்டும் நீருக்குள் ஓடுகின்ற, வேலை - சமுத்திரஞ் சூழ்ந்த, திரு - அழகிய, நாடன் - நிடத நாட்டையுடைய நளன், போந்து - அப் பறவையின் முன்னே போய், ஆடையால் - வஸ்திரத்தினாலே, புள் - அந்தப் பறவையை, வளைத்தான் - (ஓடாமல்) தடுத்தான்; எ - று.

நளன் வஸ்திரத்தை விரித்து அப் பறவைமேலெறிந்து அதனை வளைத்தானென்க. எற்றுதல் - வீசுதல். வேலை - வேலா, வடசொல். தன் அரிய மகவை விட்டுப் பிரிந்த சங்குகள் உள்ள நாடனுகலின் தானும் அன்பு பூண்ட மக்களைப் பிரியுநிலை ஏற்பட்டது என்றவாறு.

**118.** கூந்தலிளங்குயிலும்.........

இ - ள்: கூந்தல் - குழலையுடைய, இளம் - இளமை பொருந்திய, குயிலும் - குயிலை நிகர்த்த தமயந்தியும், கோமானும் - நளமகாராசனும், கொண்டு - கைக்கொண்டு, அணைந்த - வளைத்த, பூ - அழகிய, துகில் - வஸ்திரத்தை, பொன் - இலக்குமியும், நாடு - அதனை யடைதற்கு எண்ணுகின்ற, மால் - பெருமை தங்கிய, நிறத்த - நிறத்தினையுடைய, புள் - அந்தப் பறவையானது, கொண்டு - தூக்கிக்கொண்டு, அந்தரத்தே - ஆகாயத்திலே, போய் நின்று - பறந்து நின்றுகொண்டு, (நளனை நோக்கி) வேந்தனே - அரசனே!, நல்நாடு - உன்னுடைய நல்ல நாட்டை, தோற்பித்தோன் - உன்னைத் தோற்கும்படி செய்தவன், நானே - நானே ஆவன், காண் - நீ அறிந்துகொள்வாய், என்றது - என்று கூறியது; எ - று.

அன்னப் பறவை வஸ்திரத்தைத் தூக்கிக்கொண்டு மேலே பறந்து போய் நின்று நளனை நோக்கி, "மன்னனே! உன்னை, நாட்டைவிட்டு வெளியேறும்படி செய்தவன் நானே" என்று கூறியதென்க. குயில் தமயந்திக்கு உவமையாகுபெயர். அந்தரத்தே - ஏ பிரிநிலை. என்றதே - ஏ அசை. பொன் + நாடு = பொன்னாடு; மால் + நிறம் = மாணிறம்.

**119.** அந்த நெடுஞ்சுரத்தின்.........

இ - ள்: அந்த நெடுஞ் சுரத்தின் மீது - (நளனும் தமயந்தியும்) அந்த நீண்ட பாலைவனத்தில், ஏக - போக,

(அத்தருணத்தில்) ஆங்கு - அவ்விடத்திலே, அழலும்- சுடுகின்ற, வெம்தழலை - வெப்பமான அக்கினியின் சூட்டை, ஆற்றுவான் - தணித்துக்கொள்வதற்கு, மேல் கடற்கு - மேற்குச் சமுத்திரத்தில், குளிப்பான்போல் - மூழ்குகின்றவனைப் போலவும், கூர் இருளால் - மிகுந்த இருளினாலே, பாரை - இப் பூமியை, ஒழிப்பான்போல் - மறைப்பவனைப் போலவும், எந்தை - என் தந்தையாகிய சூரியன், பொன் தேருடன் - அழகிய இரதத்துடனே, சென்று - (மேல் கடலில்) போய், அடைந்தான் - சேர்ந்தான்; எ - று.

சூரியன் அப் பாலைவனத்தின் வெம்மையால் தனக்கேற்பட்ட உஷ்ணத்தைத் தணித்துக்கொள்ள மேற்குக் கடலிற் போய்க் குளிப்பவன் போலவும், நளனுக்குத் துன்பம் செய்யும் பூமியை அவனுக்கிரங்கி இருட்டால் மறைப்பவன் போலவும், மேற்றிசைக் கடலிற் போய் மறைந்தானென்க. மீது - ஏழாம் வேற்றுமைச் சொல் லுருபு. ஆற்றுவான் - வினையெச்சம். கடற்கே - ஏழாம் வேற்றுமை நான்காம் வேற்றுமையாக வந்தது; உருபு மயக்கம்.

**120.** பானு நெடுந்தேர் .........

இ - ள்: பானு - சூரியனுடைய, நெடும் தேர் - உயர்ந்த தேரானது, படு - (தினந்தோறும்) மறைகின்ற, கடலில் - மேற்குக் கடலிலே, பாய்ந்ததன்பின் - புகுந்த பிறகு, கானம் - காட்டிலுள்ள, அடம்பின் - அடப்பங் கொடிகளின், கவடு - இரு பிளவாகிய, இலைகள் - இலைகளானவை, மானின் - மானினது, குளம்பு ஏய்க்கும் - குளம்புகளை நிகர்த்திருக்கின்ற, நல்நாடன் - நல்ல நாட்டினை யுடையவனாகிய நளன், கோதையொடும் - தமயந்தியுடனே, இளம்பேய்க்கும் - இளமையான பைசாசங்கட்கும், தோன்றா - உரு ஒன்றும் தெரியமுடியாத, இருள் - இருட்டிலே, சென்றான் - போனான்; எ - று.

சூரியன் மறைந்தவுடனே நளன் தமயந்தியுடன் இருட்டில் நடந்து சென்றானென்க. அடம்பு - ஒருவகைக் கொடி; இதன் இலை இருபிளவாய் மான்குளம்பு போன்றிருக்கும். படுகடல் - வினைத்தொகை. ஏய்ப்ப - உவம உருபு.

இளம்பேய்க்கும் — 'உம்' உயர்வு சிறப்பு. இருளின் கொடுமை கூறியவாறு.

121. எங்காம் புகலிடம்.........

இ - ள்: எங்கு - எவ்விடத்தில், புகல் இடம் - புகுந்து தங்கும்படியான இடம், ஆம் - கிடைப்பதாகும், என்று எண்ணி - என்று நினைத்து, இருள் வழி - அவ்விருள் சூழ்ந்த வழியிலே, போய் - சென்று, வெம் கானகம் - வெப்பமான அக் காட்டிலே, திரியும் வேலைதனில் - அலையுங் காலத்தில், வந்து - இப் பூமியிற் பிறந்து, பால் - பால் போன்ற, வெண்குடை நிழற்கீழ் - வெண்கொற்றக் குடையின் நிழலில், வாழ் - (அரசாட்சி புரிந்து) வாழ்கின்ற, மண்டபம் - சிறந்த கொலு மண்டபத்தை, கண்டான் - அமைத்தவனாகிய அந்நளன், அங்கே - தான் தேடிச்சென்ற அவ்விடத்திலே, ஓர் பாழ் மண்டபம் - ஒரு பாழான மண்டபத்தை, கண்டான் - பார்த்தான்; எ - று.

தமயந்தியுடன் இருட்டிலே நடந்து சென்ற நளன் அவ்விரவில் தங்குவதற்கு ஓரிடத்தைத் தேடிக்கொண்டே போய் ஒரு பாழ்மண்டபத்தைக் கண்டானென்க. கான் + அகம் = கானகம்; இருபெயரொட்டுப் பண்புத்தொகை. 'வாழ் மண்டபங் கண்டான் பாழ் மண்டபங் கண்டான்' என்பதில் ஒரு நயம் தோன்றிற்று. கண்டான் - வினைப் பெயர், கண்டான் - முற்று.

122. மூரி யிரவும்போய்.........

இ - ள்: (நளன் அப் பாழ்மண்டபத்தைக் கண்ட பின் தமயந்தியை நோக்கி) சோர் - அவிழ்ந்து தொங்குகின்ற, கூந்தல் - கூந்தலையுடைய, மாதராய் - பெண்ணே!, மூரி இரவும் போய் - மந்தமான முன்னிரவுங் கழிந்து, முற்று இருள் ஆய் - நிறைந்த இருளாய், மூண்டது - அதிகரித்தது, மற்று - வேறே, சாரும் இடம் இல்லை - தங்கும் இடம் இல்லை, நாம் —, இந்த மண்டபத்தே - இந்தப் பாழ் மண்டபத்தில், கண் துயில - நித்திரை செய்ய, போதராய் - வருவாயாக, என்றான் - என்று கூறினான், புலர்ந்து - மிகவும் வாட்டமடைந்தவனாய்; எ - று.

நளன் அப் பாழ் மண்டபத்தைத் தமயந்திக்குக் காட்டி, அவளை நோக்கி, "பெண்ணே! இருள் அதிகமாயிருத்தலால் இனி நாம் செல்லுதல் முடியாது; எங்கேனும் தங்கித்தான் செல்லவேண்டும்; அவ்வாறு தங்குவதற்கு இதைத் தவிர வேறு இடம் இல்லை; ஆதலின் இதில் நாம் நித்திரை செய்து விடிந்தபின் செல்வோம் வருவாயாக" என்று வருத்தத்துடன் அழைத்தானென்க. மூரி – சோம்பல்; இங்கு மந்தத்தைக் குறித்தது.

## 123. வையமுடையான்.........

இ – ள்: (அம் மண்டபத்திற் படுத்தபின்) தோட்ட – பூவிதழ்களையுடைய, வார் – நீண்ட, கோதையாள் – மாலையை அணிந்தவளாகிய தமயந்தி, மகரயாழ் – மகர வீணையின் நாதத்தை, கேட்டருளும் – இராக்காலத்தில் கேட்டருளுகின்ற, வையம் உடையான் – பூமி ஆளுகையை உடையவனுயிருந்த நளனது, தெய்வச் செவி – தெய்வத் தன்மை பொருந்திய காதுகள், இரவில் – இந்த இராத்திரியில், கொதுகின் – கொசுகுகளினுடைய, சில் – அற்பமான, பாடல் – பாடலை, கேட்ட – கேட்டன, ஆ – ஐயோ, என்று – என்று சொல்லி, சோர்ந்து – தளர்ந்து, கெண்டை – சேல்மீனை நிகர்த்த, அம் – அழகிய, கண் – கண்களிலே, நீர் சோர – நீர் வடிய, அழுதாள் – புலம்பினுள்; எ – று.

அம் மண்டபத்திற் படுத்தவுடன் அங்கே கொசுகுகள் பறந் தொலிக்கக் கேட்ட தமயந்தி, அவ் வொலி தன் நாயகனுக்குத் துயரத்தைச் செய்யுமென்று கருதி, "யாழின் ஓசையைக் கேட்ட செவிகள் இந்த அற்பமான கொசுகுகளின் பாடலைக் கேட்க இசைந்தனவே" என்று அழுதாளென்க.

## 124. பண்டை வினைப்பயனை.........

இ – ள்: (அவ்வாறு வருந்திய தமயந்தியை நோக்கி) அரசு – நளமகாராசன், பண்டை – பழமையான, வினைப்பயனை – தீவினையின் விளைவை, பாரிடத்தில் – இப் பூமியில், ஆர் கடப்பார் – எவர் விலகிச் செல்பவர், (ஒருவருமில்லை ஆதலின்) கொண்டல் – கூந்தலாகிய

மேகத்தின், நீழலின் - நிழலிலே உள்ள, குழை - (காது களில் அணியப்பட்டிருக்கும்) குண்டலங்களை, தடவும் - தடவுகின்ற, கெண்டை - கண்களாகிய சேல் மீன்களி லிருந்து, நீர் வழியல் - நீரை வடிக்காதே, என்முன் - என்று கூறினன், (மேலும்) மனம் நடுங்கி - மனம் நடுக்க முற்று, வெய்து உற்று - மேனி வெதும்பி, நீ அழியல் - நீ வருந்தாதே, என்முன் - என்றும் கூறினன்; எ - று.

நளன், வருந்திய தமயந்தியைப் பார்த்து, 'பெண்ணே! இது நம் பழவினைப் பயனுல் நேர்ந்தது; இதனைக் கடத் தல் உலகத்தில் எவராலும் முடியாது; ஆதலின் நீ இதன் பொருட்டு வருந்திக் கண்ணீர் வடிக்காதே' என்று கூறின னென்க. கொண்டல், கெண்டை - உவமையாகுபெயர்கள். வழியல் - எதிர்மறை முன்னிலை ஒருமை முற்று. வழி + ஆ = அல்: 'ஆ' கெட்டது. அழியலென்பது மன்னது.

**125.** *தீய வனமும்.........*

இ - ள்: மண்மேல் - பூமியின் மீது, திருமேனி - (நளன் தனது) அழகிய தேகத்தை, வைத்து - சேர்த்துப் படுத்துக்கொண்டு, கைகொடுத்து - தன் கையைத் தமயந் திக்குத் தலையணையாகக் கொடுத்து, பேர் யாமம் - இந்தப் பெரிய இராத்திரியில், தீய - கொடுமையாகிய, வனமும் - காட்டிலுள்ள ஜீவராசிகளும், துயின்று - உறங்கி, திசை யும் - மற்றத் திக்குகளிலுள்ளனவும், துயின்று - தூங்கி, பேயும் - (இரவில் உறக்கமின்றித் திரியும்) பைசாசமும், துயின்றது - உறங்கிற்று, (ஆதலின்) இனிமேல் - இனிமேல், நீயும் —, கண் - கண், துயில்கை - நித்திரை செய்வது, கடன் - உன்னுடைய கடமையாகும், என்முன் - என்று சொன்னன்; எ - று.

தமயந்தி துன்பப்படுவதை நளன் பார்த்து, இப் பொழுது நடுச்சாமமாய் விட்டது; இந்த நள்ளிரவில் வனமுந் துயின்றது; திக்குகளும் துயின்றன; ஆதலின் நீயுமினி நித்திரை செய்ய வேண்டுமென்று கூறினனென்க. இடம், திசை இடவாகு பெயர்கள். துயில்கை - தொழிற் பெயர். 'கை' விகுதி. மண்மேல் - மேல், ஏழாம் வேற்று மைச் சொல்லுருபு.

126. புன்கண்கூர் .........

இ – ள்: (தமயந்தி நித்திரை செய்ய) புன்கண்கூர் – துன்ப மிகுந்த, யாமத்து – நடுச்சாமத்திலே, பூமிமேல் – மண்ணின் மேலே, படுத்து – சயனித்து, தன்கண் துயில் வாளை – நித்திரை செய்கின்ற இவளை, கண்டு – பார்த்தும், என் கண் – என்னுடைய கண், பொடியாது – (இன்னும்) சாம்பலாகாமல் இருக்கிறது, உள் ஆவி – எனக்குள்ளே இருக்கின்ற உயிரானது, போகாது – போகாமல் இருக்கிறது, நெஞ்சம் – என்னுடைய நெஞ்சானது, வெடியாது – வெடித்துப் போகாமல் இருக்கிறது, என்று – என்று நளன் கூறி, விழுந்தான் – நிலத்தில் விழுந்து வருந்தினான்; எ – று.

நளன் தமயந்தி நித்திரை செய்வதைப் பார்த்து, இவளுடைய இந்தப் பரிதாபமான நிலையைக் கண்டும் என் கண் பொடியாகாமல் இருக்கின்றதே; உயிர் போகாமல் இருக்கின்றதே; நெஞ்சம் வெடியாமல் இருக்கின்றதே என்று வருந்தினனென்க. தான் இரண்டும், ஆல் மூன்றும் அசைகள். துயில்வாளை வினையாலணையும் பெயர். என்றான் என்பதிலுள்ள 'ஆன்' 'விழுந்து' என்பதனுடன் கூட்டப்பட்டது.

127. முன்றிறனின் .........

இ – ள்: (தமயந்தி நளன் தரைமேற் படுத்திருப்பதை நோக்கி) இறைவனுக்கு – நம் மன்னனுக்கு, இன்று – இப்பொழுது, துயில் – தூங்குவதற்கு, முன்றீல் தனில் – இந்தப் பாழ் மண்டபத்தின் முன்புறத்தில், மேல்படுக்க – தரையின் மேல் பாயலாக விரிப்பதற்கு, முன்தானையும் இன்றி – முன் வஸ்திரமும் இல்லாமல், என்தனது – என்னுடைய, கை புகுந்தது – கரமே விரிப்பாகப் பிரவேசித்தது, என்னுடைய கால் புகுந்தது – எனது காலே பாயலாகப் பிரவேசித்தது, என்று – என்று சொல்லி, மை புகுந்த – அஞ்சனந் தீட்டப்பெற்ற, கண் – கண்ணிலே, நீர் வர – நீர் ஒழுக, அழுதாள் – அரற்றினாள்; எ – று.

தமயந்தி படுத்திருந்த நளனை நோக்கி, அந்தோ! மன்னனுக்கு விரிப்பதற்கு முன்றானைகூட இல்லாமல் என்

கையும் காலுமே பாயலாயின என்று வருந்தினானென்க. இல் மூன் - முன்றிலெனவும், தானை முன் - முன்றானை எனவும் வந்தன; இலக்கணப் போலி. இறைவனுக்கே - ஏ இசை நிறை.

## 128. வீமன் றிருமடந்தை.........

இ - ள்: (நளன் தமயந்தியைப் பார்த்து) வீமன் - வீமராசனுடைய திரு - இலக்குமியே என்னும், மடந்தை - பெண்ணும், விண்ணவரும் - தேவர்களும், பெற்றிலா - பெறமுடியாத, தாமம் - மணமாலையை, எனக்கு அளித்த - என் கழுத்திற் சூட்டிய, தையலாள் - அழகினை உடைய வளுமாகிய தமயந்தி, யாமத்து - இந்த நள்ளிரவில், பாரே - பூமியே, அணையா - பஞ்சணையாக, படை - வேலாயுதத்தை நிகர்த்த, கண் துயின்றாள் - கண்ணைத் துயிலச் செய்தாள், மற்று - வேறு, ஆரே - எவர்தாம், துயர் அடையார் - இவ் வுலகத்தில் துன்பத்தை அடையார்கள், (எல்லாரும் ஒரு காலத்தில் துன்பத்தை அடைவர்); எ - று.

நளன் தமயந்தியைப் பார்த்து, "இராணியாய் உயர்ந்த பதவியிலிருந்தவளும், மகா பதிவிரதா சிரோன்மணியுமாகிய தமயந்தியே இவ்வாறு வறுமையுற்று மண்மேற் படுத்திருக்கும்போது வேறு எவர்கள்தாம் உலகத்தில் துன்பத்தை அடையாம லிருப்பவர்கள்? எல்லோருமே இவ்வித நிலைமையை அடையத் தக்கவர்கள் தாம்" என்று உலக இயற்கையைக் கூறித் தன் மனத்தைத் தேற்றினானென்க. திரு - உவமையாகுபெயர்.

## 129. வஞ்சக் கலிவலியான்...........

இ - ள்: மாகத்து - ஆகாயத்தில், அரா - இராகு என்னும் பாம்பினால், வளைக்கும் - சூழ்ந்து பற்றப்படுகின்ற, செம் சுடரின் - சிவந்த பிரகாசத்தையுடைய சூரியனிடத்தில், வந்த - வந்து சேர்ந்த, கருஞ் சுடர்போல் - கருமையான பிரகாசத்தைப்போல, விஞ்ச - அதிகமாக, மதித்த - சிறப்பிக்கப்பட்ட, தேர்த்தானை - தேர்ப்படையையுடைய, வயம் - வெற்றி பொருந்திய, வேந்தன் - நளமகாராஜனுடைய, நெஞ்சத்து - மனத்தில், வஞ்சம் - சூது பொருந்திய, கலி - கலிபுருஷனுடைய, வலியால் - வல்லமையினால், வேறு - தன் நிலைமையிலிருந்தும் வேறாகிய, ஓர் உணர்வு - ஓர் எண்ணம், உதித்தது - தோன்றியது; எ - று.

கலி நளனுடைய மனத்தைக் கலக்கியவுடனே அவ் வஞ்சனையால் நளனுக்குத் தமயந்தியைப் பிரிந்துவிட வேண்டுமென்ற ஓர் எண்ணம் உண்டாயிற்றென்க. சுயம் பிரகாசமும் பெருமையும் வாய்ந்த சூரியனைக் காலவன்மை யால் இராகு தீண்டுதல்போல கலி வலிமையால் நளனை ஓர் உணர்வு தீண்டிற்று என்க. வயம்+வேந்தன்=வய வேந்தன்.

130. காரிகைதன்.........

இ – ள்: (நளன் மனத்தில் மாறுபாடான எண்ணம் தோன்றியவுடன்) காரிகை தன் – அழகையுடைய தமயந்தியி னது, வெம் துயரம் – கொடியதாகிய துன்பத்தை, காணு மல் – பார்க்கச் சகிக்காமையால், நீத்து – அவளை விட்டு நீங்கி, அந்தக் கூர் இருளில் – அந்த மிகுந்த இருட்டிலே, போவான் – போவதற்கு, குறித்து எழுந்து – எண்ணி எழுந் திருந்து, நேரே – நேராக, இருவர்க்கும் – தனக்கும் தமயந் திக்கும், ஓர் உயிர்போல் – ஒரே உயிரைப்போல, எய்தி யது – சேர்ந்திருந்ததாகிய, ஓர் ஆடை – ஒற்றை வஸ்தி ரத்தை, அவன் – அந்த நளமகாராஜன், ஆங்கு – அவ்விடத் தில், அரிதற்கு – அரிந்து வேருக்குவதற்கு, நினைந்தான் - எண்ணினுன்; எ – று.

இவள் நம்முடனே பிரியாதிருப்பாளாயின் பல துன் பங்களை யடைவாள்; அத் துன்பத்தைப் பார்த்துச் சகித் தல் நம்மாலியலாது. ஆதலின் இவளைவிட்டு நீங்கிச்செல் வதே நலம் என்று துணிந்து, தனக்கும் அவளுக்கும் ஒன்ருக அமைந்திருந்த ஆடையை அறுப்பதற்கு நளன் நினைத்தா னென்க. நீத்து – வினையெச்சம். நளன் பறவையைப் பிடித்த மையால் ஓர்ஆடையை இழந்து, அதனுல் அவர்கள் ஆவியைப் போல் ஆடையும் ஒன்ருயினர். போவான் - வினை எச்சம்.

131. எண்ணிய வெண்ணம்.........

இ – ள்: இகல் – போர்வல்லமையையுடைய, வேந் தன் – நளமகாராஜன், எண்ணிய – ஆடையை அறுப்பதற்கு நினைத்த, எண்ணம் – நினைவை, முடிப்ப – முடிப்பதற்கு, கண்ணியதை – கருதினமையை, காய் – தனக்கு ஆகாதவ ரைக் கோபிக்கின்ற, கலியும் – சனிபகவானும், அறிந்து –

தெரிந்து, பண்ணிறுக்கு - இசைப்பாடலுக்கு, கேளான - உறவாகிய, தேம்மொழியை - இனியவார்த்தைகள் பொருந்திய தமயந்தியை, நீக்க - நளனின் வேருக நீக்கிவிடும் பொருட்டு, கிளர் - விளங்காநின்ற, ஒளிசேர் - பிரகாசம் பொருந்திய, வாளாய் - வாளாயுதமாக, வந்து - அங்கு வந்து சேர்ந்து, மருங்கு - ஒரு பக்கத்தில், இருந்தான் - தங்கியிருந்தான்; எ - று.

ஆடையை அரிய நினைத்த நளனுடைய குறிப்பையுணர்ந்த கலிபுருஷன் அவ்வாறே ஆடையை அரிந்துகொண்டு தமயந்தியை விட்டு நீங்குவதற்கு உதவியாயிருக்கும்பொருட்டு அவனுக்குப் பக்கத்தில் ஒரு வாள் வடிவமாக வந்திருந்தானென்க. தேமொழி - அன்மொழித்தொகை. முடிப்ப - வினையெச்சம்.

## 132. ஒற்றைத் துகிலும்.........

இ - ள்: (நளன் வாளை எடுத்து) ஒற்றைத் துகிலும் - (இருவருக்கும் ஒன்ருய் அமைந்த) ஒற்றை வஸ்திரமும், உயிரும் - (இருவருக்கும் ஒன்ருயமைந்த) உயிரும், இரண்டாக - இவ்விரண்டாகும்படி, தன் அன்பு - தன்னுடைய ஆசை, முற்றும் - முழுவதையும், முதலோடும் - வேருடனே, பற்றி - பிடித்து, அரிந்தான் - அறுத்தான், அரிந்திட்டு - ஆடையை அறுத்துவிட்டு, அவள் நிலைமை - (தான் பிரியின்) அந்தத் தமயந்தியினுடைய நிலைமையை, நெஞ்சில் - மனத்தில், தெரிந்தான் - சிந்தித்து அறிந்தவனுய், திகைத்து இருந்தான் - பிரமித்து ஒன்றுஞ் செய்யாமலிருந்தான்; எ - று.

வாளை எடுத்து ஆடையை அறுத்துத் தன்னை வேருக்கிய நளன், தமயந்தியின் நிலைமையை நோக்கி இவளை நாம் எப்படி விட்டுப் பிரிந்து போவதென்று அறியாது திகைத்திருந்தானென்க. தெரிந்தான் - முற்றெச்சம். அரிந்திட்டு - இடு பகுதிப்பொருள் விகுதி. அவள் + நிலைமை = அவணிலைமை.

## 133. போயொருகான் மீளும்.........

இ - ள்: காலன் வடிவு ஆய - எமனுடைய உருவமான, வேலான் - வேலாயுதத்தையுடைய நளன்,

ஒருகால் - ஒரு முறை, போய் - (தமயந்தியை விட்டுப் பிரிந்து சிறிது தூரம்) சென்று, மீளும் - (அவளைப் பிரிய மனமிசையாததனால்) திரும்பி அவளிடத்தே வருவான், புகுந்து - (அவ்வாறு சமீபத்தில் வந்து) சேர்ந்து, ஒருகால் - மற்றொரு முறை, மீண்டு ஏகும் - திரும்பிச் செல்லுவான், (இப்படி அவன் போவதும் வருவதுமா யிருந்தமையால்) மனம் - அவனுடைய மனமானது, ஆயர் - இடையரால், கொணர்ந்த - கொண்டுவரப் பட்டதும், அடு - காய்ச்சப் பட்ட துமாகிய, பாலின் - பாலினது, தோயல் - தோய் வாகிய தயிரை, கடைவார்தம் - கடைகின்ற ஆய்ச்சியர்க ளுடைய, கைபோல் - கரங்களைப்போல, ஆயிற்று - போவதும் வருவதும் ஆயிற்று; எ - று.

கலங்கியிருந்த நளன் பின்னர் துணிந்து புறப்பட்டும் போக முடியாமல் போவதும் வருவதுமாய் அலைந்து கொண்டிருக்க அவன் மனமும் அவ்வாறே அலைந்து கொண்டிருந்த தென்க. தோயல் - கெட்டியாகுதல், அது தொழிலாகு பெயராய்த் தயிரை யுணர்த்திற்று. தப்பாமல் உயிர் கொள்ளுதலில் யமனை வேலுக்குவமையாக்கினர். மீளும், ஏகும் செய்யுமென் முற்றுக்கள்.

**134.** *தீக்கானகத்துறையும்..........*

இ - ள்: நீக்காத - என்பால் விலக்க முடியாத, காதல் - ஆசையும், அன்பு - பக்தியும், மிக்காளை - மிகுந்தவளாகிய என் மனைவியை, கார் - கருமையாகிய, இருளில் - இவ் விருளிலே, கைவிட்டு - விட்டு, இன்று - இப்பொழுது, யான் - நான், ஏதிலன்போல் - இவளுக்குச் சத்துருவைப் போல, போகின்றேன் - செல்கின்றேன், (இவளுக் கிங்கே துணையாவார் ஒருவருமில்லை யாதலின்) தீக் கானகத்து - கொடியதாகிய வனத்திலே, உறையும் - தங்கியிருக்கின்ற, தெய்வங்காள் - தெய்வங்களே!, வீமன் தன் - வீமராசனுடைய, கோ - சிறந்த, காதலியை - குமாரத்தியாகிய இவளை, குறிக்கொண்மின் - பாதுகாத்துக் கொள்ளுங்கள் (என்று கூறினான்); எ - று.

நளன் தான் பிரிந்துபோகின்ற காலத்தில் வன தேவதைகளை நோக்கி, நான் இத் தமயந்திக்குப் பகைவன்போற் பிரிந்து செல்கின்றேன்; இவளோ இந்தக் காரிருளில் தனிப்பட்டாள்; இவளுக்கோ துணையானவர் இங்கெவரு

மிலர்; ஆதலின், நீங்களே இவளைக் காத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினனென்க. தன்னால் பிரியப்பட்டவளாதலின் தன் மனைவி யென்னாது 'வீமன் தன்.......... காதலி' யென்றான். கொண்மின் – முன்னிலைப் பன்மை முற்று. மின் – விகுதி. ஏவல்பொருட்டு. கைவிட்டு என்பதில் கை, உபசர்க்கம்.

**135.** *தாருவென.........*

இ – ள்: (அவ்வாறு சென்று) வேந்து – நளமகாராஜன், தாரு என – கற்பக விருட்சத்தைப்போல, பார்மேல் – இப் பூமியில், (உள்ள மனிதர்க்கு வேண்டியவற்றை யெல்லாம்) தரு – கொடுக்கின்ற, மேருவரை – மேரு மலையை நிகர்த்த, தோளான் – புயங்களை யுடையவனாகிய, சந்திரன் சுவர்க்கி – சந்திரன் சுவர்க்கியென்னும் அரசனுடைய, விரவலர் போல் – பகைவர்களைப் போல, கூர் – மிகுதியாகிய, இருளில் – இருளுள்ள இராத்திரியில், தேவியை – தன் நாயகியாகிய தமயந்தியை, விட்டு – தனிமையாகப் பாழ் மண்டபத்தில் விட்டு, வெம் கானகந்தனிலே – வெவ்விதாகிய காட்டிலே, செம்கால் – சிவந்த காலினுள்ள, நகம் சிதைய – நகமானது சிதையும்படி, ஏகினான் – போனான்; எ – று.

நளன் தமயந்தியைப் பிரிந்து, சந்திரன் சுவர்க்கி என்னும் அரசனுடைய பகைவரைப்போல மிகுந்த இருளுள்ள அவ் விரவிற் காட்டிலே போயினனென்க. வரைத் தோளான் – உவமைத்தொகை. சந்திரன் சுவர்க்கி என்பவன் இந் நூலாசிரியரை ஆதரித்தவோ ரரசன். கூர் – உரிச்சொல். செம்மை+கால்+நகம்=செங்கானகம்; வெம்மை+கானகம்=வெங்கானகம்.

**136.** *நீலமளவே.........*

இ – ள்: (நளன் சென்ற பிறகு) மலரின் – மலரையுடைய, கொடி – கொடியை நிகர்த்த, இடையாள் – இடையையுடைய தமயந்தி, அங்கு – அவ் விடத்தில், தான் காணாது – தான் அரசனைக்காணாமல் (கலங்கி), நிரை – வரிசையாகிய, முத்தின் கோலம் – முத்துக்களின் வடிவுவாய்ந்த கண்ணீர்த்துளிகள், நீலம் – நீலோற்பல மலர் போன்ற கண்களின், அளவே – அளவாக, நெகிழ – கலங்கிச் சொரிய, அயர்ந்து – அயர்ச்சியுற்று, வேல் வேந்தே – வேலாயுதத்தைத்

தரித்த அரசனே!, எங்குற்ருய் - எங்கே சென்ருய், என்ரு - என்று பதறிக் கூறி, இனம் - கூட்டமாகிய, வளை - வளையல்களை யணிந்த, கை - கரங்களை, நீட்டினுள் - எட்டின மட்டில் நீட்டிப் பார்த்தாள்; எ - று.

நளன், மேற்கூறியபடி போய்விட்டவுடனே நித்திரை செய்துகொண்டிருந்த தமயந்தி விழித்து அவனைக் காணுமல் வருந்திக் கண்கலக்கத்துடனே கையை நீட்டி மன்னனே! எங்கு சென்ருய்? என்று தடவிப்பார்த்தாளென்க. முத்து, நீலம் - உவமையாகுபெயர்கள். வளைக்கை - 2-ம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

## 137. உடுத்த துகில்.........

இ - ள்: மடுத்த - (தன்னை) மெய்ம் மறக்கச் செய்த, துயிலான் - தூக்கத்தின் உதவியினுல், உடுத்த - தான் உடுத்தியிருந்த, துகில் - தன் வஸ்திரத்தை, அரிந்தது - நளன் அரிந்திருப்பதை, ஒள் தொடியாள் - அழகிய வளையலையணிந்த தமயந்தி, கண்டு - அறிந்து, மறுகி - வருந்தி, மற்றும் - அரியப்பட்டிருப்பதேயன்றி, அவனை - நளனையும், காணுது - காணுமையால், இஃது என்னே என்னே - இஃது என்ன காரணத்தினுல் நேர்ந்தது என்ன காரணத்தினுல் நேர்ந்தது, என்று - என்று பலகாலும் எண்ணி, எழுந்து—, அடுத்தடுத்து - உடனுக்குடன், மன்னே - அரசனே!, என அழைப்பாள் - என்று அழைப்பாளாயினள்; எ - று.

தமயந்தி, துகில் அரியப்பட்டதினுலும் நளனைக் காணுமையாலும் வருந்தி, அரசனே! என்று அழைத்தனளென்க. மூலபாடத்தில் 'மடுத்த முயிலான்' என்றிருப்பதை 'மடுத்த துயிலான்' எனத் திருத்திக்கொள்க.

## 138. வெய்யதரை.........

இ - ள்: இனம் - கூட்டமாகிய, மேதி - எருமைகள், மெல் - மெல்லிய, கரும்பை - கரும்புகளை, தின்ன - தின்னுவதற்கு, போம் - செல்கின்ற, நாடன் - நாட்டையுடைய வீமராசனது, (மகளாகிய) திரு - இலக்குமியையொத்த தமயந்தியானவள், (அவ்வாறு) வெய்ய - வெவ்விதாகிய, தரை என்னும் - நிலமென்கிற, மெல் அமளி -

மெல்லிய படுக்கையை, தடவி – தடவிப்பார்த்து, கையரிக்கொண்டு – தேடி, எவ்விடத்தும் – எந்தவிடத்திலும், காணுமல் – நளனைக் காணுமல், ஐயகோ – ஐயோ, என்ன – என்று கூவிக்கொண்டு, போய் – ஒருபக்கமாகச் சென்று, வீழ்ந்தாள் – நிலத்தில் வீழ்ந்தாள்; எ – று.

கையை நீட்டித் தடவிப் பார்த்த தமயந்தி மேலும் பற்பல விடங்களிலும் தேடிப்பார்த்து அவனைக் காணுததால் ஐயோ என மயங்கி வீழ்ந்தாளென்க. திரு – உவமையாகுபெயர்.

139. அழல்வெஞ் சிலைவேடன்.........

இ – ள்: அழல் – அக்கினியை நிகர்த்த, வெம் – வெவ்விய, சிலை – வில்லையுடைய, வேடன் – வேடனது, அம்பு – பாணமானது, உருவ – தேகத்திற் பாய்ந்து ஊடுருவிச் செல்ல, ஆற்ருது – அதனைச் சகிக்கமுடியாமல், உழலும் – வருந்தி அங்கும் இங்கும் ஓடித் திரிகின்ற, களிமயில் போல் – மயிலேபோல, வீமன் – வீமராசனுடைய, கொடி – பூங்கொடி போன்ற தமயந்தி, குழல் – தன்னுடைய கூந்தலில் இருந்த, வண்டு – வண்டுகள், எழுந்து ஓட – அதிர்ச்சியினுல் பயந்து எழுந்து ஓடவும், இரு குழை மேல் – காதுகளில் அணியப்பட்டிருக்கும் இரண்டு காதணிகள் மீதும், கண்ணீர் கொழுந்து – கண்ணீர் ஒழுக்கின் துளிகள், ஓட – பாய்ந்தோடவும், ஓடி – அங்குமிங்கும் ஓடி, வீழ்ந்தாள் – மீண்டும் நிலத்தின்மேல் மூர்ச்சையடைந்து விழுந்தாள்; எ – று.

நிலத்தில் விழுந்த தமயந்தி உடனே எழுந்து, வேடனம்பு பாய வருந்தி அங்குமிங்கும் ஓடும் மயிலைப்போல் தனக்கேற்பட்ட துயரத்தைச் சகிக்க முடியாமற் கண்ணீர் விட்டழுதுகொண்டு அங்குமிங்கும் ஓடி மீண்டும் தரையில் வீழ்ந்தாளென்க. கொடி – உவமையாகுபெயர். களி என்னும் அடை மயில் என்பதற்கியைய வந்தது.

140. வான்முகிலும்..........

இ – ள்: ஏனம் – பன்றிகள், குளம்பால் – பாதக் குளம்புகளால், மணி – இரத்தினங்களை, கிளைக்கும் – கிண்டு

கின்ற, (சிறப்பினையுடைய) நீர் - நீர் நிறைந்த, குண்டு - குளங்களையுடைய, நாடன் - நாட்டிற்கரசனாகிய, விமனது, இளம் பாவை - இளமை பொருந்திய தமயந்தி, கை - தன்னுடைய கைகளை, தலையின் மேல் - சிரசின் மேல், இட்டு - வைத்துக்கொண்டு, வான் - சிறந்த, முகிலும் - மேகமும், மின்னும் - மின்னலும், வறுநிலத்தில் - வெறுந்தரையில், வீழ்ந்ததுபோல் - வீழ்ந்து கிடப்பதுபோல, தானும் குழலும் - தானும் தன் கூந்தலுமாக, தனி வீழ்ந்தாள் - ஒன்றாய் வீழ்ந்து சோகமுற்றுக் கிடந்தாள்; எ - று.

தமயந்தி கைகளால் தலையி லடித்துக்கொண்டு அக்கரங்களைக் கூந்தலிற் சேர்த்தபடியே மீண்டும் வெறுந் தரையில் வீழ்ந்து சோகமுற்றுக் கிடந்தாளென்க. முகில் கூந்தலுக்கும் மின்னல் தேகதிற்கும் உவமை. "வான்முகிலும் மின்னும்...... தானும் குழலுந் தனி வீழ்ந்தாள்" எதிர் நிரைநிறைப் பொருள்கோள்; குழல் முகிலுக்கும், தான் மின்னுக்கு முவமை. வீழ்ந்தது - தொழிற் பெயர் (காலம் காட்டிற்று). அவளை மூடிக் கூந்தல் காணப்பட்டமையின் தானும் "குழலும் வீழ்ந்தாள்" என்றார். உயர் திணையும் அஃறிணையும் கலந்து உயர்திணை முடிபு கொண்டது.

**141. தையல் துயர்க்கு...........**

இ - ள்: (அப்பொழுது) தையல் - தமயந்தியினது துயர்க்கு - துன்பத்திற்கு, தரியாது - சகியாமல், தம் - தங்களுடைய, சிறகு ஆம் - சிறகுகளாகிய, கையால் - கரங்களினால், வயிறு அலைத்து - வயிற்றி லடித்துக்கொண்டு, கார் - கரிய, இருள்வாய் - இருட்டில், வெய்யோனை - சூரியனை, வாவு - பாய்கின்ற, பரி - குதிரைகள் பூட்டப்பெற்ற, தேர் - தேரில், ஏறி—, வாவென்று - விரைந்து வரக்கடவாய் என்று, அழைப்பனபோல் - கூப்பிடுகின்றவைகளைப்போல், கோழிக்குலம் - கோழிச்சேவலின் கூட்டங்கள், கூவின - பலமுறை கூவின; எ - று.

தமயந்தி தரையில் வீழ்ந்து வருந்திக் கொண்டிருக்குஞ் சமயத்தில் இரவு நீங்கி விடியற்கால நேரம் வந்துவிட்டபடியால், கோழிச் சேவல்கள் கூவின; இதனை, தமயந்தியின் துயர்க்காற்றாது விரைந்து வந்து அதனைத் தீர்க்கும் பொருட்டுச் சூரியனைக் கூப்பிடுகின்றவைகளைப் போலச் சேவல்கள் கூவின எனக் கூறியமை தற்குறிப்பேற்ற அணி. ஏ - அசை. வாவுபரி - வினைத்தொகை.

142. வானநெடுவீதி.........

இ-ள்: (கோழிச் சேவல்கள் கூவியபின்பு) வானம் - ஆகாயமாகிய, நெடுவீதி - நீண்ட தெருவில், செல்லும் - போகின்ற, மணி - இரத்தினங்களினுலாகிய, தேரோன் - தேரையுடையவனுகிய சூரியன், அம் மடந்தைக்கு - அத் தமயந்திக்கு, தார் - மாலையை யணிந்த, வேந்தன் - நள மகாராசன், போன நெறி - சென்ற மார்க்கத்தை, காட்டு வான்போல் - சுட்டிக் காட்டுவான்போல், இருள் போய் - இருளானது புகுந்து, கைவாங்கு - இருக்க இடம் பெற்றுக் கொள்கின்ற, அக் கான் ஊடே - அந்தக் காட்டின் நடுவிலே, செங்கரத்தை - தன்னுடைய சிவந்த கிரணங்களாகிய கரங் களை, நின்று - உதயகிரியின் மேல் நின்று, நீட்டுவான் - நீட்டுவானுயினன்; எ - று.

சூரியன் நளன் சென்ற மார்க்கத்தைத் தமயந்திக்குச் சுட் டிக் காண்பிப்பவன் போல இருள் மிகுந்த அக் காட்டினூடே கிரணங்களாகிய கைகளை நீட்டித் தோன்றினனென்க. தான் - அசை. இதுவும் தற்குறிப்பேற்றவணி.

143. செய்தபிழை.........

இ-ள்: (சூரியன் உதித்த பின்பு தமயந்தி எழுந்து) செய்தபிழை - நான் இயற்றிய குற்றம், ஏது என்னும் - யாது என்று சொல்வாள், தேர்வேந்தே - இரதத்தையுடைய அரசனே, என்று அழைக்கும் - என்று கூப்பிடுவாள், எய்து - என்னிடத்தே சேர்ந்திருக்கின்ற, துயரக் கரை - துக்கத்தின் எல்லையை, காணேன் - நான் காண்கிலேன், என்னும் - என்று உரைப்பாள், (இவ்வாறு வருந்துகின்ற என்னிடத்தில்) பைய - சிறிதாவது, என் - (உனக்கு வந்த துயரம்) யாது, என்னுது - என்று வினவாதது, என் என்னும் - என்ன கார ணம் என்று சொல்வாள், இக் கானில் - இந்தக் காட்டிலே, விட்டு - என்னைத் தனியாக விட்டு, ஏகும் - செல்கின்ற, மன் - அரசனே!, என்னு - என்று கூவியழைத்து, அயர்ந்து - தளர்ச்சியடைந்து, வாடும் - வாடுவாள்; எ - று.

சூரியன் உதயமான பின்பு தமயந்திக்கு நளன் நிச்சய மாகத் தன்னைவிட்டு நீங்கிப் போனுன் என்பது விளங்கிய படியால் அவள், 'என் நாயகர் இவ்வாறு பிரிந்து போவ

தற்கு நான் என்ன பிழை செய்தேன்' என்பது முதலிய வார்த்தைகளைக் கூறிப் புலம்புவாளாயினளென்க.

144. *அல்லியந்தார் ........*

இ – ள்: அல்லி – அல்லிமலரினால் தொடுக்கப்பட்ட, அம் – அழகிய, தார் – மாலையணிந்த, மார்பன் – மார்பை யுடையவனாகிய நளனது, அடித்தாமரை – பாதங்களாகிய தாமரை மலர்கள், அவள் தன் – அத் தமயந்தியினுடைய, நல் உயிரும் – நல்ல பிராணனும், ஆசையும் – திக்குகளும், போல் – போல, நாறுதலும் – தோன்றின மாத்திரத்திலே, மல் உறு – மல் யுத்தம் பொருந்திய, தோள் – புயங்களை யுடைய, வேந்தனே – அரசனே, என்னு – என்று கதறி, விழிவேலை – கண்ணாகிய சமுத்திரத்தினின்றும், சாய்ந்த – பெருகிவந்த, நீர் வெள்ளத்தே – சலப்பெருக்கிலே, விழுந் தாள் – சுழன்று வீழ்ந்தாள்; எ – று.

நளனைத் தேடிக்கொண்டு அம் மண்டபத்தை விட்டு வெளியேறிப்போன தமயந்தி வழியில் அவனுடைய அடிச் சுவடு தோற்றக் கண்டு அவன் தன்னைப் பிரிந்தேவிட்டான் என்பதை அறிந்து ஐயோ! அரசனே! என்று கதறிக் கண்ணீர்விட்டு அழுதுகொண்டு அவ்விடத்திலேயே விழுந்தா ளென்க. வேலை – கண்ணுக்கு உவமானம். தமயந்தி துக்க மிகுதியால் இறந்தாள் போல்தலின், அவள் இடையிடை காட்டும் அசைவே உயிர் இருப்பதை உணர்த்திற்று. சூரிய வெளிச்சம் நன்கு பரவாமையின் திக்குகளும் நன்கு [illegible]ப்பட்டில. எனவே அவள் உயிரும் திக்குகளும், சிறிதே [illegible]ரப்பட்டன. அவ்வாறே நளனது அடிச்சுவடும் சிறிதே [illegible]த்தது என்றவாறு.

[illegible] *வெறித்த விளமான்காள் ........*

[illegible]: (அங்ஙனம் வீழ்ந்து உடனே எழுந்து) வான் [illegible]வர்களும், பெற்றிலா – பெறமுடியாத, மான் – [illegible]தவளாகிய தமயந்தி, (அங்குநின்ற மான் மயில் [illegible]றை நோக்கி) வெறித்த – என்னைக் கண்டு பயந்து [illegible]ளமான்காள் – இளமை பொருந்திய மான் [illegible]ல்காள் – மென்மைத் தன்மையையுடைய [illegible] எம்மை – எங்களை, பிறித்து – வேருக்கி,

போனாரை - சென்ற அரசரை, காட்டுதிர் - எனக்குக் காட்டு வீராக, (காட்டுவீர்களானால்) இந்த நெறிக்கண் - இந்த வழியி லேயே, ஊழி - யுகமுடிவுவரையிலும், நெடிது - நீட்சி யாக, வாழ்வீர் - வாழக்கடவீர், ஓ - ஐயோ!, என்னு - என்று, புலம்பினாள் - அழுதாள்; எ - று.

நிலத்தில் விழ்ந்தெழுந்த தமயந்தி துக்கமிகுதியினாலே மனமருண்டு அங்கு நின்ற மான் மயில் முதலியவற்றை நோக்கி என்னைப் பிரிந்து சென்ற அரசனை நீங்கள் காட்டு விர்களானால் இங்கே நெடுங்காலம் வாழ்விர்கள் என்று கூறிப் புலம்பினாளென்க. காட்டுதிர் - எதிர்கால முன்னிலைப் பன்மை வினைமுற்று. ஓ - இரங்குதற் பொருளில் வந்தது.

146. வேட்டகரியை.........

இ - ள்: பெரும்பசியால் - பெரிய பசியினால், வேட்ட - தான் விரும்பின, கரியை - ஒரு யானையை, விழுங்கி - உட் கொண்டு, மோட்டு வயிற்று - பொருமியிருக்கின்ற வயிற் றினையுடைய, அரவு - ஒரு மலைப்பாம்பானது, முன்தோன்ற - அவளுக்கெதிரில் வர, உண்தேன் - (மதுவை) உண்ணுகின்ற வண்டுகள் மொய்க்கப்பெற்ற, அறல் - கருமணலை நிகர்த்த கூந்தல் - குழலையும், போர் ஆர் - போர்த் தன்மை பொருந் திய, விழியாள் - கண்களையுமுடையவளாகிய அத் தமயந்தி, புலர்ந்து - வாட்டமுற்று, மீட்டு - திரும்பிப் பார்த்து, அதனை ஓராமல் - அதை அறியாமையால், அருகு - அதன் பக்கத் தில், அணைந்தாள் - சேர்ந்தாள்; எ - று.

வருத்தத்தோடு தளர்ந்து சென்ற தமயந்தி தன [illegible] முன்னே (பசியினால் ஒரு யானையை விழுங்கிவிட்டு [illegible] கிடந்த) ஒரு மலைப்பாம்பிருப்பதை யறியாதவளாய் அ[illegible] சமீபத்திற் போய்ச் சேர்ந்தாள் என்க. விழுங்கி, தே[illegible] ஓராது அருகணைந்தாள் என முடிக்க. ஓராது - எ[illegible] வினையெச்சம். வயிறு + அரவு = வயிற்றரவு.

146a. இவ்வாறு துன்பக் கடலின்.........

இ - ள்: இவ்வாறு - இந்தவிதமாய், துன்[illegible] னிடை - துன்பக் கடலில், மூழ்கும் - அழுந்[illegible] அஞ்சன மெழுதிய, வார் - நெடிய, தட - [illegible] கண் - கண்களையும், மடம் - அறியா[illegible]

மாதின் – தமயந்தியினது, செவ்வி - அழகுபொருந்திய, முகம் - முகத்தை, செவ்வான் – சிவந்த வானத்திலுள்ள, மதியம் என - சந்திரன் என்று எண்ணி, செம்கண் – சிவந்த கண்களையும், துளை எயிறு – துவாரம் பொருந்திய பற்களையும், வெம் வாய் – வெவ்விய வாயையுமுடைய, அரவம் – மலைப்பாம்பு, உருத்து - கோபித்து, விழுங்கியது – விழுங்கிற்று; எ – று.

இவ்வாறு துன்பத்துட[illegible]டிய தமயந்தியின் முகத்தைச் சந்திரன் என்று எண்ணி அரவம் கோபித்து விழுங்கியதென்க. தமயந்தியின் முகம் துக்கமாகிய களங்கமுடைமையால் சந்திரனை நிகர்த்தது. ராகு கேதுக்கள் சந்திரனை விழுங்குதலொப்புமையான் இவ்வாறு கூறினர். 'பாம்பு பசியினால் விழுங்கிற்றன்று' என்றவாறு.

**147.** வாளரவின் வாய்ப்பட்டு.........

இ – ள்: (மலைப்பாம்பு விழுங்கியவுடனே) இங்கு – இவ்வனத்தில், வெம் அரவின் வாய்க்கு – வெவ்விய அம்மலைப் பாம்பின் வாய்க்கு, இலக்கு ஆகி நின்றாள் – பற்றும் இலட்சியமாகி நின்றவளாகிய அத் தமயந்தி, (நளனை அழைத்து) மன்னவ – என் கணவனாகிய அரசனே! (நான்) வாள் அரவின் – வாள்போல என்னைச் சேதிக்கும் இப்பாம்பினுடைய, வாய்ப்பட்டு – வாயில் அகப்பட்டு, மாயாமுன் – இறப்பதற்கு முன்னமே, நின் தாள் அடைந்து – உன்னுடைய பாதங்களைச் சேர்ந்து, வாழும் – வாழுகின்ற, தமியேனை – துணையற்ற என்னை (நீ வந்து) தோளால் – உன்னுடைய புயவல்லமையினால் விலக்காயோ – இப் பாம்பின் வாயினின்றும் நீக்கிக் காக்கமாட்டாயோ, என்று – என்று சொல்லி, எடுத்து - குரலை உயர்த்தி, அழுதாள் – அழுது புலம்புவாளானாள்; எ – று.

பாம்பின் வாய்ப்பட்டவுடனே தமயந்தி தன்னைக் காப்பவர் அங்கெவருமில்லையாதலின், தன் கணவனாகிய நளனையே கூவியழைத்து நீ என்னை இவ்வாபத்தினின்றும் நீக்கிக் காக்கமாட்டாயா என்று அழுதாளென்க. தமி – தனிமை. இலக்கு – குறியிடம்; அதாவது ஒன்றைச் சாரவைக்கும் இடம். நினதுதாள் அன்றி வேறு யாதொரு துணையுமற்ற என்னைக் காக்க வேண்டுவது நின்கடனாகவும் அதைச் செய்யாதிருக்கிறாய் என வருந்தினாள்.

148. *வென்றிச் சினவரவின்.........*

இ - ள் : (மேலும்) பொரும் முகம் - போர் செய்கின்ற கூரிய முகமுள்ள, வேல் - வேலாயுதத்தை நிகர்த்த, கண்ணாள் - கண்ணையுடையவளாகிய அத் த[illegible]யந்தி, புலர்ந்து - கலக்கத்தால் வா[illegible]டி. [illegible]ர் [illegible]வேந்தே - இரதத்தையுடைய [illegible]சனே!, வென்[illegible]யையுடைய, சினம் - கோபம் பொருந்திய, அரவின் - இந்தப் பாம்பினுடைய, வெவ்வாய் இடைப்பட்டு - வெவ்விய வாயினிடத்தே சிக்கி, வன் துயரால் - வலிய துன்பத்தினுல், ஆவி போய் பிராணன் நீங்கி, மாள்கின்றேன் - இறக்கின்றவளாகிய நான், இன்று - அப்படி இறக்கும்இப்பொழுது, உன் - உன்னுடைய, திருமுகம் - அழகிய முகத்தை, காண்கிலேன் - காணப்பெற்றிலேன், என்ருள் - என்று கூறிப் புலம்பினுள் ; எ - று.

பாம்பின் வாய்ப்பட்டு இறக்கும் நிலையிலிருக்கும் இச் சமயத்திலாவது உன்னுடைய திருமுகத்தைக் காணப்பெற்றிலேன் என்று கூறிப் புலம்பினுளென்க. பொருமுகம் - வினைத்தொகை. காண்கிலேன் - தன்மை ஒருமை வினை முற்று. 'இல்' எதிர்மறை இடைநிலை; 'கு' சாரியை.

149. *மற்றெடுத்த.........*

இ - ள் : (பின்னர் தன் மக்களை விளித்து), நீள் குழற்கு - தன்னுடைய நீண்ட கூந்தலின் நிறத்திற்கு, காரேனும் - மேகமாயிருந்தாலும், ஒவ்வாள் - ஒப்பாகப் பெருதவளாகிய தமயந்தி, கலுழ்ந்து - கலங்கி, மல் தொடுத்த தோள் - மல்யுத்தம் பொருந்திய நளமகாராசனது தோளை, பிரிந்தும் - நீங்கியும், மாயாத - இறந்துபோகாமலிருக்கின்ற, வல்வினையேன் - கொடிய பாவவினையையுடைய நான், பெற்றெடுத்த - ஈன்று கையிலேந்திய, மக்காள் - பிள்ளைகளே!, பிரிந்து ஏகும் - (என்னை இந்த ஆபத்தில் விட்டு) நீங்கிச் செல்கின்ற, கொற்றவனை - மன்னனை, நீர் ஏனும் - நீங்களாயினும், காண்குதிரோ - பார்ப்பீர்களோ, என்று அழுதாள் - என்று கூறிப் புலம்பினுள் ; எ - று.

தமந்தி தன் பிள்ளைகளை நினைத்து அவர்களை விளித்து நீங்களாயினும் நளமகாராஜனைக் காண்பீர்களோ என்று கூறி அழுதாளென்க. ஏகும் — செய்யுமென் பெயரெச்சம். காண்குதிர் — எதிர்காலமுற்று. 'ஓ' வினா.

150. அடையுங் கடுங்கானில்.........

இ — ள்: (அதன்மேலும்) செம்துவர் — சிவந்த பவளம் போன்ற, வாய் - வாயையும், மெல்மொழியாள் — மெல்லிய மொழியினையு முடையவளாகிய தமயந்தி, தேர்ந்து — தான் எவ்வகையிலும் மரணத்தினின்றும் மீள முடியாதென்பதை உணர்ந்து, அடையும் — நான் சேர்ந்த, கடும் கானில் — கடுமை பொருந்திய காட்டில், ஆடு — ஆடுகின்ற, அரவின் வாய்ப்பட்டு — பாம்பின் வாயிற் சிக்கியமையால், உயிர் உடையும் — எனது உயிரானது என் தேகத்தை விட்டு நீங்கி விடும், (ஆதலால்) நாயகனே — நாதனே, ஓகோ — ஐயோ! எனக்கு விடைதந்து அருள்வாய் — நான் இவ்வுலகத்தை விட்டுச் செல்வதற்கு எனக்கு உத்தரவு கொடுத்தருள்வாயாக, என்று — என்று சொல்லி, தன் — தன்னுடைய, தாமரைக் கை — தாமரை மலர்போன்ற கரங்களை, கூப்பினாள் — குவித்து அவனுக்கு வணக்கஞ் செய்தாள்; எ — று.

தமயந்தி தான் இறந்துபோவதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டபடியால் தன் நாயகனுக்கு வணக்கஞ்செய்து அவனிடம் விடைபெற்றுக்கொள்ளக் கருதிக் கை கூப்பினாளென்க. ஓகோ — இரங்கற் குறிப்பிடைச் சொல். கற்புடை மகளிர் மரணநேரத்திலும் கணவனை வணங்கிக் கொண்டே உயிர் விடுவர்.

151. உண்டோ ரழுகுரல்..........

இ — ள்: (அத்தருணத்தில்) ஓர் அழுகுரல் — அழுகின்ற ஒரு ஓசையானது, உண்டு என்று — ஏற்பட்டிருக்கிறதென்று, ஒற்றி — நெருங்கி, வருகின்ற — வருகின்றவனாகிய, வெள்தோடன் — தந்தத்தாற் செய்யப்பட்ட வெண்மையாகிய காதணியை யுடையவனும், செம்பங்கி — செம்பட்டை மயிருள்ளவனும், வில் — கரத்தில் வில்லைத் தரித்தவனுமாகிய, வேடன் — ஒரு வேடன், கழுகுவாழ் — கழுகுகள் வாழுகின்ற, கானகத்து — அக்காட்டில், கார் — கரிய, அரவின் — பாம்பினுடைய, வாயின் — வாயிலே,

முழுகுவாள் – அமிழ்கின்றவளாகிய அத் தமயந்தியின், தெய்வமுகம் – தெய்வத்தன்மை பொருந்திய முகத்தை, கண்டான் – பார்த்தான் ; எ - று.

தமயந்தியின் அழுகுரலைக் கேட்டு அவ் வழியே சென்ற ஒரு வேடன் அவளைக் கண்டானென்க. தோடன் – குறிப்பு வினையாலணையும் பெயர். கருமை + அரவு = காரரவு. முழுகுவாள் - வினையாலணையும் பெயர்.

**152.** வெய்ய வரவின்..........

இ – ள் : (வேடனைப் பார்த்து) இருள் - இருட்டை, ஈரும் – பிளந்து நீக்குகின்ற, பூணாள் – ஆபரணங்களையணிந்தவளாகிய தமயந்தி, அஞ்சி – (தன் உயிர் நீங்குவதற்குப்) பயந்து, வெய்ய - கொடிய, அரவின் - பாம்பினுடைய, விடவாயினுள் - விஷம் பொருந்திய வாய்க்குள்ளே, பட்டேன் – சிக்கினேன், ஐயன்மீர் – ஐயன்மாரே !, யான் – நான், உங்கட்கு – உங்களுக்கு, அபயம் – அடைக்கலமாகின்றேன், உய்ய – பிழைக்கும்படி, அருளீரோ – கிருபை செய்ய மாட்டீர்களா ?, என்று – என்று, எடுத்து – குரலை உயர்த்தி, அரற்றினாள் – கதறினாள் ; எ - று.

நிச்சயமாக உயிர் நீங்கி விடப் போகிறதென்று நினைத்து நாயகனுக்கு வணக்கஞ் செய்த தமயந்தி, வேடனைக் கண்டவுடன், 'நீ என்னைக் காப்பாற்று' என்று வேண்டினாளென்க. ஐயன்மீர் – உயர்வினால் ஒருமையிற் பன்மை வந்த பால்வழுவமைதி. அருளீர் – ஓ எனப் பிரித்து, ஓ - ஐயோ எனப் பொருள் கூறலுமாம்.

**153.** சங்கநிதிபோல்..........

இ – ள் : (தமயந்தி வேண்டியவுடனே) சங்கநிதி போல் – சங்கவடிவமாகிய குபேர நிதியைப்போல, தரு – கொடுக்கின்ற, சந்திரன் சுவர்க்கி – சந்திரன் சுவர்க்கி என்பவன், உலகம் – உலகத்தை வெம்கலிவாய் நின்று – கொடிய வறுமையினின்று, மீட்டாற்போல் – மீட்டதைப் போல, பகை கடிந்த – பகைவரை அழிக்கும் இயல்பு வாய்ந்த, காம்பின் வாய் - பக்கங்களையுடைய, வில் - வில்லைத் தாங்கிய, வேடன் – வேடுவன், கண்டு – தமயந்தியைப் பார்த்து, மங்கையை – தமயந்தியை, வெம் – கொடுமையாகிய, பாம்பின்வாய் நின்று – பாம்பின்

வாயினிடத்திலிருந்து, பறித்தான் – வெளிப்படுத்தினுன்; எ – று.

தமயந்தி மேற்கூறியவாறு வேண்டவே வேடன் அவளது ஆபத்தான நிலையையுணர்ந்து உடனே அவளை அப் பாம்பின் வாயினின்றும் வெளிப்படுத்தினுனென்க. சங்கநிதி குபேரனிடமுள்ள இரு நிதிகளில் ஒன்று; சங்க வடிவமானது, தன்னிடம் வருவார் விரும்பியவற்றையெல்லாம் கொடுக்கத்தக்கது. சந்திரன் சுவர்க்கி என்னும் அரசன் இந்நூலாசிரியரை ஆதரித்தவனுதலின் அவனைப் பலவிடங்களிலும் புகழ்ந்துரைத்துள்ளார் ஆசிரியர்.

**154.** ஆருயிரு நானும்.........

இ - ள்: (அவ்வாறு பாம்பின் வாயினின்றும் வெளிப்பட்டவுடன்) வென்றி – வெற்றி பொருந்திய, விதர்ப்பன் – வீமராசன், பெற்ற —, விளக்கு – தீபத்தைப்போல் புகழினுற் பிரகாசிப்பவளாகிய தமயந்தியானவள், (வேடனை நோக்கி) ஐயா –ஐயனே!, ஆர் உயிரும் நானும் – அருமையான உயிரும் எனது தேகமும், அழியாமல் – அழிந்து போகாமல், இப் பேரரவின் – இந்தப் பெரிய பாம்பினுடைய, வாயில் – வாயினின்றும் நீக்கி, பிழைப்பித்தாய் – என்னைப் பிழைக்கும்படி செய்தாய், தேரில் – ஆராயுமிடத்து, இதற்கு – நீ செய்த இவ் வுதவிக்கு, கைம்மாறு – பிரதியுபகாரம், உண்டோ – உளதோ (இல்லை), என உரைத்தாள் – என்று சொன்னுள்; எ – று.

தமயந்தி தன் உயிரைக் காப்பாற்றிப் பெரிய நன்மையைச் செய்த வேடனை இவ்வாறு புகழ்ந்தாளென்க. தான் – அசை. கைம்மாறு என்பதில் 'கை' உபசர்க்கம்.

**155.** இந்து நுதலி.........

இ - ள்: (தமயந்தி அவ்வாறு வேடனைப் போற்றியவுடனே) இந்து – சந்திரன்போன்ற, நுதலி – நெற்றியையுடையவளாகிய அத் தமயந்தியினது, எழில் – அழகை, நோக்கி - பார்த்து, புலை – ஈனமாகிய, நரகுக்கு – நரகத்துக்கு, ஏதுவாய் – காரணமான தீச்செயல்களைச் செய்து, நின்ருன் – நின்றவனுகிய, சிலை – வில்லைத் தாங்கிய, வேடன் – அவ் வேடனுனவன், தன் சிந்தை – தன் மனதில், ஏதோ கருதி –

ஏதோ ஒன்றை நினைத்து, எடுத்து – தொனியை உயர்த்தி, பைந்தொடி – பசுமையாகிய வளையல்களை யணிந்த பெண்ணே !, நீ—, என்னுடனே – என்னோடு, போதுவாய் – வருவாயாக, என்றான் – என்று கூறினான் ; எ – று.

தமயந்தி வேடனைப் புகழ்ந்து கூறினவுடனே அவன், தன்மீது அவள் அன்புடையவளாய் இருக்கிறாளென்றும் அதனால் தான் விரும்பும் எதற்கும் இணங்குவாளென்றும் கருதி, அவளுடைய கற்பை அழிக்க விரும்பி நீ என்னுடன் வருவாயாக என்று அழைத்தானென்க. பைந்தொடி – பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. போதுவாய் என்பதில் புகுது என்பது போது என்றாயிற்று. வேடன் நினைத்த தீச்செயலை வாயினாற் கூறல் தகாதாதலின் அதனை 'ஏதோ தன் சிந்தை கருதி' என்றார் புலவர். இங்ஙனம் கூறல் இடக்கரடக்கல் எனப்படும்.

**156.** வேடனழைப்ப.........

இ – ள் : வேடன் – அவ் வேடுவன், அழைப்ப – அவ்வாறழைக்க, சுரிகுழல் - சுருண்ட கூந்தலையுடைய தமயந்தி, விழி பதைத்து - கண்கள் துடிக்க, வெய்து உயிரா – வெப்பமாகப் பெருமூச்சுவிட்டு, ஆடல் மயில் போல் – அசைகின்ற ஒரு மயிலைப்போல, அலமரா – சுழன்று, வேல் – வேலாயுதத்தை நிகர்த்த, கண்ணின் நீர் – கண்களிலிருந்து வடியும் நீரானது, ஆறெல்லாம் ஆக – வழியெல்லாம் சொரிய, அழுது – அரற்றி, தூறெல்லாம் – சிறு செடிகளில் எல்லாம், ஓடினாள் – மறைய முயன்று ஓடினாள் ; எ - று.

தமயந்தி தன் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டுச் சிறு செடிகள் நிறைந்தவிடமெல்லாம் ஓடினா ளென்க. உயிரா, அலமரா என்பன – செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். அலமரல் – சுழலல், தூறு – பற்றை, சுரிகுழல் – அன்மொழித்தொகை. கண்ணினீர் மிகுதியாகச் சொரிந்ததாகலின் 'ஆறெல்லாமாக' என்றார்.

**157.** தீக்கட் புலி.........

இ – ள் : தீ – அக்கினியைப் போன்ற, கண் – கண்களையுடைய, புலி - புலியானது, தொடர – தன்னைப் பிடித்துக் கொல்லும் பொருட்டுத் தொடர்ந்துவர, (அதற்குப் பயந்து) செல்லும் – ஓடுகின்ற, சிறு மான்போல் – சிறிய

மானைப்போல, ஆக்கை – தேகமானது, தளர – பயத்தினால் தளர்ச்சியடைய, அலமந்து – அங்கும் இங்கும் சுழன்று, போக்கற்று – பின்னர் போதற்கு இடமின்மையால், சீறு – சீறி, விழித்தாள் – கண்களைத் திறந்து வேடனைப் பார்த்தாள், அவ்வளவில் – அப்படிப் பார்த்தமாத்திரத்தில், கொலைவேடன் – வில்லைத் தரித்த அவ் வேடனானவன், நீறு ஆய் – எரிந்து சாம்பலாக வெந்து, நிலத்து – பூமியில், விழுந்தான் – விழுந்து மடிந்தான்; எ – று.

யாதும் செய்ய முடியாமையால் இறுதியில் தமயந்தி எதிர்க்கும் எண்ணத்துடன் அவனைக் கோபித்துப் பார்த்தாள். உடனே வேடன் வெந்து சாம்பலாயினனென்க. சிறுமான் என்பதிற் சிறுமை, இளமையை உணர்த்தி நின்றது. சீறு - செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். போக்கு – தொழிற்பெயர். புலி - வேடனுக்கும், மான் – தமயந்திக்கும் உவமையாய் வந்தன. கற்பின் மகிமையால் வேடன் எரிந்தானென்க. கொக்கை எரித்த கௌசிகன் கதையுடன் ஒப்பிட்டுப் பார்க்க.

158. வண்டமிழ்..........

இ – ள்: வண் தமிழ் – வளப்பம் பொருந்திய தமிழால், வாணர் – வாழ்கின்றவர்களாகிய வித்துவான்களுக்கு, பிழைத்த - தவறுசெய்த, வான் – பெரிய, குடிபோல் – வமிசத்தினர் அத் தீவினையின் பயனால் வருந்த நேரிடுவதுபோல, தீத்தழல் – அக்கினியின் வெப்பமானது, மீ - மேலும்மேலும், மண்டு – நெருங்கியிருக்கின்ற, கொடும் – கொடுமையான, சுரத்து – பாலைவனத்தின், ஒருமாடு இருந்து – ஒருபக்கத்தில் இருந்து, பண்டை – முற்காலத்தில், உள – உள்ளனவாகிய, வாழ்வு எல்லாம் – வாழ்க்கைகளை யெல்லாம், நினைந்து – எண்ணியும், மன் - நளமகாராசன், இழைத்த – தனக்குச் செய்த, தாழ்வு எல்லாம் – குறைகளை யெல்லாம், தன் தலைமேல் – தன் தலைவிதியின்மேல், தந்து – வைத்தும் அழுதாள் - தமயந்தி அழுவாளாயினள்; எ – று.

தமயந்தி தனது பண்டை நிலைமையை நினைந்து அழுதனள் என்க. வித்துவான்களுக்கு அபசாரம் செய்த குடியினர் பின்னொருகால் அதை நினைந்து வருந்துவதுபோலத் தமயந்தி வருந்தினள் என்றவாறு. அன்றி வித்துவான்களுக்கு அபசாரம் செய்த வம்சமானது தீமைக்குட்பட்ட

தாய்த் தீப்பற்றி எரிந்த வீடுபோல் எப்பொழுதும் நசித்துப் போயிருக்கும். பாலைவனமும் எப்பொழுதும் நீங்காதவெப்ப முடையதாய்ப் பாழடைந்திருக்கும். ஆதலின், அவ்வமிசம் பாலைநிலத்துக்குவமை கூறப்பட்டது எனினுமாம். இதனால் தமிழின் மகிமை உணரப்படும். தமிழுக்குவமை சொன்னயம், பொருணயம், தொடைநயம் முதலியன. வாழ்நாள் - வாணாள் என வந்ததுபோல, வாழ்நர் – வாணர் என வந்தது.

158a. கற்பின் .........

இ – ள் : கற்பின் அழலால் - பதிவிரதா அக்கினியால், கொடுஞ் சிலைக்கை – வளைந்த வில்லைக் கையிலேந்திய, வேடனுடலம் – வேடன் சரீரத்தை, கரியாக்கி – சாம்பராக்கி, பொற்பின் துறைபோய் – அழகிற் சிறந்து, நலங்கனிந்த – நன்மை மிகுந்த, பொன்னம் பாவை – தமயந்தியானவள், புலம்பு எய்தி – அழுதுகொண்டு, வெற்பின் – மலைபோல், உயர் – உயர்ந்த, தோள் – புயத்தையுடைய, வேந்து – நள மகாராசன், செலும் – செல்லாநின்ற, வெங்கரன் - வெவ்விய காட்டினில், துருவி – (அவனைத்) தேடிக்கொண்டு, ஏகுதலும் - போகுமளவில், அன்பின் – அன்பினையுடைய, முனிவர் – முனிவர்கள், தவம் இயற்றும் – தவம் செய்யா நின்ற, சாலை – பர்ணசாலையை, நோக்கி – பார்த்து, அருகு - அதனருகில், அணைந்தாள் – சேர்ந்தாள் ; எ – று.

தமயந்தி வேடனைச் சாம்பராக்கியபின், அழுதுகொண்டு நளமகாராசனைத் தேடிச்செல்லும் வழியில் முனிவர் தவமியற்றுஞ் சாலையை அடைந்தாளென்க. செல்லும் என்பது செலுமென இடைக் குறையாயிற்று. அன்பு – அற்பு என்றாயிற்று. வேந்து உயர்திணைப் பொருளுணர்த்திய அஃறிணைச் சொல்.

158b. அடைந்த............

இ – ள் : அடைந்த – தம்மிடத்து வந்த, மாதின் – தமயந்தியினது, முகம் – முகத்தை, நோக்கி – பார்த்து, யாரை நீ – நீ யார், வெம் அழல் – வெவ்விய அழல் பொருந்திய, கானில் – காட்டினில், நடந்து – காலால் நடந்து, தனியே – தனிமையாகி, இத்தலையில் – இவ்விடத்தில், போந்தது என்னை – வந்தது என்ன காரணம், நளினமலர் -

தாமரை மலர் போன்ற, தடகண் - விசாலமாகிய கண்கள், கலுழ்ந்து - கலங்கி, புலம்பு எய்தும் தன்மை - துன்பப் படுதல், எவன்கொல் - என்ன காரணம், சாற்றுக என - சொல்லுகவென்று, முனிவர் கேட்ப - முனிவர்கள் கேட்க, மடந்தை - தமயந்தியானவள், புகுந்த ஆறு அனைத்தும் - நடந்தவை எல்லாம், வகுத்து - பிரித்து, உரைத்தாள் - (அவர்களுக்குக்) கூறினாள் ; எ - று.

முனிவர்கள் தமயந்தியின் முகத்தை நோக்கி, அவளது வரலாற்றை வினவ, அவளும் நடந்தவை யெல்லாவற்றை யும் அவர்களுக்குக் கூறினாளென்க. நளினம் - தாமரை, தட - பெருமையைக் காட்டும் உரிச்சொல். யாரை - 'ஐ' சாரியை ; தலை - 7-ம் வேற்றுமைப் பொருள்தரும் சொல். எவன் - வினாப்பொருளில் வரும் குறிப்புமுற்று.

**158c.** கேட்டவளவில்...........

இ - ள் : கேட்ட அளவில் - (இச் செய்தியைக்) கேட்ட மாத்திரத்தில், உளமுருகி - மனமுருகி, கிள்ளை - கிளிப்பிள்ளைகளை, மருட்டும் - சொல்லால் வென்ற, பனி மொழியாய் - குளிர்ந்த சொற்களையுடைய தமயந்தியே !, வாட்டம் - சோர்வை, ஒழிதி - ஒழித்துவிடு, நின் பிரிந்த - உன்னைப் பிரிந்த, வடிவேல் - கூர்மையுடைய வேலேந்திய, நளனை - நளமகாராசனை, சில நாளில் - சில நாளிலே, நாட்டம் களிப்ப - உன் கண்கள் களிக்குமாறு, கண்டு - பார்த்து, முன்போல் நலம்பெற்றிருத்தி - முன்போல் நன்மையை யடைந்து இருப்பாயாகவென்று, நவிலா - ஆசிர்வதித்து, ஈட்டும் தவத்து - தவஞ்செய்கின்ற, ஓர் - ஒப்பற்ற, மறைக் கிழவர் - அந்தணர்கள், இருக்கை நோக்கி - தாம் இருக்கும் ஆச்சிரமத்தை நோக்கி, ஏகினர் - சென்றார்கள் ; எ - று. ஆல் - அசை.

முனிவர்கள் தமயந்தியை ஆசிர்வதித்துவிட்டுத் தமது ஆச்சிரமத்தை அடைந்தனரென்க. கிள்ளை - கிளி. வடி - கூர்மை. இருத்தி ஒழிதி - முன்னிலை ஒருமை முற்று. நவிலா - செய்யா என்னும் வாய்பாட்டு எச்சம்.

**159.** அவ்வளவில்..........

இ - ள் : அவ்வளவில் - (தமயந்தி அழுதுகொண் டிருக்கும்) அத்தருணத்தில், ஆதி - பழமையான, பெரு

வழியில் – பெரிய வழியிற் சென்ற, ஆய் – ஆராயுந்தன்மையுடையவனான, வணிகன் – வணிகனொருவன், இவ்வளவு தீவினையேன் – இவ்வளவு கெட்ட கர்மஞ் செய்தவளாயினேன் நான், என்பாள் தன் – என்று சொல்லிப் புலம்பிக்கொண்டிருந்த அத் தமயந்தியினது, மெய்வடிவை – தேகத்தின் உருவத்தை, கண்டான் – பார்த்தான், (இவள் யாரோ என்று) ஐயுற்றான் – சந்தேகித்தான், உண்டாயவெல்லாம் – அவளுக்குண்டான துன்பங்களையெல்லாம், உணர்ந்து – ஒருவாறு உய்த்துணர்ந்து தெரிந்து, கமலம் – தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, மயிலே – மயில்போன்ற சாயலையுடைய இலக்குமிபோல்வாள், என்றான் - என்று தனக்குத் தானே கூறினான்; எ – று.

வழியில் வந்த ஒரு வணிகன் தமயந்தியைக் கண்டு அவளுக் குற்றவைகளை யெல்லாம் உணர்ந்து இவள் யாரோ என ஐயுற்றான் என்க. ஆய்வணிகன் - வினைத்தொகை. ஐயம் + உற்றான் = ஐயுற்றான் என மகரங்கெட்டுப் புணர்ந்தது.

**160.** எக்குலத்தாய்............

இ - ள்: கார் வண்டு – கரிய வண்டுகள், காந்தாரம் – இசையை, விட்டு – வாயிலிருந்து வெளிப்படுத்தி, உரைக்கும் – பாடுகின்ற, தார் – மாலையையணிந்த, வணிகர் வேந்து – வணிகர்களுக்குத் தலைவனாகிய அவன், (தமயந்தியை நோக்கி) மை – மேகத்தை நிகர்த்த, குழலாய் – கூந்தலையுடைய பெண்ணே, நீ, எக்குலத்தாய் – எந்த வம்சத்தில் உதித்தவள்?, யார் மடந்தை – எவருடைய புத்திரி?, உன் ஊர் யாது – உன்னுடைய ஊர் எது?, உன் பேர் யாது – உன்னுடைய பெயர் என்ன?, நெக்கு – நெகிழ்ந்து, உருகி – மனங் கரைந்து, அழுதற்கு – நீ அழுவதற்கு, நிமித்தம் என் – காரணம் யாது?, சூட்டு - மெய்யானவற்றை, உரைத்து – சொல்லி, காண் – (என்னாலுண்டாகும் நன்மையை நீ) தெரிந்துகொள், என்றான் – என்று கூறினான்; எ - று.

வணிகன் தமயந்தியின் குலம், ஊர் முதலியவற்றை வினவினானென்க. மைக்குழல் – கரியகுழல் எனினுமாம். குழலாய் - விளி. எக்குலத்தாய் + யார் — யகரங்கெட்டு எக்குலத்தாயார் எனப் புணர்ந்தது.

161. முன்னை.........

இ - ள்: (வணிகன் அவ்வாருக வினவியவுடன்) கதிர் - கிரணங்கள், இமைக்கும் - பிரகாசிக்கின்ற, பூண் - ஆபரணமாகிய ஆரம் - முத்துமாலையை, பூண்டாள் - அணிந்தவளாகிய தமயந்தி, புலர்ந்து - வாடி, (வணிகனை நோக்கி) முன்னை - முந்தின பிறப்பிலேற்பட்ட, வினையின் - தீவினையின், வலியால் - வன்மையினுலே, முடி - கிரீடத்தைத் தரித்த, மன்னன் - அரசனுகிய என் நாயகன், இரும் - பெரிய, கானில் - இக் காட்டினிடத்தே, என்னைப் பிரிய - என்னை விட்டுநீங்க, (நான்) அன்னவனை - எனது நாயகனை, காணுது - காணுமல், அழுகின்றேன் - தனியே பிரிந்து புலம்புகின்றேன், என்ருள் - என்று தமயந்தி கூறினுள்; எ - று.

வணிகன் வினவத் தமயந்தி தான் முற்பிறப்பிற் செய்த தீவினையால் தனது நாயகனுகிய மன்னன் இக் காட்டில் தன்னை விட்டுப் பிரிய, அவனைக் காணுமையால் அழுகின்றதாகக் கூறினுளென்க. பிரிய, காணுது என்பன வினையெச்சங்கள். இமைக்கும் - பெயரெச்சம்.

162. சேதி..........

இ - ள்: அப்போது - அப்பொழுது, பார்மேல் - இப்பூமியின்மேல், நீதி நடத்துவான் - நீதியை நிலைக்கச் செய்பவனும், மன்னர் தம் - அரசர்களுடைய, கீர்த்தியினை - புகழை, நடத்துவான் - செல்லச் செய்பவனும், (ஆகிய) கொடை - ஈகைத்தன்மையுள்ள, வணிகன் - அந்த வணிகன், திருவை - இலக்குமியை நிகர்த்த தமயந்தியை, சேதிநகர்க்கு - சேதி தேசத்தைச் சார்ந்த பட்டணத்தில், செலவிட்டு - கூடச்சென்று போகச் செய்து, வட்டை - தான் செல்லும் வழியில், போயினுன் - போகவேண்டிய ஊருக்கு நடந்து சென்ருன்; எ - று.

தமயந்தியை வணிகன் சேதி நகரத்திற் சேர்த்து விட்டுச் சென்ருனென்க. வட்டை - வழி. நகரில் என்பது நகர்க்கு என உருபு மயங்கி வந்தது. ஏ - அசை. திரு - தமயந்திக்கு உவமையாகுபெயர். சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்தலும், பெரும்பொருள் படைத்தலால் நாட்

டின் புகழை மிகச்செய்து அரசற்கும் புகழ் தருதலும் வணிக ரியல்பாதலின் இவ்வாறு கூறப்பட்டது.

**163.** *அற்ற துகிலும்..........*

இ - ள்: (தமயந்தியைக் சேதிராசன் மனைவியி னுடைய பணிப்பெண்கள் பார்த்து உடனே தங்கள் அரசி யிடஞ்சென்று) மடவார் - அந்தப் பெண்கள், எடுத்து - குரலை உயர்த்தி, நில வேந்தன் - இப் பூமியை ஆளுகின்ற அரசனுடைய, பொன் தேவி - இலக்குமியை நிகர்த்த தேவியே!, அற்ற துகிலும் - பாதி அறுபட்ட ஆடை யும், அருது - நீங்காமல், ஒழுகு - வடிகின்ற, கண் ணீரும்—, உற்ற - மிகுதியாகிய, துயரும் - துன்பமும், உடையவளாய்—, நின்றாள் - நின்றவளாகிய, ஒருத்தியை - ஒரு பெண்ணை, கண்டேம் - இந்த நகரத் தெருவில் பார்த் தோம், என்றார் - என்று கூறினார்கள்; எ - று.

சேதி மன்னனுடைய மனைவியின் பணிப்பெண்கள் தமயந்தியைக் கண்டு போய் அவள் நிலைமையைக் கூறினா ரென்க. அற்ற, ஒழுகு, உற்ற - பெயரெச்சங்கள். அருது - எதிர்மறை வினையெச்சம். நின்றாள் - வினையா லணையும் பெயர். மற்று - இடைச்சொல்

**164.** போயகலா..........

இ - ள்: (அவர்கள் கூறியதைக் கேட்டவுடன் அவ ருள் ஒருத்தியை நோக்கி) வண்டு - வண்டுகள், வாழ் - வாழ் கின்ற, கூந்தல் - கூந்தலையுடைய, மயில் - மயிலை நிகர்த்தவ ளான சேதிராசன் மனைவி, தன் - தன்னுடைய, கொவ் வைக் கனி - கொவ்வைக் கனியைநிகர்த்த வாயை, திறந்து—, புனை - அலங்காரமாகச் செய்யப்பட்ட, இழையாய் - ஆபர ணங்களை அணிந்தவளே!, பூங்குயிலை - அழகிய குயில்போன் றவளும், ஆய - இவ் வுலகத்தில் அவதரித்த, மயிலை - மயில் போன்ற சாயலை யுடையவளுமாகிய அம் மடந்தையை, போய் அகலா முன்னம் - அவள் இந் நகரத்தைவிட்டு நீங்கு வதற்கு முன்னே, அறிய - நான் பார்த்தறிந்துகொள்ளும் பொருட்டு, நீ ஏகி - நீ போய், கொண்டு வா - அழைத்துக் கொண்டு வா, என்றாள் - என்று கூறினாள்; எ - று.

சேதிராசன் மனைவி தமயந்தியை அழைத்து வருமாறு ஒரு பணிப்பெண்ணை அனுப்பினுளென்க. குயில், மயில் தமயந்திக்கு உவமையாகுபெயர். கொவ்வைக்கனி வாய்க்கு உவமையாகுபெயர்.

165. ஆங்கவளும்...........

இ - ள்: ஆங்கு அவளும் ஏகி - அங்கே வந்த தமயந்தியும் சென்று, அரசன் பெருந்தேவி பூங்கழலின் மீதே புரண்டழுதாள் - அரசனுடைய பெரிய தேவியினது பொலிவாகிய பாதங்களின் மேலே விழ்ந்து புரண்டழுதாள், தாங்கும் இனவளையாய் - கையிற் தாங்கும் கூட்டமான வளையலை யுடையாய், உற்ற துயரெல்லாம் - நான் அடைந்த துன்பமெல்லாம், எனது வினை வழிகாண் - எனது தீவினையின் வழி வந்தன இதனை நீர் அறிவீராக, மெலிந்து - மிகவும் மனமடிவு உடையவளாய், என்ருள் - என்று கூறினுள்; எ - று.

ஏகி அழுதாள் எனவும் மெலிந்து என்ருள் எனவும் இயைக்க. வளையாய் - விளி. காண் - அசையெனினுமாம்.

166. அந்தாமரை...........

இ - ள்: ஒள் மலரின் - பிரகாசம் பொருந்திய பூக்களின், கள் - தேன் பொருந்திய, வார் - நீட்சிபெற்ற, கூந்தலாள் - கூந்தலையுடைய சேதியரசி, கண்டு - அவளைப் பார்த்து, பைந்தொடியே - பசுமையான வளையல்களை யணிந்த பெண்ணே!, (உன்னை நோக்குந்தோறும்) அம் - அழகிய, தாமரையி லவளோ என்று - தாமரை மலரில் விற்றிருக்கின்ற இலக்குமியே என்று, ஐயுற்று - சந்தேகங் கொண்டு, சிந்தாகுலம் - (உனது நிலைமையை நோக்க உண்டாகும்) மனக் கவலையானது, எனக்குத் தீராது - எனக்குத் தீரமாட்டாது, (ஆகையினுலே) உள்ளவாறு - உள்ளபடியே, எல்லாம் - உனக்கு நேர்ந்தவற்றை யெல்லாம், உரை என்ருள் - சொல்வாயாக என்று கூறினுள்; எ - று.

சேதியரசி தமயந்தியைக் கண்டு அவளின் நிலைமையை நோக்கிக் கவலைப்பட்டு அவளின் வரலாற்றை வினவினுளென்க. சிந்தா + ஆகுலம் = சிந்தாகுலம்; தீர்க்கசந்தி.

ஆல் - அசை, பைந்தொடி - பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கள்ள - 'அ' சாரியை. 6-ம் வேற்றுமை உருபெனினுமாம்.

167. என்னைத் தனி..........

இ - ள் : (அவள் அவ்வாறு வினவியவுடனே தமயந்தி அவளை நோக்கி) வாய் புலரா - வாய் புலர்ந்து, செந்தேன் - இனிய தேன்போன்ற, மொழி பதறு - சொற்கள் தடுமாற, சேர்ந்து - அவ்வரசியைக் கிட்டி, என்னை - என்னை, வனத்து - காட்டில், தனி - தனியாக, விட்டு - விட்டு, எம் கோன் - எம்முடைய தலைவன், பிரிந்து ஏக - நீங்கிச் செல்ல, அன்னவனை - அத்தகைய எனது நாயகனை, காணாது - காணாமல், அலமருவேன் - வருந்தித் தேடி அங்குமிங்குஞ்சுற்றுபவளாகி, இந் நகர்க்கு - இந்தப் பட்டணத்தின்கண், வந்தேன் - வந்து சேர்ந்தேன், இது என் வரவு - இது என் வரலாறாகும், என்றாள் - என்று கூறினாள்; எ - று.

அவ்வரசி அன்புடன் வினவியும், தமயந்திக்கு அவள் சிற்றன்னையாதலின் அவளிடத்தே தன் தாய் தந்தையர் கணவன் முதலியவர் பெயர்களை உரைக்க நாணி, அவர்களைக் கூறாது தனக்குத்துன்பமுண்டான காரணத்தைமட்டும் சுருக்கிக் கூறினாளென்க. அலமருவேன் - முற்றெச்சம். நகர்க்கே - உருபுமயக்கம். ஏ - அசை. வரவு தொழிற்பெயர். புலரா, பதறு என்பன செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். சேர்ந்து - செய்து என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

168. உன்றலைவன்...........

இ - ள் : (தமயந்தி கூறியதைக் கேட்டு) கொங்கு - வாசனையானது, ஏயும் - பொருந்தியிருக்கின்ற, தாரான் - மாலையை அணிந்தவளாகிய சேதியரசி, ஏந்திழையை - தாங்கப்படும் ஆபரணங்களை அணிந்தவளாகிய தமயந்தியை, குறித்து - நோக்கி, தாழ்குழலாய் - தொங்குகின்ற கூந்தலையுடையவளே, உன் - உன்னுடைய, தலைவன் தன்னை - நாயகனை, ஒருவகையால் - ஏதாவதோர் விதத்தினால், நாடி - தேடி, தந்துவிடும் அளவும் - சேர்ப்பிக்கும் வரையிலும், இங்கே - இந் நகரத்திலேயே, என்றனுடன் - என்னுடனே,

இனிது - இனிமையாக, இருக்க - இருக்கக்கடவாய், என்ருள்— என்றுரைத்தாள்; எ — று.

சேதியரசி தமயந்தியின் வார்த்தைகளைக் கேட்டவுடனே, உன் நாயகனைத் தேடிச் சேர்ப்பிக்குமளவும் நீ இங்கே என்னுடனே இனிதாக இருக்கக்கடவாய் என்ருளென்க. தாழ் குழல், ஏந்திழை - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைகள். இனிது - குறிப்பு முற்றெச்சம். 'என்தனுடன்' என்பதில் 'தன்' சாரியை. ஏயும் செய்யுமென் எச்சம்.

## 169. ஈங்கிவள்.........

இ - ள்: ஈங்கு - இச் சேதிநகரத்தில், இவள் — இத் தமயந்தி, இவ்வாறு - இப்படி, இருப்ப — (சேதியரசன் மனைவி முதலியோர் இன்னுரென அறியாதபடி) இருக்க, குன்று உறழ் தோள் — மலையையொத்த தோள்களையுடைய, வீமன் - வீமராசன், குறித்து - (நளனுந் தமயந்தியுங் காட்டுக்குச் சென்றமையைக்) கருதி, பூ குயிலும் — பொலிவாகிய குயில் போலுந் தமயந்தியும், போர் — போரிற் சிறந்த, வேல் புரவலனும் - வேலைத்தாங்கிய நளமகாராசனும், இன்னல் உழந்து - (எல்லாச் செல்வமும் இழந்தமையால்) துன்பத்தால் வருந்தி, ஏகி - போய், யாங்கு உற்ருர் என்று - எவ்விடத்தை அடைந்தார்கள் என்று, சென்று உணர்தி — போய் (அவ்விடத்தை) அறிவாயென்று சொல்லி, வேதியனை — சுவேதனென்னும் அந்தணனை, செலவிட்டான் — போகவிட்டான்; எ — று.

வீமராசன் நளனையுந் தமயந்தியையுந் தேடி வரும்படி சுவேதனென்னும் அந்தணனைப் போகவிட்டானென்க. புரவலன் — புரத்தலில் வல்லவன்; அரசன். குயில் — தமயந்திக்கு உவமையாகுபெயர். உணர்தி — எதிர்கால முன்னிலை முற்று. 'இ' காலங்காட்டிற்று.

## 170. ஓடும் புரவி...........

இ — ள்: ஓடும் — விரைந்து செல்கின்ற புரவி — குதிரைகள் பூட்டிய, தேர் — தேரையுடைய, வெய்யோன் — சூரியனது, ஒளி — பிரகாசமானது, சென்று - போய், நாடும் — அடைகின்ற, இடம் எல்லாம் — இடங்களிலெல்லாம், நாடிப்

போய் - தேடிச் சென்று, போதில் - தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, திரு - இலக்குமியானவள், நாடும் - எப்பொழுதும் குடியிருக்க எண்ணும், பொய்கை - தடாகங்களையுடைய, திருநாடாம் - அழகிய தேசமாகிய, திரு - செல்வம் பொருந்திய, சேதிநாடு - சேதிநாட்டில், சென்று - போய், கூடினான் - சேர்ந்தான் ; எ - று.

வீமனால் அனுப்பப்பட்ட அந்தணன் எவ்விடங்களிலுந் தேடிய பின்பு சேதிநாட்டை அடைந்தானென்க. வெய்யோன் ஒளி சென்று 'நாடுமிடமெல்லாம்' என்றதனால் அவன் பூமி முழுவதும் தேடினான் என்பது பெறப்படும். திரு மூன்றும் முறையே இலக்குமியையும் அழகையும் செல்வத்தையுங் குறித்து வந்தன. 'நாடும் நாடாம்' எனச் சேர்க்க. ஆம் என்பது ஆகும் என்பதன் இடை குறைந்து நின்றது.

171. தாமஞ்சேர்.........

இ - ள் : (சேதிநகரத்தை அடைந்தபின்) அருமறையோன் - அருமையான வேதத்திற்குரியவனாகிய அந்தப் பிராமணன், நின்றாளை - அங்கு நின்றவளாகிய தமயந்தியை, தாமஞ்சேர் ஓதி - மாலைசேர்ந்த கூந்தலையுடைய, தமயந்தி ஆம் என்று - தமயந்தியே ஆவள் என்று, அறியா - அறிந்து, வீமன் - வீமராசனது, கொடிமேல் - பூங்கொடி போன்ற பெண்ணாகிய அத் தமயந்தியின் முன்னே, விழுந்து அழுதான் - வீழ்ந்து புலம்பினான், கொம்பும் - பூங்கொடிபோன்ற தமயந்தியும், அழுது - அழுதுகொண்டு, அவன் - அப் பிராமணனுடைய, செம்பொன் அடிமேல் - சிவந்த பொன் போன்ற பாதங்களின் முன்னே, வீழ்ந்தாள் — ; எ - று.

தேடிவந்த வேதியன் தமயந்தியைக் கண்டு வீழ்ந்து புலம்ப, அவளும் அவனுடைய பாதங்களின் முன்னே அழுது கொண்டு வீழ்ந்தாளென்க கொடி, கொம்பு என்பன தமயந்திக்கு உவம ஆகுபெயர்கள். மேல் ஏழனுருபு. கொம்பும் என்பதிலுள்ள உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

172. மங்கை விழிநீர்.........

இ - ள் : (மேற்கூறியபடி இருவரும் விழுந்தழும் போது) மங்கை - தமயந்தியினுடைய, விழிநீர் - கண்ணீரானது, மறையோன் - அவ் வேதியனுடைய, கழல் - பாதங்களை, கழுவ - அலம்ப, அங்கு - அவ்விடத்தில்,

அவன் தன் – அப் பிராமணனுடைய, கண்ணீர் – விழி நீரானது, அவள் - அத் தமயந்தியின், உடல்மேல் – தேகத்தின்மேல், பொங்க – அதிகரித்துச் சொரிய, (இவ்வாற்றால்) கடல்போலும் – சமுத்திரம்போல அதிகரித்த, காதலார் – அன்புடையவர்களாகிய அவ்விருவரும், கையற்றார் – செயல் அற்றவர்களாய், தங்கள் உடல் - தங்களுடைய உடலைப் போல, உயிர் ஒத்தார் – உயிரும் ஒருமித்தவரானார்; எ – று

தமயந்தி தன்னை அறிந்த ஒருவரைக்கண்டவுடன் துன்ப மேலீட்டால் அத்துன்பத்தைச் சாந்திசெய்யுமுகமாக அவரைச் சார்ந்துவிழ வேதியனும் தமயந்தியின் நிலையைக் காணச் சகியாதவனாகி அவளைச் சார்ந்து வீழ்ந்து புலம்பி உடலும் உயிரும் இயைந்த நிலையினரானார். இதனால் தமயந்தி படுந் துன்பத்தைப் பிராமணனும் அநுபவித்தான் என்றவாறு.

**173.** மாரிபொரு கூந்தல்...........

இ – ள்: (பின்பு அவ்வேதியன் சேதியரசியை நோக்கி அவளுக்குத் தமயந்தியைச் சுட்டிக்காட்டி) மாரி – மேகத்தை, பொரு – நிகர்த்திருக்கின்ற, கூந்தல் – கூந்தலையுடைய, மாதராய் - அழகுபொருந்திய பெண்ணே!, நீ பயந்த - நீ பெற்ற, காரிகை – அழகுள்ள இப்பெண்ணாகிய தமயந்தி, பட்ட – அனுபவித்த, துயர் – துன்பத்தை, கண்டாயோ - அறிந்தனையா?, (இவள் அத்துயரத்தால்) சோர் – தொங்குகின்ற, குழலும் – கூந்தலும், வேணியாய் – சடையாகவும், வெண்துகிலும் - சுத்தமான வெள்ளை வஸ்திரமும், பாதியாய் - பாதியாகவும், வெம் - வெம்மையாகிய, துயருக்கு – துன்பத்திற்கு, ஆணியாய் – எல்லையாகி, அயர்ந்து – சோர்ந்து, நின்றாள் – நின்றனள் (என்று கூறினான்); எ - று.

அந்தப் பிராமணன் சேதியரசிக்குத் தமயந்தியைச் சுட்டிக்காட்டி, "மாதே உனது குமாரத்தி அடைந்திருக்கும் துன்பமான நிலையைப் பார்த்தனையா? குழலுஞ் சடையாய்த் துகிலும்பாதியாய்த் துக்கத்திற்கிடமாய் நின்றாள் இவள்" என்று கூறினானென்க. மாதர், காரிகை – அழகு. படுதல் – அனுபவித்தல், கண்டாயோ – ஓ, வினா. சோர்குழல் - வினைத்தொகை. வெண்மை + துகில் = வெண்டுகில். துன்பம் அவளைச் சுற்றி நிற்றலானும், தமயந்தியில் துன்பங்கள் யாவும் பொருந்தியிருத்தலானும் 'வெந்துயருக்கு ஆணி' என்றார்.

**174.** தன் மகள்.........

இ - ள்: (அவ்வாறு வேதியன் கூறியமாத்திரத்தில்) மென்மலரை - (நீரிலிருக்கும்) மெல்லிய மலர்களை, கோதிப் போய் - கொம்புகளாலே வகிர்ந்துகொண்டேபோய், மேதி - எருமைகள், குருகு - (அம்மலர்களின் மேலிருக்கும்) நாரைகளை, எழுப்பும் - எழுப்பிவிடுகின்ற, தண் - குளிர்ச்சிபொருந்திய, பணைசூழ் - மருதநிலம் சூழ்ந்த, சேதி - சேதி நாட்டிற்கு, கோன் - அரசனது, தேவி - மனைவியானவள், (தமயந்தி) தன் மகளாவது - தன் புத்திரியாயிருப்பதை, அறியா - அறிந்து, தடுமாறு - (வருத்தத்தால்) மனந் தடுமாறி, திகைத்து - மயங்கி, போய் - (தமயந்தியின்) சமீபத்தில் சென்று, அழுது - அரற்றி, (அவளுடைய) பொன்வடிவின்மேல் - பொன்மயமான தேகத்தின்மேல், வீழ்ந்தாள்—, எ - று.

சேதியரசன் மனைவி தமயந்தியைத் தன் மகளென்று அறிந்தவுடனே அவளுடைய பரிதாப நிலையைக் குறித்துண்டான துக்கத்தினாலே மனங் கலங்கி அழுது அவள்மேல் வீழ்ந்தாளென்க. அறியா - செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். எழுப்பும் - பிறவினை.

**175.** கந்தனையும்.........

இ - ள்: (அதன்மேல்) சேதியர் கோன் - சேதி நாட்டாருடைய அரசன், பண்டை - பழமையான, விதியிலே - தலைவிதியினாலே, (அவ்வாறு வறுமைப்பட்டுத் தன்பதிக்கு) மீண்டு - திரும்பி, போந்தாளை - வந்தவளாகிய தமயந்தியை, (அவள்) கந்தனையும் - தனது குமாரனையும், கன்னியையும் - மகளையும், கண்டாயினும் - பார்த்தாவது, சிறிது - கொஞ்சம், தன் துயரம் - தன்னுடைய துக்கம், தீர்ந்து - நீங்கி, தனி - தனியாக, ஆறு - மனம் ஆறும்படி, தந்தை - அவளுடைய தகப்பனது, பதியிலே - நகரத்திற்கு, போக்கினான் - போகும்படி செய்தான்; எ - று.

இவள் தன் நாயகனையும் பிள்ளைகளையும் பிரிந்த துக்கத்தினால் மிகவும் மனங் கலங்கி யிருக்கின்றாள்; ஆதலின் இவளை வீமன் பதிக்கு அனுப்பிவிட்டால் தன் பிள்ளைகளைப் பார்த்தாயினும் மனந் தேறுவாளெனக் கருதி வேதியனுடன் தமயந்தியைச் சேதி அரசன் அந் நகரத்

திற்கு அனுப்பிவிட்டானென்க. கந்தன் – கருணைக்குரியவன்; புத்திரன். போந்தாள் – வினையாலணையும் பெயர்.

176. கோயிலும்.........

இ – ள்: தீய – தீமையாகிய, கொடும் – கொடுமை பொருந்திய, கான் – வனத்தை, ஆள் – ஆளும்படி, (அதாவது காட்டில் நடந்து வருந்தும்படி) மக்களையும் – பிள்ளைகளையும், கைவிட்டு – தந்தையிடம் அனுப்பிவிட்டு, காதலன் பின் – ஆசைக்குரியவனாகிய நாயகன் பின்னே, போனாள் – (அவனே தனக்குரியவனென்று நினைத்து) சென்றவளாகிய தமயந்தி, புகுந்தபொழுது – விதர்ப்ப நகரத்தில் நுழைந்த காலத்தில், (அவளைக் காணும்பொருட்டு) கோயிலும் – வீமராசனது அரண்மனையிலுள்ளவர்களும், அந்தப்புரமும் – அந்தப்புரத்திலுள்ள இராச ஸ்திரீகளும், கொடி நுடங்கு – கொடிகள் அசைந்துகொண்டிருக்கின்ற, வாயிலும் – அரண்மனை வாயிலிலுள்ளவர்களும், நின்று – அவளிடத்தே வந்து நின்று, மயங்கிய – கூடி ஒன்றாகக் கலந்தார்கள்; எ – று.

தமயந்தி அந் நகரத்திற் புகுந்தவுடனே அவள் வரவை உணர்ந்து அவளைப் பார்க்கவேண்டுமென்ற அவாவினாலே அரண்மனையிலுள்ளவர்களும் அந்தப்புர மகளிர்களும் அரண்மனை வாயிலிலுள்ள சனங்களும் அவளிடத்தே வந்து கூடினார்களென்க. கோயில், அந்தப்புரம், வாயில் என்பன இடவாகு பெயராய் அவ்விடத்திலுள்ள மனிதர்களையுணர்த்தி நின்றன. கோயில், அந்தப்புரம், வாயில் என்பதற்கேற்ப மயங்கிய என்ற அஃறிணை முடிபே வந்தது. ஏ – அசை.

177. அழுவார்.........

இ – ள்: (அவ்வாறு எல்லாருங் கூடியவுடனே) தமர் – தமயந்தியின் சுற்றத்தார், அழுவார் – அழுகின்றவரும், விழுவார் – (துக்கத்தால் கீழே) விழுகின்றவரும், அயிர்ப்பார் – (இவள்தானோ தமயந்தி என்று) சந்தேகிப்பவர்களும், உயிர்ப்பார் – (அவள் நிலைமையைப் பார்த்து) பெருமூச்சுவிடுகின்றவரும், தொழுவார் – (அவளை) தொழுகின்றவரும், எங்கும் சூழ்வார் – அவளைச் சுற்றி எல்லாப்

பக்கங்களிலும் சுற்றிக்கொள்பவரும், (ஆனர்கள் ; அதனால்) நாம - அச்சத்தைத் தருகின்ற, வேல் - வேலாயுதத்தை யுடைய, வீமன் நகர் - வீமராசனது நகரமானது, வழுவாத - நீங்காத, காமம் - விருப்பமென்னும், நீர் - சலம் நிறைந்த, ஓதம் - அலைகளையுடைய, கடல் - ஒரு சமுத்திரமானது, கிளர்ந்தால் ஒத்தது - பொங்கியதை நிகர்த்து ஆரவாரம் மிகுந்ததாயிற்று; எ - று.

தமயந்தியின் சுற்றத்தார்களிற் சிலர் அவளைப் பார்த்து அழுவாராயினர் ; சிலர் விழுவாராயினர் ; சிலர் சந்தேகிப்பா ராயினர் ; சிலர் பெருமூச்சு விடுவாராயினர் ; சிலர் தொழுவாராயினர் ; சிலர் அவளைச் சுற்றிக்கொள்வாராயி னர் ; அவ்வாருனதால் அந் நகரம் சமுத்திரம் பொங்கினுற் போன்ற ஆரவாரம் மிகுந்ததாயிற்றென்க. ஆல், ஏ - அசைகள். நாம் - அச்சம் ; அகரச் சாரியை பெற்று நாம என நின்றது.

178. தக்கையை முன்.........

இ - ள் : தந்தையை - (தமயந்தி) தன் பிதாவை, முன் - எதிரிலே, காண்டலும் - பார்த்த மாத்திரத்தில், தாமரை - தாமரை மலர்போன்ற, கண் - கண்களில், நீர் சொரிய - நீரானது சிந்த, சிந்தை கலங்கி - மனம் கலக்க முற்று, திகைத்து - மயங்கி, அலமந்து - துன்பமுற்றுச் சுழன்று, (விமராசனை நோக்கி) எந்தாய் - எனது தந்தையே, யான் பட்டதே - நான் சிக்கி வருந்திய துன்பம் அந்தோ எத்தகையது, என்ன - என்று சொல்லி, படை - வேலாயு தத்தை நிகர்த்த, நெடும் - நீண்ட, கண் - கண்கள், விட்ட நீர் - சொரிந்த நீரானது, மேலேவிழ - அவன்மேலே விழும் படி, போய் - அவன் சமீபத்தில் போய், வீழ்ந்தாள் - (அவன் பாதங்களிலே) விழுந்தாள் ; எ - று.

தமயந்தி தந்தையைக் கண்ட மாத்திரத்தில் துக்கம் சகிக்க முடியாமல் அழுது அவனடியில் விழுந்தாளென்க. காண்ட லும் - வினையெச்சம். துன்பத்தின் கொடுமையையும் மிகுதி யையும் நோக்கி 'பட்டதே' எனக் கூறினள்.

179. செவ்வண்ண..........

இ - ள் : செவ்வண்ணம் - சிவந்த நிறமுடைய, வாயா ளும் - வாயை யுடையவளாகிய வீமன் தேவியும், தேர் வேந்தனும் - இரதத்தையுடைய அரசனாகிய வீமனும்,

மகளை - தம் புத்திரியாகிய தமயந்தியை, அவ்வண்ணம் - அந்தவிதமான, (பரிதாபமான நிலையில்) கண்டக்கால் - பார்த்தால், ஆற்றுவரோ - (அதனால் தங்களுக் கேற்படுந் துயரத்தைச்) சகிப்பார்களோ, (ஒருபோதும் சகிக்கமாட்டார் கள்; அவர்கள் மிகுதியும் துக்கத்தை யடைந்தார்கள்; அதனால் அவர்களுடைய) மெய்வண்ணம் - உடம்பின் தோற்றம், ஓய்ந்து - சோர்வுற்று, நா - நாவானது, நீர்போய் - நீர்ப் பசையற்று, உலர்கின்றது - அடிக்கடி உலர்கிறதாயிற்று, ஒத்த - (அவர்களுக்கு) இயைந்த, தமர் - சுற்றத்தார்கள், கண்ணீரில் - தங்கள் கண்களிலிருந்தும் வடிந்த நீரிலே, நின்று - நிலைபெற்று, நீந்தினார் - நீந்தினார்கள்; எ - று.

அழுது விழ்ந்த தமயந்தியைப் பார்த்து அவளுடைய தந்தையுந் தாயும் சுற்றத்தாரும் வருந்தினார்களென்க. ஆற்றுவரோ - ஓ எதிர்மறைப்பொருளில் வந்தது. துக்க மிகுதியால் வெப்பமதிகரிக்கும். ஆதலின் நாவறண்டதென்க.

180. பனிபிருளிற்.........

இ - ள்: (அப்படி எல்லோரும் வருந்திக்கொண்டிருக் கும்போது) தாய் - தமயந்தியின் தாயானவள், பொன்னினை - இலக்குமியை நிகர்த்த தமயந்தியை, நோக்கி - பார்த்து, புலர்ந்து-(துயரத்தால்) வாடி, பனி - அஞ்சுகின்ற, இருளில் - இருட்டில், பாழ்மண்டபத்திலே - பாழான மண்டபத்திலே, உன்னை - உன்றனை, நினையாது - சிந்தியாது, நீத்து - விட்டு, அகன்றபோது - (நின் கணவன்) நீங்கிச் சென்ற காலத்தில், தனியே நின்று - (நீ) தனிப்பட்டு நின்று, என் நினைத்தாய் - என்ன நினைத்தாயோ? என் செய்தாய் - என்ன செய்த னையோ? என்னா - என்று சொல்லி, புலம்பினாள் - கதறி அழுதாள்; எ - று.

எல்லாரும் கூடிப் பலவிதமாக வருந்தும்போது தமயந்தி யின் தாயானவள் தனியே அவளைத் தழுவிக்கொண்டு அவள் முகத்தை நோக்கி, 'மகளே! நின் கணவன் உன்னை, அச்ச மிகுந்த இருளில் அந்தக் காட்டில் பாழ் மண்டபத்தில் தனி யாக விட்டுச் சென்ற காலத்தில், நீ என்ன நினைந்தாயோ! என்ன செய்தனையோ! என்று புலம்பினாள் என்க. பனி இருள் - வினைத்தொகை.

கலிதொடர் காண்டம்—உரை முற்றிற்று

# கலி நீங்கு காண்டம்—உரை

## காப்பு

க. மூலப் பழமறைக்கு..........

இ - ள்: மால் - பெரிய யானை - கஜேந்திரனென்னும் யானையானது, முந்து அருள் - முதன்மையான கிருபையையுடைய, வேதமுதலே - வேதத்தில் கூறப்படும் முதற்பொருளே, என - என்று, அழைப்ப - கூப்பிட, வந்து அருளும் - அப்பொழுதே வந்து கிருபைசெய்து அதனைக் காப்பாற்றிய, (ஆதிமூலக் கடவுளின்) செந்தாமரை - சிவந்த தாமரை மலர்போன்ற பாதங்களை, மூலம் - எல்லாவற்றிற்கும் ஆதிகாரணமாகிய, பழமறைக்கு - பழமையான வேதத்திற்கு, முன்னேயும் - முதலில் உள்ள பிரணவத்திலும், காணலாம் - பார்க்கலாம், காலிக்கு - புவியில் ஜெனித்துள்ள பசுக்கூட்டத்திற்கு, பின்னேயும் - பின்னாகவும், காணலாம் - பார்த்தல்கூடும்; எ - று.

கஜேந்திரன் என்னும் யானையானது முதலையினிடம் அகப்பட்டு வருந்தி, ஆதிமூலமே என்றழைத்தபோது, வந்து அருள் புரிந்தவராகிய விஷ்ணுமூர்த்தியினது திருப்பாதங்களை வேதத்தின் முன்னும் பசுக்கூட்டத்தின் பின்னும் காணலாமென்க. முன்னேயும் பின்னேயும் என்பவற்றிலுள்ள ஏகாரங்கள் - சாரியைகள். தாமரை - பாதங்களுக்கு உவமையாகுபெயர். இச் செய்யுளால் இக் காண்டம் இனிது முடிதற்பொருட்டு, ஆசிரியர் விஷ்ணுவைத் துதித்தாரென்க. வேதங்களுக்கு முதன்மையான அரியவர்; அன்பர்களுக்கு அண்மையாய் எளியவர் என்னும் பொருள்பட வந்தது.

உ. போதுவார்.........

இ - ள்: போது - உரிய காலங்களில், வார் - நுண்மையாகிய, நீறு அணிந்து - திருநீற்றைத் தரித்து, பொய்யாத - பொய்த்துப் போகாத, (அதாவது உண்மைப்பலனைத் தரவல்ல) ஐந்தெழுத்தை - பஞ்சாட்சரமாகிய மந்திரத்தை, ஓதுவார் - சொல்லுகின்றவர்களுடைய, உள்ளம் - நெஞ்சகமே, நீதியார் - நடுவுநிலை தவறாதவர்களுடைய,

பெம்மான் – தலைவனும், அமரர் – தேவர்களுடைய, பெருமான் – தலைவனும் (ஆகிய), ஒருமான் ஒப்பற்ற மானைத் தாங்கிய, கை – கையையுடைய, அம்மான் – எவர்க்கும் தந்தையென்னும் சிவபெருமான், நின்று – நிலைபெற்று, ஆடும் – ஆடுகின்ற, அரங்கு – நடனசாலை, என – என்று, உரைப்பார் – பெரியோர் சொல்லுவார்; எ – று.

விபூதி அணிந்து பஞ்சாட்சரத்தைச் செபிப்பவர்களுடைய உள்ளமே சிவபெருமான் நின்றாடும் நடனசாலையென்க. இதனால் ஆசிரியர் தாம் எடுத்த காரியம் இனிது முடிதற்பொருட்டுச் சிவபெருமானைத் துதித்தாரென்க.

181. மன்னா.........

இ – ள்: (தமயந்தி மேற்கூறியபடி தந்தை நகரத்திற் சேர்ந்திருக்க அவளைப் பாழ்மண்டபத்தில் விட்டு) முரண் – மாறுபாட்டையுடைய, கலியின் – கலிபுருஷனுடைய, வஞ்சம் – வஞ்சனைபொருந்திய, பழி வழியே – பழி சூழ்ந்த நெறியிலே, செல்கின்றான் – நடக்கின்றவனாகிய அந்நளன், பல் நாக வேந்தன் – பல சர்ப்பங்களுக்கு அரசனாகிய கார்க்கோடகனென்பவன், வனத்தீயில் – காட்டுத்தீயின் (நடுவில் அகப்பட்டு), பதைத்து – உடல் துடித்து, உருகி – மனங் கலங்கி, மன்னா – அரசனே!, உனக்கு அபயம் – உனக்கு நான் அடைக்கலம், என்னா – என்று, சொன்ன – உரைத்த, மொழிவழியே – வார்த்தை வந்த அவ்வழியையே, பார்த்து – பின்பற்றி, சென்றான் – (அந்தச் சர்ப்ப ராசன் இருக்குமிடத்துக்குப்) போனான்; எ – று.

நள்ளிரவில் நடுக்காட்டிலுள்ள மண்டபத்தில் தமயந்தி தூங்கும்போது அவளைத் தனியே விட்டுச் சென்ற நளன், வழியில் கார்க்கோடகன் என்னும் நாகம் காட்டுத்தீயில் அகப்பட்டு வருந்தி அவனை விளித்து, "அரசனே! உனக்கு நான் அடைக்கலம்" என்று கூவ, அக்குரலைச் செவியிலேற்று அக் குரல் உண்டான இடத்தை நோக்கிச் சென்றனனென்க. ஏ இரண்டும் அசைகள். செல்கின்றான் – வினையாலணையும் பெயர். பல் + நாகம் = பன்னாகம்.

182. ஆருந் திரியா.........

இ – ள்: (அங்ஙனம்போய்) ஆரும் – எவரும், திரியா – சஞ்சரிக்கக்கூடாத, அரை இருளின் – பாதி இரவில், அங்ஙனே – முற்கூறிய அவ்விதமாகவே (அதாவது பாதித் துணியோடு), சோர்குழலை – சோர்கின்ற கூந்தலையுடைய தமயந்தியை, நீத்த – பிரிந்ததனுலேற்பட்ட, துயரோடும் – துக்கத்துடனே, திரிவான் – அலைந்து திரிபவனுகிய, வீரன் - வீரபுருஷனுகிய நளன், அத் திக்கானில் – அந்தத் தீயவனத்தில், செம் தியின் வாய்ப்பட்டு – சிவந்த அக்கினியின் நடுவில் அகப்பட்டு, எரிவானை – எரியத் தொடங்கினவனை கார்க்கோடகனை, எதிர் – நேரில், கண்டான் – பார்த்தான்; எ – று.

தமயந்தியைப் பிரிந்ததினுல் ஏற்பட்ட துயரத்துடனே கொடிய காட்டில் அலைந்து திரிந்த நளன், காட்டுத்தீயில் அகப்பட்டு எரியுந் தருணத்திலிருந்த கார்க்கோடகனை எதிரிற் கண்டானென்க. ஆர் - யார் என்பதன் மரூஉ. சோர்குழல் – அன்மொழித்தொகை. நீத்த – பெயரெச்சம். எரிவான் வினையாலணையும்பெயர். திரிவான் – முற்றெச்சம். திரியா – ஈறுகுறைந்த எதிர்மறைப் பெயரெச்சம்.

183. வேதமுனி..........

இ – ள்: மாலை - மலர் மாலையிலே, மணி – அழகிய, வண்டு - வண்டுகள், சந்து – இசையை, எடுத்த – உயர்த்திப் பாடிய, தோளானை – புயங்களையுடைய நளனை (அச்சர்ப்பம் நோக்கி), வேதமுனி ஒருவன் – வேதத்தையுணர்ந்த ஒரு முனிவனது, சாபத்தால் – சாபத்தினுல், வெம் - வெவ்விய, கானில் – இக் காட்டில், ஆதபத்தின் வாய்ப்பட்டு – அக்கினியிலகப்பட்டு, அழிகின்றேன் – அழிந்துகொண்டிருக்கிறேன் (ஆதலால் நீ), காதலால் – அன்போடு, வந்து – என் சமீபத்தில் வந்து, எடுத்து – என்னைத் தூக்கி, கா என்றுன் – காப்பாற்றக் கடவாயாக என்று சொன்னுன்; எ – று.

நளனைச் சமீபத்திற் கண்டவுடனே கார்க்கோடகன் தனது நிலைமையைக் கூறித் தன்னைக் காப்பாற்றும்படி

வேண்டினனென்க. சாபம் – பெரியோரின் கோபமொழி. தான் – அசை.

184. சீரியாய்.........

இ – ள் : (மேலும்) அந்த வெம் தழலால் – அந்த வெவ்விதாகிய அக்கினியினால், வெம்மைப்படுகின்றான் – வெப்பத்தை யடைந்து கொண்டிருக்கிறவனான கார்க்கோடகன், வேல் – வேலாயுதத்தைத் தரித்த, வேந்தை – நளமகாராசனை, பார்த்து – நோக்கி, சீரியாய் – சிறப்புள்ளவனே!, நீ எடுப்ப – நீ என்னை இந்த அக்கினியினின்றும் எடுப்பதினால், தீமை கெடுகின்றேன் – ஏற்பட்ட துன்பம் நீங்கப்பெறுகின்றேன் (ஆதலால்), உறும் – மிகுதியாகின்ற, தழல் – நெருப்பு வெக்கையை, அவித்து – தணித்து, கொண்டு போய் – என்னை எடுத்துக்கொண்டுபோய், பாரில் – வேறு இடத்தில், விடுக என்றான் – விடுவாயாக என்று வேண்டினான்; எ – று.

கார்க்கோடகன் நளனை நோக்கி நீ அக்கினியினின்றும் என்னை எடுப்பதனால், என்னுடைய துன்பம் சிறிது நீங்குகிறது. ஆயினும் இந்த அக்கினியை அவித்து என்னை இவ்விடத்தினின்றும் எடுத்துக்கொண்டுபோய் வேறிடத்தில் விடுவாயாக என்று கூறினானென்க.

185. என்றுரைத்த.........

இ – ள் : என்று உரைத்த – என்று கார்க்கோடகன் சொன்ன, அவ்வளவில் – அச்சமயத்தில், ஏழு உலகும் – சப்த தீவுகளையும், சூழ் – அவற்றைச் சூழ்ந்த, கடலும் – சப்த சமுத்திரங்களையும், குன்றும் – மலைகளையும், சுமந்த – தாங்கிய, குலம் – மேன்மையாகிய, புயத்தான் – புயங்களையுடையவனும், இரவு அரசை – இராவுக்கு அரசனான சந்திரனை, வென்றான் – (தன்முக காந்தியினாலும் எல்லோரையும் மகிழ்வித்தலாலும்) ஜெயித்தவனுமான நளன், வென்றி – வெற்றி பெற்ற, அரவு அரசை – அந்தச் சர்ப்ப ராசனை, எடுத்துக்கொண்டு – தூக்கிக் கொண்டு, ஆரணியந்தன்னில் – காட்டில், அகன்றான் – போயினான்; எ – று.

கார்க்கோடகனை நளன் எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு அகன்றானென்க. வென்றி - தொழிற்பெயர், ஆரணியந்தன்னில் என்பதில் தன் சாரியை, வென்றான் வினையாலணையும் பெயர். 'சுமந்த' என்றார் முன்னுளைய அவனது ஆட்சி வன்மையைக் கருதி.

186. மண்ணில்.........

இ - ள் : (அவ்வாறு நளன் கார்க்கோடகனை எடுத்துச் சென்றபோது கார்க்கோடகன்) போர் - யுத்தகளத்தில், மா - யானைப் போரில், வலான் - வல்லமை யுடையவனான நளன், நண்ணி - என் சமீபத்தில் சேர்ந்து (என்னிடத்தே அன்புகொண்டு), செய்த - இயற்றிய, உதவிக்கு - இந்த உபகாரத்திற்கு, மாறு ஆக - பதிலுபகாரமாக, ஏவலால்-அவனை ஏவும்படி செய்து அதனால், தீங்கு - (நளனுக்கு நன்மை தரத்தக்க) தீமையை, இழைப்பேன் - அவனுக்குச் செய்வேன், என்று - என்று நினைத்து, (நளனை நோக்கி) நின் - உன்னுடைய ; வல் தாளால் - வலிமையான பாதங்களினால், ஒன்று முதல் - ஒன்று முதலாக, எண்ணி - அடி எண்ணிச் சொல்லி (பத்தாவது அடி வந்தவுடன்), தச என்று - தச என்று சொல்லி, மண்ணின் மீது - பூமியின் மேல், என்தனை - என்னை, இடுக என்றான் - விடுவாயாக வென்று வேண்டினான் ; எ - று.

கார்க்கோடகன் நளனை நோக்கி "நீ பத்தடி தூரம் நடந்து சென்று தச என்று கூறி என்னை விடு என்று வேண்டினானென்க. நளன் செய்த உதவிக்குப் பிரதியுபகாரமாகக் கார்க்கோடகன் நன்மை செய்ய விரும்பித் 'தச' என்று கூறச் சொன்னான். தச என்பது வடமொழியில் பத்து என்றும் கடி என்றும் பொருள்படும். நளனை அரவு தீண்டுதல் செய்கை யளவில் தீதாயினும் அது அவனுக்கு நன்மை பயக்குமாதலின் அதனை அவன் வாய்மூலமே கூறச் செய்து (தச என்று கூறச்செய்து) கடித்தான் என்றவாறு. கடித்தமை தீமையும் நளன் தன் உருக் கரத்தற்கு உதவியும் ஆதலின் தீமையும் உபகாரமுமாயிற்று.

**187.** ஆங்கவன்..........

இ – ள்: ஆங்கு – அவ்விடத்தில், அவன் – அந்தக் கார்க்கோடகன், அவ்வாறு – அவ்விதமாக, உரைப்ப – சொல்ல, அது கேட்டு – அந்த வார்த்தையைக் கேட்டு, (அதன்படியே செய்யத் துணிந்தவனாய்) தீகலியால் – தீங்குள்ள கலிபுருஷனால், செற்ற – கோபிக்கப்பட்ட, திரு – சிறப்புள்ள, மனத்தான் – மனத்தையுடையவனான நளன், பூ கழலை – அழகிய தனது பாதங்களை, மண்ணின்மேல் வைத்து – பூமியின்மேல் வைத்து அடி அளந்து, வாய்மையால் – உண்மைப்படி, தச என்று எண்ணினான் – பத்தடி வந்தவுடன் தச என்று கணக்கிட்டுச் சொன்னான் (அவ்வாறு சொன்னவுடனே கார்க்கோடகன்), எயிறு – தன்னுடைய பற்களை, வைத்தான் – நளனுடைய தேகத்தில் சேர்த்தான் (அதாவது பற்களால் நளனைக் கடித்தான்); எ – று.

கார்க்கோடகன் சொல்லியபடியே நளன் தச என்று சொல்லுதலும் அவன் நளனைக் கடித்தான் என்க. அங்கு என்பது ஆங்கு என நீட்டல் விகாரமாயிற்று. செற்ற – பெயரெச்சம். தான் – அசை. 'தச' என்ற உடனேயே கடித்தான் என்றவாறு.

**188.** வீமன் மடந்தை.........

இ – ள்: (அவ்வாறு கார்க்கோடகன் நளனைக் கடிக்கவே) மெய்ம்மை – சத்தியத்தை, விடாதான் – கைவிடாதவனாகிய அந் நளனுடைய, திருமேனி – அழகிய தேகமானது, வெந்து – எரிந்து, வீமன் – வீமராசனுடைய, மடந்தை – பெண்ணாகிய தமயந்தியின், விழி – கண்களும், முடிய – பூரணமாக, கண்டு அறியா – பார்த்து அறிய முடியாத, காமம் – அழகினையுடைய, நெடுந்தோள் – நீண்ட தோள்கள், வறியோருக்கு – தரித்திரர்களுக்கு, ஏமம் – பாதுகாவலை, கொடாதார் – செய்யாதவர்களுடைய, அகம்போல் – மனத்தைப்போல, குறுகிற்று – குறுகி அழகிழந்தன; எ – று.

கார்க்கோடகன் நளனைக் கடித்தவுடனே அவனுடைய விஷத்தால் நளனது தேகம் வெந்து தோள்கள் சுருங்கின என்க.

ஏமம் - இன்பம் எனினும் பொருந்தும். ஏ - ஈற்றசை.

**189.** *ஆற்றல்.........*

இ - ள்: (அவ்வாறானவுடனே) ஏற்று - (பகைவர்களை) எதிர்த்து, அமரில் - போரில், கூற்று அழைக்கும் - (அவர்களின் உயிரைக் கொண்டுபோதற் பொருட்டு) யமனை அழைக்கின்ற, மின்கால் - மின்னல்போன்ற ஒளியைக் கக்குகின்ற, அயில்முகம் - கூர்மையான நுதி பொருந்திய, வேல் - வேலாயுதத்தையுடைய, வேந்து - நளமகாராசன், (கார்க்கோடகனை நோக்கி) ஆற்றல் - வல்லமையுடைய, அரவு அரசே - சர்ப்ப ராசனே, சீற்றம் ஒன்றின்றி - என்மேல் பகை ஒன்றும் இல்லாமல் இருக்கும் போதே, சினம் எயிற்றால் - கொடுமையாயுள்ள விஷப் பல்லினால், இன்று - இப்பொழுது, (கடித்து) என் உருவத்தை - என்னுடைய வடிவத்தை, மாற்றுதற்கு - வேறுபடுத்துவதற்கு, என் காரணம் - காரணம் யாது, என்றான் - என்று அவனை நோக்கி வினவினான் எ - று.

எனக்கும் உனக்கும் ஒரு பகையும் இல்லாதிருக்கப் பகைவனுக்குச் செய்வதுபோல நீ என்னைக் கடித்து உன்னுடைய விஷத்தினால் எனது வடிவத்தை ஏன் இங்ஙனம் மாற்றினாய் என்று நளன் கார்க்கோடகனை வினவினான் என்க. சீற்றம் - குணப்பெயர். கால் - வினைத்தொகை. ஆங்கு - அசை. அயில் கூற்றுவனை அழைக்கும் என்றவாறு. (தப்பாமற் கொல்லும் என்பது கருத்து.)

**190.** *காயுங் கடகளிற்றாய்.........*

இ - ள்: (அவ்வாறு நளன் வினவியவுடன் கார்க்கோடகன் அவனை நோக்கி) காயும் - கோபிக்கின்ற, கடம் - மதம் பொருந்திய, களிற்றாய் - யானையை யுடையவனே, என்பேர் - என்னுடைய நாமமானது, கார்க்கோடகன் -

கார்க்கோடகன் என்பதாகும், யான் — நான், நீ இங்கு வந்தது — நீ இவ்விடத்திற்கு வந்த காரணத்தை, நினைந்து — அறிந்து, காயத்தை— உன்னுடைய தேகத்தை, மாருக்கிக் கொண்டு — வேருக மாற்றிக்கொண்டு, மறைந்து — ஒளிந்து, உறைதல் காரணம் ஆ — நீ வாசஞ்செய்யும் பொருட்டாகவே, விரைந்து — விரைவுகொண்டு, (நான் உன்னைக் கடித்து) வேறு ஆக்கிற்று — (உன் வடிவத்தை) வேருக்கியது, என்ருன் — என்று கூறினன்; எ — று.

கார்க்கோடகன் நளனைக் கடித்தற்குரிய காரணத்தைக் கூறினனென்க. பேர் — பெயர் என்பதன் மரூஉ. நளனுக்கு உதவிசெய்யுமுகமாகவே கடித்தான் என்றபடி.

**191.** கூனிருல்..........

இ - ள்: (அவ்வாறு கூறிப் பின்னரும் கார்க்கோடகன் இரண்டு வஸ்திரங்களை எடுத்து நீட்டி நளனை நோக்கி) கூன் — வளைவாகிய, இருல் — இருல் என்னும் நீர்ப்பிராணிகள், பாய் — பாய்தலினலே, குவளை — நீலோற்பல மலர்களினின்றும், தவளைவாய் - (பக்கத்திலுள்ள) தவளைகளின் வாயிலே, தேன் — தேனனது, இருல்பாயும் — தேன் கூட்டினின்றும் ஒழுகுவதுபோலப் பாயப்பெற்ற, திரு நாடா — அழகிய நிடதநாட்டை யுடையவனே, கானில் — காட்டில், தணியாத — அடங்காத, வெம் கனலை - வெப்பமுள்ள நெருப்பினின்று, தாங்கினய் — என்னை விடுவித்துப் பாதுகாத்தாய் (ஆதலின் அவ்வுபகாரத்துக்கீடாக) இந்த அணி ஆடை — இந்த அழகிய வஸ்திரங்களை, கொள்க என்ருன் — பெற்றுக் கொள்வாயாக என்று கூறினன்; எ — று.

கார்க்கோடகன் இரண்டு வஸ்திரங்களை எடுத்து நளனுக்கு முன்னே நீட்டி அவனை நோக்கி, "மன்னனே! நீ எனக்குச்செய்த உதவிக்கீடாக இவற்றைப் பெற்றுக்கொள்வாயாக" என்ருன் என்க. பாயும் — பெயரெச்சம். ஆங்கு — அசை. கனலை — 5-ம் வேற்றுமையில் வந்தமையின் உருபு மயக்கம்.

**192.** *சாதி..........*

இ - ள்: (அவ்வாறு ஆடையைக் கொடுத்த கார்க்கோடகன் நளனை நோக்கி) தண் - குளிர்ச்சி பொருந்திய, கழுநீர்போதின் - செங்கழுநீர் மலரின்கீழே, மேயும் - இரை தேடித் திரிந்து உண்டுகொண்டிருக்கின்ற, புது வரால் - புதிய வரால் மீன்கள், தாதின் துளிக்கு - (அம் மலர்களினின்றொழுகும்) தேன் துளிக்கு, நா நீட்டும் - நாவை நீட்டுகின்ற, துறை - நீர்த்துறைகளையுடைய, கோவே - அரசனே!, நீ ஒளிக்கும் நாள் - நீ (உண்மை வடிவத்துடன் வெளிப்பட்டுப்) பிரகாசிக்கவேண்டிய நாளில், சாதிமணித் துகில் - (இந்த) சிறந்த ஆடைகளை, சாத்தினால் - அணிந்துகொண்டால், உரு - (உனக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த விகார) வடிவமானது, நீங்கும் - அகலும் என்று கூறிற்று; எ - று.

கார்க்கோடகன் நளனை நோக்கி, "மன்னவனே! நீ இந்த விகார வடிவத்தை நீக்கி உண்மை ரூபத்துடன் விளங்கவேண்டிய காலத்தில் இந்த ஆடைகளைத் தரித்துக்கொள்வாயானால் உன் விருப்பப்படி இக் கோரரூபம் அகன்று உனதுண்மை வடிவம் வந்துவிடும்" என்று கூறினனென்க. துளிக்கு - என்பதிலுள்ள நான்கனுருபு பொருட்டுப் பொருளது.

**193.** *வாகு குறைந்தமையான்..........*

இ - ள்: வாகு குறைந்தமையால் - (உன்னுடைய) தோள் பூரிப்பு மெலிந்து குறைவுபட்டதனால், உன் நாமம் - உனது பெயரானது, வாகுகன் என்று ஆக - வாகுகனென்று பொருந்த, நீ —, அயோத்தி நகர் அடைந்து - அயோத்தியாபுரியிற் சேர்ந்து, (அந்நகரத் தரசனை இருதுபர்ணனுக்கு) மா - சிறந்த, கனகம் - பொன்னாலாகிய, தேர்த்தொழிற்கு - தேரைச் செலுத்துந் தொழிலில், மிக்கான் ஆகு - மிகுந்தவனாகக் கடவாய் (அதாவது சிறந்த தேர்ப்பாகனாகக் கடவாய்), என்றான் - என்று சொன்னான், செம்மனத்தால் - ஒழுங்கான உள்ளத்தினாலே, பார்த்தொழிற்கு - அரசியலில், மிக்கானை - மிகுந்த நளனை, பார்த்து - (கார்க்கோடகன்) நோக்கி; எ - று.

பெயரை மாற்றிக்கொண்டு இருதுபர்ணனுக்குத் தேர்ப் பாகனாகும்படி நளனுக்குத் கார்க்கோடகன் கூறினானென்க. ஆக – வியங்கோள் வினைமுற்று. தொழிற்கு - தொழிற்கு என்பனவற்றிலுள்ள நான்கனுருபு ஏழனுருபின் பொருளில் மயங்கிவந்தன.

**194.** *இணையாரு.........*

இ – ள்: (கார்க்கோடகன் அவ்வாறு கூறியபின்பு) பணை ஆகம் – பருத்த தேகத்தையுடைய, திண் – வலிமை பொருந்திய, ஓர் – ஒப்பற்ற, நாகம் எட்டும் – திசை யானைகள் எட்டும், தாங்கும் – சுமக்கின்ற, திசை யனைத்தும் – எல்லாத் திக்குகளிலுள்ளவர்களும், எண் – சிந்தித்துப் புகழும்படி யான, ஆகம் – நல்ல இருதயத்தையுடைய, வேந்தன் – நள மகாராசன், ஆரும் – எவரும், இணை இல்லான் – (தனக்கு) உவமையில்லாதவனாகிய கார்க்கோடகன், இழைத்த-செய்த, உதவி - உபகாரமே, புணை ஆக – தெப்பமாக (அதாவது ஆதர வாக), எழுந்து – அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, சூழ் – சூழ்ந்த, கானில் – காட்டில், போனான் – போயினான்; எ – று.

நளமகாராசன் கார்க்கோடகன் செய்த உதவியைப் பெற்றுக்கொண்டு காட்டுவழியே சென்றானென்க. எதிர் காலக் கடலைக் கடக்க கார்க்கோடகன் செயல் புணையா யிற்று.

**195.** *நினைப்பென்னும்.........*

இ – ள்: பனி - குளிர்ச்சிபொருந்திய, குருகு – நாரை யானது, தண் - குளிர்ந்த, படாம் – பெருங்கொடிகளின், நிழல் – நிழலிலே, தனி – (தனது) ஒப்பற்ற, பேட்டை – பெடை நாரையை, பார்த்து – பாதுகாத்து, இரவு – இராத் திரியில், கண்படா – கண்மூடி உறங்காமலிருக்கின்ற, வேலைக் கரை – கடற்கரையை, நினைப்பு என்னும் – (தமயந்தியின் மீதேற்பட்ட) எண்ணமென்கின்ற, காற்று – காற்றானது, அசைப்ப – அலைப்பதினாலே, நெஞ்சிடை – மனத்தினிடமாக, மூளும் - பற்றுகின்ற, கனல் – (விசனமென்கின்ற) நெருப்

பானது, புகைய - புகைந்துகொண்டிருக்க, வேகின்றான் - மனம் வேகுகின்றவனாகிய நளன், கண்டான் - பார்த்தான்; எ - று.

அஃறிணைப் பொருள்களாய நாரைகள்கூட தம் பெடையை இராக்காலத்துப் பாதுகாத்து வருத்தம் நீக்க, தான் பாழ்மண்டபத்தே கானகத்தில் தன் மனைவியை விட்டுவந்தமை அவன் மனதை வருத்திற்று என்றவாறு. தமயந்தியின் பிரிவை நெருப்பாகவும், அவள் நினைவை காற்றாகவும் உருவகம் செய்தார்.

196. கொம்ப ரிளங்குருகே.........

இ - ள்: (அவ்வாறு கண்ட நளன் நாரையை நோக்கி) கொம்பர் - மரக்கிளையை இருப்பிடமாக உள்ள, இளங் குருகே - இளமை பொருந்திய நாரையே!, அம்புயத்தின் போதை - தாமரைப் போதை, தும்பி - வண்டுகள், அறு காலால் - ஆறு கால்களினால், திறக்க - கிண்டி இதழ்களைத் திறந்துவிட, (அதினின்றும்) தேனூறும் - மதுவானது சுரந் தொழுகும்படியான, திரு - சிறப்பினையுடைய, நாடன் - விதர்ப்பராசனது, பொன்னை - இலக்குமியைப் போன்ற குமாரத்தியை, உறக்கத்தே - தூக்கத்தில், நீத்தேனுக்கு - விட்டு வந்தவனாகிய எனக்கு, ஒன்று - தேறுதலான ஒரு வார்த்தையாவது, கூறாது இருத்தி - நீ சொல்லாமல் இருக்கின்றாய் (இது தகுமா என்று கூறினான்); எ - று.

நளன் கடற்கரையிற் கண்ட குருகை நோக்கி, வீமராசனது மகளாகிய தமயந்தியை உறக்கத்தில்விட்டு நீங்கி வந்தவனாகிய எனக்கு ஓர் ஆறுதலான வார்த்தையுங் கூறாது இருக்கின்றாய், இது தகுமா என்று கூறினானென்க. கொம்பு- கொம்பர் எனப் போலியாயிற்று. ஆல் - அசை. பொன் - தமயந்திக்கு உவமையாகுபெயர். போது - அலரும்பருவப் பூ.

197. புன்னை நறுந்தாது.........

இ - ள்: (நாரையைப் பார்த்து அவ்வாறு கூறிய நளன் மேலும்) புன்னை - புன்னைமலரிலுள்ள, நறும் தாது - நல்ல மகரந்தத்தை, கோதி - காலினாற் கிண்டி, பொறி

வண்டு - புள்ளிகளையுடைய ஆண்வண்டானது, கன்னி – இளமைகெடாத, பெடை – தனதுபெண்வண்டை, உண்ண – (அம்மகரந்தத்தை) உண்ணச் செய்து, (அதன் பக்கத்தில் தானுண்ணுமல்) காத்திருக்கும் – அதனைக் காத்திருக்கின்ற, இன் அருள் கண்டு – இனிமையான தண்ணளியை நோக்கி, நெஞ்சினுல் – தன் மனத்தினலே, எல்லாம் – தான் செய்த வற்றையெல்லாம், நினைந்து – சிந்தித்து, அஞ்சினுன் (தான் தமயந்தியைப் பிரிந்த செய்கையைக்குறித்துப்) பயந்தவனுய், அறஉயிர்த்து - மிகவும் மூச்சு விட்டு (பெருமூச்சுவிட்டு), ஆவி அழிந்தான் – உயிர் குறையப்பெற்றுன் (யாதொரு செயலுமற்று மூர்ச்சித்தான்); எ – று.

வண்டு, தன் பெடையினிடத்திற் காட்டும் அன்பை நோக்கி, நளன், தான் அதுபோன்றில்லாததைப் பற்றி வருந்தினுனென்க. அஃறிணைப் பொருள்களுக்குளதாம் இயல்பும் பெருமையும் குறித்து வருந்தினுன்.

198. காதலியை.........

இ – ள்: (அவ்வாறு ஆவி சோர்ந்த நளன் மேலும் அங்கே தன்னைக் கண்டோடியொளித்த ஒரு நண்டைப் பார்த்து) அலவ – நண்டே!, நாதம் அளிக்கின்ற – ஓசையைத் தருகின்ற (ஒலிக்கின்ற), ஆழிவாய் – சமுத்திரத்தில், ஓடி ஒளிக்கின்றது – நீ ஓடி ஒளித்துக் கொள்கின்றது, என் – என்ன காரணத்தால்?, காதலியை – ஆசைக்குரியவளாகிய மனைவியை, கார் இருளில் – கரிய இருட்டில், கானகத்தே – காட்டிலே, கைவிட்ட – நீக்கி விட்டு வந்த, பாதகனை – பாவியாகிய என்னை, பார்க்கப்படாது என்றோ– பார்த்தல் கூடாது என்றோ?, உரை – சொல்வாயாக (என்று உரைத்தான்); எ – று.

நண்டு தன்னைக்கண்டு ஓடி ஒளிக்கின்றமையை நளன் பார்த்து, காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட பாதகனைப் பார்க்கப்படாதென்று நினைந்தோ மறைகின்ருய் என்று வினவினுனென்க. என்றோ – ஓ வினப்பொருளது. வாய் – ஏழனுருபு. அலவன் – அலவ என விளியாயிற்று.

முதலடியில் நான்கு சீர்களிலுமுள்ள முதலெழுத்துக்கள் எல்லாம் ஓரினமாயிருக்கின்றமையால் முற்று மோனை எனப் படும். என்றோ – ஓ அசை. ஆங்கு – அசை.

**199.** பானலே.........

இ – ள்: (அவ்வாறு கூறியவன் பின்னரும் பானல் முதலியவற்றை நோக்கி) பானலே – நீலோற்பலமே!, சோலை – பொதியமலையின் சந்தனமரச் செறிவிலிருந் துண் டாகி வரும், பசுந்தென்றல் – பசுமையான குளிர்ந்த தென் றற் காற்றானது, வந்து உலவும் – வந்து வீசுகின்ற, கானலே – கடற்கரைச் சோலையே!, வேலை – கடலைச் சார்ந்த, கழி – உப்பங்கழிகளிலுள்ள, குருகே – நாரைகளே! யான் உடைய – என்னுடைய, மின் இமைக்கும் – பிரகாசம் வீசுகின்ற, பூணாள்–ஆபரணங்களை அணிந்தவளானதமயந்தி, ஆங்கு – அவ்விடத்தில் (அந்தப் பாழ் மண்டபத்தில்), அ விங்கு இருள்வாய் – அந்த மிகுந்த இருட்பொழுதில், உணர்ந் தால் – (தனியே விழித்துக்கொண்டு நான் இல்லாததை) அறிந்தால், என் நினைக்கும் – என்ன நினைப்பாள்?, எனக்குச் சொல்வீர் – எனக்கு அதனைக் கூறுவீராக என்றான்; எ – று.

நீலோற்பல மலரும், கடற்கரைச் சோலையும், தென்ற லும், கழிக்கரை நாரையும் இவன் மன உணர்ச்சியை அறியாவாயினும் துன்பமிகுதியால் யாருடன் உரையாடு கிறேனென்னு முணர்ச்சியின்றி நளன் அவைகளைக் கண்ட வுடன் அவைகளை விளித்து, அந்தப் பாழ் மண்டபத்தில் தமயந்தி தனியே விழித்துக்கொண்டு நான் இல்லாததை அறிந்தால் என்ன நினைப்பாள் அதை எனக்குக் கூறுவீராக என வினவினனென்க.

**200.** போவாய்.........

இ – ள்: (அவ்வாறு வினவிய நளன் பின்னரும் சமுத் திரத்தை நோக்கி) ஆர்கலியே – சமுத்திரமே!, போவாய் வருவாய் – போகின்றாய் மறுபடியும் திரும்பி வருகின்றாய், புரண்டு விழுந்து – உருண்டு வீழ்ந்து, இரங்கி – பரிதவித்து

(ஒலித்து), நாவாய் – நாவோடு கூடியவாய் (கப்பல்), குழற – தடுமாறிப்போக (அலைய), நடுங்குறுவாய் - நீ நடுக்கங் கொள்கின்ருய், (ஆதலின்) தீவாய் – நெருப்பினின்று, அரவு – பாம்பை, அகற்றும் – நீக்கின, என்போல – என்னைப் போலவே, (நீயும்) மாதை – மனைவியாகிய பெண்ணை, இரவு – இராவில், அகற்றி வந்தாய் கொல் – நீக்கிவிட்டு வந்தனை போலும்? (என்று கூறினன்); எ – று.

நளன் மனைவியைப் பிரிந்ததனுற் போதலும் வருதலுமாய்ப் பூமியில் விழுந்து புரண்டு பேச்சுத் தடுமாறிப் புலம்பி நடுங்கி வருந்தினுன். இச்செயல்களெல்லாம் கடலினிடத்தும் பொருந்தியிருந்தன. ஆதலின், அவன், இக் கடலும் நம்மைப்போலவே மனைவியைப் பிரிந்திருக்குமோ என்று நினைத்து இங்ஙனம் அதனை வினவினுனென்க. கொல் - இடைச்சொல்; வினுப்பொருளில் வந்தது. நாவாய் என்பது நாவும் வாயும் எனவும் கப்பல் எனவும் பொருள் படும்.

**201.** முன்னீர் .........

இ – ள் (அவ்வாறு கடற்கரையிற் புலம்பியபின் பிரயாணஞ்செய்து) பொன்னீர் – பொன்னின் குணமாகிய, முருகு – அழகை, உடைக்கும் – சிதைந்துபோகச் செய்கின்ற (பொன்னிலும் அழகுமிக்க), தாமரையின் – செந்தாமரையினது, மொய்மலரை - இதழ் நெருங்கிக் குவிந்த மலரை, தும்பி – வண்டுகள், அருகு – ஓரத்தில், (சென்று குடைந்து) உடைக்கும் – இதழ்களை நெகிழ்த்தி விடுகின்ற, நல்நாடு – சிறந்த நிடததேசத்திற்கு, அரசு – அரசனுகிய நளன், முன் நீர் – பழமையான நீரையுடைய சமுத்திரமானது, மடவார் - பெண்களின், முறுவல் திரள் – பற்களைப்போன்ற முத்துக்களின் தொகுதியை, குவிப்ப – அலைகளால் கொழித் தொதுக்கிக் கரையில் திரளாகச் சேர்க்க, (அதனைப் பார்த்துக் கொண்டே போய்) நல் நீர் – நல்ல நீர்வளம் பொருந்திய, அயோத்தி நகர் - அயோத்தியாபுரி என்னும் நகரத்தை, அடைந்தான் – சேர்ந்தான்; எ – று.

முதலில் கடற்கரையைச் சேர்ந்து மனைவியை நினைத்து வருந்திய நளன், கார்க்கோடகன் சொற்படி அவ் வழியாகவே சென்று அயோத்தி நகரத்தை யடைந்தானென்க. முன்னீர் என்பதை முந்நீர் என்று கொண்டால் ஆக்கல் அழித்தல், காத்தல் என்னும் மூன்று தொழிலைச் செய்யும் நீர் என்றும், ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் என்னும் மூன்று நீர் என்றும் பொருள் கொள்ளப்படும்; முன்னீர் எனின் நிலத்திற்கு முன் தோன்றிய நீர் எனப் பொருள் கூறுக.

**202.** மான்றேர்.........

இ-ள்: (அவ்வாறு அயோத்திக்குச் சென்றபின்பு) தேர் வேந்தன் - தேரையுடைய அரசனான நளன், வாகுகன் ஆய் - வாகுகன் என்னும் பெயருடையவனாகி, சென்று (இருதுபன்னனின் அரண்மனைவாயிலிற்) போய், (துவாரபாலகரை நோக்கி) மான்தேர் தொழிற்கும் - குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்தும் தொழிலிலும், மடைத்தொழிற்கும் - சமையல் தொழிலிலும், மிக்கோன் - சிறந்தவன் ஒருவன், என்று - வாயிலிலுள்ளான் என்று சொல்லி, ஊன் - பகைவர்களுடைய உடம்பின் தசையை, தேய்க்கும் - உராய்ந் தழிக்கின்ற, வேலான்-வேலாயுதத்தை யுடையவனாகிய, உயர் - உயர்ந்த, நறவம் - வாசனையுள்ள, தேன் தோய்க்கும் - தேனினால் நனைக்கப்பட்டிருக்கின்ற, தார் - மலர் மாலையை யணிந்த, வேந்தற்கு - உங்கள் அரசனான இருதுபர்ணனுக்கு, என் வரவை - எனது வருகையை, உரைமின் - சொல்லுங்கள், என்று உரைத்தான் - என்று சொன்னான்; எ - று.

நளன் இருதுபர்ணனுடைய வாயில் காப்போரிடம் சென்று தன் வரவை அம் மன்னனுக்கு உணர்த்தும்படி வேண்டினானென்க. மான், ஊன், என்பவற்றிலுள்ள 'ன்', சாரியை. மிக்கான், வினையாலணையும் பெயர். உரைமின் - ஏவற்பன்மை. தான் - அசை. வரவு - தொழிற்பெயர்.

**203.** அம்மொழியை.........

இ – ள்: (நளன் அவ்வாறு கூறிய) அம் மொழியை – அந்த வார்த்தையை, தூதர் – தூதுவர்கள், அரசற்கு – இருதுபர்ண மன்னனுக்கு, அறிவிக்க – தெரிவிக்க, (அம் மன்னன்) அதனைச் சிந்தித்து – அந்த வார்த்தையை ஆலோசித்து, செம்மொழி ஆ தேர்ந்து – உண்மை வார்த்தையாகத் தெளிந்து, இ மொழிக்குத் தக்கானை – இந்தச் சொல்லுக்குத் தகுந்த யோக்கியதை யுடையவனை, இங்கே – இவ்விடத்தில், தருமின் – அழைத்துக்கொண்டு வந்து சேருங்கள், என உரைக்க – என்று அத் தூதுவரை நோக்கிக் கட்டளையிட, (அவ்வாறே தூதுவர்கள் நளனை அழைக்க) மிக்கானும் – (அசுவ வித்தையிலும் மடைத் தொழிலிலும்) மிகுந்தவனாகிய நளனும், விரைந்து – துரிதமாய், சென்றான் – அவ்வரசனைச் சேர்ந்தான்; எ – று.

நளன் கூறிய வார்த்தையைத் தூதுவர் இருதுபர்ணனுக் குரைக்க அவன் நளனை யழைக்க நளன் அவனிடஞ் சென்றானென்க. ஆ – ஆக என்பதன் தொகுத்தல்.

**204.** பொய்யடையா.........

இ – ள்: (அவ்வாறு சேர்ந்த மாத்திரத்தில்) தேர் வேந்தன் – தேரையுடைய அரசனாகிய இருதுபர்ணன் கைத்தொழிலின் மிக்கானை – (குதிரை செலுத்துவதும் சமையல் செய்வதுமாகிய) கைத்தொழில்களிற் சிறந்தவனான அவனை, கண்டு – பார்த்து, (முகக் குறிப்பால் இவன் சிறந்த புத்திமானாகவே யிருப்பானென் றுன்னி) தன் – தன்னுடைய, செய்ய – செம்மையாகிய, முகம் மலர்ந்து – முகமானது மலர்ச்சியடையப்பெற்று, (வாருகவென வந்த) பொய் அடையா – பொய் சேராத, சிந்தை – உள்ளத்தை யுடைய, புரவலனை – நளமகாராசனை, நோக்கி—, ஐயா – ஐயனே!, நீ—, எத்தொழிற்கு மிக்கான் – எத்தொழிலிற் சிறந்தவன்?, பெயர் யாது – உன்னுடைய பெயரென்ன?, என்றான் – என்று கேட்டான்; எ – று.

நளனை இருதுபர்ணன் நோக்கி நீ எத்தொழிலிற் சிறந்தவன்? உன் பெயரென்ன? என வினவினனென்க.

205. *அன்ன மிதிப்ப.........*

இ - ள்: (அவ்வாறு வினவியவுடன்) கொடைத் தொழிலில் - ஈகைத் தொழிலில், மிக்கான் - மிகுந்தவனாகிய நளன், குறித்து - இருதுபர்ணனை நோக்கி, அன்னம் - அன்னப் பறவைகள், மிதிப்ப - மேலேறி மிதித்தலினால், அலர் - தாமரை மலர்களினின்றும், வழியும் - வடிகின்ற, தேறல் - தேனானது, போய் - (வாய்க்கால்களின் வழியாக நீரோடு) கலந்தோடி, செந்நெல் - செந்நெற் பயிரை, விளைக்கும் - செழிப்புற்று வளர்ந்து விளையச் செய்கின்ற, திரு - இலக்குமி வாசஞ் செய்கின்ற, நாடர் - (கோசல) நாட்டிலுள்ளவர்களுக்கு, மன்ன - அரசனே!, யான் - நான், மடைத்தொழிலும் - சமையல் தொழிலிலும், தேர்த்தொழிலும் - தேரைச் செலுத்தும் தொழிலிலும், வல்லன் - வல்லவன், என்றான் - என்றுரைத்தான்; எ - று.

இருதுபர்ணன் மேற்கூறியபடி வினவ நளன் அவனை நோக்கி, மன்னனே! நான் மடைத்தொழிலிலும் தேர்த்தொழிலிலும் வல்லவன் என்று கூறினானென்க. வல்லன் - குறிப்புமுற்று.

206. *என்னை.........*

இ - ள்: (நளன் அங்ஙனம் இருதுபர்ணனிடம் சேர்ந்திருக்க) தண் கோதை - குளிர்ச்சி பொருந்திய மாலையையணிந்தவளான தமயந்தி, (தன் நாயகனைத் தேட நினைந்து) உணர்ந்து - (அவனைக் காணும் உபாயத்தைக் குறித்து ஆலோசித்து ஒரு மார்க்கத்தை) அறிந்து, மின்னுபுரை - மின்னலை நிகர்த்த, கதிர் - பிரகாசம் பொருந்திய, வேல் - வேலாயுதத்தையுடைய, வேந்தன் - அரசனாகிய வீமனென்னும் தன் தந்தையினுடைய, புரோகிதனுக்கு - வைதிக காரியஞ் செய்யும் ஆசாரியனாகிய ஒரு வேதியனுக்கு, என்னை —, இருங்கானில் - பெரிய காட்டிலே, நீத்த - விட்டுப் பிரிந்துபோன, இகல் - வெற்றி பொருந்திய, வேந்தன் தன்னை - அரசனாகிய என் நாயகனை, நீ நாடுக என - நீ தேடுவாயாக என்று, இந்த உரை - பின் வரும் இந்த வார்த்தைகளை, பகர்வது ஆனாள் - சொன்னாள்; எ - று.

தமயந்தி தன் நாயகனைத் தேடிக் காணும் மார்க்கத்தை யுணர்ந்து, வீமராசனுடைய புரோகிதனை நோக்கி, 'நீ என் நாதனைத் தேடுவாயாக' என்று கூறி கீழ்வரும்

வார்த்தைகளை உரைத்தாளென்க. தண்கோதை – அன் மொழித்தொகை.

207. காரிருளில்........

இ – ள்: (தமயந்தி புரோகிதனை நோக்கி) தேர்ந்து – ஒருபாயத்தை நிச்சயித்து, கார் இருளில் – கரிய இருட்டில், பாழ் மண்டபத்தே – பாழடைந்த ஒரு மண்டபத்திலே, தன் காதலியை – தன் ஆசைக்குரியவளாகிய நாயகியை, சோர் துயிலில் – அறிவு சோர்ந்திருக்கின்ற நித்திரை நேரத்தில், நீத்தல் – விட்டுச்செல்லுதல், தேர் வேந்தற்கு – தேரை உடைய அரசனுக்கு, துணிவு அன்றோ - (இரக்கமின்றியும் பாவத்திற் கஞ்சாமலும் செய்யும் ஒரு) தைரியமான காரியமல்லவா? என்று – என்று, (நீ ஒவ்வோரிடத்திலும்) சென்று – போய், அறைந்தால் – சொன்னால், (எவரேனும் இதற்கு மறுமொழி சொல்வார்; அங்ஙனம் யாராவது) நேர் நின்று – (உனக்கு) எதிரில் நின்று, (இவ்வார்த்தைக்கு) எதிர்மாற்றம் - மறுமொழி, தந்தாரை – கொடுப்பவர்களை, அறிந்துவா – தெரிந்துகொண்டு வருவாயாக, என்றாள் – என்று தமயந்தி கூறினாள்; எ – று.

நளன், இராத்திரியில் பாழ்மண்டபத்திலே தூங்குந் தருணத்தில் தமயந்தியை விட்டு நீங்கிச் சென்ற இச் செய்தி, நளனுக்கும் தமயந்திக்குமே தெரிந்த இரகசியமாதலின், இதனைக் குத்துப்பாடாகக் கூறுங்காலத்தில் இதற்கு நளனொருவனே மறுமொழி கூறுவன்; இதன் மூலமாக அவனை எளிதிற் றெரிந்துகொள்ளலாம். ஆதலின் தமயந்தி இவ்வுபாய மொழியை ஆராய்ந்தறிந்து புரோகிதனிடம் கூறினாளென்க. காரிருள் – பண்புத்தொகை. சோர் துயில் – வினைத்தொகை.

208. மின்னாடும்........

இ – ள்: (தமயந்தி அவ்வாறு கூறியவுடனே அந்தப் புரோகிதன் அவ்விடத்தினின்றும் புயப்பட்டு) மின் ஆடும் – (மேகங்கள் சேர்ந்திருப்பதால்) மின்னல் அசைந்து கொண்டிருக்கின்ற, மால் – பெரிய, வரையும் – மலைகளிலும், வேலையும் – சமுத்திரத்திலும், வேலை சூழ் – அக் கடல்சூழ்ந்த, நல் – நன்மையாகிய, நாடும் – தேசங்களிலும், கானகமும் –

வனங்களிலும், (போய்) நாடினான் - ஆராய்ந்து, (முடிவில்) மன்று - நிலைபெற்ற, கடம் - மதநீர், தாழ் - ஒழுகப்பெற்ற, களி - செருக்குள்ள, யானை - யானைப்படையையுடைய, காவலனை - அரசனாகிய நளனை, தேடி - தேடிக்கொண்டு, அயோத்திநகர் - அயோத்தியாபுரியை, அடைந்தான் - சேர்ந்தான்; எ - று.

மேற்கூறியபடி தமயந்தியின் கட்டளையைப்பெற்ற புரோகிதன், மலை கடல், நாடு, வனம் முதலியவைகளிலெல்லாம் நளனைத் தேடிக் காணாமல் முடிவில் அயோத்திநகரடைந்தானென்க. வேலை சூழ் நன்னாடு என்றது சமுத்திர மத்தியிலுள்ள தீவுகளை. உம்மைகள் எண்ணுப் பொருளன. நாடினான் - முற்றெச்சம்.

209. கானகத்து.. .......

இ - ள்: (புரோகிதன் அயோத்தியைச் சேர்ந்தவுடன்) கானகத்து - வனத்தில், காதலியை - மனையாளை, கார் இருளில் - கரிய இருட்டில், கைவிட்டுப் போனதுஉம் - கைவிட்டுச் சென்ற செய்கையும், வேந்தற்கு - அரசனுக்கு, போதுமோ - தகுமோ?, என்று சாற்றினான் - என்றுரைத்தான், அந்தவுரை - அந்த வார்த்தையை, தார்வேந்தன் தன் - மாலையையணிந்த அரசனாய நளனது, செவியில் - காதுகளில், ஏற்றினான் - (நாராசம்போல) ஏறச் செய்தான், வந்தான் எதிர் - (உடனே நளன் அந்தப் புரோகிதனுக்கு) எதிரில் வந்தான்; எ - று.

புரோகிதன், 'கானகத்துக் காதலியைக் காரிருளிற் கைவிட்டுப் போனதுவும் வேந்தற்குப் போதுமோ?' என்றுரைத்த வார்த்தை நளனுக்கு நாராசம்போல் இருந்தது என்றவாறு. ஏற்றினான் - ஏறச் செய்தான் (பிறவினை). இதனைக் கேட்டவுடன் நளன் உணர்ச்சிவயத்தனாய் அச்சொற் கூறினாரை அறியும் நோக்கமாக விரைவில் வந்தானாதலின் 'எதிர்வந்தான்' என்னாது 'வந்தான் எதிர்' என முற்றுச் சொல்லை முற்கூறினார். முதலடி - முற்றுமோனை. தான் - அசை.

210. ஒண்டொடி..........

இ - ள்: (நளன் புரோகிதனை நோக்கி வேதியனே!) ஒள் தொடி தன்னை - பிரகாசமாகிய வளையலை யணிந்தவ

ளாகிய தன் மனைவியை, உறக்கத்தே - தூக்கத்தில், நீத்ததுவும் - கைவிட்டதும், பண்டை - பழமையான, விதியின் - விதியினது, பயனே - பயனேயாகும். காண் - இதனை அறிந்துகொள், (காரிய நிகழ்ச்சி இங்ஙனமிருப்பதால்) தண் - குளிர்ச்சிபொருந்திய, தரளம் பூ தாம - முத்துக்களாலாகிய அழகிய மாலைகளையுடைய, வெண்குடையான் - வெண்கொற்றக் குடையை உடையவனாகிய அரசன், பொன் மகளை - இலக்குமிதேவிபோன்ற பெண்ணாகிய தன் மனைவியை, வெவ்வனத்தே - வெப்பம் பொருந்திய காட்டிலே, நீத்தான் - (விதியினால் அல்லாமல் வேண்டுமென்றே) கைவிட்டான், என்று - என்று நினைத்து, நீ ஐயுறேல் - (இவன் நல்லவனோ கெட்டவனோ என்று) நீ சந்தேகப் படாதே (என்று கூறினான்); எ - று.

நளன் புரோகிதனை நோக்கி, 'வேதியனே! அவ்வரசன் மனைவியை நீத்தது விதிப்பயனேயாகும்; ஆதலின் நீ இதனை ஆராயாமல், அவன் கன்னெஞ்சுடையவனாய் வேண்டுமென்றே அவளை நீத்தான்; அதனால் அவன் நல்லவனோ கெட்டவனோ என்று சந்தேகப்படாதே' என்று கூறினானென்க. ஒண்டொடி - அன்மொழித்தொகை. தொடி- கைவளை. உறக்கம் - தொழிற்பெயர். நீத்தது - தொழிற்பெயர். ஐயுறேல் - எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று. ஐயுறு + ஆ + ஏல். 'ஆ' கெட்டது.

211. வாக்கினான்.........

இ - ள்: ஏந்தும் நூல் மார்பன் - பூணூலைத் தரித்த மார்பை யுடையவனாகிய அந்தப் புரோகிதன், (தமயந்தியை அடைந்து) பூ கமழும் - (சூடிய) மலர்கள் மணக்கின்ற, கூந்தலாய் - அளகபாரத்தை யுடையவளே! (நான் பற்பல விடங்கட்கும் போய் முடிவில் அயோத்தி நகரடைந்து, நீ கூறிய வார்த்தைகளைக் கூறினேன், அதைக்கேட்டு இருதுபர்ணன் அரண்மனையிலுள்ள தேர்ப்பாகனொருவன் வந்து அதற்கு மறுமொழி கூறினான்) அக் குலப்பாகன் - அந்த உயர்ந்த தேர்ப்பாகன், வாக்கினால் - (நான் கூறியதற்கு அவன் கூறிய மறுமொழியாகிய) வார்த்தையினாலே, மன்னவனை ஒப்பான் - நளமகாராசனை நிகர்ப்பவனாயிருக்கின்

றுன், மறித்து – திரும்பவும், ஒருகால் – ஒரு முகமாய், ஆக்கையை – (அவனுடைய) உடம்பை மாத்திரம், நோக்கின் – பார்த்தால், அவன் அல்லன் – அம் மன்னனல்லாதவனுயிருக்கின்றுன், என்று எடுத்து – என்று (தான் கண்ட கேட்ட விஷயங்களை யெல்லாம்) மனத்தினின்றும் வெளிப்படுத்தி, உரைத்தான் – தமயந்தியினிடம் சொன்னுன்; எ – று.

புரோகிதன் தமயந்தியை நோக்கி நான் நின் கட்டளைப்படியே பலவிடங்கட்கும் சென்று முடிவில் அயோத்தி மன்னன் அரண்மனையில் அவ் வார்த்தைகளைத் கூறினேன்; அதைக் கேட்டு அரண்மனையிலுள்ள தேர்ப்பாகன் ஒருவன் வந்து அதற்கு மறுமொழி கூறினுன்; அவனுடைய வார்த்தைகளை நோக்குமிடத்து மன்னனைப் போலவே விளங்குகின்றுன்; தேகத்தை நோக்குமிடத்து மன்னனைப் போற் காணப்படவில்லை என்று கூறினுனென்க.

212. மீண்டோர்..........

இ – ள்: (அதுகேட்ட தமயந்தி சுவேத னென்னும் வேதியனை நோக்கி) பரிந்து – அன்புகொண்டு, அந்தண – பிராமணனே, நீ போய் – நீ (அயோத்திக்கு மறுபடியும்) சென்று, வீமன் – வீமராசனுடைய, திருமடந்தை – அழகிய குமாரத்தியாகிய தமயந்தி, மீண்டு – திரும்பவும், ஓர் சுயம்வரத்தை – ஓர் சுயம்வரச் சடங்கை, பூண்டாள் என்று – ஏற்றுக்கொண்டனள் என்று, உரைத்தால் – சொன்னுல், நீண்ட கொடை – மிக்க ஈகையையுடைய, வேந்தற்கு – அவ் வயோத்தி மன்னனுக்கு, படை – ஆயுதங்களையுடைய, வேந்தன் – (நாம் தேர்ப்பாகனெனச் சந்தேகிக்கும் நம்) நளமகாராசன், இ தூரம் – (நாமிருக்கும் இடமாகிய) இவ்வளவு தூரத்துக்கு, தேர்க்கோலம் – தேர்க்குரிய கோலத்தை, கொள்வான் – தாங்குவான், (அவ்வாறு வந்தால் நாம் இவனைச் சந்தேகமறத் தெரிந்துகொள்ளலாம்) என்றுள் – என்று தமயந்தி வேதியனிடத்துக் கூறினுள்; எ – று.

தமயந்தி அவ் வாகுகனைத் தான் நேரிற் கண்டு நளனே அல்லனே என்பதைத் தெரிந்துகொள்ளுதற்காக இவ்வாறு கூறினுளென்க.

213. எங்கோன்..........

இ - ள்: (தமயந்தி அவ்வாறு கூறியவுடன்) அந்தணன் - (சுவேதனென்னும்) பிராமணன், போய் - அயோத்திக்கு மறுபடியும் சென்று, தென் ஆளும் - அழகை ஆளுகின்ற, தாரானை - மலர் மாலை யணிந்த இருதுபர்ணனது நாட்டை, சேர்ந்து - அடைந்து, செங்கோலாய் - நீதி தவருத அரசாட்சியை யுடையவனே !, எம்கோன் - எங்கள் அரசனுகிய வீமனுடைய, மகளுக்கு - புத்திரியாகிய தமயந்திக்கு, இரண்டாம் சுயம்வரம் என்று - இரண்டாவது சுயம்வரம் நடைபெறப்போகிறது என்று சொல்லி, அங்கு - அவ்விடத்தில் (குண்டினபுரியில்), ஓர் முரசும் - ஒப்பற்ற மணப் பேரிகையை, அறைவித்தான் - (முரசறைவோரால்) அடிக்கச் செய்தான், அந்நாள் அளவும் - அந்தச் சுயம்வரத்திற்குக் குறிப்பிடப்பட்ட தினமும், நாளை என்ருன் - நாளையே என்று கூறும் செய்தியைத் தெரிவித்தான்; எ - று.

சுவேதன் இருதுபர்ணனிடஞ் சென்று தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் நாளை நடைபெறுமெனக் கூறினுனென்க.

214. வேதமொழிவாணன்........

இ - ள்: (சுவேதன் அவ்வாறு கூறிய மாத்திரத்தில்) இகல் - பகைவர்களை, சீறும் - கோபிக்கின்ற, மின்செய்த - ஒளி வீசுகின்ற, வேலான் - வேலாயுதத்தை யுடையவனுகிய இருதுபர்ண மகாராசன், விரைந்து - விரைவுகொண்டு, வீமன்தன் - வீமராசனுடைய, காதலி - மகளாகிய தமயந்தி, மீண்டும் - மறுபடியும், சுயம்வரத்தை—, காதலித்தாள் என்று - விரும்பினுள் என்று, வேதமொழி வாணன் - வேதசாஸ்திரங்களில் வல்லவனுகிய அந்தணன், ஓதினுன் - கூறினுன், இதனுக்கு - (நாளை நடக்கவிருக்கும் சுயம்வரமாகிய) இதற்கு (விரைவாகச் செல்வதற்கு), என் செய்கோ - (நான்) என்ன செய்வேன், என்ருன் - என்று (தன் வாகுகனிடத்தில்) கூறினுன்; எ - று.

சுவேதன் உரைத்ததைக் கேட்டு இருதுபர்ணன் இதற்கு என் செய்வேன் என்று சிந்தித்தானென்க. மற்று - அசை; வினைமாற்றெனினும் பொருந்தும்.

**215.** குறையாத.........

இ – ள் : (அதைக் கேட்டவுடன் வாகுகன் இருதுபர்ணனை நோக்கி) பறிபீறி – பறியென்னும் மீன் படுக்குங் கருவியைக் கிழித்துக்கொண்டு, பருவரால் – பெரிய வரால் மீன்கள், நெல்லில் ஓடும் – நெற் பயிரில் ஓடி ஓளிக்கின்ற, நெடு நாடா – பெரிய கோசலநாட்டை யுடையவனே !, குறையாத கற்பினாள் – குறைவில்லாத பதிவிரதா தருமமுள்ளவளும், கொண்டானுக் கல்லால் – தன்னை முதலிற் கலியாணஞ் செய்துகொண்டவனுக்கேயல்லாமல், இறவாத – மற்றையோரிடத்து மனம் செல்லாதவளும் (ஆகிய), ஏந்து இழையாள் – அணிந்த ஆபரணங்களையுடைய தமயந்தி, இன்று – இப்பொழுது, இ சொல் – இந்தச் சொல்லால், சொல்லப்படுமோ – சொல்லப்படத் தக்கவளோ (என்று கூறினான்); எ – று.

நளன், தமயந்தியின் நற்குண நற்செய்கைகளையும், பதிவிரதா தருமத்தையும் நன்குணர்ந்தவனாதலின், அவள் ஒருபோதும் இரண்டாம் சுயம்வரத்தை விரும்பமாட்டாள் என்று கூறினனென்க. கற்பு – கணவனையே தெய்வமெனக் கொண்டு நடக்கும் ஒழுக்கம். ஓ – ஈண்டு எதிர்மறைப் பொருளில் வந்தது. இரண்டாம் சுயம்வரம் என்ற சொல்லுக்கும் தமயந்திக்கும் எட்டுணையும் இயைபிருக்க முடியாது என்பது, நளன் கூற்று.

**216.** என்மேல்.........

இ – ள் : (வாகுகன் கூறியதைக் கேட்டு) கடாம் – மதநீரை, சொரி – பொழிகின்ற, வாரணம் – யானையை, அன்னான் – நிகர்த்தவனாகிய இருதுபர்ணன், மதித்து – தன்மனத்துள் ஒரு காரணத்தைக் கற்பனை செய்து, (வாகுகனை நோக்கி) முன்னாளில் – முதற் சுயம்வரம் நடந்த நாளில், என்மேல் எறிகின்ற மாலை – (தமயந்தி என்னைக் கணவனாகக் கொள்ள விரும்பி) என்மீதெறிந்த பூமாலையானது, (என் பக்கத்திலிருந்த) எழில் – அழகு பொருந்திய, நளன் முன்னே – நளன் மேலே, விழுந்தது – தவறி விழுந்து விட்டது, அன்னதற்கு – அப்படி விழுந்தமையே, ஈது காரணம் – இந்த மறு சுயம்வரம் ஏற்படக் காரணம், (இங்ஙனம் மறு சுயம்வரம் ஏற்படுத்தி அவள்

என்னையே மணந்துகொள்ளும் விருப்புடன் இது செய்தாள்), என்றான் – என்று சொன்னான்; எ – று.

நளன் கூறிய வார்த்தைக்கு இருதுபர்ணன் இவ்வாறு சமாதானங் கூறினனென்க. தன் – அசை. முன் – ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபு. காண், தான் - அசைகள். அன்னதற்கு – உருபுமயக்கம்; 'அன்னதே' என வரும்.

**217.** *முன்னைவினையான்.........*

இ – ள்: (அவ்வாறு இருதுபர்ணன் கூறியவற்றைக் கேட்டு நளன்) தன் மரபுக்கு – தமயந்தியினுடைய உயர்ந்த குலத்திற்கு, ஒவ்வாத வார்த்தை – பொருந்தாத வார்த்தையாகிய, இது இச்சொல், உலகத்து – உலகத்தில், உரைப்பட்டது – வழங்க நிகழ்ந்த காரணம், முன்னை வினையால் – முந்திய பிறப்பிற் செய்த கருமத்தினால், முடிந்ததோ – நிறைவேறியதோ, மொய் குழலாள் – அல்லது அடர்ந்த கூந்தலையுடையவளாகிய தமயந்தி, என்னைக் காண – என்னைத் தேடிக் கண்டுபிடித்தற்கு, இசைந்ததோ - நேர்ந்ததோ, எவ்வாறு கொல்லோ – (இதன் காரணம்) வேறெவ்விதமோ? என எண்ணினான்; எ – று.

இருதுபர்ணன் கூறிய அசம்பாவிதமான வார்த்தைகளைக் கேட்டு நளன் பலவிதமாகச் சிந்தித்தானென்க. கொல் - ஐயப்பொருளது; ஓ - அசை. மொய்குழல் – வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை.

**218.** *ஒற்றை.........*

இ - ள் (நளன் தேரைக் கொண்டுவந்து இருதுபர்ணனுக் கெதிரில் நிறுத்திக்கொண்டு) அளி – வண்டுகள் (நெருங்கி) பொம் என்று முரல – பொம் என்று ஓசையுண்டாக ஒலித்துக்கொண்டிருக்குமாறு, தீம் தேறல் – தித்திப்பாகிய தேனை வார்க்கும் – ஒழுகச் செய்கின்ற, தார் - பூமாலையையணிந்த, சேய் – செவ்வேளனைய நளன். (இருதுபர்ணன் முகத்தை நோக்கி) தனி – ஒப்பற்ற, ஒற்றை ஆளி – ஒரே சக்கரத்தையுடைய (சூரியனது), தேர் என்ன – தேரைப்போல, ஓடுவது – விரைந்தோடத்தக்கதாகிய, ஓர் – ஒரு, கொற்றம் – வெற்றி பொருந்திய, நெடுந்தேர் – பெரிய தேரை, கொடு வந்தேன் – கொண்டு வந்தேன், இதற்கு - இதில், போந்து –

வந்து, ஏறுக - ஏறக்கடவாயாக, என்று உரைத்தான் - என்று சொன்னான் : எ - று.

நளன், தேரை அலங்கரித்து அதனைக் கொண்டுபோய் இருதுபர்ணனுக்கெதிரில் நிறுத்திக்கொண்டு அவனை நோக்கி, "நான் உயர்ந்த தேரைக் கொண்டு வந்தேன் ; இதில் ஏறிக்கொள்" என்றான் என்க. இதற்கு - உருபு மயக்கம். போந்து - புகுந்தது என்பதன் மரூஉ. பொம் எனல் - ஒலிக்குறிப்பு. மற்று - அசை.

219. முந்தைவினை.........

இ - ள் : சந்தம் - அழகினையும், விரை - வாசனையையும் (உடைய), தார் - பூமாலைகள், குன்று - குறையாத, மெல் ஓதிதன் - மென்மையான கூந்தலையுடையவளான தமயந்தியினது, செயலை - செய்கையின் காரணத்தை, தன் மனத்தே - தன்னுடைய மனத்திலே, தேர்கின்றான் - ஆலோசித்துக் கொண்டிருக்கின்றவனான நளன், ஊர்கின்ற-செலுத்துகின்ற, தேர் - அந்த இரதமானது, முந்தை வினை குறுக - பழவினையானது நெருங்க, (அதனால் அவமானப்படவேண்டித் தமயந்தியிடத்து) மூவா - முடிவடையாத, மயல் கொண்டான் - ஆசை மயக்கத்தைக் கொண்டவனான இருதுபர்ணனுடைய, சிந்தையினும் - மனவேகத்தைக் காட்டினும், கடுகச் சென்றது - விரைவாகப் போயிற்று ; எ - று.

நளன் செலுத்திய அந்தத் தேரானது, பழவினைப் பயனால் அவமானத்தை அடைதற்குத் தமயந்தியின்மீது மிக்க ஆசை மயக்கத்தைக் கொண்ட இருதுபர்ணனுடைய மனத்தைக் காட்டிலும் வேகமாகச் சென்றதென்க. குறுக - செயவெனெச்சம். கொண்டான், தேர்கின்றான் வினையாலணையும் பெயர்கள். ஏ - அசை.

220. மேலாடை.........

இ - ள் : [அவ்வாறு தேர் செல்லும்போது இருதுபர்ணனது மேலாடை காற்றுடன் பறந்துவிட] மேலாடை வீழ்ந்தது எடு என்றான் - எனது மேலாடை காற்றுடன் சென்றுவிட்டது அதனை எடுப்பாயாக என்று இருதுபர்ணன் நளனுக்குக் கூறினான் ; அவ்வளவில் - இதனைக் கூறுதற்

கிடையில், நாலு ஆறு காதம் நடந்தது - தேர் இருபத்து நான்கு காதவழி தூரத்தைக் கடந்துவிட்டது, [இங்ஙனம் சென்ற குதிரைகள் எவையெனில்] தோலாமை மேற்கொண்டான் - போரில் தோல்வியை அறியாதவனான இருதுபர்ணன், ஏறிவர - ஊர்ந்து செல்ல, வெம்மை - கொடுமைமிகுந்த, கலிச் சூதின் - சனிபகவானுடைய வஞ்சனையினால், மால் கொண்டான் - மயக்கங்கொண்டவனாகிய நளமகாராசன், கோல் கொண்ட - சாட்டைக் கோல்கொண்டு நடத்திய, மா - குதிரைகள்; எ - று.

கீழே விழுந்த மேலாடையை 'எடு' என்று, இருதுபர்ணன் நளனை நோக்கிக் கூறிய வார்த்தை முடிவதற்குள் குதிரைகள் நாலாறு காத தூரம் சென்றுவிட்டன என்க. கொண்டான் - வினையாலணையும் பெயர். மேலாடை - உத்தரீயம். காதம் - பத்துக்கல்தொலை.

**221.** ஆமை முதுகில்.........

இ - ள்: (அதன் மேல்) போர்வேட்டு - யுத்தத்தை விரும்பி, எழும் - எழுகின்ற, கூற்றம் அன்ன - யமனை நிகர்த்த, ஒன்று கரி - ஒப்பற்ற யானைப்படையை, உடையான் - உடையவனான இருதுபர்ணன், ஆமை முதுகில் - ஆமையினுடைய முதுகிலே, அலவன் - நண்டுகள், துயில் கொள்ளும் - படுத்து நித்திரைசெய்கின்ற, காமர் - அழகு பொருந்திய, நெடு நாடு - பெரிய தன்னுடைய தேசத்தை, கைவிட்டு - பின்விட்டு, வீமன்தன் - வீமராசனுடைய, பொன் நகரி - பொன் மயமான நகரத்தில், சென்று அடைந்தான் - போய்ச் சேர்ந்தான்; எ - று.

தான்றிமரத்தடியினின்றும் புறப்பட்டவுடன் இருதுபர்ணன் தன் நாட்டின் எல்லையைக் கடந்து குண்டினபுரம் போய்ச் சேர்ந்தானென்க. கரி ஒன்று - பட்டத்து யானை எனினுமாம். ஆங்கு - அசை.

**222.** வெற்றித் தனி.........

இ - ள்: (சேர்ந்த பின்பு) மன்விரவு - பெருமை பொருந்திய, தாரான் - மாலையை யணிந்தவனான இருதுபர்

ணன், மகிழ்ந்து – சந்தோஷித்து, வெற்றி – வெற்றி பொருந்திய, தனி – ஒப்பற்ற, தேரை - தன்னுடைய இரதத்தை, வீமன் – வீமராசனுடைய, பெருங்கோயில் – பெரிய அரண்மனையின், முற்றத்து - முன்றிலிலே, இருத்தி - நிற்கச் செய்து, முறை செய்யும் - நீதியைச் செய்கின்ற, கொற்றவர்க்கு - வெற்றியை யுடைய அரசனாகிய வீமனுக்கு, தன்வரவு – தன்னுடைய வருகையை, கூற – சொல்லும்படி, பணித்து – அங்கு நின்ற பணியாளர்க்குக் கட்டளையிட்டு, (வீமனுடைய அனுமதியைப் பெற்று) தனிபுக்கான் – தனியனாய் அவ்வரசனிடம் போய்ச் சேர்ந்தான்; எ – று.

இருதுபர்ணன் தேரை அரண்மனை வாயிலில் நிறுத்தி விட்டு, வாயில் காப்போரால் தன் வருகையை வீமனுக் குணர்த்தி, அவனனுமதி பெற்று அவனிடம் போனானென்க. வரவு – தொழிற் பெயர்.

**223.** கன்னி நறுந்தேறல்.........

இ - ள்: (வீமன் இருதுபர்ணனை நோக்கி) கன்னி – இளமையான, நறும் தேறல் - நல்ல வாசனையுள்ள தேனை, மாந்தி - குடித்து, கமலத்தில் – தாமரை மலரில், மன்னி – நிலைபெற்று, துயின்ற - நித்திரை செய்த, வரி – இரேகைகளையுடைய, வண்டு – வண்டுகள், பின்னையும் போய் - மறுபடியும் சென்று, நெய்தற்கு அவாவும் – கருநெய்தல் மலரைச் சேர்வதற்கு விரும்புகிற, நெடுநாடா – பெரிய கோசல நாட்டை யுடையவனே!, நீ என்பால் எய்தற்கு - நீ என்னிடத்தில் வருதற்கு, அவாவிய ஆறு என் – விரும்பிய காரணம் என்ன? (என்று வீமன் இருதுபர்ணனை நோக்கி வினவினான்); எ - று.

இருதுபர்ணன் அங்குவந்த காரணத்தை ஒருவாறு வீமன் அறிவான் எனினும் அறியாதவன்போன்று அவனை நோக்கி, "மன்னனே! இங்கு என்னைக் காணவந்த காரணம் யாது?" என்று வினவினனென்க. இருதுபர்ணன் உலகத்தில் தனக்கு வேண்டிய இன்பங் கிடைத்திருந்தும் அம் மட்டில் திருப்தியடையாமல் மேலும் தமயந்தியையும் விரும்பி ஓடிவந்தானாதலின் அதனைக் குறிப்பாலுணர்த்துமாறு வீமன், 'கன்னி நறுந்தேறல் மாந்திக் கமலத்தின்,

மன்னித் துயின்ற வரிவண்டு - பின்னேயும் போய், நெய்தற் கவாவும் நெடுநாட' என்ருன் என்க.

**224.** இன்றுன்னை.........

இ - ள்: (அவ்வாறு வீமன் கேட்டபோது) ஒளி ஆர் - பிரகாசம் நிறைந்த, வேல் - வேலாயுதத்தை நிகர்த்த, கண்ணுள் - கண்களையுடையவளாகிய தமயந்தியினிடத்தில், உள்ளம் - தன் மனமானது, துரப்ப - தன்னைச் செலுத்திய தனுல், தெளியாது - பொய்ச் சுயம்வரத்தின் செய்தியை உணராமல், முன் போந்த - எல்லோர்க்கும் முன்னே புறப் பட்டு அங்கு வந்து சேர்ந்த, சேய் - குமரனுகிய இருது பர்ணன், (வீமனைப் பார்த்து) மன்றல் - வாசனை பொருந் திய, மலர்த்தாராய் - மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை யணிந்த மன்னனே!, உன்னைக் காண்பது - உன்னைப் பார்ப்பதாகிய, ஓர் - ஒரு, ஆதரவால் - ஆசையால், யான் - நான், இன்று - இப்பொழுது, இங்ஙன் வந்து அடைந் தேன் - இவ்விடம் வந்து சேர்ந்தேன், என்ருன் - என்று சொன்னுன்; எ - று.

வீமன் வினவியதற்கு இருதுபர்ணன், நான் உன்னைப் பார்ப்பதற்காக வந்தேன் என்று கூறினுனென்க. இங்ஙன் - இங்ஙனம் என்பதன் கடைக்குறை. ஆர்வேல் -- வினைத் தொகை. சுயம்வர நிகழ்ச்சி பொய்யானது என்பதை அறிந்து விட்டானுதலின் அங்ஙனம் கூறினுன்.

**225.** ஆதிநெடுந்தேர்.........

இ - ள்: (இருதுபர்ணன் அவ்வாறு கூறி, இருக்க) மேதி - எருமையின், கடைவாயில் - வாய்க்கடையில், கார் - கரிய, நீலம் - நெய்தற்பூவானது, கண் விழிக்கும் - கண் ணைப்போல விழிக்கின்ற, நாடன் - நிடதநாட்டரசனுகிய நளன், ஆதி - முதன்மையாகிய, நெடுந்தேர் - பெரிய தேரிற் பூட்டிய, பரிவிட்டு - குதிரைகளை யவிழ்த்துக் கூடத்தில் விட்டு, அவை - அவற்றை, ஆற்றி - இளைப்பாற்றி, குறை - இனிச் செய்யவேண்டிய இன்றியமையாத காரியமாகிய, கோது இல் - குற்றமில்லாத, அடிசில் - உணவு சமைக்குங் காரியத்தை, முடிப்பான் மதித்து - முடிக்க எண்ணி, மடை வாயில் - மடைப்பள்ளியினிடத்தில், புக்கான் - விரைவாகச் சென்று புகுந்தான்; எ - று.

சாரதித் தொழிலும் உணவு சமைக்குந் தொழிலும் நளனுக்குரிய வாதலின், அவன் தேரைக் கொண்டுபோய் நிறுத்தவேண்டிய விடத்தில் நிறுத்திக் குதிரைகளை அவிழ்த்துக் கூடத்தில் விட்டுப் பின்னர் உணவு சமைக்குந் தொழிலைச் செய்வதற்கு மடைப்பள்ளியிற் புகுந்தானென்க. மடை – சோறு.

226. ஆதிமறைநூல்.........

இ – ள்: ஆதி - முதன்மைபெற்ற, மறைநூல் அனைத்தும் – வேத சாஸ்திரங்களை யெல்லாம், தெரிந்து உணர்ந்த – ஆராய்ந்தறிந்த நீதிநெறியாளர் – நியாய வழியிற் செல்லும் பெரியோர்களுடைய, நெஞ்சம்போல் – மனநிறைவைப் போல, வரம் – சிரேஷ்டமாகிய, பொன் தேர்ப்பாகன் – அழகிய தேர்ப்பாகனாகிய நளன், புக்கமனை – புகுந்த அம் மடைப்பள்ளியில், யாதும் நிரப்பாமல் – எதையும் நிறைக்காமலே, எல்லாம் – எல்லாப் பண்டங்களும், நிரம்பிற்று – அங்கு தாமே வந்து நிறைந்தன; எ – று.

நளன் சமையலுக்குச் சென்றவிடத்தில் அவனுக்குக் கிடைத்திருந்த வரபலத்தால் எல்லாப் பொருள்களும் தாமே வந்து நிறைந்தனவென்க. தேவர்கள் கொடுத்த வரத்தாற் பொருள்கள் நிரம்பின. ஏ – அசை.

227. இடைச் சுரத்தில்.........

இ – ள்: (நளன் தன் வேலைகளை முடித்திருக்கும் போது) நைகின்ற – (கணவனைப் பிரிந்ததனால்) வருந்துகின்ற, நெஞ்சாள் – மனத்தை யுடையவளாகிய தமயந்தி, சுரத்து இடையில் – பாலைவனத்தின் நடுவிலே, இடை இருளில் – நடு இராத்திரியில், தன்னை நீத்த – தன்னை விட்டு நீங்கிப்போன, கொடைத்தொழிலான் என்று – ஈகைத் தொழிலையுடைய நளனென்று, அயிர்த்த – தன்னாற் சந்தேகிக்கப்பட்ட, கோமான் – அந்தச் சிறந்த புருஷனாகிய வாகுகன், மடைத்தொழில்கள் – சமையல் வேலைகள், செய்கின்றதெல்லாம் – செய்கின்ற வகைகளை யெல்லாம், தெரிந்து – நுணுக்கமாக உணர்ந்து, (நீ போய் அறிந்து) வா – வரக்கடவாய், என்றாள் – என்று தன் தோழி ஒருத்

திக்குக் கட்டளையிட்டாள், நயந்து – மிக்க விருப்புடன்; எ – று.

தேர்ப்பாகனாகிய நளன் செயல்களை அறிந்து வரும்படி, தமயந்தி ஒரு தோழியை அவனிடம் அனுப்பினாளென்க.

228. கோதை நெடுவேல்.........

இ – ள்: (அதன் பின்னர்) வளை ஆடும் – வளையல்கள் அசைந்தாடிக்கொண்டிருக்கின்ற, கையாள் – கரங்களையுடையவளாகிய தமயந்தி, மேல் – மேலும், மதித்து – (பாகனைச் சோதித்தற்கு ஒன்றை) எண்ணி, (தோழியை நோக்கி) கோதை – மாலையை அணிந்த, நெடுவேல் – நீண்ட வேலாயுதத்தைத் தரிக்கத்தக்க, குமரனையும் – என் புத்திரனான இந்திரசேனனையும், தங்கையையும் – (அவனுடைய) தங்கையாகிய இந்திரசேனையையும், ஆதி – முதன்மை பெற்ற, அரசன் அருகு ஆக – அரசனான வாகுகன் சமீபமாக, போத – போதவும், விளையாட – விளையாடவும், விட்டு – அனுப்பி, (அப்போது) அவன் தன் – அவனுடைய, செயல் – செய்கையை, நாடு என்றாள் – கவனித்து நோக்கு என்றாள்; எ – று.

நளனுடைய சமையற்றொழிலின் திறத்தைத் தமயந்தி அறிந்ததன்மூலம் அவனைத் தன் நாயகனென்றே ஒருவாறு தெரிந்தனளெனினும் மேலும் சந்தேகமறத் தெரிந்து கொள்ள வேண்டுமென்னும் எண்ணத்தால் இவ்வாறு தன் பிள்ளைகளை அவனெதிரில் விளையாடவிட்டு அவர்களைக் கண்டு அவன் செய்யும் காரியங்களை அறிந்து தனக்குத் தெரிவிக்கும்படி தோழிக்குரைத்தாளென்க.

229. மக்களை முன்..........

இ – ள்: (தோழி பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போய் நளனுக்கெதிரில் விட அப்போது) வன்மம் – பகைக் குணமுடைய, களி – மதம் பொருந்திய, யானை – பட்டத்து யானையையுடைய, மன் – நளமகாராஜன், மக்களை – (தோழியாற் கொண்டுவந்து விடப்பட்ட) அப் பிள்ளைகளை, முன்காணா – எதிரில் பார்த்து, (இவர்களையும் பிரிந்தோமே என்ற துக்கத்தால்) மனம் நடுங்கா – நெஞ்சம் கலங்கி,

வெய்து உயிரா - வெப்பமாகப் பெருமூச்சுவிட்டு, புக்கு எடுத்து - போய்த் தூக்கி, வீரம் - வீரத்தன்மை பொருந்திய, புயத்து அணையா - தோள்களிற் சேர்த்தணைத்து, (அவர்களை நோக்கி) மக்காள் - குழந்தைகளே! நீர் - நீங்கள், என் மக்கள் போல்கின்றீர் - என் பிள்ளைகளைப் போன்றிருக்கின்றீர்கள், யார் மக்கள் - எவருடைய குழந்தைகள், என்று உரைத்தான் - என்று சொல்லி வினவினான்; எ - று.

நளன் தன் பிள்ளைகளைக் கண்ட மாத்திரத்தில் அவனிடத்தே அடக்க முடியாத அன்பெழுந்ததால் தன்னையும் மறந்து மன நடுங்கிப் பெருமூச்சு விட்டு அவர்களை வாரி யெடுத்துத் தோளோடு சேர்த்து மக்களே! நீங்கள் என் மக்கள் போல்கின்றீர், யார் மக்களென்று வினவினனென்க.

230. மன்னன்.........

இ - ள்: (நளன் அவ்வாறு வினவியபோது அம்மக்கள் அவனை நோக்கி) அழுது - கண்ணீர்விட் டழுதுகொண்டு, யாம் - நாங்கள், மன்னன் - பெருமையை உடையவனும், நிடதத்தார் வாழ் - நிடத தேசத்தார் வாழ்வதற்குக் காரணமான, வேந்தன் - அரசனுமாகிய நளனுடைய, மக்கள் - பிள்ளைகள், அவன் - அம் மன்னன், அன்னதனை - எங்களுடைய தாயை, கான் விட்டு - வனத்திலே விட்டு விட்டு, ஏக - பிரிந்து போயினமையால், இந்நகர்க்கே - இந்தப் பட்டணத்திலேயே, வாழ்கின்றோம் - (நாங்களும் எங்கள் அன்னையும்) சீவிக்கின்றோம், எங்கள் - எங்களுடைய, வளம் நாடு - வளப்பம் பொருந்திய நிடததேசத்தை, மற்றொருவன் - வேறொருவன், ஆள்கின்றான் - ஆட்சி புரிகின்றான், என்றார் - என்று சொன்னார்கள்; எ - று.

நளனுடைய மக்கள் தங்கள் நிலைமை இவ்வாறு எனக் கூறினாரென்க. வாழ்வேந்தன் - வினைத்தொகை. ஏ - பிரிநிலை. இந்நகர்க்கு - உருபுமயக்கம்: இ + நகர் = இந்நகர்.

231. ஆங்கவர் சொன்ன..........

இ - ள்: ஆங்கு - அவ்விடத்தில், அவர் - அப்பிள்ளைகள், சொன்ன - அவ்வாறு கூறிய, உரை கேட்டு - வார்த்தை

களைக் கேட்டு, பூ காவில்-பூஞ்சோலைகளில், வள்ளம்போல் - கிண்ணங்களைப்போல, கோங்குமலரும் கோங்கின்பூ மலரப் பெற்ற, திருநாடன் – அழகிய நிடத தேசாதிபதியான நளன், அழிவு எய்தி – (சோர்வினால் மனம்) கரைதலை அடைந்து, உள்ளம்போல் - (அவ்வாறு கரைந்தொழுகும்) மனதைப் போல, கண்ணீர் உதிர்த்து - கண்ணீரை வடியச் செய்து, நீங்கா உயிரோடு - உடம்பை விட்டுப் போகாத பிராண ளோடு, நின்றிட்டான் – நின்றான் ; எ – று.

தன் குழந்தைகள் சொன்ன பரிதாபமான வார்த்தை களைக் கேட்டவுடன் நளன் மிகுந்த துன்பம் அடைந்து யாதொரு செயலுமின்றி ஆவியைமட்டும் தாங்கி நின்றான் என்க. நீங்கா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். நளன் செயலற்று நின்றமை கூறியவாறு.

**232.** உங்கள் அரசு.........

இ – ள் : (அவ்வாறு நின்ற நளன்) மாதவத்தால் – (தான்செய்த) சிறந்த தவத்தினாலே, பெற்ற—, இளஅரசை - இளவரசனை, எடுத்து - தூக்கி, (மார்போடணைத்து) நோக்கி - (அப்புதல்வன் முகத்தைப்) பார்த்து, செம்கை - சிவந்த கைகளையுடைய, வள அரசே – இளமைபொருந்திய இராச குமாரனே !, உங்கள் அரசு - உங்களுடைய அரசாட்சியை, ஒருவன் - வேறொருவன் (புட்கரன்), ஆள - ஆட்சிபுரிய, நீர் – நீங்கள், ஓடிப்போந்து – ஓடிவந்து, இங்கண் இவ் விடத்தில், உறைதல் – தங்கியிருத்தல், இழுக்கு அன்றோ - (உங்களுக்குக்) குறைவல்லவோ ?, என்று உரைத்தான் – என்று சொன்னான் ; எ – று.

நளன் தெளிவுற்றுத் தன் புத்திரனுடைய மனம் எத் தன்மைத்தாயிருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்ளும் பொருட்டு அவனை மார்போடணைத்து அவனை நோக்கி இவ்வாறு வினவினனென்க.

**233.** நெஞ்சாலிம் மாற்றம்.........

இ – ள் : (நளன் அவ்வாறு கூறியதைக் கேட்ட அவ் விளங்குமாரன் அவனை நோக்கி) அடும் – (உணவு) சமைக் கின்ற, மடையா – மடைப்பள்ளியி லிருப்பவனே !, எஞ் சாது – குறையாமல், தீமையே கொண்ட - கொடுமையையே கொண்டிருக்கின்ற, சிறு தொழிலாய் – தாழ்ந்த தொழிலை

யுடையவனே!, இ மாற்றம் - இந்த எளன வார்த்தையை, நெஞ்சால் நினைத்து - மனதால் நினைத்து, உரைக்க - சொல்வதற்கு, நீ அல்லது - உன்போன்ற மடையரே அன்றி, மன்னர் அஞ்சாரோ - அரசர் பயப்படமாட்டார்களோ, எம் கோமான் - எங்கள் அரசனாகிய நளச் சக்கரவர்த்திக்கு, வாய்மையே வலி - சத்தியமே பலம், கண்டாய் - இதனை நீ அறிந்துகொள்வாய்; எ - று.

நளன் கூறியதைக் கேட்டுப் புத்திரன் கோபித்து இவ்வாறு கூறினனென்க. சத்தியத்தின் பொருட்டு அரசை விட்டானேயன்றி வலிமையிற் குறைந்தன்று என்பது கருத்து. முன்னும் "நன்னெறிக்கே அஞ்சிப் பார் ஈந்த" என்பதை நோக்குக.

**234.** எந்தை கழலிணை..........

இ - ள்: பணி முடியில் - ஆதிசேடனாகிய பாம்பின் சிரசில் தங்கியிருக்கும், பார் - பூமியை, காக்கும் - ஆளுகின்ற, பார்வேந்தர் - அரசர்கள், கந்து - கட்டுத்தறியை, சுளியும் - கோபித்து முறிக்கின்ற, கடாக் களிற்றின் - ஆண்யானைகளின்மேல், வந்து - ஏறி வந்து, தங்கள் - தங்களுடைய, மணிமுடியின்—இரத்தினக் கிரீடங்களால், தேய்த்த - உண்டாக்கிய, வடு - தழும்பை, எந்தை - எம் தந்தையாகிய நளச் சக்கரவர்த்தியினுடைய, கழல் இணையில் - இரண்டு பாதங்களின், எம்மருங்கும் - எந்தப் பக்கத்திலும், காணலாம்-(இருக்கப்) பார்க்கலாம் (என்று சொன்னான்); எ - று.

அரசர்கள் எல்லோரும் வந்து எமது தந்தையின் பாதத்தை வணங்குதலால் அவ்வரசர்களுடைய முடி எமது தந்தையின் காலை உரோஞ்சும், அதனால் கழல் தேயும் என்று கூறினர். இதனால் பகை அரசர் தந்தையைப் பணிவர் என நளனது பெருமையைக் கூறினர். அத்தகையவன் பயந்து நாட்டை விடான் என்பது குறிப்பு. கழல் - வீரகண்டை; அஃதாகுபெயராய்ப் பாதத்தை யுணர்த்திற்று.

**235.** மன்னர் பெருமை.........

இ - ள்: (அவ்வாறு கூறிய குமாரனை நோக்கி நளன் மனத்தில் மிக்க அன்புபூண்டு இராசகுமாரனே!) மன்னர் -

அரசர்களுடைய, பெருமை – உயர்வை, மடையர் – சோறு சமைக்கும் தொழிலை யுடையார், அறிவரோ – அறிவார்களோ?, (அறியமாட்டார்கள்; ஆதலின், நானும் மடையனாதலால்) உன்னை அறியாது – (இத்தகைய வீரகுணமுள்ள) உன்னைத் தெரிந்துகொள்ளாமல், உரைசெய்த – ஏதேதோ பேசிய, என்னை—, முனிந்தருளல் – கோபிக்க வேண்டாம், என்று – என்று சொல்லி, முடிசாய்ந்து – தலை வணங்கி, கனிந்து உருகி – மனமிளகிக் கரைந்து, கண் – கண்களில், நீர் வார – நீர்ஒழுக, நின்றான் – மௌனமாய் நின்றான்; எ – று.

நளன் தன்னுடைய புத்திரன் வீரமும் நீதியும் பொருந்திய வார்த்தைகளைச் சொல்லக் கேட்டவுடனே, 'மன்னர் பெருமை மடையர் அறிவரோ, உன்னை அறியா துரைசெய்த என்னை, முனிந்தருளல்' என்று கூறித் தலை சாய்த்து நின்றானென்க. முனிந்தருளல் – எதிர்மறை ஏவலொருமை வினைமுற்று; வியங்கோள் வினைமுற்று எனினும் பொருந்தும். முனிந்தருள் + ஆ + அல். 'ஆ' எதிர்மறை இடைநிலை கெட்டது.

**236.** கொற்றக் குமரனையும்.........

இ – ள்: (தமயந்தியின் பிள்ளைகளும் தோழியும் திரும்பிப்போய்த் தமயந்தியிடம்) கொற்றம் – வெற்றி பொருந்திய, குமரனையும் – அந்த இராசகுமாரனையும், கோதையையும் – இராசகுமாரத்தியையும், கண்டு – பார்த்து, அவன் – அந்த வாகுகன், ஆங்கு – அவ்விடத்தில், உரைத்த – சொன்ன, வாசகத்தை – வார்த்தைகளை, முற்றும் – முழுவதும், மொழிந்தார் – உரைத்தார்கள், அம் மாற்றம் – அந்த வார்த்தைகளை, மொழியாத முன்னே – சொல்லி முடிப்பதற்கு முன்னரே, (தமயந்தி) அழிந்தாள் – மனபடிவு கொண்டவளாகி, அழுது விழுந்தாள் – அழுதுகொண்டு தன்னையே மறந்து அப்படியே நிலத்தில் விழ்ந்தாள்; எ – று.

நளன் பிள்ளைகளைக் கண்டவுடனே செய்த செய்கைகளை, அவர்களும் தோழியும் கூறியவுடனே அவனைத் தன் நாயகனென்றுணர்ந்து மனமுருகிக் கீழே வீழ்ந்தழுதாளென்க. உம்மைகள் – எண்ணுப் பொருளன. தான்

இரண்டும் அசைகள். மற்று - அசை. அழிந்தாள் - முற்றெச்சம். மொழியாத - எதிர்மறைப் பெயரெச்சம்

**237.** மற்றித் திருநகர்க்கே.........

இ - ள்: (அவ்வாறு அழுத தமயந்தி தன் தந்தையிடம் சென்று) குறித்து - நளன் செய்கைகளைச் சுட்டிக் காட்டி, இத் திருநகர்க்கு - இந்த அழகிய பட்டணத்திற்கு, வந்து அடைந்த - வந்து சேர்ந்த, மன்னவற்கு - இருதுபர்ண மகாராசனுக்கு, கொற்றம் - வெற்றி பொருந்திய, தனி - ஒப்பற்ற, தேரும் கொண்டு அணைந்து - இரதத்தையும் ஓட்டிக்கொண்டு வந்து சேர்ந்து, மற்றும் - பின்னரும், மடைத்தொழிலே செய்கின்ற - சமையல் வேலையையும் செய்கின்ற, மன்னவன் - அரசனே, எங்கள் - எங்களுடைய, கொடைத்தொழிலான் - ஈகைத் தொழிலுக்குரியவனாகிய நளமகாராசன், காண் - இதனை அறிவீராக, என்றாள் - என்று சொன்னாள்; எ - று.

தமயந்தி, நளன் குணம் செயல் முதலியவற்றைக் குறித்துக் காட்டி, இருதுபர்ணனுக்குத் தேர் செலுத்திக் கொண்டுவந்த வாகுகனே எங்கள் வள்ளலாகிய நளன் என்று கூறினாளென்க. முதலிலுள்ள மற்று - அசை. நகர்க்கே - ஏ அசை. இரண்டாவது வந்த மற்று - வினைமாற்றுப் பொருளில் வந்த இடைச்சொல்.

**239.** போதலருங் கண்ணியான்.........

இ - ள்: (அவ்வாறு தமயந்தி கூறியதைக் கேட்டவுடன்) போது - பூவரும்புகள், அலரும் - மலர்ந்து விளங்குகின்ற, கண்ணியான் - மாலையை யணிந்தவனாகிய வீமராசன், போர்வேந்தர் - யுத்தம் செய்யும் வீரராகிய பல அரசர்கள், சூழ - தன்னைச் சூழ்ந்துவர, போய் - (வாகுகனிருந்த மடைப்பள்ளிக்குள்) சென்று, காதலிதன் - தன்னுடைய அன்புக்குரிய மகளாகிய தமயந்தியின், காதலனை - ஆசைக்குரிய நாயகனாகிய நளனை, கண்ணுற்றான் - பார்த்தான், (அப்போது நளனுருவம் அவனிடத்தின்மையால்) ஓதம் - கடல்நீரின் அலையானது, வரி - இரேகைகளையுடைய, வளை கொண்டு - சங்குகளை எடுத்துக்கொண்டு, ஏறும் - கரையிலேறுகின்ற, வளம் - வளப்பத்தையுடைய, நாடன் தன்னை -

நிடத தேசாதிபதியான நளமகாராசனை, தெரிவு அரிதா – தெரிய முடியாதவனாக, திகைத்து நின்றான் - மயங்கி நின்றான் ; எ – று.

தமயந்தி நளன் அங்குளனென்று கூறியதைக் கேட்டவுடனே, வீமன் மகிழ்ந்து, அவனைக் கண்டழைத்து வரும் பொருட்டுப் பல அரசர்கள் தன்னைச் சூழ்ந்துவரப் புறப்பட்டுப் போய் அவனைப் பார்த்து அவனிடத்தே நளனுருவம் இல்லாமையால் திகைத்து நின்றானென்க.

## 239. செவ்வாய்.........

இ – ள் : (திகைத்து நின்ற வீமன் நளனோடு சிறிது நேரம் சம்பாஷணைசெய்து அவன் குணம் செயல் முதலியனவற்றை நோக்கி) கொண்ட - இவன் கொண்டிருக்கின்ற, உரு - வடிவமானது, (இவனுடைய) செவ்வாய் மொழிக்கும் – செம்மையான வாயினின்றும் உண்டாகும் வார்த்தைக்கும், செயலுக்கும் - செய்கைக்கும், சிந்தைக்கும் – மனத்திற்கும், ஒவ்வாது என்று -பொருந்தாது என்று, எவ்வாயும் - எல்லா வழிகளையும், நோக்கினான் – ஆராய்ந்து பார்த்தான், நோக்கி – அவ்வாறு பார்த்து, நுணங்கியது – (கருத்தில்) நுட்பமுடையதாகிய, ஓர் – ஒப்பற்ற, வாக்கினான் தன்னை – வார்த்தையை உடையவனாகிய நளனை, மதித்து - (அவ்வார்த்தையினால்) நிச்சயித்து, தெளிந்தான் - அறிந்துகொண்டான் ; எ – று.

வீமன், நளனுடைய வாக்கைக்கொண்டே அவனை நளன்தான் என்று தெரிந்துகொண்டானென்க. வாய் – வழி; அறியும் உபாயம் என்பதாம்.

## 240. பைந்தலைய.........

இ – ள் : (நளனைத் தெரிந்துகொண்ட வீமன் அவன் முகத்தை நோக்கி) பூகத்தின் – கமுக மரத்தினுடைய, ஐ – அழகிய, தலையின் – தலைப்பக்கத்திலுள்ள, பாளைதனை – மலராத பாளையை, பைந்தலைய - பசுமையான தலையையுடைய, நாக பணமென்று – சர்ப்பத்தின் படமென்று நினைத்து, மந்தி – குரங்கானது, தெளியாதிருக்கும் – (அச் சந்தேகம்) தெளியாதிருக்கின்ற, திருநாடா – அழகிய நிடத தேசத்தையுடைய மன்னனே !, உன்னை ஒளியாது – (இனி) உன்னை மறைக்காமல், உன்உரு – உனது உண்மை வடிவத்தை, காட்டு – காண்பிப்பாயாக (என்று கூறினான்) ; எ – று.

வீமன் நளனை நோக்கி, 'உன்னை இன்னவனென்று நாங்கள் உணர்ந்துகொண்டோமாதலின் இனிமேல் நீ உருவத்தை மறைப்பதாற் பயனில்லை; ஆதலின் உனதுண்மை வடிவைக் காட்டுவாயாக' என்று கூறினனென்க. "பைந்தலைய.........திருநாடா" என்றதனுல், நின் நாட்டுக் கமுகம் பாளை குரங்கை மயக்குவதுபோன்று நீயும் வேற்றுருவங் காட்டிஎன்னைமயக்குகின்றாய் என்னும்குறிப்புத்தொனிக்கும்.

**241.** *அரவரசன்.........*

**இ - ள்:** (வீமன் கூறியதைக் கேட்டபின் தனது உண்மை வடிவத்தை அடையும்பொருட்டு) பூண்டு - அரசுரிமையைப் பூண்டு, அளிக்கும் - பூமியைக்காக்கின்ற, கோத்தாயம் - அரசுரிமையை, பொரு - தன்னோடு இரகசியமாக எதிர்த்துத் தீங்குசெய்த, கலியின் - கலிபுருஷனுடைய, வஞ்சனையால் - வஞ்சனையால் ஏற்பட்ட சூதிலே, முன் - முற்காலத்தில், இழந்த - இழந்த, கோ - நளமகாராசன், அரவரசன் - சர்ப்பராசனுகிய கார்க்கோடகன், கொடுத்த - முன் உதவிய, அம் பூந்துகிலின் - மிக்க அழகாகிய வஸ்திரங்களுள், ஒரு துகிலை - ஓர் ஆடையை, வாங்கி - கையினல் எடுத்துப் பிரித்து, உடுத்தான் - அரையிற் கட்டிக்கொண்டான், ஒரு துகிலை - மற்றொரு வஸ்திரத்தை, போர்த்தான் - உடம்பின் மேற் போர்த்துக்கொண்டான்; எ - று.

நளன், தனது உண்மை வடிவத்தைப் பெறுதற்குக் கார்க்கோடகனுற் கொடுக்கப்பட்ட வஸ்திரங்களுள் ஒன்றை அரையிற் கட்டி மற்றொன்றைப் போர்த்துக்கொண்டானென்க. தாயம் - உரிமைப்பொருள். தான் - அசை.

**242.** *மிக்கோன்.........*

**இ - ள்:** (வஸ்திரங்களை அணிந்துகொண்டபோது) அக்காலம் - அந்தக் காலத்தில், கானகத்தே - காட்டில், காதலியை - மனைவியை, நீத்து - கைவிட்டு, கரந்து - தன் உருவம் மறைந்து, உறையும் - வாழ்கின்ற, மான் - குதிரைகள், அகம் - பூட்டப்பட்ட, தேர்ப்பாகன் வடிவு - தேரைச்செலுத்தும் வாருக உருவமானது, மிக்கோன்—தேவர்களுக்குள்ளே உயர்ந்தவனுகிய மகாவிஷ்ணுவின், உலகு

அளந்த – உலகங்களை அளவிட்ட, மெய் அடியே – மெய்யான பாதங்களே, சார்வு ஆக – துணையாக, புக்கோர் – அடைக்கலம் அடைந்தவர்களின், அருவினைபோல் – அரிதாகிய பாப கர்மங்கள் (நீங்குவதைப்) போல, போயிற்று – நீங்கிற்று ; எ – று.

நளன் அவ் வஸ்திரங்களை அணிந்தவுடன் அவன் கொண்டிருந்த தேர்ச் சாரதி வடிவமானது, மகா விஷ்ணுவினுடைய பாதங்களைச் சார்ந்தவர்களின் பாவங்கள் உடனே நீங்குவதுபோல நீங்கிவிட்டதென்க. அடியே – ஏ பிரிநிலை, போயிற்றே – ஏ அசை.

243. தாதையை முன் ... ......

இ – ள்: (அப்போது) போது அலரும் – முடிக்கப்பட்ட மாலையிலுள்ள பூவரும்புகள் மலர்ந்து விளங்குகின்ற, குஞ்சியான் – மயிர் முடியையுடைய இந்திரசேனன் என்னும் இராசகுமாரன், தாதையை – (இயற்கை வடிவம் பெற்று விளங்கிய தன்) தந்தையாகிய நளனை, முன்–எதிரில், காண்டலும் – பார்த்த மாத்திரத்தில், தாமரைக்கண் – தாமரை மலர்போன்ற கண்களில், நீர் அரும்ப–நீர் துளிக்க, மின் இடையாளோடும் – மின்னலைப்போன்ற இடையை உடையவளாகிய தன் தங்கை இந்திரசேனையுடனே, புக்கு அணைந்து – அந் நளன் சமீபத்திற் போய்ச் சேர்ந்து, விழுந்து – அவனுடைய பாதங்களின்மேல் வீழ்ந்து, கோது இல்லா – குற்றமற்ற, பொன் – அழகிய, அடியை – அப் பாதங்களை, கண்ணின் புனலால் – கண்களிலிருந்துண்டான நீரினால், கழுவினான் – அலம்பினான் (கண்ணீர்விட்டழுது வணங்கினான்); எ – று.

நளனுடைய இயற்கை வடிவத்தைக் கண்டவுடனே பிள்ளைகள் அவனைத் தங்களுடைய தந்தை என்றுணர்ந்து, வருந்திக் கண்ணீர்விட்டழுதுகொண்டு அவனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்கினார்களென்க. காண்டலும் – வினையெச்சம். தாமரைக்கண் – உவமைத்தொகை.

244. உத்தமரின் ... ......

இ – ள்: (அத்தருணத்தில்) இமையோர் – தேவர்கள், இத் தலத்தில் – இந்தப் பூமியில், (இருக்கின்ற) உத்தமரில் – நல்லோர்களுக்குள்ளே, இவனை – இந்த நளனை, ஒப்பார் – நிகர்த்திருப்பவர், ஒருவர் இலை – ஒருவரும் இல்லை, என்று –

என்று சொல்லி, புகழ்ந்து - அவனைத் துதித்து, தேன்மாரி - தேன் மழையை, பெய்யும் - சொரிகின்ற, திரு - அழகிய, மலர்த்தார் - பூமாலையை அணிந்த, வேந்தன்மேல் - நளமகாராசன்மீது, எம்மருங்கும் - எப்பக்கத்திலும் (விழும்படி), கைத்தலத்தில் - தங்கள் கரங்களால், பூமாரி பெய்தார் - மலர் மழையைச் சொரிந்தார்கள்; எ - று.

தேவர்கள் நளன்மீது பூமழை பொழிந்து வாழ்த்தினரென்க. மற்று - அசை. இமையோர் - கண் இமைக்காதவர்கள். கைத்தலத்தில் - உருபுமயக்கம்.

**245.** வேதநெறி.........

இ - ள்: (அதன்பின்) தாது - மகரந்தங்கள், புதைய - புதைந்துபோகும்படி, தேன் - மதுவானது, பாய்ந்து ஒழுகும் - பரவி வடிகின்ற, பூஞ்சோலை - மலர்கள் மிகுந்த சோலைகளாகிய, வேலி - வேலியையுடைய, விதையக்கோன் - விதர்ப்பதேசத் தரசனாகிய வீமன், வேத நெறி - வேதமார்க்கத்தினின்றும், வழுவா - நீங்காத, வேந்தனையும் - நளமகாராசனையும், பூ - நீலோற்பல மலர்போன்ற, தடம் - விசாலமாகிய, கண் - கண்களையுடைய, கோதையையும் - தமயந்தியையும், மக்களையும் - (அவர்களுடைய) பிள்ளைகளையும், கொண்டுபோய் - அழைத்துக்கொண்டுபோய் (தன் அரண்மனையிற்சேர்த்து), விருந்துசெய்தான் - அவர்கட்குப்) புதிதாக உணவளித்தல் முதலிய உபசாரங்களைச்செய்தான்; எ - று.

வீமன் நளனுக்கும் அவனுடைய மனைவி மக்களுக்கும் விருந்து செய்தானென்க. உம்மைகள் - எண்ணுப்பொருளன.

**246.** உன்னையான்........

இ - ள்: (நளன் முதலியோர் விருந்துண்டு மகிழ்ந்திருக்கும்போது) மால் - பெருமை பொருந்திய, நீர் - நீர்வளமுள்ள, அயோத்தியர் - அயோத்தி நாட்டாருடைய, மன் - அரசனாகிய இருதுபர்ணன், (அங்கு நடந்தவைகளை எல்லாம் பார்த்து வியப்படைந்து நளனிடம் சென்று) பொன் அமரும் - அழகு பொருந்திய, தாராய் - மாலையையணிந்த நளமகாராசனே!, யான் - நான், ஒன்றும் உணராது - (உன் விஷயங்களில்) ஒன்றையேனும் அறியாமல், உன்னை உரைத்த எல்லாம் - உன்னைப்பற்றிக் கூறியவை

களை எல்லாம், பொறு என்று - பொறுத்துக்கொள்வாயாக என்று சொல்லி மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, பின்னை - பிறகு, தன் - தன்னுடைய, மேல் நீர்மை - உயர்ந்ததன்மை யானது, குன்ற - குறைந்து, வெறுந் தேர்மிசைக் கொண்டான் - வெறுமையான தேரின்மேலேறிப் புறப்பட்டுப் போய்த் தன் நகரஞ் சேர்ந்தான்; எ - று.

இருதுபர்ணன் நளனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தன் நகரஞ் சேர்ந்தானென்க. தேருக்குள் யாருமின்றித் தான் தேர்ப்பாகனாய் இருதுபர்ணன் தேரைச் செலுத்திய மையின் வெறுந்தேர் எனப்பட்டது. மிசை - ஏழனுருபு.

**247.** *விற்றானை முன்.........*

இ - ள்: (இருதுபர்ணன் போயினபின்) முற்று ஆம்பல் - முதிர்ந்த அல்லி மலர்கள், தேன் - மதுவாகிய, நீர் - நீரை, அளித்து - கொடுத்து, அருகு - பக்கத்திலுள்ள, செந்நெற்கதிர் - செம்மையாகிய நெற்கதிர்களை, விளைக்கும் - விளையச் செய்கின்ற, மா - சிறந்த, நீர் - நீர்வளமுள்ள, நிடதத்தார் - நிடத தேசத்தாருடைய, மன் - அரசனாகிய நளன், வில் - வில்லையேந்திய, தானை - சேனையானது, முன்செல்ல - முன்னே செல்ல, வேல் வேந்தர் - வேலாயுதத்தையுடைய அரசர்கள், பின்செல்ல - பின்புறத்துச் செல்ல, தேவியொடும் - மனைவியாகிய தமயந்தியுடனே, பொன் தேர்மேல் - அழகிய தேரின்மேல் (ஏறி), போயினான் - மாவிந்த நகரத்திற்குப் புறப்பட்டுப் போயினான்; எ - று.

நளன் மனைவி மக்களுடன் மாவிந்த நகரத்திற்குப் புறப்பட்டுப் போயினானென்க. தேவியொடும் என்பதில் உம் அசை. எச்சவும்மை எனினுமாம். பொன் + தேர் = பொற்றேர்.

**248.** *மன்ற லிளங்கோதை.........*

இ - ள்: (நளன்) மன்றல் - வாசனை தங்கிய, இளங் கோதையொடு - இளமையான மாலையை அணிந்த தமயந்தியுடனே, மக்களும் தானும் - பிள்ளைகளும் தானுமாய், ஒரு - ஒப்பற்ற, வென்றி - வெற்றி பொருந்திய, மணி - இரத்தினங்கள் பதித்த, நெடும் - உயர்ந்த, தேர்மேல்ஏறி - இரதத்தின் மேலேறி, சென்று - போய், மாவிந்தம் என்னும் - மாவிந்தமென்கின்ற, வளம் - வளப்பம் பொருந்திய, நகரம் - நகரத்தே, சூழ்ந்தது - சூழ்ந்ததாகிய, பூவிந்தை - தாமரைப்

பூவில் வீற்றிருக்கின்ற இலக்குமி, வாழும் – வாசஞ் செய்கின்ற, ஒரு பொழில் – ஒரு சோலையை, அடைந்தான் – சேர்ந்தான்; எ – று.

நளன் தன் மனைவி மக்களுடன் மாவிந்த நகரத்திற்கு அருகில் ஒரு பூஞ்சோலையில் தங்கினனென்க,

249. மற்றவனுக்கு........

இ – ள்: (அச்சோலையில் தங்கியிருக்கும்போது) தண் – குளிர்ச்சி பொருந்திய, தெரியல் – மாலையை அணிந்த, தேர் – இரதத்தையுடைய, வேந்தன் – நளமகாராசன், அவனுக்கு – அந்தப் புட்கரனுக்கு, என்வரவு சொல்லி – என்னுடைய வருகையைக் கூறி, மறு சூதுக்கு – மறுமுறை சூதாட்டத்திற்கு, உற்ற – பொருந்திய, பணயம் – பந்தயப்பொருளும், உளது என்று – இருக்கிறதென்று (தெரிவித்து), கொற்றவனை – அம் மன்னனை, கொண்டு – அழைத்துக்கொண்டு, அணைவீர் என்று – இங்கு வந்து சேர்வீராக என்று சொல்லி, குல தூதரை – மேன்மையாகிய தூதுவர்களை, விடுத்தான் – அந்தப் புட்கரனிடம் அனுப்பினன்; எ – று.

நளன் மறு சூதாடப் புட்கரனை அழைத்து வரும்படி தூதுவரை அவனிடம் அனுப்பினனென்க. மற்று, தான் அசைகள். வரவு, தொழிற்பெயர்.

250. தருகலிமுன்........

இ – ள்: (புட்கரனும் நளனும் சூதாட இசைந்தபோது, புட்கரன், நளனிடம் முன்னே வென்ற எல்லாவற்றையும் பந்தயமாக வைத்து) தீது தரு – தீமையைக் கொடுக்கின்ற, கலி – கலிபுருஷன், முன் – முன்னே, செய்ததனை – செய்த சகாயத்தை, ஓராது – அறியாமல், (நளன் முகத்தை நோக்கி) சூதாட – நாம் சூதாடுதற்கு, பணயம் யாது என – நீ வைக்கும் பந்தயம் என்ன என்று; இயம்ப – வினவ, மை – கரிய, ஆழியில் – சமுத்திரத்தில், துயிலும் – நித்திரை செய்கின்ற, மால் அனையான் – மகா விஷ்ணுவை நிகர்த்தவனாகிய நளன், வண்மை புனை – ஈகை சேர்ந்திருக்கின்ற, கை – தன் கரத்திலணியப்பட்டிருந்த, ஆழி – மோதிரத்தை, கழித்து – கழற்றி, வைத்தான் – பந்தயமாக வைத்தான்; எ – று.

புட்கரன், நளனிடம் வென்ற எல்லாவற்றையும் பந்தயமாக வைக்க, நளன் தன் விரல் மோதிரத்தைக் கழற்றி வைத்தானென்க. ஓராதே, ஏ அசை.

**251.** அப்பலகை.........

இ – ள்: (பந்தயம் வைத்தபின்) அவ்வேந்து – அந்த நளமகாராசன், அருகு இருந்தார் – சமீபத்திலிருந்தவர்கள், மதிக்க – கொண்டாட, அப்பலகை ஒன்றின் – (பந்தயம் வைத்தாடத் தொடங்கிய) அச் சொக்கட்டான் பலகை ஒன்றிலேயே, செப்பு அரிய – சொல்லுதற்கு அருமையாகிய, செல்வம் – ஐசுவரியம் பொருந்திய, திரு – அழகிய, நகரும் – நகரத்தையும், ஒப்பு அரிய – உவமையில்லாத, வல் தானையோடு – வலிமையாகிய சேனையுடனே, வளநாடும் வளப்பம் பொருந்திய நாட்டையும், வஞ்சனையால் – சூதினால், (முன்பு) வென்றானை – தன்னிடத்தில் வென்ற புட்கரனிடத்தில், வென்றான் – வெற்றி கொண்டான்; எ – று.

நளன், முன்னே தன்னிடத்திலே வென்றவைகளை எல்லாம் ஒரே ஆட்டத்தில், புட்கரனிடம் வென்றானென்க. தாம் – அசை.

**252.** அந்த வளநாடும்.........

இ – ள்: (நளன் எல்லாவற்றையும் வெற்றி கொண்டபின், புட்கரன்) அந்த வளநாடும் – அந்த வளப்பம் பொருந்திய நிடதநாடும், அ அரசும் – அந்த அரசாட்சியும், ஆங்கு – அவ்விடத்தே, ஒழிய – தன்னை விட்டு நீங்க, (அதன்மேல் அங்கிருத்தல் தகுதி அன்றென்று கருதி) செந்தமிழோர் – செம்மையாகிய தமிழ் வித்வான்கள், நா ஏய்ந்த – நாவிற் பொருந்திய, சொல்லால் – வார்த்தையினாலே, நளன் என்று – நளன் என்று சொல்லி, போற்று இசைக்கும் – துதி கூறுகின்ற, கோவேந்தற்கு – உயர்ந்த அரசனுக்கு, எல்லாம் கொடுத்து – யாவற்றையும் கொடுத்துவிட்டு, வந்தபடியே – (முன்பு தான்) வந்த விதமாகவே, வழிக்கொண்டான் – சென்றான்; எ – று.

புட்கரன் தோல்வியடைந்தபின் எல்லா ஐசுவரியங்களையும் நளனிடம் கொடுத்துவிட்டு முன்பு தான் ஒன்றுமில்லாது வந்ததுபோலவே திரும்பித் தன் நகரத்திற்குச் சென்றானென்க.

**253.** ஏனை முடிவேந்தர்.........

இ – ள்: (புட்கரன் சென்றபின்பு) நளன் – நளமகாராசன், ஏனை முடிவேந்தர் – கிரீடந் தரித்த மற்ற அரசர்கள்,

எத்திசையும் – எல்லாத் திக்குகளிலும், போற்று இசைப்ப – துதியைச் சொல்ல, சேனை – படைகள், புடை – பக்கங்களில், சூழ – சூழ்ந்துவர, தேர் ஏறி – இரதத்திலேறி, ஆன புகழ் – பொருந்திய கீர்த்தியுள்ள, பொன் நகரம் எய்தும் – பொன் நகரமாகிய அமராவதியைச் சேர்கின்ற, புரந்தரனைப்போல் – இந்திரனைப்போல, பொலிந்து – விளங்கி, நல் நகரம் – நன்மைபொருந்திய தனது அரசுரிமைக்குரிய மாவிந்த நகரத்தை, புக்கான் – சென்று அடைந்தான்; எ – று.

நளன் அரசர்கள் எல்லோரும் புகழ, இந்திரன் அமராவதி நகரத்திற் புகுந்ததுபோல, மாவிந்த நகரத்திற் புகுந்தானென்க.

**254.** *கார்பெற்ற.........*

இ – ள்: (அவ்வாறு) மன்னன் – நளமகாராசன், பார் பெற்று – பூமியாளுகையை யடைந்து, மாதோடு – நாயகியாகிய தமயந்தியுடனே, வரக்கண்ட – வரப்பார்த்த, மா – சிறந்த, நகருக்கு – நகரத்தினருக்கு, எதிர் – உவமையாக, கார் – மேகத்தை, பெற்ற – முன்னே வரப்பெற்ற, தோகையோ – மயிலையோ, கண்பெற்ற – இழந்திருந்த கண்களை அடைந்த, வாள் முகமோ – பிரகாசமுள்ள முகத்தையோ, நீர் பெற்று – தண்ணீர் நிரம்பப்பெற்று, உயர்ந்த – மேன்மையாகிய, நிறை – விளைவு நிறைந்த, புலமோ – வயலையோ, (இவற்றுள்) எது – எதனை, உரைப்பன் – உவமானமாக எடுத்துச் சொல்லுவேன்; எ – று.

நளன் மனைவி மக்களுடன் செல்லக்கண்ட நகர மாந்தர்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தார்களென்க. மேகத்தைக் கண்ட மயிலும், கண்களைப்பெற்ற முகமும், நீரைப்பெற்ற வயலும் செழித்துயர்ந்து பிரகாசிப்பதுபோல, மாவிந்த நகரம் நளனைக்கண்டு விளங்கிற்றாகலின் அம் மூன்றையும் உவமானமாகக் கூறினார். ஓ – ஐயப்பொருளன. நகர் – இடவாகுபெயர்.

கலி நீங்கு காண்டம் – உரை முற்றிற்று

**நளவெண்பாச் சுருக்க உரை முற்றிற்று**

திருச்சிற்றம்பலம்

சுன்னுகம்:
திருமகள் அழுத்தகம்